# BHARATHIDASAN UNIVERSITY
**TIRUCHIRAPPALLI – 620 024**

## CENTRE FOR DISTANCE EDUCATION

# TEACHING OF TAMIL

## B.Ed. I YEAR

(Copyright reserved) For Private Circulation only

**Chairman**

**Dr.V.M.Muthukumar**

Vice-Chancellor

Bharathidasan University

Tiruchirapplli-620 024

**Vice-Chairman**

**Dr.C.Thiruchelvam**

**Registrar**

Bharathidasan University

Tiruchirapplli-620 024

**Course Director**

**Dr. R. Babu Rajendran**

**Director i/c**

**Centre for Distance Education**

Bharathidasan University

Tiruchirapplli-620 024

**Course Material Co-ordinator**

**Dr.K.Anandan**

Professor & Head, Dept .of Education

Centre for Distance Education

Bharathidasan University

Tiruchirapplli-620 024

**Author**

**Dr.S.K.Panneerselvam**

Asst.Professor,Dept.of Education,CDE

Bharathidaan University

Tiruchirapplli-620 024

**The Syllabus adopted from 2015-16 onwards**

# தமிழ் கற்பித்தல் முறைகள்

**பாடம்: 1.கல்வி அமைப்பில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்**

மொழியின் தோற்றமும் வளர்ச்சியும், தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம், கற்பித்தலும் ஒரு தொழிலே: கற்றலும் ஒரு தொழிலே, கலைத்திட்டத்தில் மொழியின் இடம், மொழியின் பண்புகளும் பயன்களும், தாய்மொழியின் பயன்கள், வாழ்க்கை அமைப்பில் மொழியின் பயன்பாடு, அடிப்படைத் திறன்கள், இலக்கிய நயம், படைப்பாற்றல், சமூகப் பண்பாடுகளை வளர்த்தல், சமூக மரபுகளை அறிதல், அழகுணர் ஆற்றலை வளர்த்தல், வாழ்க்கைத் திறன்களைப் பெறுதல்.

**பாடம்: 2. கல்வியின் நோக்கங்களும் பாடத்திட்டமும்**

கல்வியின் இலக்குகள், கல்வி நோக்கங்களின் வகைகள், ஒற்றுமையுணர்வு, கல்வித் திட்டத்தில் சமூக மரபுகள், மொழிப்பாடத் திறன்கள், வாழ்வின் நுகர்வுகளை எடுத்துச் சொல்லுதல், கற்பனையாற்றலை வளர்த்தல், அழகுணர் ஆற்றலை வளர்த்தல், தாய்மொழி வழிக் கற்றல், பாடத்திட்டத்தின் முக்கியத்துவம், பாடத்திட்டத்தின் முக்கியத்துவம், பாடத்திட்டத்தின் பயன்கள், பாடத்திட்டம் அமைத்தல், அலகுத்திட்டத்தின் பயன்கள், அலகுத்திட்டம் எழுதுதல், அலகுத் திட்டத்தின் வடிவமைப்பு, புளூமின் கற்பித்தல் கோட்பாடுகள், ஒருமைப்பாட்டின் படிநிலைகள்.

**பாடம்: 3. தமிழ் கற்பிக்கும் முறைகள்**

நுண்ணிலைக் கற்பித்தலின் சிறப்புக்கள், வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன், விளக்குதல் திறன், கற்றல் குறிக்கோள், கற்பித்தலுக்கேற்ற சூழலை அமைத்தல், துணைக்கருவி, தொடர்பணி, உரைநடை பயிற்றலின் நோக்கங்கள், உரைநடைப் பாடம் கற்பிக்கும் முறைகள், செய்திகளை விளக்குதல், இணைத்துக் கற்பித்தல், துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல், கரும்பலகைப் பயன்பாடு, இலக்கணத்தைப் பயிற்றும் முறை, துணைக்கருவிகள் தயாரித்தலுக்கு முன்னோடி, செயல்திட்டமுறை, நடிப்புமுறையும் மொழிப்பாடமும், மேற்பார்வைப் படிப்பு, நல்ல பாடநூலில் இருக்க வேண்டிய பண்புகள், பாடத்திட்டமும் பாடநூல்களும்.

**பாடம்: 4. மொழிப்பாடம் கற்பித்தல் பிரிவுகளின் அமைப்பு**

செய்யுள் கற்பித்தல் நோக்கங்கள், இமனப்பாடம் செய்யும் முறையும் பயன்களும், கற்பனையாற்றலை வளர்த்தல், உரைநடை கற்பித்தலின் நோக்கங்களும் முறைகளும், துணைப்பாடம், துணைப்பாடப் பகுதி கற்பித்தலின் நோக்கங்கள், இலக்கணம் கற்பித்தல், இலக்கணம் கற்பிக்கும் முறை, கட்டுரைப் பாடம் கற்பித்தல்.

**பாடம்: 5. கற்பித்தலில் புதுமைப் போக்குகளும் மதிப்பீடும்**

தகவல் தொழில்நுட்பமும் மொழி கற்பித்தலும், கற்பித்தலில் கணிப்பொறியின் பங்கு மொழிக் கல்வியில் கணினி, மொழிப் பயிற்றாய்வுக் கூடம் செயல்படும் முறை, மொழி கற்பித்தலில் இணையம், மின்கற்றல;், மொழிக் கல்வியில் வானொலி, அளவிடல் - மதிப்பிடல் வேறுபாடு, நல்ல தேர்வின் நற்பண்புகள், வினாத்தாள் அமைப்பு, தேர்வுச் சீர்திருத்தங்கள், மதிப்பீட்டின் பண்புகள், தேர்வு நடத்தும் கொள்கைகள்.

**பாடம்: 6. திறன்களைக் கற்பித்தல்**

கேட்டல் திறனை வளர்த்தல், பேசுதல் திறன், படித்தல் திறன், எழுத்துமுறைப்படிப்பு, சொற்களஞ்சியப் பெருக்கம், வாய்க்குள் படித்தல், வாய்விட்டுப் படித்தல், கடிதங்கள், கட்டுரைகள், அகன்ற படிப்பு, ஆழ்ந்த படிப்பு, எழுதுவதன் நோக்கம், கையெழுத்தின் நன்மைகள், வாய்மொழிப் பயிற்சி, படங்கள் மூலம் கற்பித்தல், கற்றல் கற்பித்தலுக்கான உபகரணங்களைத் தயாரித்தல்.

**பாடம்: 7. மொழியாசிரியர்**

கல்வித்தகுதி, பயிற்சி, மொழியாசிரியரின் சிறப்புக்கள், மொழிப்பற்று, சமூகப் பொறுப்பு, இலக்கிய இலக்கணப் புலமை, படைப்பாற்றல், நகைச்சுவை உணர்வு, உளநூல் அறிவு, முன்னிலைப்படுதல், கலையார்வம், வழிகாட்டுதல், நேரந்தவறாமை, தவறுகளைத் திருத்தும் பண்பு, சிறந்த குடிமகனை உருவாக்குதல், மனித நேயம், தூய்மை.

# தமிழ் கற்பித்தல் முறைகள்

**பாடப்பிரிவுகள்** **பக்கம்**


1.கல்வி அமைப்பில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்………………………..

2. கல்வியின் நோக்கங்களும் பாடத்திட்டமும்………………………………………..

3. தமிழ் கற்பிக்கும் முறைகள்………………………………………………………….

4. மொழிப்பாடம் கற்பித்தல் பிரிவுகளின் அமைப்பு…………………………………….

5. கற்பித்தலில் புதுமைப் போக்குகளும் மதிப்பீடும்…………………………………….

6. திறன்களைக் கற்பித்தல்……………………………………………………………..

7. மொழியாசிரியர்…………………………………………………………………….

8. தொடர்ந்து கற்பதற்கான நூல்கள்……………………………………………………………..

# 1.கல்வி அமைப்பில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

**பாட அமைப்பு**

1.1 முன்னுரை

1.2 மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

1.3 தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

1.4 கற்பித்தலும் ஒரு தொழிலே! கற்றலும் ஒரு தொழிலே!

1.4.1 கலைத்திட்டத்தில் மொழியின் இடம்

1.4.2 மொழியின் பண்புகளும் பயன்களும்

1.4.3 தாய்மொழியின் பயன்கள்

1.5 வாழ்க்கை அமைப்பில் மொழியின் பயன்பாடு

1.6 அடிப்படைத் திறன்கள்

1.7 படைப்பாற்றல்

1.8 வாழ்க்கைத் திறன்களைப் பெறுதல்

1.9 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

## 1.1 முன்னுரை

**தா**ய் பிறந்தது முதல் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் மொழி தாய்மொழி. அதுபோல் குழந்தை தாயிடமும், குடும்பத்தினரிடமும் உரையாடி மகிழும் மொழி தாய்மொழி. அமிழ்தம் உண்டாரை மகிழ்விப்பதோடு நீண்ட காலம் வாழ்விக்கும். அதுபோலக் குழந்தை தாயிடம் பேசிப் பழகும் மொழியாம் தாய்மொழியும் நெடிய செம்மாந்த வாழ்வு வாழ வைக்கும் என்பது அங்கை நெல்லிக்கனி.

தாய்மொழி வழிக் கல்வியே உண்மையான கல்வி பிறமொழி வழிக் கல்வி நடைமுறைக்குப் பொருந்தாத கல்வி. தாய்மொழி வழிக் கல்வி இயற்கையானது; பிறமொழி வழிக் கல்வி செயற்கையானது.

தாய்மொழிக் கல்வியின் சிறப்பை எடுத்துச் சொல்லும் முன்பு நம் தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிச் சில சொல்வோம்.

## 1.2 மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

மொழி என்பது மொழியப்படுவதால் மொழியாயிற்று. நம் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிடும் கருவி மொழியாகும்.

பண்டைக் காலத்தில் மனிதன் தோன்றிய போது கையினால் சைகை செய்து தன் கருத்துக்களைச் சொன்னான். காலப்போக்கில் ஒலிகளையும், சைகையையும் அதற்குரிய பொருளையும் பயன்படுத்தினான் வளர்ந்த நிலையில் பொருளுடைய ஒலிகளைப் பயன்படுத்தினான் இப்படிப் படிப்படியே மொழி தோன்றியது.

மொழி தோன்றியதும் பேச்சு மொழியாகவே இருந்தது. பின்னர் அம்மொழி பேசும் அறிஞர்கள் எழுத்துக்களையும், பின்னர் சொற்களையும் உருவாக்கினர். சொற்கள் வாக்கியங்களாக மாறின; வாக்கியங்கள் கருத்துத் தொகுப்பாக மாறின. இவ்வாறு மொழி தோன்றியது என்பர் மொழி வல்லுநர்கள்.

### தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்

முதல் மனிதன் தோன்றிய இடம் லெமூரியாக் கண்டம். அவன் பேசிய முதல் மொழி தமிழ். தமிழிலிருந்து பிற மொழிகள் தோன்றின என்பர் வரலாற்று அறிஞர்கள்.

தமிழின் பழமையைக் ‘‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்’’ என்ற தொடர் புலப்படுத்தும். பாரதி ‘‘என்று பிறந்தவள் என்று அறியாத இயல்பினள் எங்கள்

தமிழ்த்தாய்'' என்கிறார். பாவேந்தரோ, ''திங்களொடும் உடுக்களொடும், செம்பரிதி தன்னொடும் பிறந்த தமிழ்'' என்கிறார். இக்கூற்றுக்கள் தமிழின் பழமையைப் புலப்படுத்துவன.

மொழிநூல் ஆய்வாளர் தமிழ் இருபதாயிரம் ஆண்டுப் பழமை உடையது என்கின்றனர். பேச்சு மொழி தோன்றியதும் எழுத்து மொழி தோன்றியிருக்கும். எழுத்தின் வரிவடிவங்களும், பின்னர் சொல்வடிவங்களும் தோன்றியிருக்கும். தமிழின் எழுத்துமுறை வட்டெழுத்து முறை என்பது மொழியியலார் கருத்து. இவ்வாறு மொழி தோன்றிய பின்னர் இலக்கிய, இலக்கணங்கள் தோன்றியிருக்கும்.

இதுவே தமிழ் தோன்றிய வரலாறு தமிழ் தொன்மைச் சிறப்புடையது; பன்மைச் சிறப்புடையது; மும்மைச் சிறப்புடையது; இனிமைச் சிறப்புடையது.

தமிழ் வளர்க்கும் அமைப்புகளாக சங்கங்கள் இருந்தன. புலவர்கள் பல்லோர் கூடிப் பா பல பாடி ஆய்வு செய்து அரங்கேற்றம் செய்த இடம்தான் சங்கம்.

முதல் சங்கம் இருந்த இடம் கடல் கொண்ட தென்மதுரை என்பர். முதற்சங்கத்திற்குத் தலைமை ஏற்ற புலவன் அகத்தியன். அங்கு நூல்கள் பல அரங்கேற்றப்பட்டன. அவை பெரும்பாலும் அழிந்து பட்டன. முதற்சங்க நூலாக அகத்தியத்தைக் கூறுவர்.

இரண்டாம் சங்கம் இருந்த இடம் கபாடபுரம் என இலக்கிய வரலாறு எழுதிய தமிழ் அறிஞர் பலரும் கூறுகின்றனர். இரண்டாம் சங்க நூல்கள் அழிந்துபட்டன. இரண்டாம் சங்கத்திற்குத் தலைமை ஏற்ற புலவன் தொல்காப்பியன். தொல்காப்பியம் இடைச்சங்க நூலாகக் கூறப்படுகிறது.

கடைச்சங்கம் இருந்த இடம் இன்றைய மதுரை. கடைச்சங்கத்திற்குத் தலைமை ஏற்ற புலவன் நக்கீரன். எனவேதான் தன் தலைமைப் பண்பிற்கேற்ப சிவனிடம் ''நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே'' என்றான். கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட நூல்கள் தாம் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும். இவற்றைப் பாட்டும் தொகையும் என்பர்.

கடைச்சங்க காலத்தைக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர். கி.பி.2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.6 ஆம் நூற்றாண்டு வரை, நானூறு ஆண்டுகாலம் தமிழக ஆட்சி களப்பிரர் கையில் இருந்ததாகக் கூறுவர். ஆகவே அக்காலத்தை இருண்டகாலம் என்பர் வரலாற்றாசிரியர்.

தமிழின் நிலையும், தமிழன் நிலையும் தாழ்ந்த நிலையே களப்பிரர் ஆட்சிக் காலம். கி.பி.7 ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி மலர்ந்தது. பக்தி இலக்கியங்கள் தோன்றின.

பன்னிரு ஆழ்வார்கள் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் படைத்தனர். அறுபத்து மூன்று நாயன்மார்கள் சைவ உலகிற்குப் பெருமை சேர்த்தனர். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், சுந்தரரும் தேவாரம் அருளினர். சேக்கிழார் பெரியபுராணம் எனும் சைவக் காப்பியத்தைப் படைத்து மகிழ்ந்தார். திருமூலர் திருமந்திரம் எனும் தமிழ் மறையை அருளினார். மாணிக்கவாசகர் திருவாசகத் தேனைப் படைத்தார்.

சைவமும், வைணவமும் தோன்றியதால் சமய மணம் கமழ்ந்தது; தமிழ் மணமும் கமழ்ந்தது. சைவ சமய நூல்கள் பன்னிரு திருமுறைகள் எனப் போற்றிப் புகழப்பட்டன. பக்தி இலக்கியக் காலத்திற்குப் பின் தனிப்பாடல்கள் தோன்றின. கம்பரும், கவி காளமேகமும், ஔவையும் அருளிய தமிழ்ப் பாடல்கள் பற்பல.

பிற்காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்றின. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்பர் வீரமாமுனிவர். இன்று முந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் உள்ளன என்பர் அறிஞர்.

சிற்றிலக்கியங்களில் பரணி, தூது, உலா, குறவஞ்சி, பள்ளு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், சதகம் என்பன குறிப்பிடத்தக்கன. இருபதாம் நூற்றாண்டில் பாரதி அடியெடுத்து வைத்தான். இலக்கிய மறுமலர்ச்சி தோன்றியது. பாடல்கள் எளிமையாகவும், இனிமையாகவும் இருந்தன. எனவே இக்காலக் கட்டத்தைப் பாரதியுகம் என்பர். பாரதியைத் தொடர்ந்து பாரதிதாசன் என அறிஞர் பலர் தோன்றினர்.

## 1.3 தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

தாய்மொழிக் கல்வி தாய்ப்பால் போன்றது; பிறமொழிவழிக் கல்வி புட்டிப்பால் போன்றது. தாய்மொழிக் கல்வியே உண்மையான கல்வி பிறமொழிவழிக் கல்வி செயற்கையான கல்வி. தாய்மொழியின் வாயிலாகவே சிந்தனை, செயல் அனைத்தும் நடக்கின்றன.
கருத்தை விரைவாகவும், நிறைவாகவும் புரிந்து கொள்ள தாய்மொழியே பயன்படுகிறது.

- கருத்துக்களை எளிதில் வெளியிடத் தாய்மொழியே பெரிதும் பய்னபடுகிறது. உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தம் தாய்மொழியில் கற்பதே இயற்கை.
- இயல்பாகப் பொருளுணரும் திறன் தாய்மொழி மூலமே நடைபெறும்.
- மொழியின் திறன்களும், நயங்களும், உலகியல் நடைமுறைகளும் எளிதாக அறிந்து கொள்வதற்குத் தாய்மொழியே உயர்ந்த கருவி.

தமிழ் கற்பிப்பதாலும், கற்பதாலும் பல்வேறு பொது நோக்கங்கள் நிறைவடைகின்றன. இந்நோக்கங்களை நிறைவேற்றுவது போல் பின்வரும் நாலடியார் பாடல் திகழ்கிறது.

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து"

என்ற பாடல் தாய்மொழி கற்பித்தலின் முக்கியத்துவத்தை விளக்குவது போல் குறிப்பாகச் சுட்டிச் செல்கிறது.

**சிறப்பு நோக்கங்கள்**

தமிழ் சீரிளமைத் திறத்தோடும், செயல் திறனோடும் விளங்குகிறது என்பார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. இளமைத் திறனும், செயல் திறனும் பெறுவதற்குக் காரணம் அதன் நோக்கங்களும் பயன்களுமேயாம்.

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் நோக்கமுண்டு. ஓர் அறிவியல் அறிஞனுக்கு ஆய்வில் நோக்கமுண்டு. ஒரு தத்துவஞானிக்குச் சமுதாய நோக்கமுண்டு. ஓர் உழவனுக்கு உழவுத்தொழிலில் நோக்கமுண்டு. அதுபோல் தமிழ்மொழி கற்பித்தலிலும் சிறப்பு நோக்கமுண்டு.

- பள்ளிப் பாடப் பொருளில் தாய்மொழி பெறுமிடத்தை விளக்குதல்.
- எண்ணத்தை வெளியிடும் கருவியாகத் திகழ்கிறது; அடிப்படைத் திறன்களைத் தருகிறது.
- கற்பனையாற்றலை வளர்க்கிறது; அழகுணர் ஆற்றலை அறிய முடிகிறது.
- சமூகப் பண்பாட்டினையும், சமூக மரமபினையும் அறிதல்.
- சமூகக் கடமைகளை மேற்கொள்ள வழிகாட்டுகிறது.
- வாழ்வை நடத்தத் தேவையான திறன்களைப் பெறவும் நீதிகளைக் கற்பிக்கவும் தாய்மொழி பயன்படுகிறது.

நம் எண்ணங்களைப் பேச்சு மூலமும், எழுத்து மூலமும் வெளியிடத் தாய்மொழியே பயன்படுகிறது. பேச்சு மூலம் வெளியிடுதலில் மேடைப்பேச்சு ஓர் அரிய கலை, எழுத்து மூலம் வெளியிடுவதில் கட்டுரையே சிறந்த கலை.

மொழியில் தேர்ச்சியும், புலமையும் இல்லாவிடில் இத்திறன்களை வெளிப்படுத்த முடியாது! அத்திறன்கள் இல்லாத போது எண்ணுவது ஒன்றாகவும், சொல்வது ஒன்றாகவும் அமைந்துவிடும்.

சில வேளைகளில் எண்ணுவது ஒன்றாகவும், சொல்வது ஒன்றாகவும் அமைவதற்கு நம் பத்திரிகைச் செய்திகளும், மேடைப் பேச்சும், சாதாரண உரையாடலும் சான்றாகும்.

எண்ணியது ஒன்று; சொல்லியது ஒன்று; போப்ச்சேர்ந்தது ஒன்று என்ற நிலையில் சிலர் தம் கூற்றுக்குப் பத்திரிகை வாயிலாகவும், நேரடியாகவும் வருத்தம் தெரிவிப்பதைப் பார்க்கிறோம்.

எண்ணங்கள் எத்தனையோ நிலைகளில் வெளிப்படுகின்றன. சிலநேரங்களில் சாதாரணக் கருத்துக்களாக வெளிவருகின்றன. சிலநேரங்களில் ஆய்வுக் கருத்துக்களாக வெளிவருகின்றன் மற்றும் சிலநேரங்களில் உணர்ச்சிகளாக வெளிவருகின்றன் சிலநேரங்களில் நயமுள்ள தொடராக வெளிவருகின்றன. இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை மொழித்திறன். இந்த மொழித்திறன் கருத்துகளை நிரல்படச் சொல்லப் பயன்படுகிறது. இதை வள்ளுவா் சொல்வன்மை என்ற அதிகாரத்தில்,

‘விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது

சொல்லுதல் வல்லார்ப் பெறின்’

எனக் கூறுகிறார். இத்தகைய திறனைப் பெறத் தாய்மொழிப் பயிற்சி இன்றியமையாதது.

தாய்மொழி சொற்தொகுதிகளை ஏற்ற இடங்களில் பயன்படுத்தவும், பட்டறிவை வெளிப்படுத்தவும், அவற்றைப் பயன்படுத்துவோா் வெற்றி பெறவும் சிறந்த துணையாக அமையும்.

**பட்டறிவை வெளிப்படுத்துதல்**

ஒருவா்தம் வாழ்வு நுகா்வுகளையும், பட்டறிவையும் வெளிப்படுத்துவதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாகும். அத்தகைய தாய்மொழியைத் திறமையாகக் கையாள வேண்டும்.

புவியின் ஈா்ப்பாற்றலை ஐசக்நியூட்டன் கண்ட ஆப்பிள் நிகழ்வின் மூலமும் விளக்கலாம். அவா் ஆப்பிள் மரத்தடியில் அமா்ந்திருந்த போது ஒரு ஆப்பிள் கீழே விழுந்தது. அதன் மூலம் புவிக்கும் இழுக்கும் ஆற்றல் உள்ளது என்பதை உணா்ந்தார்.

இதனை மேலும் விளக்க ஒரு சிறுவன் பந்தைத் தலைக்கு மேலே தூக்கிப் போடுகிறான். அது தானாக கீழேவந்து விழுகிறது. அப்போது சிறுவனிடம் புவிக்கு ஈா்ப்பு உள்ளதால் பந்து கீழே விழுகிறது. இல்லை என்றால் பந்து சென்ற இடத்திலேயே அந்தரத்தில் நிற்கும் என்று கூறும்போது மாணவா்கள் எளிதாகப் புரிந்து கொள்வா்.

இதிலிருந்து பட்டறிவு கருத்துக்களைச் சொல்வதற்கு எளிதாகப் பயன்படும் திறன் வாய்ந்தது என்பதை அறிகிறோம்.

**செயலாற்றல்**

ஒருவன் எத்தொழிலில் ஈடுபட்டாலும் அதைத் திறமையாகவும், பயனுடையதாகவும் செய்ய வேண்டும்.

**1.4 கற்பித்தலும் ஒரு தொழிலே! கற்றலும் ஒரு தொழிலே!**

தற்காலத்தில் தொழில்நுட்பத்தால் புதிய பயிற்றுமுறைகள் புகுந்துவிட்டன. அவற்றுள் மொழி பயிற்றாய்வுக் கூடமும் ஒன்று. அதில் பொறிகள் இயங்கும் விதத்தில் ஆசிரியா் பயிற்சி பெற்றால்தான் திறம்பட எடுத்துச் சொல்லவும், கருவிகளை இயக்கவும் முடியும்.

மாணவனும் அதுபோல் தனக்கு ஒதுக்கப்பட்ட கருவிகளை இயக்கும் திறன் பெற்றால்தான் கருவியை இயக்க முடியும். எனவே கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் செயல் ஆற்றல் வேண்டும் என்பதை இந்நிகழ்வு கூறுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-1**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை விளக்குக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. செயலாற்றல் என்றால் என்ன?

.............................................................................................................................................

.............................................................................................................................................

**அறிவுக் களஞ்சியம் அறிதல்**

சங்க இலக்கியங்கள் மூலம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர் தம் நெறிமாறா வாழ்வு, நீதி தவறா ஆட்சி, உயர்ந்த பழக்கவழக்கம், சிறந்த நாகரிகம், கொள்கை மாறா வாணிகம், அறநெறி தவறாப் போர்முறை, அன்பு மாறா நட்பு ஆகியவற்றை அறிய முடிகிறது.

இலக்கியம் வாழ்வை எதிரொளிக்கும் கண்ணாடி என்பர். சங்க இலக்கியங்கள் தமிழர் தம் பெருமையைத் தெரிவிக்கின்றன. அவற்றை அறியவும், புரியவும் மொழித்திறன் தேவை. இத்தகைய மொழித்திறனைத் தருவது தாய்மொழியாகும்.

**கற்பிக்கும் வாயில்**

பள்ளியில் மொழிப் பாடங்களும், கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. மொழிப் பாடத்தில் கரிகாலன் நீதி வழங்கிய செய்தி அனைவரும் அறிந்ததே.

நீதி வழங்குவதற்கு நடுநிலை தவறாத அறிவு மட்டும் இருந்தால் போதாது. அனுபவமும், அறிவு முதிர்ச்சியும், வயதும்கூட ஒரு தகுதி என்பதைக் கரிகாலன் நீதி வழங்கிய நிகழ்ச்சி நினைவுபடுத்துகிறது.

நீதி கேட்கச் சென்ற பெரியோர் கரிகாலனைப் பார்த்ததும் வயதில் இளையவன் என மீண்டு வந்தனர். இதனை அறிந்த கரிகாலன் முதியவராக மாறுவேடம் புனைந்தான் முதியோர்களை அழைத்தான். சரியான நீதி வழங்கினான்.

இக்காட்சியை மாணவர்கள் மனக்கண்முன் ஆசிரியர் கொண்டுவந்து நிறுத்தி அதற்குரிய வெண்பாவையும் கூறுகிறார். இங்கு மொழியானது கற்பிக்கும் வாயிலாகப் பயன்படுகிறது என்பதை அறிகிறோம்.

**1.4.1 கலைத்திட்டத்தில் மொழியின் இடம்**

தாய் தாய்ப்பாலை மட்டும் புகட்டுவதில்லை அறிவு எனும் பாலையும் புகட்டுகிறாள். அவள் தன் சிந்தனையின் விளைவே அறிவு எனும் பால். அதுபோல் அவள் ஊட்டிய சிந்தனை தாய்மொழியின் மூலமும் மிளிரும்.

சங்கத் தமிழரும், அதற்கு முந்தைய தமிழரும் சிந்தித்தனர். தமிழர் வாழ்வு சிறக்க வேண்டும் என எண்ணினர். அச்சிந்தனையின் வெளிப்பாடே தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை சங்கம் மருவிய காலத்தில் எழுந்த நீதி நூல்களின் பெட்டகமாம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.

அவர்கள் கண்ட வாழ்வியல் உண்மைகளை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். அந்த வாழ்வியல் உண்மைகள் கற்பனை கலந்து பொற்புற அறிவுப் பெட்டகமாகக் காட்சி அளிப்பது தாய்மொழியாம் தமிழில்தான்.

தாய்மொழிக் கல்வியைக் கலைத்திட்டத்தில் வகுக்கும் போது மொழித் திறனோடு, பண்பாட்டுத் திறனும் கருத்தில் கொள்ளப்பட்டது.

தாய்மொழி அறிவு பிற துறை அறிவுக்கும், தரமான கல்வி மேம்பாட்டிற்கும் பெரிதும் துணையாய் அமைகிறது; பண்பாட்டு வளர்ச்சிக்குப் பக்க பலமாக அமைகிறது.

- தாய்மொழியின் தரமான வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், ஆரம்பமாகவும் அமைவது பள்ளி.
- கல்வியானது அகப் பண்புகளையும், புறப் பண்புகளையும் வளர்க்கும் ஒரு கருவி. தாய்மொழிக் கல்வி இதில் பெரும்பங்கு வகிக்கிறது.
- கலைத்திட்டம் என்பது பாடப்பொருள் மட்டும் அன்று; பாடப்பொருள் தொடர்புடைய கருத்துக்கள், வகுப்பறை அனுபவம், பள்ளிச் செயல்பாடுகள், பள்ளி அனுபவம் அனைத்தும் கலந்த கலவை.

அந்தக் கலவையை அமிழ்தமாக வழங்குவதில் தாய்மொழி முதலிடம் பெறுகிறது.

தாய்மொழி மொழி சார்ந்த திறன்களையும், அறிவுசார்ந்த திறன்களையும், பண்பாடு சார்ந்த திறன்களையும் வளர்ப்பதில் முன்னிலையில் உள்ளது.

இவற்றோடு வாழ்வியல் கூறுகளான பொருளியல் கருத்துக்கள், தொழில்துறைக் கருத்துக்கள், சமய உண்மைகள், நாட்டு ஒற்றுமையை வளர்க்கும் நற்சிந்தனைகள், உலக ஒற்றுமையை வளர்க்கும் ஒருதாய் மக்கள் என்ற உயரிய சிந்தனை அனைத்தையும் தாய்ப்பாலை அன்புடன் தரும் தாய் போல் தாய்மொழி தருகிறது.

மாணவனின் மனவளர்ச்சி வாழ்வுக்கு அடிப்படை அத்தகைய மனவளர்ச்சி தாய்மொழியால் முடியும். தீய மனவெழுச்சிகளை நீக்கி நல்ல மனவெழுச்சிகளை வளர்ப்பது தாய்மொழி. எழுச்சியே ஏற்றமிகு வாழ்வாக அமையும். அத்தகைய எழுச்சியால்தான் சுகாதாரமான நலவாழ்வு அமையும்.

இன்று நலவாழ்வுக்கு நாம் எத்துணைப் பாடுபடுகிறோம் என்பதை நாளும் அறிவோம்.

ஆகவே மனிதனை அறிவியல், தொழிலியல், பொருளியல், ஆன்மீகவியல், பகுத்தறிவுச் சிந்தனையியல் என அனைத்து நிலைகளும் செம்மையாக வளர வழிவகுப்பது கலைத்திட்டத்தில் முதன்மை இடம்பெறும் தாய்மொழிக் கல்வியாகும்.

இப்பண்புகள் அனைத்தும் இன்று ஊடகங்களால் ஊட்டப்படுகின்றன. ஊடகங்கள் அன்னப்பறவையாக மாறி வாழ்வுத் தேவைகளை மட்டும் தரவேண்டும்; தேவையற்றவற்றை அன்னம் நீரை ஒதுக்குவது போல் ஒதுக்கிவிட வேண்டும்.

**1.4.2 மொழியின் பண்புகளும் பயன்களும்**

- மொழியப்படுவதால் மொழி எனப்பட்டது. கருத்துக்களை எழுத்து வடிவிலும் பேச்சு வடிவிலும் வெளியிட உதவுகிறது.
- மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது மொழி. மனிதன் தனக்கென்று வாழ்க்கை முறையை அமைத்திட உதவுகிறது.
- பகுத்தறிவுச் சிந்தனையை வளர்க்கிறது. யார் எக்கருத்தைக் கூறினாலும் அதன் உண்மைத் தன்மையை அறிய மொழியின் துணை தேவை.
- மொழியின்றேல், குடும்பத்தோடும், சமுதாயத்தோடும் தொடர்பு கொள்ள முடியாது.
- மொழியே மனிதனை மனிதனாக்குகிறது; ஒவ்வொருவரின் தனித்தன்மை சிறக்க மொழித்திறன் வேண்டும்.
- உலகை ஒரு குடும்பமாகப் பிணைப்பது மொழி; தேசிய ஒருமை, உலக ஒருமை வளர உதவுகிறது.

**தமிழ் உயர்மொழி:** மற்ற மொழிகளுக்குத் தலைமை ஏற்கும் தகுதி பெற்றதால் உயர்மொழி.

தமிழ் தனி மொழி பிறமொழிகளின் துணை இல்லாமல் இயங்கக் கூடியது. ஆகவே தனிமொழி. தமிழ் செம்மொழி; உயர்ந்த நாகரிகமும், சிறந்த பண்பாடும் கொண்டது; இலக்கிய, இலக்கணச் சிறப்புடையது; செவ்வியல் பண்புகள் அனைத்தும் கொண்டது.

உலக முதன்மொழி தமிழ் ‘‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே’’ தோன்றியது. முதல் மனிதன் பேசிய மொழி தமிழ். தமிழ் ஒண்மையும், உயர்வும் உடையது என்றும் இளமைத் திறத்தோடு பொலிந்து இலங்குவது.

**1.4.3 தாய்மொழியின் பயன்கள்**

தாய்மொழியால் சிந்தனை வெளிப்படுகிறது; காலத்தைக் கடந்து என்றும் பயன்படும் எழுத்துப் பதிவைக் கொண்டது; இதற்குத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் சான்று.

வாழ்வில் பின்பற்ற வேண்டிய உயர்பண்புகளைத் தமிழர் மக்களுக்கு விட்டுச் சென்றுள்ளனர். அவை காலத்தால் அழியாக் கருத்துப் பெட்டகங்கள். இவையெல்லாம் அவரவர் தாய்மொழியில் தான் அமைந்துள்ளன.

காலத்தைக் கடந்து நிற்கும் கருத்துக்கள் மாணவர்களுக்குச் சென்றடைகின்றன. தாய்மொழியில் மட்டுமே உயர்ந்த கருத்துக்களைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்திட முடியும்.

விழுமிய கருத்துக்களைச் செஞ்சொற்களால் உயர்நடையில் கூறமுடியும். வாழ்வியல் சார்ந்த அகச் செய்திகளையும், புறச் செய்திகளையும் மாணவர்களுக்கு வழங்க முடியும்; அதற்கான கலைத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

மாணவர்களின் எதிர்காலப் பயன்கள், வாழ்க்கைப் பயன்கள், சமூகப் பயன்கள், அறநெறிப் பயன்கள், பண்பாட்டுப் பயன்கள், தொழிற் பயன்கள் எனப் பல நிலைகளிலிருந்து தெளிவான கருத்துக்களைப் பெற முடியும்.

மாந்தர் வாழ்வை மேம்படுத்தும் அரிய அறநெறிகளைக் கொண்டு விளங்குகின்றன.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்''

''வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே
முனிவின் இன்னா தென்றல் அதனினு மிலமே''

''தீதும் நன்றும் பிறர்தர வாரா''

''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

''செல்வத்துப் பயனே ஈதல்''

போன்ற நூற்றுக்கணக்கான நீதிகள் தமிழர்தம் வாழ்வை, தமிழர் மரபை செம்மையாக்கித் தமிழர் பண்பாட்டைத் தூக்கி நிறுத்தியுள்ளன.

**1.5 வாழ்க்கை அமைப்பில் மொழியின் பயன்பாடு**

கருத்துக்களைத் தாய்மொழி வழியாகச் சொல்லும்போது அ∴து வலிவும் பொலிவும் பெற்று மனதில் பதியும். கருத்தில் தெளிவு ஏற்பட்டுப் பொருளும் எளிதில் விளங்கும். அக்கருத்து படிப்போர்க்கும், கேட்போர்க்கும் பயன்பட்டு அறிவு வளர அடிப்படையாக அமையும். இத்தகைய சிறப்பை ஆராய்ந்த காந்தியடிகள் தாய்மொழி தாய்ப்பால் போன்றது என்றார்.

தனிமனிதச் சிந்தனைகள் வளரும் சமுதாயச் சிந்தனைகள் மலரும். சமதர்மச் சமுதாயம் உருவாகும். தாய்மொழியில் கருத்துக்கள் பேச்சின் மூலமும், எழுத்தின் மூலமும் வெளிப்படுகின்றன. அன்பு, அருள், ஈகை, ஒப்புரவு, நட்பு, விருந்தோம்பல் போன்றவை சமுதாயத்தை வளரச் செய்யும் சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும் பண்புகள் வளரச் செய்கின்றன.

தாய்மொழிக்கு இருக்கும் தனி ஆற்றலை மணிமேகலைக் காப்பியம் எடுத்துச் சொல்கிறது. இ∴து இடைநிலை வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாகவும் அமைந்துள்ளது.

கற்பின் செல்வி ஆதிரையின் கணவன் சாதுவன் வணிகத்தின் பொருட்டுக் கலம் ஏறிக் கரைகடந்து சென்றான். கலம் கவிழ்ந்ததால் நாகர் வாழும் பகுதியில் கரை ஒதுங்கினான்.

நாகர்கள் அவனைக் கொன்று உணவாக உண்ணத் திட்டமிட்டனர். சாதுவன் அவர்கள் தாய்மொழியில் பேசி உயிர் பிழைத்தான். இதன் மூலம் தாய்மொழி மாறுபட்ட இனத்தையும் மனம் கனிந்து மாற்றமடையச் செய்ததை அறிகிறோம்.

நம் பாரதத் திருநாடு மொழி வழியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டுகளில் நிகழ்ந்த நிகழ்வு. தமிழ் நிலத்தில் ஆட்சி மொழியாக 1956 ஆம் ஆண்டு அரங்கேறியது. அன்று தொடங்கிய பணி இன்று எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலையில் அலுவலகங்களிலும், பொது இடங்களிலும் பயன்பட்டு வருகிறது. தமிழகத்தில் பேச்சும்

எழுத்தும் தமிழில் என்பது தமிழர்க்குப் பெருமை சேர்ப்பதோடு தமிழர் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் உயர் பணியாகும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-2**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

3. மாணவணின் மனவெழுச்சி எவ்வாறு அமைய வேண்டும்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. தாய்மொழியின் பயன்களை விவரி.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

கருத்து[illegible] தெளிவு, [illegible] இனிமை, [illegible] [illegible] இனிமை என்ற [illegible] தமிழ் தமிழர்க்கும், தமிழ் அறிந்தோர்க்கும் வழிகாட்டுகிறது. புதிய உறவுக்கும், நட்புக்கும் தொடர்பு மொழியாக இருப்பது தமிழ். ஒற்றுமையை வீட்டிலும், வெளியிலும் ஏற்படுத்துவது தமிழ். ஒன்றுபட்ட சமுதாயத்தில்தான் உயர்வு இருக்கும். ஒற்றுமைக்கும், உயர்வுக்கும், கருத்து வளர்ச்சிக்கும் பயன்படும் தமிழ் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலும் பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும் அமைந்துள்ளது.

மனிதனிடம் சிந்தனை, சொல், செயல் என்ற மூன்று திறன்கள் முக்கனிச் சாறாய்ப் பெருக்கெடுத்தோடுகிறது.

சிந்தனையில் உயர்வு, சொல்லில் தெளிவு, செயலில் நன்மை என்ற நிலையை ஏற்படுத்துவது முத்தமிழ். முத்தான முத்தமிழ் இம்முத் திறன்களையும் வளர்க்கும் நிலை பெற்றது.

“சொல்லுக சொல்லிற் பயனுடைய அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து”

என்பது தமிழ்மறை. அம்மறையின் கருத்துக்கிணங்க சிந்தனை ஆற்றலையும், செயலாற்றலையும், சொல்லாற்றாலையும் வளர்க்கும் அரும்பணியைச் செய்வது தமிழ். ஒரு தலைமுறையில் கற்கும் கல்வி பல தலைமுறைக்குச் செல்லும் தொடர்பை ஏற்படுத்துவது தமிழ். இதனை அறிந்த வள்ளுவர்,

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப் புடைத்து”

என்ற குறளில் வெளிப்படுத்துகிறார். ஆயிரம் ஆயிரம் தலைமுறைக்கு முன்னர் படைத்த தொல்காப்பியம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடியார் என்று முடியாமல் தொடர்ந்து செல்லும் நூல் தொகுப்புக்களெல்லாம் கல்விச் செல்வத்தின் மூலமும், கேள்விச் செல்வத்தின் மூலமும் தமிழ்ப் பரம்பரையைச் சென்றடைகின்றன. அவ்வாறு, கருத்துக்கள் சொல்லப் பயன்பட்டது “இனிமைத் தமிழ்மொழி எமது, செவிக்கு இன்பந்தரும் கனியமுது” என்ற நிலையில் உள்ள தமிழேயாகும்.

### 1.6 அடிப்படைத் திறன்கள்

தாய்மொழிப் பயிற்சி மூலம் பெறும் திறன் இரண்டு. ஒன்று மொழித்திறன், மற்றொன்று வாழ்வுத்திறன்.

மொழித்திறன்கள் நான்கு. அவை கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்ற அடிப்படைத் திறன்களாகும்.

**கேட்டல்**

கல்வியியல் திறன்களில் ஆற்றல் உள்ள திறன் கேட்டல் திறன். கேட்டல் திறனே அறிவுக்கு ஆதாரம். வாழ்வுக்கு அடிப்படை. இந்நிலை பற்றியே வள்ளுவர் கேள்விச் செல்வம் என்றார்.

மொழிக்கு அடிப்படை எழுத்துக்கள். அவ்வெழுத்துக்களின் ஒலியைக் காது கொடுத்துக் கேட்கிறான். அதன் மூலம் ஒலி வேறுபாட்டை அறிகிறான். அவ்வெழுத்துக்களைக் காட்சி மூலம் காணும்போது வரிவடிவம் மனதில் பதிகிறது.

முதன்முதலில் ஒலிக் குறிப்புகள் மூலம் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. காலப்போக்கில் வரையறுக்கப்பட்ட ஒலிக் குறியீடுகள் மனதில் பதிந்தன. அப்பதிவே பேச்சு மொழியாக உருவெடுத்தது. மனிதன் தன் தேவைக்கேற்ப ஒலிக் குறியீடுகளை அமைத்துக் கொண்டான். அவற்றின் மூலம் கருத்துக்கள் ஐயமின்றி வெளிப்பட்டன. எனவே “பேசுதல் திறனுக்குக் கேட்டல் திறனே அடிப்படை” என்ற கூற்று உண்மை என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது.

**பேசுதல் திறன்**

பேசுதல் திறன் வேறு, பேச்சுத் திறன் வேறு. தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்கள் சொற்களையும், வாக்கியங்களையும் பிழையின்றி ஒலிப்பதற்குப் பயிற்சி தருகின்றனர். இதுவே பேசுதல் திறன்.

பேசுதல் திறன் சொல்வன்மை, கட்டுரை வன்மை எனப்படுகிறது. மாணவர்களுக்குத் தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை என அனைத்து வகுப்புக்களிலும் பேசுதல் திறனை வளர்க்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒருவர் பேசுவது அழுத்தமாகவும், திருத்தமாகவும் அமைய வேண்டும். அழுத்தம் திருத்தமாகப் பேசுவது என்பது கருத்து. அழுத்தம் என்பது உணர்ச்சி, ஒலிப்பு, பயன்படுத்தும் சொற்கள் இவற்றின் தெளிவாகும்.

பேச்சில் உயிர்ப்பும், கேட்போரை ஈர்த்தலும் உணர்ச்சியுடன் பேசுதலாகும். குரல் ஏற்றத்தாழ்வுடன், மகிழ்ச்சி, அச்சம், நகைச்சுவை, சோகம் போன்ற உணர்ச்சிகளைத் தெளிவுடன் வெளிப்படுத்த வேண்டும். இதுவே உணர்ச்சியுடன் பேசுதலாகும்.

**இலக்கண வழுவின்றிப் பேசுதல்**

ஒருவர் தான் பேசுவதை இலக்கணப் பிழையின்றிப் பேசவேண்டும். அப்போதுதான் கேட்போருக்கும் பொருள் தடுமாற்றம் ஏற்படாது.

பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தாமல் எழுத்து வழக்குச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். கூறியது கூறல், வழூஉச்சொல், பிறமொழிச்சொல் இவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

**பேச்சுப் பயிற்சி**

மாணவர்களின் வயது, தகுதி இவற்றிற்கேற்ப பேசுதல் திறனில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சொற்போர், கலந்துரையாடல் என்ற இவற்றின் மூலம் பேசுதல் திறனை வளர்க்கலாம்.

மாணவர்களிடையே அன்பு, நட்பு, கூட்டுறவு, கருத்துப் பரிமாற்றம், மற்றவர் கருத்தை மதித்தல் போன்ற பண்புகளால் கலந்துரையாடல் வளர்கிறது.

விரைவாகவும், தெளிவாகவும் பேசுவதற்கு வினாடிவினா பயன்படுகிறது.

**படித்தல் திறன்**

படித்தலாகிய செயல் மூலம் கருத்துக்களை உணர்கிறோம். எழுத்து வடிவங்களைக் கண்களால் கண்டு, வாயால் ஒலித்து, அவற்றைப் பொருள் உணரும் செயலே படித்தல் எனப்படும். இவை மூன்றும் ஒன்றுபட்டு நடந்தால் படித்தல் செயல் சிறப்பாக நடைபெறும்.

படிக்கக் கற்பித்தலின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் கூறுவர். அவை,

1. பொருளுணர்ந்து படித்தல் 2. இலக்கிய இன்பம் பெறுதல், ஆர்வத்தை ஏற்படுத்துதல், கற்பனை ஆற்றலை வளர்த்தல், உணர்ச்சிகளை உணர்தல், மொழித்திறன் பெறுதல் ஆகியவற்றைக் கூறலாம்.

படிக்கப் பயிற்சி அளிக்கும் முறைகளாகப் பல கூறப்பட்டுள்ளன. அவை எழுத்துமுறைப் படிப்பு, சொல்முறைப் படிப்பு போன்றவை.

பண்டைக்காலம் முதல் பின்பற்றப்படும் முறை எழுத்துமுறைப் படிப்பு. எழுத்துக்களை ஒவ்வொன்றாகக் கரும்பலகையில் எழுதி மாணவர்க்குப் பயிற்சி அளித்தல்.

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துகளும் எழுத்து முறைப் படிப்பின் மூலமே கற்பிக்கப்படுகின்றன.

கோமெனிபல் என்பவரே சொன்முறைப் படிப்பை உருவாக்கியவர். சொன்முறைப் பயிற்சியில் சொற்கள் எழுதப் பெற்ற படத்தைக் காட்டி சொற்களை மட்டும் கரும்பலகையில் எழுதிக் கற்பிக்கலாம். ‘ஆ’பிரிவில் சொல்லும் சொற்களை மாணவரைச் சொல்லச் செய்து சொற்களஞ்சியப் பயிற்சி அளிக்கலாம்.

இவை அல்லாமல் வாய்விட்டுப் படித்தலும், வாய்க்குள் படித்தலும் பயிற்சி முறையாகும். மொழியின் அமைப்பையும், சிறப்பையும் உணர்ந்து அதற்கேற்ப ஒலித்துப் படிக்கும் முறையே வாய்விட்டுப் படிக்கும் முறையாகும். தொடக்க நிலையில் மாணவர்களுக்குச் சொற்களைக் கற்றுத்தர இதுவே சிறந்த பயிற்சி முறையாகும்.

கண், மனம், உறுப்புக்கள் இவற்றை ஒன்றாக இணைத்துப் படிக்கும் முறையே வாய்க்குள் படித்தலாகும்.

வாய்க்குட் படிக்கும்போது பொருளுணர்ந்து படிக்க முடியும்.

வாய்க்குட் படிக்கும்போது பொருளை உணர்ந்து பொருட் சுவையில் ஈடுபாடு ஏற்படும்.

மொழியின் கூறுகளை நன்கு இனங்கண்டு பிரித்தறிய முடிகிறது.

ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு என்பவையும் படிக்கும் பயிற்சியாகும்.

படிக்கும் பாடப்பகுதியில் எப்பகுதியையும் விடாமல் கருத்தூன்றிப் படிப்பதே ஆழ்ந்த படிப்பாகும். ஆழ்ந்த படிப்பின் மூலம் பொருளையும், மொழிக் கூறுகளையும், மொழித்திறன்களையும், மொழிப் பயிற்சிகளையும், மொழியைச் செம்மையாகக் கையாளும் திறனையும் பெறலாம்.

செய்திகளை மட்டும் மேலோட்டமாகப் படித்துச் செல்வது அகன்ற படிப்பு; பாடநூல் தவிர மற்ற நூல்கள் எல்லாவற்றையும் மேம்போக்காகப் படிப்பர்.

அகன்ற படிப்பு விரைவாகப் படிக்கும் பழக்கத்தையும், மிகுதியாகப் படிக்கும் பழக்கத்தையும், பல்துறை அறிவு பெறுதலையும், சொற்களஞ்சியப் பெருக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

**எழுதுதல் திறன்**

மொழித்திறனில் இன்றியமையாத் திறன் எழுதுதல் திறன். எழுத்தின் ஒலி வடிவங்களையும், வரிவடிவங்களையும் நன்கு அறிந்து எழுதப் பயிற்சி அளிக்கும்போது எழுத்துப் பயிற்சி செம்மையுறுகிறது.

தமிழ் எழுத்துக்களின் மூக்குச் சிதையாமல் எழுத வேண்டும். அவ்வாறு எழுதும் கையெழுத்தே அழகாக இருக்கும்.

எழுத்துப் பிழையின்றி எழுதுவதே கையெழுத்திற்குச் சிறப்புச் சேர்க்கும்.

எழுதும்போது குழந்தைகளின் எண்ணம், எழுதுகோல், கைத்தசை இவற்றிற்கிடையே ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும்.

எழுதும்போது கை, முன்கை, மணிக்கட்டு, கைவிரல்கள், தசை நார்கள் ஆகியவை குழந்தையின் விருப்பப்படி இயங்க வேண்டும்.

மணல் பரப்பி ஆள்காட்டி விரலால் வடிவங்களை எழுதப் பயிற்சி அளிக்கலாம்.

இன்று குழந்தைகளுக்குத் தாள்களின் மீது எழுதும் பயிற்சியே தரப்படுகிறது.

எழுதுகோலை நடுவிரல் மீது தாங்கிப் பிடித்து, கட்டை விரலாலும், சுட்டுவிரலாலும் எழுதுவதே உரிய எழுத்து முறையாகும்.

எழுத்துக்களின் உருவங்களைச் சரியான முறையில் எழுதப்பயிற்சி அளிப்பது ஆசிரியரின் கடமையாகும். அனைத்து எழுத்துக்களையும் ஒரே அளவாக எழுத வேண்டும்.

எழுத்துக்கும் எழுத்துக்கும், சொல்லுக்கும் சொல்லுக்கும்,சொற்றொடருக்கும் சொற்றொடருக்கும் இடைவெளிவிட்டு எழுத வேண்டும்.

எழுத்துகளைச் சாய்வாகவோ, ஒன்றன் மீது ஒன்றோ சங்கிலி போல் இணைத்தோ எழுதக் கூடாது. எழுத்துப் பயிற்சி முறைகளாக வரியொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், சொல்வதெழுதுதல் போன்றவற்றைச் சொல்லலாம்.

வரியொற்றி எழுதும்போது நான்குவரி நோட்டில் எழுத வேண்டும். அதில் நடுவில் உள்ள இரண்டு வரியில் மட்டும் எழுத வேண்டும். எழுத்தின் மையப்பகுதி இரண்டுவரிகளிலும், நடுப்பகுதியிலும், மேற்கோட்டில் மேற்கொம்பையும், கீழ்க்கோட்டில் சுழிகளையும் எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இவ்வாறு பாடப்புத்தகத்தில் உள்ள சொற்களைப் பார்த்து எழுதுவதும், ஆசிரியர் சொல்வதைக் கேட்டு எழுதுவதும் எழுத்துப் பயிற்சி முறையாகும். மாணவர்களிடம் சரியான உச்சரிப்பு இருந்தால் பிழையின்றி எழுத முடியும். வாய்க்குப் படித்தலும், வாய்விட்டுப் படித்தலும் எழுத்துக்களையும், வேறுபட்ட சொற்களையும் அறிந்து பிழையின்றி எழுத வழிவகுக்கின்றன.

**வாய்மொழிப் பயிற்சி**

ஆசிரியர் மாணவர்களுக்குச் செய்யுள், உரைநடை போன்றவற்றைப் படிக்கும் பயிற்சி அளிக்கிறார். இத்தகைய பயிற்சியே மொழியைப் பிழையின்றி, திருத்தமாக, குரல் ஏற்றத்தாழ்வுடன் பொருளுணர்ந்து படிக்கும் நிலையைத் தருகிறது.

அடிப்படைத் திறன்களில் எல்லாம் முதன்மையானது ‘நாநலம்’ என்று கூறும் வள்ளுவர், அது ஒருவன் பெற்றுள்ள சிறப்புக்களில் எல்லாம் உயர்ந்தது என்பர்.

மயங்கொலிப் பிழையின்றி, சந்திப்பிழையின்றி எழுத அடிப்படையாக அமைவது மயங்கொலிப் பிழையின்றி, சந்திப்பிழையின்றிப் பேசுதல் ஆகும். இப்பயிற்சி பிழையின்றி எழுதப் பழகும் பயிற்சிக்கு அடிப்படையாகும். பிறமொழிக் கலப்பின்றி, கொச்சைச் சொற்களின்றிப் பேசுவது தனித்தமிழ் நடைக்கு அடிப்படையாகும்.

திருந்திய பேச்சு என்பது தெளிவான ஒலிப்பு முறையைக் கொண்டிருக்க வேண்டும் சொற்களை முழுமையாக ஒலிக்கலாம் பிறமொழிக் கலப்பின்றிப் பேசலாம்; பொருத்தமான வேகத்துடன் குரல் ஏற்ற இறக்கத்துடன் பேசவும் பழகுகின்றனர்.

உணர்ச்சியுடனும், சிறந்த மொழிநடையுடனும், மரபுச்சொல் பயன்பாட்டை அறிந்தும், பண்பாட்டு மரபை அறிந்து பேசும் பயிற்சி பெறுகின்றனர்.

நாபிறழ் பயிற்சியும், நாநெகிழ் பயிற்சியும் பெற்றால்தான் மயங்கொலிப் பிழையின்றிச் சொற்கள் வெளிப்படும். எடுத்துக்காட்டாக,

‘‘குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்’’

என்ற குறளைக் கூறலாம்.

உரையாடல், சொற்பொழிவு, சொற்போர், தமிழ் மன்றப் பேச்சு, வினாக்கள் கேட்டல் ஆகியன பேச்சுப் பயிற்சியை வளர்த்து வாய்மொழிப் பயிற்சிக்கு வாயிலாக அமையும்.

வினாக்கேட்டலின் மூலம் சிறுசொற்றொடர் அமைத்து இலக்கணப் பிழையில்லாமல், தெளிவாகப் பேசும் நிலை பெறலாம்; பொருள் தெளிவும், வாக்கியத் தெளிவும் இதிலடங்கும்.

எனவே வாய்மொழிப் பயிற்சி தரமான தமிழ் எழுத்துப் பயிற்சிக்கும், தடுமாற்றமில்லாத கருத்துப் பயிற்சிக்கும் அடிப்படையாக அமையும்.

**இலக்கிய நயம்**

ஒருவன் மொழிப் புலமை பெற்றுப் பாடலின் சிறப்புக்களையும், உரை வாதத்தின் சிறப்புக்களையும் அறிந்து வெளிப்படுத்தும் போது அது இலக்கிய நயமாக மாறுகிறது.

இலக்கிய நயம் என்பது பாடலில் உள்ள சிறப்புக்களே ஆகும். அது மலரிலிருந்து மணம் வெளிப்படுவது போன்ற ஒன்றாகும். ஒரு பாடலில் அமைந்த சொல் நயம், பொருள் நயம், தொடை நயம், அணி நயம், சந்தம், சுவை ஆகியவையே அப்பாடலில் அமைந்த இலக்கிய நயங்களாகும்.

**பாடல்**

கற்றவர் முன்தாம் கற்ற
　　கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
　　வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
　　சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
　　பெருங்குணம் பெறுதல் இன்பம் (உவமைக் கவிஞர் சுரதா)

**முன்னுரை**

மனிதனுக்குப் பெருமை அன்பு; மலருக்குப் பெருமை மணம்; பாடலுக்குப் பெருமை நயம். இப்பாடலில் உள்ள திரண்ட கருத்து, மையக்கருத்து சொல் நயம், பொருள் நயம், அணி நயம், சந்தம், சுவை, கற்பனை போன்ற சிறப்புக்களை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திரண்ட கருத்து**

படித்தவர் முன் ஒருவன் தான் கற்ற கல்வியைப் பற்றிச் சொல்வதால் அவன் கற்ற கல்விக்கும், அவனுக்கும் பெருமை கிடைக்கும். வெற்றி தரும் செயல்களைச் செய்வதால் இன்பம் கிடைக்கும் இழிவான சிறுமதி படைத்தவரோடு சேராது வாழ்தல் இன்பமாகும்.தான் பெற்ற செல்வத்தை மற்றவர்க்கும் கொடுத்து வாழ்வதால் இன்பம் கிடைக்கும்.

இஃது பாடலின் கருத்து.

**மையக் கருத்து**

'இன்பம் தருவன' என்பதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

**சொல் நயம்**

சிறந்த சொல்லைக் கவிதை நயத்தோடு கற்பனை கலந்து தருவதே சொல்லின்பம்.

'வினை' என்று கூறாமல் 'வெற்றியை வாழ்வில் சேர்க்கும் வினை' எனக் கூறியிருப்பது சொல் நயம் அமைந்த தொடராகும்.

**பொருள் நயம்**

பாடலுக்குப் பெருமை சேர்ப்பது பொருள் நயம் ஆகும். 'கயவர்' என்று கூறாமல் 'இழிவான சிறுமதி படைத்தோர்' என்ற பொருளுடைய 'சிற்றினக் கயவர்' என்ற தொடரில் பொருள் நயம் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

**தொடை நயம்**

**மோனைத்தொடை:**

'கற்றவர், கற்ற, கல்வியை' என்ற சீர்களில் சீர்மோனை அமைந்துள்ளதைக் காணலாம்.

**எதுகைத் தொடை**

‘கற்றவர், வெற்றியை, சிற்றின, பெற்றதை’ என்ற சீர்களில் அடி எதுகை அமைந்துள்ளதைக் காணலாம்.

**இயைபுத் தொடை**

‘இன்பம்’ என்ற சீர் நான்கு அடிகளின் இறுதியிலும் வந்துள்ளதால் இயைபுத் தொடை அமைந்துள்ளதைக் காணலாம்.

**அணி நயம்**

மக்களுக்கு எதனால் இன்பம் கிடைக்கும் என நடைமுறை உண்மைகளை எடுத்துச் சொன்னதால் ‘இயல்பு நவிற்சி அணி’ அமைந்துள்ளதைக் காணலாம்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-3**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

5. எதுகை, மோனைத் தொடர்களை விளக்குக.
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

6. சிறுகதையின் இலக்கணத்தை விவரி.
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

**சந்தம்**

கொடுக்கப்பட்ட பாடல் ‘அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்’ பாவகையைச் சேர்ந்தது. எனவே ஆசிரியப்பாவுக்குரிய அகவல் சந்தம் வந்துள்ளதைக் காணலாம்.

**சுவை**

ஒருவனுக்கு எவ்வெவற்றால் இன்பம் கிடைக்கும் எனவும் நற்செயல் செய்து இன்பம் பெறவேண்டும் எனவும் சொல்லி இருப்பதால் ‘உவகைச் சுவையும், பெருமிதச் சுவையும்’ கலந்து வந்துள்ளதைக் காணலாம்.

**கற்பனை**

எடுத்துக்காட்டுக்கள் மூலம் கவிஞர் கருத்துக்களை விளக்கியுள்ளதால் கருத்து விளக்கக் கற்பனை அமைந்துள்ளதைக் காணலாம்.

**தலைப்பு**

‘இன்பந்தரும் செயல்’ என்பதே இப்பாடலுக்குரிய தலைப்பு.

**முடிவுரை**

கவிஞர் சுரதா பாரதிதாசனைத் தமது குருவாகக் கொண்டவர். அவர் பகுத்தறிவுச் சிந்தனைக் கருத்துக்களையும், வாழ்வியல் உண்மைகளையும் தம் கவிதையில் பாடு பொருளாகக் கொண்டுள்ளார். புதிய உவமைகளைக் கவிதைக் கலையில் கையாண்டுள்ளதால் ‘உவமைக் கவிஞர்’ என்ற சிறப்புப் பெற்றார்.

**1.7 படைப்பாற்றல்**

நல்லோர் எழுதிய நற்கருத்துகள் அமைந்த நூல்களைப் படித்து நாம் செய்திகளை அறிந்து கொள்கின்றோம். அவ்வாறு பெற்ற செய்திகளைக் கொண்டு புதிய சிந்தனைகளும், கருத்துகளும் தோன்றுகின்றன. அக்கருத்துகள் பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வெளிப்படுகின்றன.

அவர்கள் பெற்ற கருத்துகள் புதியன படைக்கும் ஆற்றலாகவும் மாறுகின்றன.

அவா்கள் அனுபவம் கருத்துப் புனைவும், கற்பனையும், சுவையும் வா்ணனையும் உடைய கதைகளாக வெளிப்படுகின்றன.

கற்பனை ஊற்றெடுக்கும்போது உணா்ச்சிப் பெருக்குடைய சொற்களால் கவிதையாகவோ, பாடலாகவோ படைப்பா்.

கருத்துக்களைக் கோவையாக நிரல்பட அமைக்கும் திறன் உடையோா் கட்டுரையாக வெளிப்படுத்துவா்.

உரையாடல் அமைக்கும் திறன் படைத்தோா் உணா்ச்சிப் பாங்குடைய நாடகங்களைப் படைப்பா்.

இவற்றுள் எத்துறையில் ஈடுபட்டுப் புதியன படைக்க விரும்பினும் அதற்கு மொழியே கருவியாக அமையும்.

சொல்வளமும், சொல்வளத்தைக் கையாளும் வன்மையும் படைத்தோா் படைப்புக்கள் தாம் காலம் கடந்து நிற்கும்.

புதியன படைக்கும் புலமைத் திறத்தை உணா்ந்த புலவா்,

‘‘கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்டமிழோா்க்கு ஒவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாப் புகழ்கொண்டு
மற்றவா் செய்யும் உடம்பு’’

எனச் சிறப்புறக் கூறியுள்ளாா்.

பிரம்மன் படைக்கின்ற இவ்வுடம்பு அழிகின்றது. கலைமகள் அருள்பெற்ற புலமை மிக்கோா் படைக்கும் படைப்புக்கள் காலத்தால் அழியாப் புகழ்பெற்றுக் காலம் கடந்து வாழ்கின்றன என்பது இப்பாடல் கருத்து.

இங்கு வண்டமிழோா் என்பது வளமான மொழியறிவைக் குறிக்கின்றது.

மொழித்துறையில் எவ்வகைப் படைப்புக்கும் மொழியே கருவியாய் அமைகின்றது.

படைப்பாற்றலை வளா்த்தல் மொழிப் பாடத்தின் நோக்கமாகும்.

**கவிதைக் கலை**

கவிதை ஒரு கலை. அதனைப் படைக்க உணா்ச்சியும், உள்ளாா்ந்த சொற்களும், கற்பனை, கலை நயமும், இசையமுதும் வேண்டும். இவற்றைக் கலந்து பொருள் உடைய அறிகுறிகளாக மாற்றினால் அது கவிதையாக மலரும்.

மரபுக்கவிதை இலக்கண வரம்புக்குட்பட்டது. எதுகை மோனை நயமும், இசை நயமும், இலக்கிய நயமும் இணைந்து உணா்ச்சிப் பாங்கை வெளியிடும் போது அது கவிதையாக மாறுகிறது.

இலக்கண வரம்பு மீறி எதுகை மோனை நயத்துடன், ஒலிச் சிறப்புடன் குறைந்த அடிகளில் மையக் கருத்தோடு அமைவது புதுக்கவிதை.

**சிறுகதை**

ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பிரச்சனைகளைப் புனைவது சிறுகதை. சிறுகதையில் ஒரு சிக்கலும், சிக்கலுக்குத் தீா்வும் இடம் பெறும்.

சிறுகதை அளவில் சிறியதாக இருக்கும். குறைந்தகால அளவில் படித்து முடிக்கக் கூடியதாக அமைய வேண்டும். அவ்வப்போது எழும் சமுதாயப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்க வேண்டும்.

மாணவா்களுக்குத் தலைப்புக் கொடுத்து கதை எழுதப் பயிற்சி அளிக்கலாம்; கதைக் கரு கொடுத்து எழுதச் செய்யலாம்; கதையின் ஒரு பகுதியைக் கொடுத்து மற்ற பகுதியை நிறைவு செய்யச் செய்யலாம்.

எப்படியாயினும் கதையின் மொழி நடையும், பாத்திரப் படைப்பும் சிறப்பாக அமைய வேண்டும். கதைப் பின்னல் தொய்வின்றிச் செல்ல வேண்டும். அப்போதுதான் கதை சிறப்பாக அமையும்.

**புதினம் (நாவல்)**

நாவல் என்பது ஒருவன் அல்லது ஒருத்தியின் வாழ்வை மையமாகக் கொண்டது.

புதினத்தில் கதைக்கரு சிறப்பாக அமைய வேண்டும். அதற்கு அடுத்தபடியாக பாத்திரப்படைப்பு உயிரோட்டமுடையதாக இருக்க வேண்டும். கதைப் பின்னலும் தொய்வின்றிச் செல்லவேண்டும் கதையின் மொழிநடை நல்ல தமிழில் இடம்பெற வேண்டும். அப்போதுதான் புதினத்தின் தரம் உயா்ந்ததாக அமையும்.

**கட்டுரை**

சொற்களைக் கருத்துக்கள் அமையக் கட்டி உரைப்பது கட்டுரை. இது ஒரு தலைப்பை மையமாகக் கொண்டு அமையும். பத்தி அமைப்புடன் கருத்துக்களை நிரல்படத் தொகுத்து அமைப்பது கட்டுரையாகும்.

மாணவா்களுக்குச் சிறுகுறிப்புகள் கொடுத்து அதைக் கட்டுரையாகத் தொகுத்து எழுதச் செய்யலாம்.

தொடக்கத்தில் மாணவா்கள் இடா்ப்படுவா்; யோகப் போக நல்லமுறையில் கட்டுரை எழுதப் பயிற்சி பெறுவா்.

தலைப்புக் கொடுத்தும் கட்டுரை எழுதப் பயிற்சி தரலாம்.

வளா்ந்த நிலையில் மாணவா்களிடம் அவா்களையே தலைப்பு ஒன்றைத் தோ்ந்தெடுத்துக் கட்டுரையாக எழுதச் செய்யலாம்.

கட்டுரைகளில் வரலாற்றுக் கட்டுரை, தன்வரலாற்றுக் கட்டுரை, புலவா்கள் வரலாறு, தமிழின் பெருமை, ஒற்றுமையை மையமாகக் கொண்ட கட்டுரை, சமுதாயப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டவை எனப் பல வகைப்படும்.

மாணவா்களுக்குத் தமிழாசிரியா்கள் கட்டுரை, கதை, கவிதை எனப் புதியன படைக்கும் ஆற்றலை வளா்க்கலாம். இதனால் அவா்தம் சிந்தனைத் திறமும், செயல் திறனும் வளரும்.

**சமூகப் பண்பாடுகளை வளா்த்தல்**

ஓா் இனத்தின் பண்பாட்டை அவா்கள் பேசும் மொழியிலிருந்து அறியலாம். ‘‘இக்காரணம் பற்றியே மக்களின் பண்பாட்டை அறிய உதவும் திறவுகோல் அவா்கள் பேசும் மொழி’’ என்ற கருத்து உருவாயிற்று.

மொழியின் இலக்கிய வழக்கும், பேச்சு வழக்கும் மக்களின் பண்பாட்டைப் பறைசாற்றுவன; அந்தப் பண்பாடே தலைமுறை தோறும் தொடரும் என்பது உண்மை.

எடுத்துக்காட்டாக ‘நீ’ என்ற முன்னிலை ஒருமைப் பெயா் ஒருமையில் வழங்கும் சொல்லாகும். இது நம்மைவிட வயதில் குறைந்தோரை அழைக்கப் பயன்படுத்தல். சமுதாயம் இதை நல்ல நடைமுறை என்றே ஏற்றுக் கொண்டுள்ளது.

அதுபோல் ‘நீா்’ ‘நீங்கள்’ என்ற சொற்கள் முன்னிலைப் பன்மைச் சொற்களாம். இச்சொற்கள் ஒத்த வயதினரையும், நம்மைவிட வயதில் மூத்தோரையும் அழைக்கப் பயன்படும் சொற்களாம். இந்த நடைமுறை இன்று பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பின்பற்றப்படும் நடைமுறையாகும்.

ஆங்கில வழக்கில் ‘‘நான் அறிவேன், நான் விரும்புகிறேன், நான் பெற வேண்டும்’’ என்ற தொடா்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்நடைமுறையைத் தமிழில் ‘‘எனக்குத் தெரியும், எனக்குப் பிடிக்கும், எனக்கு வேண்டும்’’ என நான்காம் வேற்றுமை உருபு கொடுத்துப் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பயன்பாட்டில் உள்ளதை அறியலாம்.

இ.்.து நமது மொழி மரபையும், பண்பாட்டு மரபையும் எடுத்தியம்புகிறது. இது நம்முடைய தமிழன் சமுதாயப் பண்பாடாகக் கொள்ள வேண்டும்.

ஓர் இனத்தின் பண்பாடு சிறந்ததாயின் அந்த இனத்தின் வாழ்க்கையும் சிறந்ததாம். இது நம் இனத்தின் முன்னோர் கையாண்ட பண்பாட்டுச் சிறப்பு. இந்தப் பண்பாட்டை மாணவர்களும், ஏன் பாமரரும் இன்று பின்பற்றுவதை நாம் காணலாம்.

தமிழர் சமுதாயம் வாழ்வை அகம், புறம் என இரண்டாக வகுத்தது. இவ்விரண்டிலும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உயர் கருத்தையும் வகுத்தது.

பிறவியின் பயனும், நூலின் பயனும் இந்த நான்கு கருத்தைப் பின்பற்றி உயர்நிலையை அடைவதாகும். அகவாழ்வு தலைவன் தலைவி வாழும் உயர் வாழ்வாகும்; புறவாழ்வு அவர் தம் கல்வி, வீரம், கொடை, நட்பு போன்ற உயர் பண்புகளாம். இப்பண்பாடு வழிவழியாக நம் இனம் பின்பற்றும் பண்பாடாகும்.

உலகம் அமைதியாக வாழவேண்டும் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற கருத்து மேலோங்கினால் ஒற்றுமையும், அமைதியும், உயர்வும் பிறக்கும். இதுபற்றி உருவானதே கணியன் பூங்குன்றனாரின் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கருத்து.

இக்கருத்து வேற்றுமையில் ஒற்றுமைக்கான, மதமாச்சரியங்களை நீக்க, சாதிப்பூசல்களைத் தவிர்க்கப் பயன்படுகிறது.

இக்கருத்தை மேடையிலும், வகுப்பிலும், வாழக்கையிலும் பயன்படுத்துவதை நாம் காணலாம்.

ஓர் ஆன் கன்று மன்னன் மகனின் தேர்க்காலில் பட்டு இறந்தது. கன்றை இழந்த தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்தது. இதை அறிந்தான் மன்னன் மனுநீதிச் சோழன்.

மனு நீதி மகனுக்கும் பொருந்தும் என அறிந்தான். ஒரு மகன் திருமகன் என நினையான். காரணம் தெருவில் நடந்த நிகழ்வு தமிழ்த் தெருத்தோறும், தமிழர் வாழ்வு தோறும் அநீதியாக மாறிவிடக் கூடாது என அறிந்தான்.

ஆட்சி உரிமைக்குரிய மகனைக் கன்று இறந்த இடத்தில் படுக்க வைத்தான். மன்னன் தானே தேரோட்டிக் கொன்றான். இங்கு அரசியல் சட்டம் தோற்றது; அறச் சட்டம் வென்றது.

இந்த அறம் இன்று தமிழர்களால் போற்றிப் புகழப்படுவதோடு பின்பற்றப்படுவதையும் காண்கிறோம்.

விருந்து கொடுத்து இன்முகம் காட்டி வேண்டியன செய்வது இல்லறக் கடமை. கோவலன் பிரிவால் விருந்தினரைப் போற்றும் உயர் பண்பைத் தான்மறந்ததாக மனம் நொந்தும் வெந்தும் கண்ணகி கூறுவதைச் சிலப்பதிகாரம் செப்பும். இதனை இளங்கோ காட்டிய,

''அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறம்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''

என்ற சிலப்பதிகார வரிகள் செப்புகின்றன.

விருந்தினரை வெறுமனே உபசரித்தால் போதாது; இன்முகத்தோடு எதிர்கொண்டு நன்முகத்தோடு பன்முறை உண்ணீர், உண்ணீர் என உபசரிக்க வேண்டும். இதனைத் திருக்குறள் கூறுமாற்றைக் காண்போம்.

''மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து''

என்பது அக்குறள்.

பண்பாடு மொழியோடு பின்னிப் பிணைந்தது. அந்தப் பண்பாடு தமிழர் வாழ்வோடும் பின்னிப் பிணைந்து சங்ககாலத்தைப் பொற்காலமாகக் காட்டியது.

தமிழர் சமுதாயம், நற்காலத்தைக் காண வேண்டுமாயின் நம் சமுதாயம் நமது பண்பாட்டைக் கைவிடாது பின்பற்றி வாழவேண்டும் என்பதே நம் முன்னோரின் விருப்பம்.

**சமூக மரபுகளை அறிதல்**

சமுதாய மரபு என்பது முன்னோர் போற்றிய முறையாகும். இதனை ''முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றி'' என்ற தொடரால் அறியலாம்.

உலகில் உள்ள ஒவ்வொரு மொழியிலும் மக்களின் மரபு சார்ந்த சமுதாய வாழ்வையும், பண்பாட்டையும் அறிதற்கான அகச் சான்றுகள் இருக்கும். அவை இலக்கியங்களாகவும், வரலாறுகளாகவும், வாழ்வு பற்றிய நூலாகவும் இருக்கலாம்.

இலக்கியம் கடந்தகால மக்களின் வாழ்வைச் சொல்வது; நிகழ்கால வாழ்வுக்கு வழிகாட்டுவது; எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமாக அமைவது. மற்ற மொழிகளெல்லாம் மொழிக்கு இலக்கணம் வகுத்தன. நம் மொழியோ வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தது. அகப்பொருள் தலைவன் தலைவி வாழ்வைச் சொல்லியது; புறப்பொருளோ போரைப் பற்றியும், புகழைப் பற்றியும், புகழின் நிலைக்களனான கல்வியையும் வீரத்தையும் காட்டின.

தொல்காப்பியம் கண்ட அகவாழ்வும், புறவாழ்வும் இன்றும் தமிழர் சமுதாயத்தில் கலந்துவிட்டது. இதுவும் மரபு அன்றோ?

சங்க இலக்கியங்களான அகநானூறும், புறநானூறும் சமுதாய வாழ்வையும், பண்பாட்டையும் சுட்டுகின்றன. இப்படித்தான் வாழ வேண்டும். அந்த வாழ்க்கை எலி போன்ற வாழ்க்கையாக அமையக் கூடாது; புலி போன்ற வாழ்க்கையாக அமைய வேண்டும். இதுவே தமிழர் உலகுக்குக் காட்டும் மரபு நெறி.

போரில் வீரமும், விவேகமும், அன்பும், அருளும் இருக்க வேண்டும். கொடையில் ஈரமும், இன்முகமும் இருக்க வேண்டும். இதைப் புறம் காட்டுகிறது. தமிழர் மரபு புறம் காட்டாத மரபு. அந்த மரபு இன்றைய சமுதாயத்திற்குப் பயன்படும் மரபு.

இன்றைய போரில் வீரம் உண்டு விவேகம் உண்டு. ஆனால் அறநெறியும், அன்புநெறியும் இல்லை. இன்றைய கொடையில் அன்பும் அருளும் உண்டு. இதைத்தான் குறள்,

''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை''

என்ற குறளின் பொருளை ஆழ்ந்து கண்டால் பண்பு வழிப்பட்ட அறமும், மறமும் எப்படிப் போற்றப்படுகிறது என்பது தெரியும். சில மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் அடிப்படை ஒன்றே.

அன்பு வாழ்வை (காதல் வாழ்வை) பண்டைத் தமிழர் மூன்றாகப் பகுத்துள்ளனர். ஒருதலைக் காதல் கைக்கிளை; பொருந்தாத அன்பு பெருந்திணை; அதாவது தலைவனும், தலைவியும் ஒருசார் பருவத்தாலும், உருவத்தாலும், பண்பாலும் மிகுதியான நிலை பெற்றிருத்தல்.

அதாவது தலைவன் வயதில் முதிர்ந்தவன், தலைவி வயதில் குறைந்தவள் தலைவி வயதில் முதிர்ந்தவள், தலைவன் வயதில் குறைந்தவன். இவர்களில் ஒருவர் மற்றவரிடம் காட்டும் அன்பு பொருந்தாத அன்பு தானே.

இன்றைய சமுதாயத்திலும் இத்தகைய மரபு அருகியும், சிற்சில சமயங்களில் பெருகியும் காணப்படுகிறது.

ஐந்திணை என்றால் அன்பு வாழ்க்கை என்பது பொருள்.திணை அடிப்படையில் சொல்லப்பட்ட புணர்தலும் புணர்தல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், ஒவ்வொரு திணைக்கும் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது. இது மிகுதி காரணமாக அவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஒவ்வொரு திணை மக்களுக்கும் இந்த ஐந்து ஒழுக்கமும் பொருந்தும்.

இந்த மரபும் இன்றைய சமுதாயத்தில் உள்ள மரபே.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் மரபு. அதனால் குடும்ப வாழ்வில் பிரிவில்லை; பேதமில்லை; நலமான வாழ்வு உண்டு. அந்தப் பண்பாடு மீறப் படுவதால் இன்றைய சமுதாயத்தில் மணமுறிவும், மனமுறிவும், நோயுடைய வாழ்வும், நொறுங்கிய மனமும் காணப்படுகிறது.

நலவாழ்வு பற்றி நன்மரபு பற்றி அன்றே அறிந்த கம்பர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற மரபை இராமன் வாயிலாக ''இந்த இப்பிறவிக்கு வேறொரு மாதைச் சிந்தையாலும் தொடேன்'' என்ற வரிகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

புறப்பொருளுக்குரிய திணைகளாக தொல்காப்பியர் ஏழு என வகுத்துள்ளார்.

வெட்சி பகைவரின் பசுக் கூட்டத்தைக் கவர்தல், நாடு பிடிக்கும் ஆசையால் ஓரரசன் மற்றொரு அரசன் மீது போர் தொடுத்தல் வஞ்சித்திணை. பகைவர் மதிலை முற்றுகையிடுவது உழிஞை. வெற்றி ஒன்றே குறிக்கோளாகப் போரிடுவது தும்பைத் திணை் வெற்றிச் சிறப்பைக் கொண்டாடுவது வாகைத்திணை் உலக நிலையாமையைக் கூறுவது காஞ்சித்திணை் புகழ்தலும், போற்றுதலும், வாழ்த்துதலும் பாடாண்திணை.

இம்மரபு இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது; சில பொருந்தாமை இருக்கலாம்.

மொழி நூறாண்டு தோறும் மாறக் கூடியது அதுபோல் சமுதாய மரபுசார் செயலிலும் சில மாற்றங்கள் இருக்கலாம். அடிப்படை மரபு ஒன்றே!

இதைத் தான் நன்னூல் ''பழையன கழிதல் புதியன புகுதல்'' என்கிறது; அடிப்படை மாறாப் பழமை இன்றும் போற்றப்படுகிறது.

**அழகுணர் ஆற்றலை வளர்த்தல்**

அழகு என்பதற்குத் திரு.வி.க. முருகு எனப் பொருள் கூறுகிறார். அதிவீரராம பாண்டியன் அழகு என்பதற்குச் சிறப்பு எனப் பொருள் கூறுகிறார்.

அழகு என்பதற்குத் தோற்றப் பொலிவு எனவும் பொருள் கூறலாம். இவ்வனைத்துப் பொருளும் அழகு என்பதற்குப் பொருந்தும்.

கவிஞன் தன் கற்பனை ஆற்றலால் அழகுக் காட்சியைக் காண்கிறான்.அந்த அழகுணர்ச்சியை நம்மையும் மனக்கண்ணால் காணச் செய்கிறான்.

கம்பர் இராமன், சீதை இருவரின் அழகுணர்ச்சியை சுயம்வரத்திற்கு முன்னரே ஒருவரை ஒருவர் காணச் செய்கிறான். அவன் காட்டும் அழகுணர்ச்சிக்கு உரு வெளித்தோற்றம் எனப் பெயர் சூட்டுகிறான்.

திருநாவுக்கரசர் அடியாராகவும், அழகைக் காணும் கவிஞனாகவும் திகழ்ந்தார். அவர் கண்டது இறைக் காட்சி. அந்தக் காட்சியை நம்மையும் காணச் செய்கிறான். அவர் கண்ட அழகுணர்ச்சி பின்வரும் நயமுடைய பாடலாக வெளிப்படுகிறது.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டப் படுவதே இந்த மாநிலத்தே''

(தேவாரம். செய்.494)

பாரதி காலை இளங்கதிரின் எழில் ஓவியத்தை வங்கக் கடலில் கண்டார். அங்கே தன் கற்பனையைச் சுழலவிட்டார். அந்தக் காலைக் கதிர் தகதகவென தங்கத்தை உருக்கி வார்த்ததைப் போல் உள்ளது. அவர்தம் கற்பனையில் உதித்த கதிரவனை நம்மையும் காணச் செய்கிறார். பாரதி கண்ட காலைக்காட்சி பின்வரும் பாடல் வரிகளில் வெளிப்படுகிறது.

''தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி

எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ''

என்பதே நாம் காணும் காட்சி.

பாரதியின் பாதையில் வந்தவர் பாரதிதாசன். அவர் அந்திப்பொழுதில் வான் மேகத்தினூடே மிதந்து செல்லும் மதியைக் கண்டார். நீலவானில் தோன்றும் மேகக் கூட்டத்தை ஆடையாகவும், அதில் ஊர்ந்து செல்லும் நிலவைப் பெண்ணாகவும் கண்டார்.

நிலவும் வெண் மேகத்தில் மறைவதும், தோன்றுவதுமாக உள்ளது. நிலவுப் பெண்ணாள் அழகு முழுவதையும் காட்டிவிட்டால் அவள் அழகில் உலகினர் மயங்கிடுவாராம். என்னே புரட்சிக் கவிஞனின் புதுமைக் கற்பனை.

கவிஞன் கற்பனையில் உதித்த நீலமேகத்தையும், நிலவுப் பெண்ணையும் நாம் காணுமாறு அமைந்த சுவைமிகு பாடலைக் காண்போம்.

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலா என்று காட்டுகின்றாய் ஒலிமுகத்தைக்
கோல முழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ?
காலைவந்த செம்பரிதிக் கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!

சங்க இலக்கியம் முதல் இன்றைய தங்க இலக்கியம் வரை இத்தகு அழகுணர்ச்சியைக் காணலாம்.

தமிழாசிரியர் மாணவர்தம் வயதிற்கும் அறிவுக்கும் ஏற்ற அழகுணர் கற்பனை நயம்மிகு பாடல்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்க்குக் கற்பிக்க வேண்டும்.

இவற்றைக் கற்பிக்கும்போது கற்பனை எது? அழகுணர்ச்சி எது? எனப் பகுத்துக்காட்டிக் கற்பிக்க வேண்டும்.

கற்பனையில் உதிப்பது கவிதை; அந்தக் கவிதையில் மிதப்பது அழகுணர்ச்சி.

கற்பனையும் அழகுணர்ச்சியும் சந்தனமும் குங்குமமும் போன்றவை.

இரண்டுமே மங்கல அணி; மங்காத அழகு அணி. அதுபோல் கற்பனையும் அழகுணர்ச்சியும் கவிதையின் மங்கல அணியாம். இவற்றின் தரம் குறைந்தால் கவிதையின் சிறப்புக் குறையும்.

**1.8 வாழ்க்கைத் திறன்களைப் பெறுதல்**

வாழ்க்கையை நடத்தத் தாய்மொழி மூலம் இரண்டு திறன்களைப் பெறுகிறோம். ஒன்று மொழித்திறன்; இரண்டு சமூகத்தோடு இணைந்து வாழும் திறன்.

வாழ்க்கை எல்லோராலும் வாழ முடியும்; ஆனால் குறிக்கோளுடைய வாழ்க்கை சிலரால்தான் வாழ முடியும்.

எல்லோரும் குறிக்கோளோடு வாழ்வதற்கேற்ற திறன்களைத் தமிழ் இலக்கியங்கள் தருகின்றன. அவை கலங்கரைவிளக்கமாக இருந்து நம்மை வாழ்க்கை என்ற கடலைக் கடக்கத் துணையாக இருக்கும்.

''குற்றம் காண்கின் சுற்றம் இல்லை''

''கூட்டுறவே நாட்டுயர்வு''

''நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்''

என்பன போன்ற கருத்துகள் மாணவா்தம் சிந்தனையைத் தூண்டி செயல்பட வைக்கின்றன. எதிா்காலத்தில் தான் இணைந்து வாழும் சமுதாயத்தில் பழகும்போது அவ்வப்போது அறிவுரை பகரும்.

வாழ்விற்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இறையுணா்வு, ஒழுக்கமான குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கை, அறவழியில் பொருள் சேமித்து வாழ்தல், மக்களோடு இணைந்து வாழ்தல் என்பன போன்ற உயா்ந்த குறிக்கோளைப் பெற்று உன்னத வாழ்வு வாழ இக்கருத்துக்கள் பயன்படும்.

உலக மக்கள் எல்லாம் தாய்மொழியைத் தாய்போல் நேசிப்பா். தாய்மொழிதான் ஒருவனைச் சீராட்டிப் பாராட்டி வளா்ப்பது. எனவே தாய்மொழியில் கல்வி கற்பது இயற்கை; பிற மொழியில் கல்வி கற்பது செயற்கை; சிந்தனை, சொல், செயல் இம்மூன்றும் தாய்மொழி மூலமே நடைபெறுகின்றன.

தாய்மொழி மூலம் பெறும் அறிவு நிலைத்து நிற்கும்; பிறமொமழி மூலம் பெறும் அறிவு நிலைத்து நிற்காது.

தற்போது ஆங்கிலவழிப் பள்ளிகளும், ஆங்கிலவழிக் கல்வியும் பெருகிவிட்டன. இத்தகைய சூழலிலும் தமிழ்வழியில் படிப்போா் தொகை குறையவில்லை.

பள்ளிகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிற்றுமொழியாக உள்ளது. இதற்கு அரசும் மக்களும் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும். மாணவா்கள் ஆா்வத்துடன் ஆங்கிலத்தில் கற்காமல் இனித் தமிழில் கல்வி பெற வேண்டும். அதுவே நலவாழ்வுக்கு அடிப்படை.

அறிவானது கல்வியால் வளா்கிறது. அவ்வறிவானது நூற் கல்வியாலும், பட்டறிவாலும், நூல்களை ஆழ்ந்து படிப்பதாலும் பெற முடியும்.

இக்கால மொழிக்கல்வி ‘‘அறிவியல் சிந்தனை, சமுதாயம், தனி வாழ்வில் விழிப்புணா்வு’’ போன்ற உயா்ந்த குறிக்கோளைத் தருகிறது. அவ்வுயா்ந்த குறிக்கோள் உயா்ந்த வாழ்வுக்கும், இலட்சிய வாழ்வுக்கும் துணையாக அமையும்.

சமுதாயப் பொறுப்புக்களை ஏற்று, சமூகக் கடமைகளை நிறைவேற்ற, பொறுப்புள்ள குடிமகனாக மாற, தமிழ்வழிக் கல்வி பயன்படுகிறது.

மழைநீா் சேகரிப்பு, உண்டியல் சேமிப்பு இரண்டிற்கும் தாய்மொழிக் கருத்துக்கள் துணையாக இருந்து சமுதாயத்தை நடத்திச் செல்கிறது.

‘‘ஒப்பற்ற பாரத சமுதாயம் உலகிற்கோா் புதுமை’’ என்றான் பாரதி.

அத்தகைய பாரதத்தைக் காண சமுதாயத்தில் நீங்கள் நலவாழ்வு வாழ வேண்டும். அத்தகைய நலவாழ்வும், நாட்டு நலன் காணும் சமுதாயமும் அமைந்திட தாய்மொழிப் பாடல்வரிகள் ஊட்டச்சத்தாக அமைவது கருத்துவளம்.

**1.9 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- தாய்மொழி பிறந்தது முதல் வாழ்வின் முடிவு வரை தாயோடும், மற்றவா்களோடும் கலந்து உறவாடப் பயன்படும் மொழியாகும்.
- தாய்மொழி கற்பதாலும், தாய்மொழியின் மூலம் கற்பதாலும் மொழித்திறன்களும், வாழ்க்கைத் திறன்களும் வளா்கின்றன.
- வளமான மனமும், நலமான வாழ்வும் கிடைக்கும். வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.
- நெறியான வாழ்வே நிம்மதியைத் தரும். நிம்மதியான வாழ்வே நீண்ட புகழ் சோ்க்கும்.
- புகழ் வாழ்வு வாழவும், புதுவாழ்வு பெறவும் தாய்மொழிக் கல்வி இன்றைய தேவை.
- மக்கள் சேவைக்கும், மகேசன் சேவைக்கும் பயன்படுவது தாய்மொழி.
- தாய் குழந்தையை வளா்ப்பாள்; தாய்மொழி மனிதனை வளா்க்கும்; உருவாக்கும்.
- எனவே தாய்மொழிக் கல்வியும், தாய்மொழி மூலம் பெறும் கல்வியும் தேவையாக மாறிவிட்டது.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1.தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமையை விளக்குக.**

தாய்மொழி வழிக் கல்வி தாய்ப்பால் போன்றது; பிறமொழிவழிக் கல்வி புட்டிப்பால் போன்றது. தாய்மொழிக் கல்வி வாயிலாகவே சிந்தனை, செயல் அனைத்தும் நடக்கின்றன. கருத்தை விரைவாகவும், நிறைவாகவும் புரிந்துக்கொள்ளத் தாய்மொழியே பயன்படுகிறது. கருத்துக்களை எளிதில் வெளியிடத் தாய்மொழிக் கல்வியே பயன்படுகிறது. இக்கூற்றுக்கள் மூலம் தாய்மொழிக் கல்வி இன்றியமையாதது என்பது தெரிகிறது.

**2. செயலாற்றல் என்றால் என்ன?**

ஒருவன் எந்த வேலையைச் செய்தாலும் அதைத் திறமையாகவும் பயனடையதாகவும் செய்ய வேண்டும். தற்காலத்தில் தாய்மொழிக் கற்பித்தலில் மொழி பயிற்றாய்வுக் கூடம் பயன்படுகிறது. பொறிகளை இயக்க ஆசிரியர் சிறந்த பயிற்சி பெற்றால்தான் மாணவர்க்குத் திறமையாகக் கற்பிக்க முடியும். மாணவனுக்கும் அதுபோல் பொறிகளை இயக்கும் பயிற்சி பெறவேண்டும். எனவே கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் செயலாற்றல் வேண்டும் என்பதை இக்கருத்துக்கள் அரண் செய்கின்றன.

**3. மாணவனின் மனவெழுச்சி எவ்வாறு அமைய வேண்டும்?**

மாணவனின் மனவெழுச்சி வாழ்வுக்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சி தாய்மொழியால் முடியும். தீய மனவெழுச்சிகளை நீக்கி நல்ல மனவெழுச்சிகளை வளர்ப்பது தாய்மொழி. எழுச்சியே ஏற்றமிகு வாழ்வாக முடியும். அத்தகைய எழுச்சியால்தான் நல்வாழ்வு அமையும்.

**4. தாய்மொழியின் பயன்கள் யாவை?**

தாய்மொழியால் சிந்தனை வெளிப்படுகிறது. காலத்தை கடந்து என்றும் பயன்படும் எழுத்துப் பதிவைக் கொண்டது. இதற்குத் தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் சான்று. வாழ்வில் பின்பற்ற வேண்டிய உயர் பண்புகளைத் தமிழர் விட்டுச் சென்றனர். இவையெல்லாம் அவரவர் தாய்மொழியில்தான் அமைந்துள்ளன. தாய்மொழியில் மட்டுமே உயர்ந்த கருத்துகளைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும். மாந்தர் வாழ்வை மேம்படுத்தும் அரிய அறநெறிகளைக் கொண்டு விளங்குகின்றன.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

"செல்வத்துப் பயனே ஈதல்"- என்பவை அவற்றுள் சில.

**5. எதுகை, மோனை தொடைகளை விளக்குக.**

**எதுகை:** ஒரு பாடலில் உள்ள சீர்களில் இரண்டாமெழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடையாகும். எடுத்துக்காட்டு: 'கற்றவர், வெற்றியை, சிற்றின, பெற்றதை' என்ற சீர்களில் எதுகைத் தொடை வந்துள்ளதைக் காணலாம்.

**மோனை:**ஒரு பாடலில் உள்ள சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடையாகும். எடுத்துக்காட்டு: 'கற்றவர், கற்ற, கல்வியை' என்ற சீர்களில் மோனைத் தொடை அமைந்துள்ளதைக் காணலாம்.

**6. சிறுகதை இலக்கணத்தை எழுது**

ஒருவன் வாழ்வில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பிரச்சினைகளைப் புனைவது சிறுகதை. சிறுகதையில் ஒரு சிக்கலும், சிக்கலுக்குத் தீர்வும் இடம்பெறும். சிறுகதை அளவில் சிறியதாக இருக்க வேண்டும். குறைந்த கால அளவில் படித்து முடிக்கக் கூடியதாக அமைய வேண்டும். அவ்வப்போது எழும் சமுதாயப் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்**

1. தமிழின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விவரி.

2. தாய்மொழிக்க கல்வி பெற வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.
3. தாய்மொழிக் கல்வியால் பெறும் அடிப்படைத் திறன்களை விளக்குக.
4. இலக்கிய நயம் பராட்டல் என்றால் என்ன?
5. சிந்தனைத்திறனும் செயல் திறனும் வளர படைப்பாற்றல் எவ்வாறு பயன்படுகிறது?

# 2. கல்வியின் நோக்கங்களும் பாடத்திட்டமும்

**பாட அமைப்பு**

2.1 முன்னுரை
2.2 கல்வியின் இலக்குகள்
2.3 கல்வி நோக்கங்களின் வகைகள்
2.4 கல்வித் திட்டத்தில் சமூக மரபுகள்
2.5 மொழிப்பாடத் திறன்கள்
2.5.1 எண்ணத்தை வெளியிடும் கருவி
2.5.2 பொருளுணரும் திறன்
2.5.3 வாழ்வின் நுகர்வுகளை எடுத்துச் சொல்லுதல்
2.5.4 கற்பனையாற்றலை வளர்த்தல்
2.5.5 அழகுணர் ஆற்றலை வளர்த்தல்
2.5.6 சமூகக் கடமைகளை மேற்கொள்ளுதல்
2.5.7 தாய்மொழி வழிக் கற்றல்
2.6 பாடத்திட்டத்தின் முக்கியத்துவம்
2.6.1 பாடத்திட்டத்தின் முக்கியத்துவம்
2.6.2 பாடத்திட்டத்தின் பயன்கள்
2.6.3 பாடத்திட்டம் அமைத்தல்
2.7 புளுமின் கற்பித்தல் கோட்பாடுகள்
2.7.1 புளூமின் வகைப்பாடு
2.8 ஒருமைப்பாட்டின் படிநிலைகள்
2.9 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

## 2.1 முன்னுரை

**க**ல்வி என்பதில் 'கல்' என்பதற்குக் கற்றல் என்பது பொருள். 'வி' என்பது சிறப்புக் கருதி வந்தது.

கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது; ஆற்றலைப் பெருக்குவது; மனித வளத்திற்கு மாண்பு சேர்ப்பது; சமுதாயத்தை இணைப்பது; சமத்துவத்தை மலர வைப்பது; சகோதரத்துவத்தை வளர வைப்பது.

கல்வியே மனிதனை மனிதனாக மாற்றும்; விலங்கு நிலையிலிருக்கும் மனிதனை, மனித நிலைக்கு மீட்டுக் கொண்டுவரும்.

கல்வி 'கேடு இல் விழுச்செல்வம்' எனப் போற்றப்படுவது. கல்வியின் இரு கூறுகள். ஒன்று ஏட்டுக்கல்வி மற்றொன்று காதால் கருத்துகளைக் கேட்கும் செவிவழிக் கல்வி.

ஏட்டுக் கல்வியும், செவிவழிக் கல்வியும் சிந்தனையை வளர்க்கும்; சிறந்த சொற்களை வரவைக்கும்; நற்செயல்களை உருவாக்கும்.

''ஒன்றே செய்; ஒன்றும் நன்றே செய்
நன்றும் இன்றே செய்; இன்றும் இன்னே செய்''

என்ற கபிலர் அகவல் கருத்திற்கிணங்க ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு செயலும் சிறந்ததாக அமையக் கல்வி தேவை.

கல்வியால் பெறும் அறிவும், அறிவால் பெறும் அனுபவமும் எதைக் கொள்ள வேண்டும். எதைத் தள்ள வேண்டும் என அறிவிக்கின்றன. அதனால் நம் செயல்கள் சீரியதாகவும், சிறந்ததாகவும் அமையும்.

கல்வியின் நோக்கம் அறிவையும், ஆன்மீகச் சிந்தனைகளையும், அறிவியல் புதுமைகளையும் வளர்ப்பதோடு சமுதாயத்தைச் சீரமைப்பது மட்டும் அன்று. நல்ல குடிமகனை உருவாக்குவது.

'கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' எனத் தமிழ் மூதாட்டி ஔவையால் புகழப்படும் கல்வியின் நோக்கங்கள் கல்வியியல் பயிற்சியில் எவ்வாறு பயன்படுகின்றன? பாடத்திட்டத்தின் மூலம் எத்தகைய கருத்துக்கள் மாணவனைச் சென்றடைகின்றன என்பனவற்றை இக்கட்டுரையில் சொல்லப் புகுவாம்.

**2.2 கல்வியின் இலக்குகள்**

கல்வியின் நோக்கம் ஆளுமையை வளர்த்து, அறிவைப் பெருக்கி நல்ல குடிமகனை உருவாக்குதல்; தனிமனித நலனைவிடச் சமுதாய நலன் மிகுந்திருக்க வேண்டும்.

சமுதாய வாழ்வில் செய்யும் செயல்களை வெற்றியோடு எதிர்நோக்கத் தேவையான பழக்கவழக்கங்களை உருவாக்க வேண்டும்.

உடல் மற்றும் உள்ளத் திறன்களாகிய ஆளுமையை வளர்ப்பது கல்வி; நடுநிலையிலிருந்து நீதி சொல்லும் திறனைத் தருவது கல்வி; வள்ளுவர் நடுநிலைமை என்ற அதிகாரத்தைப் படைத்து நீதி சொல்லும் முறையை,

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

எனக் கூறியுள்ளார். மனச்சான்று உள்ள எவரும் இக்குறளைப் படித்தால் நடுநிலை தவறாமல் நீதி சொல்வர் என்பது தெரிகிறது.

கல்வி தனிமனிதப் பண்புகளை மாற்ற வேண்டும்; அந்தத் தனிமனிதன் சமுதாயத்தை மாற்றவேண்டும்; முன்னேற்றம் வேண்டும்; மாணவர்கள் இத்தகைய திறனைக் கற்கும் காலத்தில் பெற வேண்டும்.

மாணவர்கள் அறிவில் முதிர்ச்சி ஆற்றலில் முதன்மை. பண்பாட்டில் பண்பட்டநிலை என ஒரு மனிதனின் செயல்திறனுக்கும், வாழ்வுக்கும் வேண்டிய கூறுகளை மாணவப் பருவத்தில் கல்வியால் பெறவேண்டும்.

நாட்டில் உள்ள இயற்கை வளத்தையும், செயற்கை வளத்தையும் பயன்படுத்தித் தொலைநோக்குத் திட்டங்களை உருவாக்க கல்வி பயன்படுகிறது.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றார் பாரதி. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" என்றார் நாமக்கல் கவிஞர். கைத்தொழிலாயினும், எந்திரத் தொழிலாயினும், உழவுத் தொழிலாயினும் அவற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தரமான கல்வி, திறமான ஆற்றல் தேவை.

மனித மூளைக்குத் தூண்டுகோலாக இருந்து மனிதனை இயக்குவது கல்வி. பாரததேசத்தின் குலமகனையும், ஒன்றுபட்ட பாரதம் சமுதாயம் காணும் குடிமகனையும் உருவாக்குவது கல்வி.

நாட்டின் முதுகெலும்பாகவும், முன்னோடியாகவும் கல்வி செயல்படுகிறது.

புரட்சிக்கவிஞர் "கல்வியில்லை உரிமையில்லைக் கடைந்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்" என்றார். கல்வி இல்லையேல் தனிமனிதன் இல்லை; குடும்பம் இல்லை; சமுதாயம் இல்லை எனலாம்.

"வீட்டு வளர்ச்சியே நாட்டு வளர்ச்சி", வீட்டு வளர்ச்சிக்குத் தேவை கல்வி. கல்வியில்லாத வீட்டை இருண்ட வீடு என்றார் அவர்.

பெண் கல்வியைக் கூறவந்த பாரதி ‘‘நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச் செருக்கைப்’’ புதுமைப்பெண் பெற்றிட வேண்டும். அப்போதுதான் பெண்களால் சமுதாயம் முன்னேறும்.

இக்கருத்துக்களால் கல்வியின் இலக்கு அறிவின் இலக்கு; அறிவின் இலக்கே ஆற்றலின் இலக்கு; ஆற்றலின் இலக்கே அனைத்துத் துறைகளின் இலக்கு.

இந்த இலக்குகள் நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் என நம்புவோமாக.

**2.3 கல்வி நோக்கங்களின் வகைகள்**

இராஜிவ் காந்தி அவர்கள் பாரதத்தின் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய போது 1986 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டது.

புதிய கல்விக் கொள்கையின்படி அனைவருக்கும் இலவசக் கல்வி உயர்நிலைப் பள்ளி வரை கட்டாயக் கல்வி.

நாட்டில் கல்வி வளர்ச்சியையும், தொழில்வளர்ச்சியையும்,தொழில்நுட்ப வளர்ச்சியையும் பெருக்குதல்.

புதிய கல்விக் கொள்கையின்படி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுவான கலைத்திட்டத்தின் அடிப்படையில் பாடப்பகுதிகள் வரையறை செய்யப்பட்டுக் கல்வியில் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமை இன்றிச் சமநிலையை ஏற்படுத்துதல்.

இத்திட்டம் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒரே பாடத்திட்டம் என்ற நிலையை உருவாக்குதல். இது விரைவில் செயல்படுத்தப்படும்.

புதிய கல்விக் கொள்கையின் முதற்படியாக தமிழ்நாட்டில் மெட்ரிகுலேஷன், மாநில அரசு பாடத்திட்டம் போன்ற ஐந்து வகைக் கலைத்திட்டங்களைத் தமிழக அரசு ‘‘சமச்சீர் கல்வி’’ என ஒரே கலைத்திட்டமாக உருவாக்கி அறிவில் சமத்துவத்தை உருவாக்கி உள்ளது.

கல்வியில் சம வாய்ப்பு என்பது அரசின் கல்விக் கொள்கை; அது படிப்படியாக பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு தரவரிசை என்று பார்க்கும்போது வேறுபாடு உள்ளது. இதிலும் ஒரே நிலையை உருவாக்க வேண்டும் என்பது கல்வியின் நோக்கம்.

பாரதம் வேற்றுமையில் ஒற்றுமை, நாம் இந்தியர்’ என்ற மனப்பான்மையை வளர்க்கும் பண்பாட்டுக் கல்வியைப் போதித்தல்.

பிஞ்சு உள்ளங்கள் மனதில் நல்ல பண்பாடு விதைக்கப்பட வேண்டும் நச்சுப் பண்பாடு அகற்றப்பட வேண்டும். இதற்குத் தரமான கல்வி தேவை என்பது கல்வியின் நோக்கம்.

தூய உள்ளத்திற்கும், தொண்டு உள்ளத்திற்கும் கல்வி தேவை. கல்வியின் நோக்கம் பரந்த மனப்பான்மையை ஏற்படுத்துவது பண்பட்ட மனதை உருவாக்குவது.

**ஒற்றுமையுணர்வு**

அன்பினால் நட்பும், நட்பினால் ஒற்றுமையும் உருவாகும். மக்களிடையே ஒற்றுமை உணர்வை உண்டாக்க மாணவர் மனதில் ஒற்றுமையுணர்வை வளர்க்கும் தேசியப் பாடல்களைக் கற்பிக்கலாம். ஒன்றுபட்ட சமுதாயத்தில்தான் வளர்ச்சி இருக்கும். அதற்கு அடித்தளம் ஒற்றுமை உணர்வை வளர்க்கும் கல்வி.

நம் பாரதத்தில் மொழிவழி மாநிலங்கள் அமைந்துள்ளன; மொழி வேறுபாடும் ஒற்றுமைக்குத் தடையாக உள்ளது; ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன் ‘‘செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்’’ என்று பாரதி பாடினான். இப்பாடல் வரிகள் மாணவர் மனதில் பதியுமாயின் ஒற்றுமை உலா வரும்.

பாரதி இரண்டு விடுதலை பற்றிப் பாடினான். ஒன்று வெள்ளையனிடமிருந்து விடுதலை; மற்றொன்று சமுதாய வேறுபாட்டிலிருந்து விடுதலை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ‘‘மதங்கள் மக்களின் மாற்றுச் சட்டைகள், அதன் உட்புறத்துள்ள மனிதரைக் காண்க’’ என்கிறார். மனிதநேயம் வளர்ந்தால் மதங்கள் மறையும்; மனிதர் மட்டும் நிற்பர். ஒற்றுமை வளரும் என்ற உயரிய சிந்தனை மாணவர் மனதில பூக்கும்.

சாதி வேறுபாடும் பாரதத் திருநாட்டின் ஒற்றுமைக்குத் தடையாக இருக்கிறது. கல்வி வளர்ச்சி எண்பது விழுக்காட்டை எட்டிய நிலையிலும் சாதி வேறுபாடு ஒழிந்தபாடில்லை. சமத்துவம் பெயரளவில்தான் உள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் எழுப்பிய “இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!” என்ற உணர்ச்சி முழக்கம் மாணவர் மனதில் இருந்தால் சாதி வேறுபாடு மறையும்.

மக்கள் தொகைப்பெருக்கம் ஒற்றுமைக்குத் தடையாகவும், உலை வைப்பதாகவும் உள்ளது. மக்கள் தொகையில் பொறாமை உணர்வுகளும், பொய்புனைசுருட்டுகளும் உருவாகின்றன.தீய சிந்தனை உள்ள மனதில் ஒற்றுமை உருவாகாது. எனவே ‘‘மனதில் மாசு இல்லாத நிலையே அறம்’’ என்ற உணர்வை மாணவர் மனதில் ஏற்படுத்தினால் மனமாசு அகன்று ஒற்றுமை உருவாகும் நிலை ஏற்படும்.

மாணவர்களின் கல்வி சார்ந்த இணைச் செயல்களாக தேசபக்தியையும், தெய்வ பக்தியையும் வளர்க்கும் நாடகங்களை அரங்கேற்ற ஏற்பாடு செய்யலாம்.

ஒற்றுமையை வளர்க்கும் வில்லுப்பாட்டு, இசைப்பேருரை போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

கல்வியின் நோக்கம் ஒற்றுமை என்ற ஆளுமைத் திறனை வளர்ப்பதாகும். அந்த நோக்கம் மாணவர் வாயிலாக நிறைவேறினால் எதிர்கால இந்தியாவில் வேற்றுமை இல்லை; ஒற்றுமை உண்டு; உயர்வு உண்டு.

**2.4 கல்வித் திட்டத்தில் சமூக மரபுகள்**

எம்மொழியிலும் அம்மொழி பேசும் மக்களின் மரபு சார்ந்த வாழ்வையும், பண்பாட்டையும் அறிவதற்குரிய நூல்கள் இருக்கும். அவை இலக்கியங்களாகவும், நீதி நூல்களாகவும், வரலாற்று நூல்களாகவும் இருக்கும்.

தமிழ்மொழியில் பண்டைத் தமிழரின் மரபு சார்ந்த வாழ்வை அறிய இலக்கியங்களோடு, இலக்கணமும் இடம் பெற்றுள்ளது. இது தமிழரின் சிறப்பாகும்.

இன்றைய நிலையில் தலைவன், தலைவி, வாழ்க்கை களவு, கற்பு என்ற நிலையில் உள்ளது. அ∴து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே களவு, கற்பு என்ற முறையில் மரபு சார்ந்த நிலையில் குறைபாடு இல்லாது காணப்பட்டது.

அகம், புறம் ஆகிய நூல்களும் பண்டைத் தமிழர் வாழ்வைச் சித்திரிப்பன.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி புறப்பாடலில் ‘‘புகழெனின் உயிரும் கொடுப்பர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்’’ என்ற தமிழர் சமுதாய மரபு பறைசாற்றப்படுகிறது. அவர்தம் சான்றாண்மைப் பண்புக்கு இக்கூற்று உரைகல்லாக அமைகிறது.

நம் பெருங்காப்பியங்கள் ‘‘அறம், பொருள், இன்பம், வீடு’’ என்ற நான்கு வாழ்வியல் உண்மைகளை எடுத்துரைக்கின்றன.பெருங்காப்பியத்திற்கு முன்னர் தோன்றியவை சங்க இலக்கியங்கள். எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள் தமிழர்தம் அன்பு மாறா அகவாழ்வைத் (இன்ப வாழ்வை) தெரிவிக்கின்றன. இரண்டு நூல்கள் மன்னர் தம் கொடை, வீரம், கல்வி போன்ற புறச் செய்திகளைத் தெரிவிக்கின்றன.

இத்தகைய அகவாழ்வும், புறவாழ்வும் செம்மையாக அமையுமாயின் ‘வீடு’ (மேல் உலகம்) தானே கிடைக்கும்.

நம் அகப்பொருள் இலக்கியங்களில் தலைவன் தலைவி பெயர்கள் சுட்டப் பெறவில்லை. தலைவன் தலைவி அன்பிலே குறைபாடு இல்லை. இவ்வன்பின் நிலையை ஐவகை நிலங்களின் தலைவன் தலைவியரிடையே காணலாம். எனவேதான் தலைவன் நிலப் பெயரால் அழைக்கப்பட்டான். தலைவி நிலப்பெயரால் வழங்கப்படவில்லை. தலைவி என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டாள்.

அவர்தம் அன்புமாறா வாழ்வு எதிர்கால சமுதாயத்தினருக்கும் பயன்பட வேண்டும் என்ற மரபின் அடிப்படையில் அவ்வாறு இயற்பெயர் பயன்படுத்தப்படவில்லை. இதைத்தான் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் ‘தமிழ்க்காதல்’ எனப் பெருமையாகச் சொல்லியுள்ளார்.

இன்றைய சமுதாயத்தில் தனிமனிதன், அரசு, தாய், தந்தை இவர்களுக்கென்று கடமை உண்டு. இந்தக் கடமை உணர்வைத் தமிழர்தம் மரபைப் பொன்முடியார் தம் பாடலில் ஒரு தாய் கூறுவது போல் அமைந்துள்ளது. அப்பாடல் வருமாறு.

“ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”

என்பதாம். தமிழர்தம் கடமை மரபு இதில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமூக மரபு இன்று பின்பற்றப்படுமானால் சமுதாயம் நல்லதோர் சமுதாயமாக புதிய சமுதாயமாக அமையும்.

**2.5 மொழிப்பாடத் திறன்கள்**

தாய்மொழி கற்பதால் பெறும் அடிப்படைத் திறன்கள் “கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்” ஆகும். இந்நான்கு திறன்களிலும் தாய்மொழி தெளிவை ஏற்படுத்தும்.

குழந்தை முதன்முதலில் தாயிடமிருந்து மொழித்திறன்களுக்கு அடிப்படையான சொற்களைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறது. அச்சொற்களையும், தொடர்களையும் பேசப் பயிற்சி பெறுகிறது.

இத்திறன்களை அடிப்படையாகக் கொண்டு பள்ளிகளில் படிக்கவும், எழுதவும் பயிற்சி பெறுகின்றன. ஆசிரியரும் கேட்டல், பேசுதல் திறனை வளர்க்கின்றனர்.

கேட்டல் திறன் பேசுதல் திறனுக்கும், படித்தல் திறன் எழுதுதல் திறனுக்கும் அடிப்படை என்பர் மொழி வல்லுநர்.

பிறமொழிக் கலப்பின்றி எழுதத் தாய்மொழி, பயிற்சி அளிக்கிறது. தாய்மொழி தனிமனிதனைச் சமூகத்துடன் இணைக்கிறது. பள்ளிகளில் நாநெகிழ் மற்றும் நாபிறழ் பயிற்சிகள் முறையாகக் கற்றுத் தரப்பட வேண்டும்.

எனவே சரியான ஒலிப்புத் திறனுடன், திருத்தமாகவும், அழுத்தமாகவும், பிழையின்றியும் பேசத் தாய்மொழியே பயிற்சி அளிக்கிறது.

**2.5.1 எண்ணத்தை வெளியிடும் கருவி**

மனதில் எண்ணுவதை எண்ணியவாறே எடுத்துரைக்கும் வல்லமை தாய் மொழிக்கே உண்டு. இதற்குச் சான்றாகக் குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் நோய்க்குக் காரணம் காதல் என்பதை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்கிறது பின்வரும் பாடல்.

“அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே- அவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே

### 2.5.2 பொருளுணரும் திறன்

மற்ற மொழிகளை விட விரைவாகவும், நிறைவாகவும் பொருளுணரும் திறனைத் தாய்மொழியே அளிக்கின்றது.

வள்ளுவனின் குறள் படித்தவுடனே பொருளுணரும் நிலையில் உள்ளது.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக''

என்னும் குறளைத் தாய்மொழியே எளிதில் பொருளுணரும் திறனை அளிக்கிறது என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

### 2.5.3 வாழ்வின் நுகர்வுகளை எடுத்துச் சொல்லுதல்

வாழ்வில் ஒவ்வொருவரும் சுவைத்து இன்புறக்கூடிய சுவை உணர் ஆற்றலை எளிதில் தருவது தாய்மொழியே. இன்பம், துன்பம், அச்சம், பெருமிதம் போன்ற மெய்ப்பாட்டால் உணரும் சுவைகளையும் சொற்சுவை, பொருட்சுவைகளையும் எளிதில் உணர்வதற்கு நம் தாய்மொழியே சிறந்த கருவி.

பட்டினத்தார் தன் தாய் இறந்தபோது, அவள் உடலுக்குத் தீ மூட்ட முடியாமல் உருகிப் பாடுவது அனைவர் மனதிலும் நெஞ்சம் கசியச் செய்யும் ஒன்றாகும்.

''நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி உலகுக்கும்

தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்தி பகல்

கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ

மெய்யிலே தீ மூட்டுவேன்''

வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய பண்புகளைத் தாய்மொழியே சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

''பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்''

"அன்பெனப் படுவது தன்கிளை செறாமை''

என்பன பண்பின் உயிர் நாடியாம்.

அகப்பாடல்களில் தலைவன் தலைவி பெயர் சுட்டக்கூடாது. அவர்களின் பெயரைச் சுட்டினால் காதல் உணர்வு எல்லார்க்கும் பொது என்ற நிலைமாறி அவர்களுக்கு மட்டும் உரியது என்ற நிலை வந்துவிடும்.

''மக்கள் நுதலிய அகனைந் திணையும்

சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்" (அகத்திணையியல் - 5)

எனவே வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்பும் ஆற்றலைத் தாய்மொழியே அளிக்கவல்லது.

தாய்மொழியானது பிறருக்கு மகிழ்வூட்டவும்,பக்குவப்படுத்தவும், பண்பு நலன்களை வளர்க்கவும் உதவுகிறது.

### 2.5.4 கற்பனையாற்றலை வளர்த்தல்

கற்பனை என்பது ஒரு பொருளை நேரில் அனுபவிக்காத நிலையில் அப்பொருளின் தன்மையை நேரில் காண்பது போல் மனக்கண்ணில் கொணர்ந்து நிறுத்துவதாகும்.

சங்கப் புலவர் ஒருவர் நாவல் மரம் ஒன்றைக் கடலருகே காண்கிறார். கருமைநிற நாவல் பழங்களோ உதிர்ந்து கிடக்கின்றன. கருநிற வண்டுகளோ மரத்தருகே பறந்து கொண்டிருக்கின்றன.

நிலத்தில் விழுந்த பழங்களை நண்டுகள் உண்ணுகின்றன. பழம் உண்ணும் வண்டுகளைக் கடலோரம் ஊர்ந்து செல்லும் நண்டுகள் உண்ணுகின்றன. இதைக் கண்ட கவிஞர் கற்பனை நயம் தோன்றப் பாட ஆரம்பித்துவிட்டார்.

கருநிறப் பழத்தை இழுத்துச் செல்லும் நண்டுகளை வண்டுகள் சூழ்ந்து கொண்டன; காரணம் வண்டுகளைத் தான் நண்டுகள் இழுத்துச் செல்கின்றன என்ற மயக்கமாகும்.

இதனை உணர்ந்த நண்டு நாவற்கனியை விட்டுவிட்டதாக அமைந்தது அம்மூவனார் தம் கற்பனையில் உதித்த பாடல். அப்பாடல் வருமாறு,

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்லால் அலவன் கொண்ட கோட் கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மாந்தை அன்ன"

என்பதே கற்பனையைக் காணக்கிடைக்கும் அப்பாடல்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-4**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. கல்வியின் நோக்கம் அறிவை -------------- ஆற்றலை------------------.
2. கல்வியில் --------------------என்பது அரசின் கல்விக் கொள்கை.
3. கல்வி இல்லையேல் --------------------இல்லை; ------------------இல்லை; --------------- இல்லை.
4. புகழெனின்-----------------;பழியெனின் உலகுடன் பெறினும்---------------------.
5. மனதின் எண்ணத்தை எடுத்துரைக்கும் வல்லமை தாய்மொழிக்கே உண்டு: விவரி.

**2.5.5 அழகுணர் ஆற்றலை வளர்த்தல்**

எங்கு அழகு மிளிர்கிறதோ அங்கே கவிதை ஊற்றெடுக்கும். அவ்வாறு ஊற்றெடுக்கும் போது கவிஞன் தான் கண்ட காட்சியை, அழகுணர்ச்சியைப் பாடல் மூலம் நம்மையும் காணச் செய்வான். திருநாவுக்கரசர் தாம்கண்ட இறைவனின் அழகுக் காட்சியை மாட்சியுற நம்மையும் காணச் செய்கிறார். அழகுணர்ச்சி அமைந்த பாடல் வருமாறு.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போற் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

(தேவாரம் - செய் 494)

**2.5.6 சமூகக் கடமைகளை மேற்கொள்ளுதல்**

தனிமனிதனிடம் இருக்க வேண்டிய சமுதாயப் பண்புகளை, மரபுகளை, மனப்பான்மையை, நட்பு, அன்பு, ஒப்புரவறிதல், விருந்தோம்பல் முதலிய பண்புகளைத் தருவது தாய்மொழியே. தாய்மொழி கற்போர் இப்பண்புகளைப் பெற்றுப் பண்பாட்டின் சிகரமாகவும், பண்பாட்டின் பயன்பாடாகவும் திகழ்வர்.

சங்கச் சான்றோர் தங்க வரிகளால் மாற்றுப் பார்த்து நம் மனதில் பதியும் வண்ணம் உரைத்த பாடல் வரிகள் வருமாறு.

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே"

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

"ஒரு கன்னம் அறைந்தார்க்கும் மறுகன்னம் காட்டு"

"நன்றி மறப்பது நன்றன்று"

"சொல்லுக சொல்லிற் பயனுடைய"

போன்ற பாடல் வரிகள் மாணவர் மனதில் பதியும்போது அது பண்பாடாகவும், சமூகக் கடமைகளாகவும் வெளிப்படுகிறது.

**2.5.7 தாய்மொழி வழிக் கற்றல்**

தாய்மொழியைத் திறம்படக் கற்பதால் தாய்மொழியில் நல்ல புலமையும், சொல் வளமையும் ஏற்படும். இவ்வடிப்படை பிற பாடங்களைக் கற்க எளிதாய் அமைந்து விடும். அவ்வாறு கற்கும்போது தெளிவு ஏற்படும்; தடுமாற்றம் தவிர்க்கப்படும்.

தாய்மொழி வழிக் கற்றலால் மாணவரின் நினைவாற்றல் மேம்படும்; கருத்துக்களைச் சிந்தித்து வெளியிடும் ஆற்றல் வளரும்.

தாய்மொழியால் பெறும் திறன்கள் தரம் வாய்ந்தவை. அடிப்படைத் திறன்களை வளர்க்கவும், ஆக்கப் படைப்புக்களைத் தூண்டவும், இலக்கிய இன்பத்தை நுகரவும், சமுதாய வாழ்வு உயரவும் பயன்படுவது தாய்மொழி வழிக் கல்வியே.

தாய்மொழிக் கல்வியின் மூலம் கல்வி வளர்ச்சி நன்கு அமையும் தாய்மொழி வழிக் கல்வி மூலம் மொழித் திறன்களையும், வாழ்.வுத் திறன்களையும் மாணவர் பெற்று உயர்வர்.

**2.6 பாடத்திட்டத்தின் முக்கியத்துவம்**

**அறிமுகம்**

ஆசிரியர் பாடப் பொருளைக் கற்பிப்பதற்கு முன்பு எதை எவ்வாறு எப்படிக் கற்பிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு முறையாக எழுதித் தயாரிக்கும் நிரல்தான் பாடத்திட்டமாகும்.

குறிப்பிட்ட பாடப் பகுதியைக் கற்பிக்கும் விவரங்கள் இதில் இருக்கும். கல்வியின் நோக்கமும், கற்பித்தலின் நோக்கமும் வெற்றியடைய பாடத்திட்டம் பயன்படும்.

பாடத்திட்டம் தயாரிக்கும் முன் எடுத்துக் கொண்ட அலகினைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பாடப்பொருளைப் பயன்படுத்துவதற்கேற்ற துணைக் கருவிகளும், எடுத்துக்காட்டுக்களும் பாடம் தொடர்பான பல்வேறு கருத்துக்களும், கற்பிக்கும் படிநிலைகளும் வரைமுறை செய்யப்படும்.

பெஞ்சமின் புளூமின் என்ற கல்வியாளர் ஒரு அலகினை எடுத்துக் கொண்டு பாடத்திட்டம் தயாரிக்கும் போது அறு வகைக் கூறுகளை மனதில் கொள்ள வேண்டும்.

அவையாவன: 1. அறிதல் 2. புரிதல் 3. பயன்படுத்துதல் 4. பகுத்தல் 5. தொகுத்தல் 6. மதிப்பிடுதல் ஆகியன.

**2.6.1 பாடத்திட்டத்தின் முக்கியத்துவம்**

பாடத்திட்ட அமைப்பு கல்வியின் நோக்கங்களையும், இலக்குகளையும் அடைய கலங்கரை விளக்கம் போன்ற வழிகாட்டியாகும்.

தொடக்கநிலை மாணவர்கள் முதலில் சிறுசிறு சொற்களையும்,பின்னர் சிறு வாக்கியங்களையும் அறிதல் வேண்டும்.அவற்றின் பொருளையும் பயன்பாட்டையும் தொடக்க நிலையில் அறிந்து கொண்டால் தான் மொழியின் அடிப்படை புரியும். இதற்கான விவரங்கள் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

தொடக்கநிலை மாணவர்களின் பேச்சு தெளிவற்று இருக்கும். அவர்களின் பிழைகளைக் களையும் வகையில் படம் பார்த்துக் கதை சொல்லுதல், சிறுசிறு வாக்கியங்கள் அமைத்தல் போன்றவற்றைப் பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்தல் மிக முக்கியமானது.

தொடக்கநிலையிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வரும் மாணவர் சுமார் 2700 சொற்களை அறிந்திருக்க வேண்டும் என்பது பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேலும் கடிதம் எழுதுதல், கட்டுரை எழுதுதல், செய்திகளைப் படித்தறியும் திறன், நிலையான படிப்பறிவைப் பெறுதல் என்பவை முக்கியமான நோக்கங்களாகும்.

நடுநிலைப் பள்ளியில் அகராதியைப் பார்த்துப் பொருளுணரும் திறனைப் பெறச் செய்யும்நிலை பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

வாய்விட்டுப் படித்தல், வாய்க்குட் படித்தல், ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு ஆகியவற்றிற்கான பயிற்சிகள், உரைநடைப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

மாணவர்கள் ஆர்வத்துடன் புதிய செய்திகளை அறிந்து கொள்வதற்கு அவர்களைத் தயார் செய்வது, ஊக்குவித்தல் இத்திறனகள் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

பாடத்தலைப்பின் நோக்கங்கள் இடம்பெற வேண்டும். பாட வளர்ச்சியின் இடையில் பாடப் பொருளைச் சோதிக்கும் வகையில் வினாக்கள் அமையும் வகையில் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

பாடவளர்ச்சியில் இடம்பெற்ற செய்திகளுக்குத் தொடர்பான சான்றுகள் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

பாடப் பொருளுக்கும் தொடர்புபடுத்தப்பட்ட கருத்துக்களுக்கும் பொதுவான கருத்தை உருவாக்கி விளக்கும் நிலை பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

பொதுக் கருத்தை வாழ்வில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைச் சொல்ல வேண்டும்.

பாடத்திட்டம் மாணவர்களின் தேவைகளை அடைய உதவ வேண்டும்.குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பது பெஞ்சமின் புளூம் கருத்து.

படைப்பாற்றல், மீட்டறிதல், நினைவு கூர்தல், ஒப்பிட்டு ஆய்தல், விளக்குதல் போன்ற உயர்ந்த நோக்கங்கள் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டும்.

உயர்நிலைப் பள்ளியிலும், மேல்நிலைப் பள்ளியிலும் இலக்கணப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் பயிற்சி அளித்தல் வேண்டும்.

**2.6.2 பாடத்திட்டத்தின் பயன்கள்**

கற்பித்தல் பொது நோக்கங்களையும், சிறப்பு நோக்கங்களையும் தெளிவுபடுத்துதல்.

மாணவர்களின் தேவை, ஆர்வம், மனப்பாங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் திட்டமிடப் பயன்பட வேண்டும்.

ஆசிரியரும், மாணவரும் இணைந்து சுதந்திரச் சூழலில் செயல்படத் துணை நிற்கும்.

- கற்றலில் ஆர்வத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்திக் கற்றல் பயனை அடைய உதவுதல்.
- காலத்தை வரையறை செய்து கால விரையத்தைத் தடுத்தல்.
- மாணவர்களின் உள்ளுணர்வுகளைத் தூண்டிக் கற்றலைப் பயனுடையதாக மாற்றுதல்.
- கற்றலை செயல்திறன் உடையதாக மாற்றுதல்.
- கற்றலால் பெற்ற அறிவை வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துப் பயன்படுத்த உதவுதல்.
- மாணவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்த்துப் பாடப்பொருளில் திறன் பெறுதல்.
- செயல்திட்ட வேலைகளுக்குத் திட்டமிட உதவுதல்.
- கற்பிப்பதற்குத் தேவையான துணைக் கருவிகளைத் தயாரிக்க ஆசிரியருக்கு உதவுதல்.
- பாடத்திட்டத்தைச் சிறப்பாக அமைத்து முறையாகத் திட்டமிட்டுச் செயலாற்றப் பயன்படுதல்.

பாடப்பொருளை ஒழுங்காகவும், வரிசைப்படியும் கற்பிக்க உதவுகிறது; முன்கூட்டியே திட்டமிடப் படுவதால் ஆசிரியருக்கு ஒரு தன்னம்பிக்கையும், பொறுப்புடன் செயல்படும் திறனும் ஏற்படுகின்றன.

திட்டமிட்டபடி கற்பித்தல் நிகழ்வதால் மாணவர்கள் குறுகிய காலத்தில் கற்றுக் கொள்கின்றனர் பாடப்பகுதியில் ஒரு தொடர்ச்சி ஏற்படுகிறது.

**2.6.3 பாடத்திட்டம் அமைத்தல்**

பாடத்திட்டம் அமைப்பதில் சில படிநிலைகளைப் பின்பற்ற வேண்டும்.

முதல் நிலையில் கற்றலின் சிறப்பு நோக்கங்களும், இரண்டாவதாக பாடப்பொருளின் மூலம் மாணவர் பெறும் நடத்தை, மூன்றாவதாக மாணவர் பெறும் கற்றல் அனுபவம், நான்காவதாக மதிப்பீடு செய்யும் வினாக்கள் இடம் பெறும்.

பாடத்திட்டத்தின் முகப்புப் பகுதியில் பயிற்சி ஆசிரியர், வகுப்பு, மாணவர் எண்ணிக்கை, பள்ளியின் பெயர், நாள், பாடம் நடத்தும் கால அளவு, பாடத்தலைப்பு, பகுதியின் அளவு ஆகியன தெளிவாக இடம்பெறும்.

செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் இவற்றின் பாடத்திட்ட அமைப்பில் வேறுபாடொன்றும் இராது. நோக்கக் கூறுகள்,பாடப்பொருள், கற்றல் அனுபவம், மதிப்பீடு ஆகியவை மேலே குறிப்பிட்டபடி அமையும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-5**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

6. அழகுணர்ச்சி என்றால் என்ன?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

7. சமூகக் கடமைகளை மேற்கொள்ள தாய்மொழிப் பயிற்சி எவ்வாறு பயன்படுகிறது?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

8. பாடத்திட்டத்தின் இன்றியமையாமையை விளக்குக.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

9. பாடத்திட்டத்தின் பயன்களை விவரி.

.......................................................................................................................................................

## பாடத்திட்டம் - 1

1. பயிற்சி ஆசிரியர் : குன்னத்தூர்.சு.கோமதி
2. வழிகாட்டி ஆசிரியர் : வெள்ளோடு. சு.கௌரி
3. பாடம் : செய்யுள்
4. தலைப்பு : பொறையுடைமை
5. அலகு : அகழ்வாரைத் தாங்கும் - குறள்

நாள் : 28.8.2015
நேரம் : 45 நிமிடங்கள்
வகுப்பு : ஒன்பதாம் வகுப்பு
பிரிவு : 'அ' பிரிவு
உரியோர்: 46
உள்ளோர்: 45

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

1. பொது நோக்கங்கள் :
   1. அகழ்வாரைத் தாங்கும் - குறளின் பொருளை அறிகிறான்
   2. அகழ்வாரைத் தாங்கும் - குறளின் பொருளை நன்கு புரிந்து கொள்கிறான்
   3. அகழ்வாரைத் தாங்கும் - கருத்தை வெளிப்படுத்துகிறான்
2. சிறப்பு நோக்கங்கள் :
   1. அகழ்தல், தாங்குதல் பற்றி அறிகிறான்
   2. குறளின் ஒவ்வொரு சொல்லையும் விளங்கிக் கொள்கிறான்
   3. ஆசிரியர் குறளைப் படித்துக் காட்டுகிறார்; மாணவன் படிக்கப் பயிற்சி பெறுகிறான்.
   4. இலக்கிய நயத்தைப் பாராட்டுகிறான்
3. துணைக் கருவிகள் : குறளின் கருத்தை வெளியிடும் வரைபடம் வள்ளுவரின் வரைபடம்
4. ஆர்வமூட்டல் : உலக நீதிநூல்களில் தலைசிறந்தது திருக்குறள் என்றார் ஆல்பிரட் சுவிட்சர். நாடாளுமன்ற உறுப்பினர் தருண்விஜய் அவர்கள் பாரதத்தில் திருக்குறள் நெறி பரவப் பாடுபடுகிறார். இத்தகைய பெருமை உடைய குறள் ஒன்றைப் படித்துப் பயன்பெற உள்ளோம்.
5. பாடவளர்ச்சி

| **கற்றல் கூறுகள்** | **பாடப்பொருள்** | **கற்றல் அனுபவம்** | **மதிப்பீடு** |
|---|---|---|---|
| அகழ்வார், தாங்குதல் என்ற சொற்களை மீட்டறிதல் | அகழ்வார் ..........................தலை | செல்வர்க்கு அழகு செழுங்கிளை குறிஞ்சி நில மக்கள் நிலத்தை அகழ்வர்.அகழ்தல் பற்றி அறிதல். நிலத்தைத் தோண்டினாலும், | வெற்றி வேற்கை ஆசிரியர் யார்? |

| | | | |
|---|---|---|---|
| | | மக்களைப் பாதுகாக்கும் அது போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் மேலானது. | |
| அகழ்தல், தாங்குதல் என்ற சொற்களை மீட்டறிந்து குறளின் பொருளை நினைவு கூர்தல் | தொட்டனைத்தூறும் மணற்கேணி. பொருள் உணர்தல். அதுபோல் தோண்டினாலும் நன்மை செய்தல் | பாடப்பொருளை நன்கு விளங்கிக் கொள்கின்றனர். | அகழ்வாரைத் தாங்குதல். பொருள் கூறுக. |
| நிலம், போல – என்ற சொற்களை விளங்கிக் கொள்கிறான் | நிலத்தின் செயல் விளக்கப்படுகிறது. | நிலத்தின் செயல் மூலம் மாணவர்கள் அறியும் கருத்து | அகழ்வார்க்கும் நிலம் என்ன செய்கிறது? |
| 'தம்மை இகழ்வார்' – சொற்களின் பொருளை விளங்கிக் கொள்ளுதல் | இன்னா செய்தார்க்கு அவர் நாண நன்னயம் செய்தல் | சான்றோர்கள் தம்மை இகழும் இகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்வர் | இகழ்வார்ப் பொறுத்தல் யார் செயல்? |
| 'பொறுத்தல்' என்ற சொல்லையும் 'தலை' என்ற சொல்லையும் விளங்கிக் கொள்ளுதல் | 'பொறுத்தல் இறப்பினை என்றும் ' என்ற குறள் கருத்தின் மூலம் பாடப்பொருளை விளக்குதல் | 'பொறுத்தல்', 'தலை' என்ற சொற்களின் பொருளை நயத்துடன் விளங்கிக் கொள்கின்றனர். | 'தலை' என்ற சொல்லின் பொருள் யாது? |
| குறளை ஆசிரியர் வாய்விட்டுப் படித்தல்; இசை கூட்டுதல் | குறளைப் படிக்கப் பயிற்சி அளித்தல். இசையுடன் பாடப் பயிற்சி அளித்தல் | ஆசிரியர் குரல் ஏற்றத் தாழ்:வோடு படித்துக் காட்டுகிறார், மாணவர் அதனை உணர்கின்றனர். மாணவர் இசையுடன் பாடப்பயிற்சி பெறுகின்றனர் | வெண்பாவிற்குரிய ஓசை யாது? |

6. தொகுத்துக் கூறுதல் : நிலம் தன்னைத் தோண்டுபவர்க்கும் நன்மையே செய்யும் அதுபோலத் தம்மை இழிவுபடுத்தும் அறிவிலிகளின் இகழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

7. தொடர்பணி : 1. இகழ்வார்ப் பொறுத்தல் ஏன் உயர்ந்தது? எதைப் போல இகழ்வார்ப் பொறுத்தல் வேண்டும்?

**பாடத்திட்டம் - 2**

1. பயிற்சி ஆசிரியர் : கொடுமுடி. மானசீக ரூபாதேவி — நாள் : 3.6.2015
2. வழிகாட்டி ஆசிரியர் : காங்கயம். த.மஞ்சுளா — நேரம் : 45 நிமிடம்

3. பாடம் : உரைநடை — வகுப்பு : ஏழாம் வகுப்பு

4. தலைப்பு : செம்மொழித் தமிழ் — பிரிவு : ‘ஆ’ பிரிவு

5. அலகு : பாடத்தின் முதல் பகுதி — உரியோர்: 37

உள்ளோர்: 35

1. பொது நோக்கங்கள் :
1. பிற செம்மொழிகள் - தமிழ் வேறுபாடு அறிதல்
2. பாடப் பகுதியைப் புரிந்து கொள்ளுதல்
3. பாடத்தின் கருத்தைப் புரிந்து தன் கருத்துகளை வெளிப்படுத்துகிறான்.

2. சிறப்பு நோக்கங்கள் :
1. மொழி மீட்டறிதல்
2. செம்மொழி – திருந்தாத மொழி – வேறுபாடு அறிதல்
3. இரண்டையும் ஒப்பிட்டு அறிதல்
4. ஆசிரியர் பாடப்பகுதியையும், மொழித் திறன்களையும் விளக்குதல்
5. ஆசிரியர் படித்துக் காட்டுகிறார் மாணவர் படிக்கின்றனர்.

3. துணைக் கருவிகள் : செம்மொழிப் பண்பைக் காட்டும் படம்; செம்மொழி அல்லாத மொழியின் பண்புகளைக் காட்டும் படம்.

4. ஆர்வமூட்டல் :
1. செந்தமிழ் என்றால் என்ன?
2. செம்மொழி என்றால் என்ன?
3. செம்மொழி அல்லாத மொழியின் பண்புகள் யாவை?

செந்தமிழே, செம்மொழி எனப்படுகிறது. செம்மொழிக்குரிய பதினாறு பண்புகள். இலக்கிய இலக்கணச் சிறப்பில்லாத மொழிகளே திருந்தாத மொழிகள்.

| கற்றல் கூறுகள் | பாடப்பொருள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| உலக மொழிகள் - பழமைச் சிறப்பு – மீட்டறிதல் | பிறப்பும் சிறப்பும் | பழமைச் சிறப்பையும், பிறப்பையும் அறிந்து கொள்கிறான் | பழமை வாய்ந்த உலக மொழிகள் யாவை? |
| செம்மொழிகள் - சிறப்புக்கள் - நினைவு கூர்தல் | செம்மொழிப் பண்புகள் | செம்மொழியின் பண்புகளை விளங்கிக் கொள்கிறான் | செம்மொழியின் பண்புகள் சிலவற்றைக் கூறு. |
| செம்மொழி – தமிழ் - பழமைச் சிறப்புக்கள் - விளங்கிக் கொள்ளுதல் | தமிழின் பழமைச் சிறப்பு | தமிழின் பழமையையும், பெருமையையும் தெரிந்து கொள்கிறான் | தமிழின் தொன்மை பற்றிக் கூறு. |

| | | | |
|---|---|---|---|
| இலக்கணச் சிறப்பு – விளங்கிக் கொள்ளுதல் | தொல்காப்பியம் | தொல்காப்பியத்தின் அமைப்பு, சிறப்பு, பழமை இவற்றைத் தெரிந்து கொள்கிறான் | தமிழில் கிடைத்த முதல் நூல் எது? |
| சங்க இலக்கியம் - விளங்கிக் கொள்ளுதல் | பத்துப்பாட்டு | பெயர்க்காரணம் - வகுத்தும், தொகுத்தும் தெரிந்து கொள்ளுதல் | ஆற்றுப்படை நூல்கள் யாவை? |
| காப்பியங்கள் - பெருமை அறிதல் | எட்டுத்தொகை, காப்பியங்கள் | தொகை நூல்களை வகுத்தும் தொகுத்தும் தெரிந்து கொள்கிறான். | எட்டுத்தொகையில் புறநூல்கள் யாவை? |
| முத்தொள்ளாயிரம், இறையனார் அகப் பொருள் - செவ்வியல் இலக்கியம் - அறிதல் | இடைக்கால இலக்கியம் | முத்தொள்ளாயிரம் - இலக்கிய இன்பம், மூவேந்தரின் சிறப்புக்களைத் தெரிந்து கொள்கிறான். | முத்தொள்ளாயிரம் எம்மன்னரின் சிறப்புக்களைச் சொல்கிறது? |
| தொகுத்துக் கூறுதல் | உலக முதன்மொழிகளைக் கூறுதல் - செம்மொழியின் சிறப்புக்கள் - தமிழ் பழமைச் சிறப்பு - பழைய இலக்கணச் சிறப்பு - சங்க இலக்கியப் பெருமை - காப்பியங்களின் சிறப்பு - இறையனார் அகப்பொருளின் தன்மை - முத்தொள்ளாயிரத்தின் இலக்கிய நயம் - இவற்றைத் தொகுத்துக் கூறுதல் | | |
| தொடர் பணி | 1. செம்மொழி என்றால் என்ன? தமிழ் செம்மொழிக்குரிய பண்புகளைப் பெற்றுள்ளமையை விவரி. | | |

## பாடத்திட்டம் - 3

### அலகுத்திட்டம் தயாரித்தல்

சிறப்பாகக் கற்பித்தலின் முதல்படி கற்பித்தலை முன்கூட்டியே திட்டமிடுதலாகும். இது நேரம் வீணாவதைத் தடுக்கும் வகுப்பறை வேலைகளை முறையாகவும், ஒழுங்காகவும் செயல்படுத்த உதவும்.

### அலகுத்திட்டம்

அலகுத்திட்டம் என்பது பாடப்பகுதியின் ஓா் அலகைக் கற்பிக்கத் திட்டமிடுவதாகும். ஓா் அலகு என்பது ஒரு குறிப்பிட்ட பாடக் கருத்தை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாகும்.

நாற்பத்தைந்:து நிமிடங்களுக்கு ஒரு பாடப்பகுதியைத் தேர்ந்தெடுத்து அதைக் கற்பிக்கத் திட்டமிடுதலே பாடத்திட்டமாகும்.

### அலகுப் பாடத்திட்டம்

பாடப்பொருள் கற்பித்தலுக்குத் தகுந்தவாறு பிரிக்கப்படாமல் இருக்கும்போது ஆசிரியா் அதனைச் சரியான அலகுகளாகத் திருத்தி அமைக்க வேண்டும்.

ஓா் அலகு என்பது தொடர்புடைய பாடக் கருத்துக்கள் அமைந்த பெரிய பாடப்பகுதியாகும். ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாக அமையும்.

ஓர் அலகுத் திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பிலுள்ள ஒன்றுக்கொன்று தொடர்புடைய பாடத்திட்டங்களைக் கொண்டது.

ஒரு குறிப்பிட்ட அலகிலுள்ள பகுதி.களின் முழுக் கருத்தினையும் புரிந்து கொள்ளும்படி அலகுத்திட்டம் தயாரிக்க வேண்டும்.

**அலகுத்திட்டத்தின் பயன்கள்**

1. கற்பித்தல் பொது நோக்கங்களையும், சிறப்பு நோக்கங்களையும் தெளிவுபடுத்தும்.
2. மாணவர்களின் தேவை. ஆர்வம், மனப்பாங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் திட்டமிட உதவும்.
3. ஆசிரியரும், மாணவரும் சுதந்திரச் சூழ்நிலையில் செயல்படத் துணை நிற்றல்.
4. கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல், கால விரையம் தடுக்கப்படுதல்
5. மாணவர்களின் உள்ளுணர்வைத் தூண்டுதல் செயல்திறன் மேம்படுதல்
6. அறிவை வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துப் பயன்படுத்த உதவுதல் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல்.
7. செயல்திட்ட வேலைகளுக்குத் திட்டமிட உதவுதல்; கற்பிக்கத் தேவையான கருவிகளைத் தயாரிக்க உதவுதல் .
8. பாடத்திட்டத்தினைச் சிறப்பாக அமைக்க உதவுதல்.

**அலகுத்திட்டம் தயாரிப்பதில் உள்ள படிநிலைகள்:**

ஆசிரியர் அலகுத்திட்டம் தயாரிக்கும் முன் பாடப்பொருளை நன்கு அறிந்திருக்க வேண்டும். அலகுத் திட்டம் தயாரித்தல் நன்று.

**1. தயாரித்தல்**

மாணவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்திக் கற்றலுக்குத் தயார் செய்கிறது வாழ்க்கைச் சூழலுடன் இணைத்துக் கற்பித்தல் நன்று.

**2. முன்னறிவைச் சோதித்தல்**

ஒரு புதிய அலகை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முன், எந்த அடிப்படையில் கற்பித்தலைத் தொடங்குவது எனத் திட்டமிட மாணவரின் முன்னறிவைச் சோதிக்க வேண்டும்.

**3. பாட வளர்ச்சி**

பாடப்பொருளைக் கற்பிப்பதற்குத் தேவையான கற்பித்தல் கருவிகள், முறைகள், கற்பித்தல் பயிற்சிகள் ஆகியவை திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

**4. தொகுத்துக் கூறுதல்**

ஒரு குறிப்பிட்ட அலகுப் பாடத்தின் கீழ் அமைந்த சிறுதலைப்பில் உள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூற வேண்டும்.

**5. மீள்பார்வை**

பாடப்பகுதி முழுவதையும் கற்பித்த பிறகு மாணவரின் புரிந்துகொள்ளும் திறனை மீட்டறிவதற்கு வினாக்களின் மூலம் மீள்பார்வை செய்யலாம்.

**6. மதிப்பிடுதல்**

கற்பித்தல் நோக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடுதல் அமைகிறது மதிப்பிடுதலின் முடிவுகளை ஆராய்ந்து மீண்டும் பாடத்தைத் திட்டமிடுதல் வேண்டும்.

**அலகுத்திட்டம் எழுதுதல்**

ஓர் அலகுத் திட்டத்தை எழுதுவதற்குப் பல்வேறு வடிவமைப்புக்கள் உள்ளன் ஒரு நல்ல அலகுத்திட்டம் கீழ்க்கண்ட கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அலகின் தலைப்பு | மையக்கருத்து | துணைக் கருவிகள் |
| அலகின் நோக்கங்கள் | கற்பித்தல் முறைகள் | ஒப்படைப்பு |
| பாடத் தலைப்பில் அடங்கியுள்ள கருத்துக்கள் | கால அளவு | மதிப்பிடுதல் |

**அலகுப் பாடத்திட்டம்**

ஓர் அலகுத் திட்டத்தை எழுதுவதற்குப் பல்வேறு வடிவமைப்புக்கள் உள்ளன. எனினும் ஒரு நல்ல அலகுத்திட்டம் கீழ்க்கண்ட கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

- அலகின் தலைப்பு
- அலகின் நோக்கங்கள்
- பாடத் தலைப்பில் அடங்கியுள்ள கருத்துக்கள்
- மையக்கருத்து
- கற்பித்தல் முறைகள்
- கால அளவு
- துணைக் கருவிகள்
- ஒப்படைப்பு
- மதிப்பிடுதல்

**அலகுத் திட்டத்தின் வடிவமைப்பு**

**மாதிரிப் படிவம் - 1**

அலகின் பெயர்: செய்யுள் பாடம் : வாழ்த்து

அலகின் நோக்கங்கள்: வகுப்பு : ஏழாம் வகுப்பு

| வரிசை | பாடத் தலைப்புகள் | பாடங்களின் எண்ணிக்கை | பாடப்பொருளின் மையக் கூறுகள் | கற்பித்தல் முறைகள் | கற்பித்தல் கருவிகள் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|

| எண். | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | வாழ்த்து திரு.வி.க. | 1 | 1. இறைவனின் இயல்புகள்<br>2. இசையை இயற்கையோடு இணைத்த இறைவன்<br>3.பெண்களுக்குத் தாய்மைப் பண்பைச் சேர்த்தவன்<br>4. கொடையை உயிரினங்-களுக்குத் தந்தவன்<br>5. உள்ளத்தில் உண்மையை வைத்தவன் | 1.பாடலைக் கவிநயத்தோடு படித்துக் காட்டல்<br>2. பொருள் புரியும்படிப் படித்துக் காட்டல்<br>3. பாடல் கருத்தைப் புரியும்படி விளக்குதல்<br>4. அருஞ்சொற்பொருளைத் தெரிந்து கொள்ளுதல்<br>5. பாடற்கருத்தை வெளிப் படுத்துதல்<br>6. சொற்களைப் பயன் படுத்துல்<br>7. நயம் அறிதல்<br>8. இலக்கணக் கூறுகளை அறிதல். | 1. கரும்பலகை<br>2. சுண்ணக்கட்டி<br>3. திரு.வி.க. படம்<br>4.வாழ்க்கைக் குறிப்பு-வரைதாள்<br>5.படைத்து அளித்த நூற்பட்டியல் - வரைபடத் தாள்<br>6. பணியின் சிறப்பு – நழுவங்கள்<br>7.பெற்ற பட்டங்கள் வண்ணத்தாள் | நாற்பத்தைந்து மணித்துளி |

**2.7 புளூமின் கற்பித்தல் கோட்பாடுகள்**

பாடப்பொருளின் கற்பித்தல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் முறைகளை மேற்கொள்ள முடியும்.

கற்பித்தல் நோக்கங்களுக்கும், குறிக்கோள்களுக்குமிடையே வேறுபாடு உள்ளது.

**நோக்கங்கள்**

1. நோக்கங்கள் பொதுவானவை.
2. நோக்கங்களை நிறைவேற்ற நீண்ட காலம் தேவை.
3. பாடப்பொருளின் நோக்கமும்,கற்பித்தல் நோக்கமும் கற்பித்தல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டவை.

**குறிக்கோள்கள்**

1. கற்பித்தல் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டவை.
2. கல்வியின் இலக்குகள், கற்பித்தல், இலக்குகளை அடைய குறுகிய காலம் போதும்.
3. குறிக்கோள்கள், நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

**கல்வியின் குறிக்கோள்கள் - வகை**

1. குறிக்கோள்கள் என்பவை நோக்கங்களை அடைய மேற்கொள்ளும் செயல்களாகும். தாய்மொழிப் பாடம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் பள்ளிப் பாடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என அறிந்தால் மட்டுமே பாடப்பொருளைத் தேர்வு செய்ய முடியும். கல்வியின் குறிக்கோள்களை உருவாக்குவதில் கல்வியாளர்கள் கீழ்க்காணும் உத்திகளைக் கையாள வேண்டும்.

1. மாணவர்களின் தேவைகளும் திறன்களும்
2. சமுதாயத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும்
3. பாடப்பொருளின் முக்கியத்துவம்
4. பாடப்பொருளின் தன்மைகள்

**கல்வியின் நோக்கங்கள்**

கல்வியின் நோக்கங்களை நான்கு வகையாக வகைப்படுத்தலாம்.

1. மாணவர்களின் வகுப்புக்களின் அடிப்படையிலானவை.
2. மாணவர்களின் வகையின் அடிப்படையில் அமைதல்.
3. மாணவர்களின் நோக்கங்களின் அடிப்படையில் அமைதல்
4. நடத்தை மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைத்தல்

**2.7.1 புளூமின் வகைப்பாடு**

கல்வியின் நோக்கமும், கற்பித்தலின் நோக்கமும் பெஞ்சமின் புளூமின் அவர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. இ∴து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1. அறிவுசார் களம்
2. உணர்வுசார் களம்
3. உள் இயக்கம்சார் களம்

   புளூமின் நோக்கங்கள் சாதாரண நிலையிலிருந்து உயர்நிலைக்குச் செல்லக் கூடியவை. ஒன்றோடொன்று இணைந்து பிரிக்க முடியாத நிலையில் இருப்பவை.

**1. அறிவு வளர் நிலை**

இ∴து மாணவர்களின் அறிவு வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. இதில் அமைந்த படிநிலைகள் வருமாறு.

1. அறிந்து கொள்ளுதல்
2. புரிந்து கொள்ளுதல்

3. பயன்படுத்துதல்
4. பகுத்தல்
5. தொகுத்தல்
6. மதிப்பிடுதல்

**முன்னேற்றத்தை சோதித்தறிக-6**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

10. புளூமின் கற்பித்தல் கோட்பாட்டு நோக்கங்களை விவரி.
.................................................................................................................................................
11. உணர்வு சார்நிலை என்றால் என்ன?
.................................................................................................................................................
12. தானே செய்தல் என்றால் என்ன?
.................................................................................................................................................
13. மதிப்பிடுதல் என்றால் என்ன?
.................................................................................................................................................

**2. உணர்வுசார் நிலை**

மாணவர்களிடம் கல்வி வளர்ச்சி, சமுதாயப் பண்பு வளர்ச்சி இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப் பட்டுள்ளன.

1. ஏற்றுக் கொள்ளுதல்
2. பதில் அளித்தல்
3. மதிப்பளித்தல்
4. ஒழுங்குபடுத்துதல்
5. பண்பாட்டை வளர்த்தல்

**3. மனச் செயல்பாட்டு நிலை**

மாறில மக்களின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமையும் மாணவரின் செயல்பாடுகள். இதில் உள்ள படிநிலைகள்.

1. புலன்களால் (உடல் உறுப்புக்கள்) காணும் காட்சி
2. போலச் செய்தல்
3. தானே செயல்படுதல்
4. நுட்பமாகச் செயல்களைச் செய்தல்
5. கலையை உருவாக்குதல்
6. இயற்கைச் சூழலை உருவாக்குதல்

அறிவை வளர்க்கும் களத்தில் சில நோக்கங்கள் வரையறை செய்து கூறப்பட்டுள்ளன. அந்நோக்கங்கள் வருமாறு.

**அறிந்து கொள்ளுதல்**

இ.்.து நினைவாற்றலையும் மீட்டறிதலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**புரிந்து கொள்ளுதல்**

இப்பகுதி உண்மைகளையும், தத்துவங்களையும் கொண்டது.சான்று பகர்தல், கருத்துக்களைத் தொடர்பு படுத்துதல், மொழி பெயர்ப்பு ஆகிய பகுதிகளைக் கொண்டது.

**பயன்படுத்துதல்**

இப்பகுதி கொள்கைகள், விதிகள், வரையறைகள் இவற்றை இணைத்துப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

**பகுத்தல்**

பொதுக் கருத்திலிருந்து அதன் பகுதிகளைப் பிரித்து அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளை அறிதல்.

**தொகுத்தல்**

ஒரு தலைப்பின் கீழ் அமைந்த செய்திகள், பொதுக் கருத்துகள், தத்துவங்கள், விதிகள் இவற்றைத் தொகுத்தலே தொகுத்துக் கூறுதலாம்.பல்வேறு கருத்துகள் இணைக்கப்பட்டுப் புதுக்கருத்து உருவாக்கப்படுகிறது.

**மதிப்பிடுதல்**

அறிவியல் அடிப்படையில் அறிவின் மதிப்பை அளவிடுதலே மதிப்பிடுதல்.

மேலே சொல்லப்பட்ட ஆறு கருத்துகளும் படிப்படியாக வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவுவதாகும். உணர்வுக் களத்தின் நோக்கங்கள்

இப்பகுதியிலுள்ள நோக்கங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

1. **ஏற்றுக் கொள்ளுதல்**

சில சூழ்நிலைகளையும் தூண்டல்களையும் ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்வதற்கான சிந்தனை நுட்பம்.

**2. துலங்கல்**

எடுத்த செயல் ஐம்பொறிகளால் உணரப்படும் தொடர்ந்து துலங்கல் நடைபெறும்.

**3. மதிப்பளித்தல்**

மதிப்பிடுதலில் ஒரு செயலின் மதிப்பை ஏற்றுக்கொள்ளுதலும், முன்னுரிமை அளித்தலும், பொறுப்புணர்தலுமாகும்.

**4. ஒழுங்குபடுத்தல்**

மதிப்பிடுதலில் கிடைத்த கருத்துகளைக் கொண்டு முடிவுகளை உருவாக்குவது ஒழுங்குபடுத்தலாகும்.

**5. பண்பாக்குதல்**

சரியான மதிப்பிடுதலில் இருந்து பயன்படுத்தும் செய்திகளே பண்பாக மாறுகிறது.

**உள இயக்கக் களத்தின் நோக்கங்கள்**

இப்பகுதியின் நோக்கங்கள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

**1. ஐம்பொறிக் காட்சி**

உற்றுநோக்கல், உணர்தல், ஆர்வத்தை வளர்த்தல் ஆகிய திறன்கள் புலன்காட்சி வழி நடைபெறுகின்றன.

**2. போலச் செய்தல்**

மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான செயல்களை நிகழ்த்தவும், சிந்தனை அடிப்படையில் செயல்களை உருவாக்கவும் இப்பகுதி காரணமாகிறது.

**3. தானே செய்தல்**

சூழலுக்குத் தகுந்தவாறு நுட்பமான அறிவைப் பயன்படுத்தி மாறுபட்ட வழியில் அமைந்த செயல்கள் யாவும் இப்பகுதியைச் சேர்ந்தவை.

**4. துல்லியமாகச் செய்தல்**

பொருத்தமான சோதனைகளைக் கையாள்வதில் துல்லியமான கருவிகளை முறையாகக் கையாளுதல் ஆகியவை அடங்கும்.

**5. கலையை உருவாக்கல்**

கலையாக்கலில் தருக்க (அளவியல்) முறைச் சிந்தனை, கணக்கிடும் திறன், மனத்திறன் ஆகியன அடங்கும்.

**6. இயல்பாக்குதல்**

ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அது தானாகவே பழக்கப்பட்டு விடுகிறது. வெற்றி பெறும் திறன், பல்வகைச் செயல்களை ஆளும் திறன், ஒருங்கிணைக்கும் திறன் ஆகிய கூறுகள் இதில் அடங்கும்.

கல்வியின் குறிக்கோள்கள் வெவ்வேறாக உள்ளன. அதுபோலவே கற்பித்தல் நோக்கங்களும் வெவ்வேறு. ஆகவே கற்பித்தலில் பல்வேறு நோக்கங்கள் பற்றிய தெளிவு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்க்கு இன்றியமையாதது.

**2.8 ஒருமைப்பாட்டின் படிநிலைகள்**

ஹெர்பார்ட் கற்பித்தலில் சில படிநிலைகளை உருவாக்கினார். அவர் உருவாக்கிய ஐந்து படிநிலைகளைக் கையாளும் முறையையும் விளக்கியுள்ளார்.

**1. தயாரித்தல் (Preparation)**

புதிய செய்திகளை அறிய மாணவரைத் தயார் செய்வதாகும். மாணவர் முன்னர் அறிந்த செய்திகளுடன் இப்போது கற்பிக்கும் புதிய செய்திகள் இணைக்கப்பட வேண்டும். மாணவர்கள் எவ்வளவு செய்திகளை அறிந்துள்ளனரோ அதைச் சோதித்துக் கற்பிக்க வேண்டிய புதிய செய்திகளை அறிமுகம் செய்தல் வேண்டும்.

**2. செய்திகள் (Presentation)**

புதிய செய்திகளைக் கற்பிக்கும் முன் பாடப்பொருளின் இன்றியமையா நோக்கம்பற்றித் தெளிவாக்க வேண்டும். புதிய செய்திகள் மூலம் புதிய அறிவைக் கற்கின்றனர்.மாணவரது ஆர்வத்தைத் தூண்டுவதோடு சிறு வினாக்கள் அளவையியல் (தருக்கம்) அடிப்படையில் அமைக்கப்படுகின்றன.

**3. தொடர்பு ஏற்படுத்துதல்**

பாடப்பொருளுக்கேற்ற சில எடுத்துக்காட்டுக்கள் கொடுத்து அவை புதிய பாடத்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்று ஆராய்தல் வேண்டும்.

**4. பொதுக் கருத்தை அமைத்தல்**

இதுவரை கற்றறிந்த புதிய செய்திகளைப் பொருத்திப் பார்க்க வேண்டும் அவற்றை வகைப்படுத்தி அறிய வேண்டும் அவ்வாறு அறிந்தபின் விதிகளையும், சமன்பாடுகளையும் அமைக்க வேண்டும். பிரச்சினைக்கு முடிவு காண்பதும் இப்படியில் தான்.

**5. பயன்படுத்துதல்**

கற்று அறிந்த செய்தியைப் புதிய சூழலிலும், பயிற்சியிலும் ஈடுபடுத்தி மாணவர் மனத்தில் பதியச் செய்ய வேண்டும்.

மேலே சொல்லிய ஹெர்பார்ட்டின் ஐந்து படிகளையும் எல்லாப் பாடங்களுக்கும் கையாள வேண்டும் என்ற அவசியமில்லை.சில பாடங்களில் ஏதாவது ஒரு படிநிலையை அதிகமாகக் கையாள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

பாடத்திற்குத் தக்கவாறு இந்த ஐந்து படிகளையும் மாற்றியமைத்துக் கொள்ளலாம். இத்தகைய படிகள் கற்பித்தலைச் செம்மையாக்கும்; கற்றலில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

**2.9 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது; ஆற்றலைப் பெருக்குவது; மனித வளத்திற்கு மாண்பு சேர்ப்பது; சமுதாயத்தை இணைப்பது; சமத்துவத்தை மலர வைப்பது.
- கல்வியால் பெறும் அறிவும், அறிவால் பெறும் அனுபவமும் எதைக் கொள்ள வேண்டும். எதைத் தள்ள வேண்டும் என அறிவிக்கின்றன.
- புதிய கல்விக் கொள்கையின்படி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பொதுவான கலைத்திட்டத்தின் அடிப்படையில் பாடப்பகுதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
- கல்வியின் நோக்கம் ஒற்றுமை என்ற ஆளுமைத் திறனை வளர்ப்பதாகும்.

- வாழ்வில் ஒவ்வொருவரும் சுவைத்து இன்புறக்கூடிய சுவை உணர் ஆற்றலை எளிதில் தருவது தாய்மொழியே.
- தாய்மொழியைத் திறம்படக் கற்பதால் தாய்மொழியில் நல்ல புலமையும், சொல் வளமையும் ஏற்படும். இவ்வடிப்படை பிற பாடங்களைக் கற்க எளிதாய் அமைந்து விடும்.
- ஆசிரியர் பாடப் பொருளைக் கற்பிப்பதற்கு முன்பு எதை எவ்வாறு எப்படிக் கற்பிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு முறையாக எழுதித் தயாரிக்கும் நிரல்தான் பாடத்திட்டமாகும்.
- பாடத்திட்ட அமைப்பு கல்வியின் நோக்கங்களையும், இலக்குகளையும் அடைய கலங்கரை விளக்கம் போன்ற வழிகாட்டியாகும்.
- பாடத்திட்டம் மாணவர்களின் தேவைகளை அடைய உதவ வேண்டும்.குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டதாக அமைய வேண்டும் என்பது பெஞ்சமின் புளூம் கருத்து.
- பாடப்பொருளை ஒழுங்காகவும், வரிசைப்படியும் கற்பிக்க உதவுகிறது; முன்கூட்டியே திட்டமிடப் படுவதால் ஆசிரியருக்கு ஒரு தன்னம்பிக்கையும், பொறுப்புடன் செயல்படும் திறனும் ஏற்படுகின்றன.
- ஓர் அலகு என்பது ஒரு குறிப்பிட்ட பாடக் கருத்தை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாகும்.
- ஹெர்பர்ட் கற்பித்தலில் சில படிநிலைகளை உருவாக்கினார். அவர் உருவாக்கிய ஐந்து படிநிலைகளைக் கையாளும் முறையையும் விளக்கியுள்ளார்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

1. கல்வியின் நோக்கம் அறிவை **வளர்ப்பது;** ஆற்றலைப் **பெருக்குவது!**

2.கல்வியில் **சமவாய்ப்பு** என்பது அரசின் கல்விக் கொள்கை.

3.கல்வி இல்லையேல் **தனிமனிதன்** இல்லை; **குடும்பம்** இல்லை; **சமுதாயம்**

4.புகழெனின் **உயிரும் கொடுப்பர்;** பழியெனின் உலகுடன் பெறினும் இல்லை.

5.மனதில் எண்ணுவதை எண்ணிவாறே எடுத்துரைக்கும் **கொள்ளலர்** வல்லமை **தாய்மொழிக்கே** உண்டு.

**6. அழகுணர்ச்சி என்றால் என்ன?**

எங்கு அழகு மிளிர்கிறதோ அங்கே கவிதை ஊற்றெடுக்கும். அவ்வாறு ஊற்றெடுக்கும்போது கவிஞன் தான் கண்ட காட்சியை, அழகுணர்ச்சியைப் பாடல் மூலம் நன்மையும் காணச் செய்வான். இதற்கு அழகுணர்ச்சி என்று பெயர்.

**7. சமூகக் கடமைகளை மேற்கொள்ள தாய்மொழி எவ்வாறு பயன்படுகிறது?**

தனிமனிதனிடம் இருக்க வேண்டிய சமுதாயப் பண்புகளை, மரபுகளை, மனப்பான்மையை, நட்பு, அன்பு ஒப்புரவறுதல், விருந்தோம்பல் முதலிய பண்புகளைத் தருவது தாய்மொழியே. தாய்மொழி கற்போர் இப்பண்புகளைப் பெற்றுப் பண்பாட்டின் சிகரமாகத் திகழ்வர்.

**8. பாடத்திட்டத்தின் இன்றியமையாமையை விளக்குக.**

பாடத்திட்ட அமைப்பு கல்வியின் நோக்கங்களையும், இலக்குகளையும் அடைய கலங்கரை விளக்கம் போன்ற வழிகாட்டியாரும்.

**9. பாடத்திட்டத்தின் பயன் யாது?**

பாடம் பொருளை ஒழுங்காகவும், வரிசையாகவும் கற்பிக்க உதவுகிறது. திட்டமிடப்படுவதால் ஆசிரியருக்கு ஒரு தன்னம்பிக்கையும் பொறுப்புடன் செயல்படும் திறனும் ஏற்படுகின்றன.

**10. புளூமின் கற்பித்தல் கோட்பாட்டின் நோக்கங்களை எழுது.**

புளூமின் கற்பித்தல் கோட்பாட்டின்படிஇ

1. நோக்கங்கள் பொதுவானவை.
2. நோக்கங்கள் நிறைவேற்ற நீண்டகாலம் தேவை.

3. பாடப்பொருளின் நோக்கமும் கற்பித்தல் நோக்கமும் கற்பித்தல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டவை.

**11. உணர்வுசார்நிலை என்றால் என்ன?**

மாணவர்களிடம் கல்வி வளர்ச்சி, சமுதாயப் பண்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளன.

அவையாவன:
1. ஏற்றுக்கொள்ளுதல்
2. பதில் அளித்தல்
3. மதிப்பளித்தல்
4. ஒழுங்குபடுத்துதல்
5. பண்பாட்டை வளர்த்தல்

**12. தானே செய்தல் என்றால் என்ன?**

சூழலுக்குத் தகுந்தவாறு நுட்பமான அறிவைப் பயன்படுத்தி, மாறுபட்ட வழியில் அமைந்த செயல்கள் யாவும் இப்பகுதியைச் சேர்ந்தவை.

**13. மதிப்பிடுதல் என்றால் என்ன?**

அறிவியல் அடிப்படையில் அறிவின் மதிப்பை அளவிடுதலே மதிப்பிடுதல் ஆகும்.

**பயிற்சி வினாக்கள்**

1. கல்வியின் நோக்கங்கள் யாவை?
2. தாய்மொழிக் கல்வி வாழ்வின் நுகர்வுகளை எவ்வாறு எடுத்துச் சொல்கிறது?
3. ஓன்பதாம் வகுப்பில் மூன்றாம் பருவத்திற்குரிய செய்யுள் பகுதி ஒன்றுக்கு பாடத்திட்டம் தயாரிக்க.
4. பாடத்திட்டத்தின் பயன்களை விவரி.

## 3. தமிழ் கற்பிக்கும் முறைகள்

**பாட அமைப்பு**


3.1 முன்னுரை

3.2 நுண்ணிலைக் கற்பித்தல் - பொருள்

3.2.1 நுண்ணிலைக் கற்பித்தலின் சிறப்புக்கள்

3.2.2 நுண்ணிலைக் கற்பித்தலின் படிநிலைகள்

3.3 நுண்ணிலைக் கற்பித்தல் திறன்கள்

3.4 பல்வகைத் தூண்டல் திறன்

3.4.1 மாதிரிநிகழ்வு

3.4.2 வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்

3.4.3 விளக்குதல் திறன்

3.5 கற்றல் குறிக்கோள்

3.5.1 செய்யுளைத் தொடங்கும் முறை

3.5.2 செய்யுளை இலக்கிய நயம் தோன்றப் படித்தல்

3.5.3 துணைக்கருவி

3.6 உரைநடை பயிற்றலின் நோக்கங்கள்

3.7 உரைநடைப் பாடம் கற்பிக்கும் முறைகள்

3.8 இணைத்துக் கற்பித்தல்

3.8.1 துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல்

3.8.2 கரும்பலகைப் பயன்பாடு

3.9 இலக்கணப் பாடம் கற்பித்தல்

3.9.1 இலக்கணத்தைப் பயிற்றும் முறை

3.10 விதிவருமுறை

3.10.1 விதிவிளக்குமுறை

3.10.2 துணைக்கருவிகள் தயாரித்தலும் பயன்படுத்துதலும்

3.10.3 துணைக்கருவிகளைத் தயாரித்தல்

3.10.4 துணைக்கருவிகளின் பயன்கள்

3.10.5 செயல்திட்டமுறை

3.11 திட்டமிடுதல்

3.12 மதிப்பிடுதல்

3.12.1 மொழிப்பாடம் கற்பிப்பதில் செயல்திட்ட முறை

3.13 நடிப்புமுறை கற்பித்தல்

3.14 மேற்பார்வைப் படிப்பை நடைமுறைப்படுத்தும் முறை

3.15 பாடநூலின் அமைப்பு

3.16 நல்ல பாடநூலில் இருக்க வேண்டிய பண்புகள்

3.17 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

## 3.1 முன்னுரை

**ஆ**சிரியா் பயிற்சியில் கற்பித்தல் முக்கிய இடம் பெறுகிறது. கற்பித்தலில் பண்டைக் காலம் முதல் இன்றுவரை பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

தற்காலத்தில் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை விரிவுரை முறையே பின்பற்றப்படுகிறது. அம்முறையிலும் சில குறைபாடுகளைக் கல்வியியல் அறிஞா்கள் கண்டனா். நுண்ணிலைக் கற்பித்தல் என்ற புதிய உத்தி கையாளப்பட்டது. இது வகுப்பறைப் பயிற்சிக்கும் இணைப்புப் பயிற்சிக்கும் இடையில் நின்று இரண்டையும் இணைக்கிறது.

நுண்ணிலைக் கற்பித்தல் ஒரு பயிற்சி முறையே அன்றி, அதுவே ஒரு கற்பித்தல் முறை ஆகாது. இது கல்வியியல் பயிற்சி பயிலும் மாணவா்களுக்கு அளிக்கப்படும் வகுப்பறைத் திறன் வளா் பயிற்சியாகும். இதில் ஒவ்வொரு திறனாகப் பயிற்சி அளிக்கப்படுவதால் மாணவா்கள் கற்பித்தலில் நல்ல பயிற்சி பெறுவா், பயிற்சி தரமுடையதாக மாறும்.

### 3.2 நுண்ணிலைக் கற்பித்தல் - பொருள்

ஆசிரியா் பயிற்சி மாணவா் கற்பித்தலில் உள்ள பாடத்திறன்களில் ஒவ்வொரு திறனிலும் ஒன்றன்பின் ஒன்றாகப் பயிற்சி பெறுவதே நுண்ணிலைக் கற்பித்தல் திறனாகும். இது ஒரு பயிற்சி நுட்பமாகும்.

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி மூலம் பயிற்சி ஆசிரியா் கற்பித்தலில் உள்ள அனைத்துத் திறன்களிலும் தோ்ச்சி பெற்று விளங்குவா்.

இந்தக் கற்பித்தல் பயிற்சி முறை பணிமுன் பயிற்சியாகும். சிலநேரங்களில் பணியிடைப் பயிற்சியாக அளிக்கப்படுகிறது.

**வரைமுறை**

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியில் ஆசிரியா் ஒவ்வொருவரும் தனித்தனித் திறனில் பயிற்சி பெறுகின்றனா். திறன் என்பது ஆசிரியரின் செயல்பாடுகள். இதைப் பயன்படுத்துவதன் நோக்கம் கற்றல் திறனில் மேம்பாடு அடையச் செய்வதாகும்.

கற்பித்தலின் போது உடன் பயில்வோரே மாணவராக அமா்ந்திருப்பா். ஒவ்வொரு திறனிலும் 5-7 நிமிடங்கள் (மணித்துளி) பயிற்சி பெறுதல் வேண்டும். பயிற்சி மாணவா்களோ 5-10 மாணவராக

அமர்ந்திருப்பர். உடன் பயிலும் மாணவர் ஒருவர் உற்று நோக்குபவராக இருப்பார். இதைப் பேராசிரியர் ஒருவர் மேற்பார்வை செய்வார்.

**3.2.1 நுண்ணிலைக் கற்பித்தலின் சிறப்புக்கள்**

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியின்போது ஒரே திறனில் மட்டும் பயிற்சி ஆசிரியர் பயிற்சி பெறுவர். ஒரு திறனில் பயிற்சி பெறும்போது அதில் உள்ள அனைத்துக் கூறுகளையும் பயன்படுத்த முடிகிறது. இப்படித் தனியாகப் பயிற்சி பெறுவதால் வகுப்பறையில் எந்த இடத்தில் எந்தத் திறனைப் பயன்படுத்தலாம் எனப் பயிற்சி மாணவர் அறிவர்.

பயிற்சி ஆசிரியர்கள் சிறுகக் கற்பித்தலில் பயிற்சி பெறுவதால் வகுப்பறைக் கற்பித்தலைச் சந்திப்பதற்கான மனத் துணிவைப் பெறுவர்.

விரிவாகக் கற்பித்தலின் போது ஏற்படும் தன்னம்பிக்கை இல்லாத கற்பித்தலின் போது அனைத்துத் திறன்களையும் ஏற்ற இடங்களில் பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. பயிற்சி ஆசிரியர் மாணவர்களைக் கட்டுப்படுத்தவும்,வகுப்பறையில் உருவாகும் இடர்ப்பாடுகளைச் சமாளிக்கவுமான திறனை அளிக்கிறது.

ஐந்து நிமிடக் கற்பித்தல் நாற்பத்தைந்து நிமிடக் கற்பித்தலுக்கு அடிப்படையாக அமைகிறது. செயல் விளைவு கூறுவதன் மூலம் பயிற்சி மாணவன் தன் குறைகளைத் திருத்திக் கொள்ளப் பயன்படுகிறது.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் தொடர்பு வலுப்படப் பயன்படுகிறது.

கற்பித்தல் நோக்கங்கள் நுண்ணிலைக் கற்பித்தலின் விளைவுகளில் காண முடிகிறது.

ஆசிரிய மாணவர்கள் கற்பித்தலில் உன்னிப்பாகக் கவனம் செலுத்த ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

**3.2.2 நுண்ணிலைக் கற்பித்தலின் படிநிலைகள்**

நுண்ணிலைக் கற்பித்தலில் பயிற்சி மாணவர்கள் ஓரளவு பயிற்சி பெறுவதால் கற்பித்தலில் வெற்றி பெறமுடியும்.

பயமின்மை, தன்னம்பிக்கை, சோர்வின்மை ஆகிய பண்புகள் பயிற்சி ஆசிரியரிடம் வளருகின்றன.

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு திறன் கொடுக்கப்படுகிறது. குழுவில் இடம் பெற்ற அனைவரும் அத்திறனை நன்கு பயன்படுத்த வேண்டும். ஒரு திறனில் பயிற்சி பெற்றபின் அடுத்த திறனுக்குச் செல்வர்.

**நுண்ணிலைக் கற்பித்தலில் உள்ள படிநிலைகள் வருமாறு**

**பாடக்குறிப்பு**

குறிப்பிட்ட திறன் பற்றிய தெளிவான விளக்கம், உட்கூறுகளின் தன்மை ஆகியவற்றை மனதில் கொண்டு பாடத்திட்டம் தயாரிக்கப்படுகிறது.

குறுகிய காலத்திற்குள் கற்பித்தல் பயிற்சி முடிவதாக அமைய வேண்டும்.

பாடத்திட்டத்தில் உட்திறன்களை அடைப்புக் குறியில் குறித்து வைத்திருக்க வேண்டும்.

**வகுப்பறை**

நுண்ணிலைக் கற்பித்தலுக்காகத் தனி வகுப்பறை இருக்க வேண்டும் கற்பித்தல் திறனைப் பயன்படுத்துவதற்கேற்ப அவ்வகுப்பறை அமைந்திருக்க வேண்டும்.

கற்பித்தல் பயிற்சியின்போது உடன் பயிலும் மாணவர் கற்பிக்கும் பயிற்சியாளர், பேராசிரியர் ஆகியோர் இருப்பர்.

**மாணவர்கள்**

பயிற்சியின் போது உடன் பயிலும் பயிற்சி ஆசிரியர்களையே மாணவர்களாகக் கொள்ளலாம். அதில் ஒருவரை உற்று நோக்குபவராக உட்காரச் செய்யலாம். இதில் மாணவராகச் செயல்படுவோர் தங்கள் அறிவுநிலை, முதிர்ச்சிநிலை கொண்டு செயல்படக் கூடாது.

**உற்றுநோக்குபவர்**

உடன் பயிலும் பயிற்சி மாணவரே உற்று நோக்குபவராக இருப்பர். அவர்களிடம் குறிப்பிட்ட திறனுக்கேற்ற அட்டவணைகள் இருக்கும். உற்று நோக்குவோர்; பயிற்சியாளர் கற்பிக்கும்போது பயன்படுத்தும் பயிற்சித் திறனின் உட்கூறுகளைக் குறியீடுகள் மூலம் குறிக்க வேண்டும்.

**மதிப்பிடலும் குறியீடுகளும்**

மதிப்பிடும் அட்டவணையில் கற்பிப்பவர், உற்றுநோக்குபவர் நிகழ்வுத் திறன், திறனில் உள்ள உட்கூறுகள் அதிகமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பயிற்சி ஆசிரியர்கள் ஒலி, ஒளி நாடாக்களில் கற்பித்தல் பயிற்சியைப் பதிவு செய்வதால் கற்பித்தலில் உள்ள குறைகளைப் பயிற்சி மாணவரும், விரிவுரையாளரும் அறிந்து கொள்ள முடியும்.

**செயல் விளைவு கூறல்**

பயிற்சி முடிந்தவுடன் பயிற்சி ஆசிரியரும், உற்றுநோக்குபவரும் கலந்துரையாடுவதால், எந்த உட்கூறுகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன, தவிர்க்க வேண்டிய செயல்கள் பற்றி அறிவர்.

கற்பித்தல் பயிற்சியை ஒலி, ஒளி நாடாக்களில் பதிவு செய்யலாம். இது பாடக்குறிப்பில் மாற்றம் செய்யப் பயன்படும்.

திருத்தப்பட்ட பாடத் திட்டத்தைக் கொண்டு பயிற்சி ஆசிரியர் முன்பு கற்பித்த அதே ஐந்து மாணவருக்கோ, வேறு ஐந்து மாணவருக்கோ கற்பிக்கலாம். இப்போது முன்பு செய்த தவறுகள் தவிர்க்கப்படும்.

**மீளக் கற்பித்தலின் விளைவுகள்**

மீளக் கற்பித்தல் நிறைவடைந்த பின் பயிற்சி மாணவரும், உற்றுநோக்குபவரும் கலந்துரையாட வேண்டும். பயிற்சி ஆசிரியரிடம் உள்ள குறையைத் திருத்தி அமைக்க இது பயன்படும்.

**3.3 நுண்ணிலைக் கற்பித்தல் திறன்கள்**

கற்பித்தல் பல திறன்களைக் கொண்டது; வகுப்பறையில் கற்பிக்கும்போது ஆசிரியர்கள் சொல்லாற்றலால் பல திறன்களை வெளிப்படுத்த வேண்டும்.

கற்பித்தல் திறனின் உட்கூறுகளைக் கையாளும்போது கற்றல் அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அதிகமாகிறது.

நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களாக அமெரிக்கப் பேராசிரியர்களான ஆலன்-ரையான் ஆகிய இருவரும் பதினான்கு திறன்களைக் கூறியுள்ளனர்.

பரோடாவைச் சேர்ந்த பேராசிரியர் பாசி பதின்மூன்று திறன்களைக் கூறியுள்ளார். பரோடா பல்கலைக்கழகமானது இருபத்தொன்று திறன்களைக் கூறி விளக்கமும் அளித்துள்ளது.

**பேராசிரியர்கள் ஆலன்-ரையான் குறிப்பிடும் திறன்கள்**

1. பல்வகைத் தூண்டலை வெளிப்படுத்தும் திறன்
2. பாடம் தொடங்குதல் திறன்
3. பாடத்தை முடித்தல் திறன்
4. வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்
5. மாணவர் பங்கேற்பை வெளிப்படுத்தும் திறன்
6. வினாக் கேட்டலைத் தொய்வின்றித் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் திறன்
7. கிளர் விளாத்திறன்
8. உயர்நிலை வினாத் திறன்
9. விரிசிந்தனையைத் தூண்டும் வினாத் திறன்
10. கவனித்தல் விளைவுகளை அறிதல் திறன்
11. எளிய எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தும் திறன்

12. சொற்பொழிவுத் திறன்
13. திட்டமிட்டு மீண்டும் சொல்லும் திறன்
14. செய்திகள் இணைப்பு நிறைவுபெறும் திறன்

**பேராசிரியர் பாசி குறிப்பிடும் திறன்கள்**

1. கற்பித்தல் நோக்கங்களைக் கூறும் திறன்
2. பாடப் பொருளைத் தொடங்கும் திறன்
3. வினாக் கேட்டலில் தொய்வின்றித் தொடரும் திறன்
4. கிளர் வினாத் திறன்
5. பாடப் பொருளை விளக்கும் திறன்
6. ஏற்ற எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கும் திறன்
7. பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்
8. மொழிச் சார்பற்ற குறிகளைப் பயன்படுத்தும் திறன்
9. வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்
10. மாணவர் பங்கேற்க அதிக வாய்ப்பளிக்கும் திறன்
11. கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்
12. கவனிக்கும் ஆற்றலை அறியும் திறன்
13. பாடத்தை முடிக்கும் திறன்

வகுப்பறையில் பாடம் கற்பிக்கும்போது ஆசிரியரின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துக் கற்பித்தலின் ஒவ்வொரு திறனாக வகைப்படுத்தினர்.

எடுத்துக்காட்டாகப் பாடத்திட்டத்தினைத் தயாரிக்கும் திறன், வகுப்பில் ஆர்வமூட்டும் வகையில் பாடம் தொடங்கும் திறன், விளக்கும் திறன், வினா எழுப்பும் திறன், மாணவர்களின் கவனம் சிதையாமல் இருப்பதற்கு ஆசிரியர் பயன்படுத்தும் பல்வகைத் தூண்டல் திறன், வகுப்பறையைப் பயன்படுத்தும் திறன், கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன், பாடப்பொருளின் கருத்துக்கு ‘வலுவூட்டும் திறன்’, கருத்துக்களில் தெளிவு ஏற்பட ‘துணைக் கருவிகளைப் பயன்படுத்தும் திறன்’, பாடத்தின் நிறைவாக ‘முடிக்கும் திறன்’ எனக் கற்பித்தல் நிகழ்வைப் பல்வேறு திறன்களாகப் பகுத்துக் கூறினர்.

இவ்வாறு வரையறை செய்யப்பட்ட திறன்கள் ஒவ்வொன்றிலும் பயிற்சியை மிகக் குறைந்த காலஅளவில் (5 மணித்துளி) அளிக்கலாம்.

பயிற்சியாளர் ஒவ்வொரு திறனையும் பயன்படுத்தும்போது அதில் அடங்கியுள்ள உட்கூறுகளைத் திறம்படப் பயன்படுத்துவதைக் காணலாம். பயிற்சி அடிப்படையில் அத்திறனுக்குப் பின்னூட்டம் கொடுத்து அத்திறன் மேம்பட வழி வகுக்கலாம்.

இவ்வாறு எல்லாத் திறன்களிலும் பயிற்சி அளித்தபின் அவற்றை இணைத்து ஒரு பாடம் கற்பிக்கும்போது கற்பித்தல் சிறந்த பயன் அளிக்கிறது.

இவ்வாறு கல்வியியல் நிறுவனங்களில் பயிற்சி கொடுத்துப் பயிற்சி மாணவர்களைப் பள்ளிக்கு அனுப்பும்போது அவர்களுக்குக் கற்பிக்கும் திறனும், மன உறுதியும் ஏற்படுகின்றன.

இது ஆய்வின் மூலமும், அனுபவத்தின் மூலமும் பெறப்பட்ட உண்மை. ஆகவே பயிற்சி மாணவரின் பயிற்சித் திட்டத்தில் இப்பயிற்சி நுட்பம் அண்மைக் காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கிறார்; மாணவர் கற்கின்றனர். ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவர் கவனிக்காமல் இருக்கலாம். அல்லது பாடம் புரியாமல் இருக்கலாம். ஆசிரியர் கற்பித்த முறை தவறானதாக இருக்கலாம். இவ்வாறு பல்வேறு காரணங்களால் கற்பித்தலில் தொய்வு ஏற்படலாம். மாணவர்கள் பாடப்பொருளை நன்கு அறிய வேண்டுமாயின் கற்பிக்கும் முறை சிறந்ததாக அமைய வேண்டும்.

பள்ளியில் பாடப் பொருளானது மொழிப் பாடங்கள், அறிவியல் சார்ந்த பாடங்கள் என இருவகைப்படும். உயர்நிலைப் பள்ளி வரை இப்பாடங்கள் ஐந்து, மேல்நிலை வகுப்பில் மாணவரின் திறன்களுக்கேற்ப தொழில் சார்ந்த பாடப்பிரிவுகள் சேரும். அங்கும் பாடங்கள் என்று பார்க்கும் போது ஐந்து தான். இவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் தம் தனித்திறனை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் கற்பித்தல் சிறந்ததாக அமையும். பாடப்பொருள் சுவை மிகுந்ததாகவும், சுவை குறைந்தும் காணப்படுவதற்கு அவரவரின் தனித் தன்மையே காரணம்.

**கற்பித்தல் பலதிறன்களைக் கொண்டது**

கலை அறுபத்து நான்கு என்பார் கம்பர். அறுபத்து நான்கு கலைகளில் கற்பித்தலும் ஒரு கலையே. கற்பித்தலில் சிலர் பாடத்தைச் சுவையாகத் தொடங்குவர். சிலர் பாடப்பொருளை விளக்குவதில் வல்லவராகத் திகழ்கின்றனர். வேறுசிலர் எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு பாடப்பொருளைப் புரிய வைப்பதில் வல்லவராகத் திகழ்கின்றார். சிலரோ வினாக் கேட்பதில் திறன் பெற்று விளங்குகின்றனர். சிலர் பாடத்தை முடிப்பதில் வல்லவராகத் திகழ்கின்றனர். கற்பிக்கும் ஆசிரியர் எல்லாத் திறன்களையும் பெற்ற வல்லுநராகத் திகழ வேண்டும். அதற்கான பயிற்சிதான் நுண்ணிலைக் கற்பித்தல்.

ஆசிரியர்களின் கற்பித்தலை உற்று நோக்கியபோது கற்பித்தல்; திறன்களின் தொகுதி என்பதை அறிஞர்கள் அறிந்து கொண்டனர்.

இத்திறன்கள் அனைத்திலும் ஒரு சேரப் பயிற்சி அளிக்காமல் ஒவ்வொரு திறனாகப் பயிற்சி அளிக்கலாம். இறுதியில் ஒட்டுமொத்தத் திறன்களிலும் பயிற்சி அளித்துக் கற்பித்தலைத் திறம்படச் செய்யலாம்.

குழந்தைகள் எழுத்துக் கூட்டிப் படிப்பதை இதனோடு ஒப்பிடலாம். தொடக்கத்தில் குழந்தைகள் சொற்களைப் படம் பார்த்துக் கற்பர். பின்னர் அச்சொற்களை ஒவ்வொரு எழுத்தாகக் கூட்டிச் சொல்லாக்குவர். இவ்வாறு சொற்பயிற்சியும், வாக்கியப் பயிற்சியும் பெற்றுப் படித்தல் திறனில் செம்மை பெறுவர்.

அதுபோன்ற ஒன்றே நுண்ணிலைக் கற்பித்தல். அத்திறன் வகுப்பறைக் கற்பித்தலைத் திறன் கற்பித்தலாக மாற்றுகிறது.

ஒரு வகுப்பில் நாற்பது மாணவர் இருப்பர். அவர்களுக்கு நாற்பத்தைந்து நிமிடங்கள் கற்பிக்க வேண்டும். சிலர் தொய்வின்றித் தொடர்ந்து கற்பிப்பர் சிலர் தடுமாறுவர் சிலர் பாதியிலேயே நிறுத்தி விடுவர். இத்தகைய தடுமாற்றங்களை நீக்கி நுண்ணிலைக் கற்பித்தலில் பயிற்சி பெற்று வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட்டுக் கற்பித்தலைச் செம்மையுறச் செய்ய வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-7**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. நுண்ணிலைக் கற்பித்தல் என்றால் என்ன?
........................................................................................................................................
........................................................................................................................

2. நுண்ணிலைக் கற்பித்தலின் படிநிலைகள் யாவை?
........................................................................................................................................
.....................................................................................................................................

3. நுண்ணிலைக் கற்பித்தல் முறை எவ்வாறு அமைய வேண்டும்?
........................................................................................................................................
...............................................................................................................................

**படிநிலைகள் சுழற்சி**

நுண்ணிலைக் கற்பித்தல் ஒரு பயிற்சிமுறை. ஆசிரியர் கல்வி பெறும்போது பயிற்சி ஆசிரியர்கள் ஒவ்வொரு திறனிலும் ஆற்றல் பெற முறையாகத் திட்டமிட்டுப் பயிற்சியளிக்க வேண்டும்.

இவ்வாறு திறன்களில் பயிற்சி அளிப்பதற்குச் சில படிநிலைகளைப் பின்பற்றுகிறோம். அவற்றை 'நுண்ணிலைக் கற்பித்தல் சுழல் படிகள்' என்பர்.

கற்பித்தல் சுழல்படிகள் கீழ் உள்ளவாறு அமையும்.

**நுண்ணிலைக் கற்பித்தல் சுழல்:**


1. திறனறிதல்

↓

2. நிகழ்வு தயாரித்தல்

↓

3. கற்பிப்புப் பழகுதல் (மீண்டும்)




1. **திறன் அறிதல்**

ஒரு திறனில் பயிற்சி பெறத் தொடங்கும் முன் பயிற்சி பெறும் ஆசிரியர் அத்திறன் பற்றிய முழுமையான விவரங்களை அறிய வேண்டும். குறிப்பிட்ட திறன் ஏன் தனியாகப் பிரிக்கப்பட்டது, அதன் உட்கூறுகள் யாவை, உட்கூறுகள் எவ்வாறு அமைகின்றன, குறிப்பிட்ட உட்கூறைச் செயல்படுத்த என்ன செய்ய வேண்டும்? என்பவற்றை எல்லாம் அறிய வேண்டும்.

2. **நிகழ்வு தயாரித்தல்**

ஒரு திறனைத் தேர்ந்தெடுத்த பின்னர் அதற்குரிய குறிப்பைப் பயிற்சியாக எழுத வேண்டும். அக்குறிப்பினை நிகழ்வு என்று கூறுவர்.

நுண்ணிலைக் கற்பித்தலில் திறன்களைக் கையாளும் பயிற்சி நடைபெறுகிறது; பாடப் பகுதியைக் கற்பிக்கவில்லை.

திறனின் உட்கூறுகளைக் கையாள்வதற்குப் பாடப்பகுதி ஒரு கருவியாக அமைகிறது.

நிகழ்வுக்குரிய பகுதி பள்ளியில் கற்பிக்கப்படும் பாடத்தின் ஒரு சிறு பகுதியாக அமையலாம்.

காகமும், நரியும் சிங்கமும் சுண்டெலியும் போன்ற கதைகள் கூட அமைவதற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

கரும்பலகையைப் பயன்படுத்துதல், வலுவூட்டிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் ஆசிரியரின் பங்கு அதிகம்.

பிற திறன்களில் மாணவர் பங்கு சிறப்பாக அமைகிறது. எனவே நிகழ்வைத் தயாரிக்கும்போது,

ஆசிரியர்...............................

மாணவர்...............................

ஆசிரியர்..............................

மாணவர்..............................

என உரையாடல் முறையில் எழுத வேண்டும்.

நிகழ்வை எழுதும்போது திறனின் உட்கூறுகள் பற்றிய கருத்துகளின் அடிப்படையில், பாடப்பகுதியை மையமாகக் கொண்டு எழுத வேண்டும்.

பாட வளர்ச்சியைத் திறன் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

**உட்கூறுகளைக் குறித்தல்**

நிகழ்வைத் தெளிவாக எழுதி முடித்த பின்னர், உட்கூறுகள் எங்கே அமைந்துள்ளன எனக் குறிப்பிட வேண்டும். ஏற்ற இடங்களில் உட்கூறுகளைச் சுருக்க எழுத்துக்களால் குறிப்பிடுவது நன்று.

எடுத்துக்காட்டாகத் தொடங்கு தொடர் என்பதைத் 'தொ.தொ' எனக் குறிப்பிட வேண்டும். பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறனில் குரல் ஏற்றத் தாழ்வைக் 'கு.ஏ.தா.' எனக் குறிக்க வேண்டும்.

ஒரு திறனுக்கு 5 நிமிடங்களைப் பயிற்சிக்கு எடுத்துக் கொள்வதால் மூன்று அல்லது மூன்றரைப் பக்க அளவில் நிகழ்வு தயாரித்தல் நன்று. தேர்ந்தெடுத்துள்ள பகுதி பயிற்சியாளரின் அதிர்வு எல்லைக்குட்பட்டதாக அமைய வேண்டும்.

**3. கற்பிப்புப் பழகுதல்**

நிகழ்வைத் தயாரித்தபின், 5 நிமிடங்கள் கற்பிக்க வேண்டும். கற்பித்தலில் திறனும், அதன் உட்கூறுகளும் அமைய வேண்டும்.

இத்திறனில் கற்றலைவிட, கற்பித்தலே முதலிடம் பெறுகிறது. கற்பிக்கும்போது இருவர் அல்லது மூவர் நோக்கர்களாக அமைதல் மூவர் அல்லது நால்வர் மாணவராகவும் இருத்தல் நன்று.

**4. கணித்தல்**

ஒவ்வொரு திறனுக்கும் அதன் உட்கூறுகள் அடங்கிய படிவம் இருக்கும்.

நோக்கர்கள் நான்கு முதல் ஐந்து நிமிடம் வரை உற்று நோக்குவர்.

திறனைப் பழகுபவரை உற்றுநோக்கி அதன் கூறுகள் வெளிப்படுவதைக் கணிப்புப் படிவத்தில் குறிக்க வேண்டும்.

**5. செயல்விளைவு கூறுதல் அல்லது பின்னூட்டம் பெறுதல்**

கற்பித்த பாடம் எப்படி இருந்தது? என்று கூறுவது செயல் விளைவு கூறுதலாகும். இதனைப் 'பின்னூட்டம் பெறுதல்' என்பர்.

திறன் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது, என்னென்ன உட்கூறுகள் சிறப்பாக அமைந்தன என எடுத்துச் சொல்ல வேண்டும். இச்செயல் விளைவு கூறுதலே நுண்ணிலைப் பயிற்சியின் உயிர் நிலையாகும்.

மேல்நாடுகளில் ஒலி, ஒளிப் பதிவு நாடாக்கள் மூலம் 5 நிமிடம் கற்பிப்பதை ஒளி - ஒலிப் படம் எடுத்துப் பாடம் முடிந்ததும் போட்டுக் காட்டுவர்.

தான் செய்த செய்முறைப் பிழைகளையும், ஒலிப்புப் பிழைகளையும் தானே அறிய முடியும்.

பிழை செய்த இடத்தில் அந்தப் பாடத்தை நிறுத்தி ஆசிரியர் சுட்டிக்காட்டவும் முடியும்.

நோக்கர்கள் விருப்பு வெறுப்பின்றிப் பாடநிலையை உள்ளவாறே உணர்த்த வேண்டும். கற்பித்தலின் போது திறன் தோன்றிய இடங்களைக் குறியீடுகளின் மூலமும், சிறப்புக் குறிப்புகள் மூலமும் குறிப்பர்.

குறிப்பின்படி நோக்கர் கற்பித்தவருக்குக் கருத்து வழங்குவர்.

**6. செம்மைப்படுத்துதல்**

நோக்கர்கள் அட்டவணையைப் பார்த்தும், தாம் எழுதிவைத்த குறிப்புகளைக் கொண்டும் கருத்து வழங்குவர். இந்தக் கருத்தின் அடிப்படையில் மீண்டும் அதே நிகழ்வை ஆசிரியர் குறிப்பிட்ட திறனை அதனுடன் இணைத்துப் பாடத்திட்டத்தைச் செம்மைப்படுத்துவர். இது நுண்ணிலைப் பயிற்சியில் மிக முக்கியமானது.

**7. மீண்டும் கற்பித்தல் (Re-teach)**

குறிப்பிட்ட திறனில் திறமை பெறும்வரை மீண்டும் மீண்டும் கற்பித்தல் வேண்டும். இரண்டு அல்லது மூன்று முறை கற்பித்தல் நலம். நோக்கர் இருப்பர், செயல் விளைவு கூறுவர்.

இந்த முறையும் கற்பித்த திறனை உற்றுநோக்கி அறிகிறார்கள். இந்த முறை கற்பித்தலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா? மேலும் என்ன குறைகள் உள்ளன என்று கற்பித்தவருக்கு மீண்டும் பயனறிவு கொடுக்கப்படுகிறது.

திட்டமிடுதல் (planning), கற்பித்தல் கற்பித்த பயனறிவு (Feedback), மாற்றம் செய்து மீண்டும் திட்டமிடல் (Replan), மீண்டும் கற்பித்தல் (Reteach), மீண்டும் கற்பித்த பலனறிவு (Reteach back) என்ற செயல்கள் ஒரு நுண்ணிலைக் கற்பித்தல் சுழற்சியில் (micro teach in cycle) அடங்கும். ஒரு சுழற்சியில் ஏதும் வளர்ச்சி இல்லாவிடில் மீண்டும் ஒரு சுழற்சியில் பயிற்சியாளரை ஈடுபடுத்தலாம்.

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியில், பயிற்சியாளருக்குக் கொடுக்கப்படும் கற்பித்தல் செயல் விளைவு அறிவைப் பொருத்தே இத்திட்டத்தில் வெற்றி கிடைக்கும்.

**திறன்:1.** பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்.

**திறன்:2.** விளக்குதல்.

**திறன்:3.** எடுத்துக்காட்டுகளுடன் விளக்கும் திறன்.

### 3.4 பல்வகைத் தூண்டல் திறன்

ஒரு நிகழ்வில் மாணவர்கள் 10 வினாடிகளுக்கு மேல் கவனத்தை ஒரு முகப்படுத்துவதில்லை. மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான செயல்களை ஆசிரியர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

கவனத்தை ஈர்ப்பதற்கான ஆசிரியரின் செயல் தொகுதிகளைக் கையாளுதல், பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன் ஆகும்.

திட்டமிட்டுப் பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்துவது இத்திறனின் குறிக்கோளாகும்.

இத்திறனின் உட்கூறுகளாக ஆசிரியர் இடமாற்றம், மெய்ப்பாடுகள், குரல் ஏற்றத்தாழ்வு, கவனம் ஈர்த்தல், இடைவினை மாற்றம், நிறுத்தம், புலன் மாற்றம் என்பவற்றைக் கூறலாம்.

இந்த உட்கூறுகளை ஏற்ற முறையில் பயன்படுத்தினால் ஆசிரியர் இத்திறனில் திறமை பெற்றவராகலாம்.

1. **ஆசிரியர் இடமாற்றம்**

ஆசிரியர் ஒரே இடத்தில் நின்று கற்பிக்காமல் நகர்தல் வேண்டும். கரும்பலகையில் எழுதுதல், மாணவர்கள் அருகே சென்று பாராட்டல், நாட்டுப் படத்தில் ஓர் இடத்தைக் காட்டுதல், ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்லுதல் போன்ற செயல்கள் இட மாற்றம் எனப்படும்.

ஒவ்வொரு நிலையிலும் தேவையான காலத்திற்கு மிகைப்படாமல் இடத்தை மாற்றுதல் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் கற்றலுக்குத் துணைபுரியும்.

2. **மெய்ப்பாடுகள்**

பாடப்பொருளின் தன்மைக்கேற்ப உணர்வுகளை ஆசிரியர் வெளிப்படுத்துவதும், சைகைகளைப் பயன்படுத்துவதும் உண்டு. இவற்றையே மெய்ப்பாடு என்பர்.

குறுகலானது, அகன்றது, உருண்டையானது, நீளமானது என்னும் தொடர்களைச் சொல்லும்போது ஆசிரியர் சைகைகளைக் காட்டுவதும், உணர்வுகளை வெளியிடும்போது முகம் சுளித்தல், முகமலர்ச்சி ஆகியவற்றை முகக் குறிப்பினால் காட்டுவதும் மெய்ப்பாடுகளாம்.

சொற்களோடு, மெய்ப்பாடுகளும் இணையும் போது கவன ஈர்ப்பையும், கவன நிலைப்பையும் அதிகரிக்கச் செய்கிறது.

3. **குரல் ஏற்றத்தாழ்வு**

கவனத்தை ஈர்க்க ஆசிரியரின் குரலில் படிக்கும்போதும், இரக்க உணர்ச்சியற்றுக் கூறும்போதும், கோபத்தை உணர்த்தும் சொற்களைக் கூறும்போதும் குரலில் ஏற்றத்தாழ்வு ஏற்பட வேண்டும். குரல் ஏற்றத் தாழ்வால் கற்றல் மிக அதிக அளவில் நடைபெறும்.

**4. கவனம் ஈர்த்தல்**

சொற்களுக்கு அழுத்தம் கொடுத்துக் கரும்பலகையில் எழுதியவற்றுள் சிலவற்றை அடிக்கோடிட்டுக் காட்டியும், வண்ணங்களால் எழுதிக் காட்டியும் மாணவர் கவனத்தை ஈர்க்கலாம்.

வரைபடம், படம் ஆகியவற்றில் சுட்டிக்காட்டுதலும் கவனத்தை ஈர்க்கும் செயலாம்.

**5. இடைவினை மாற்றம்**

கற்பித்தலின் போது இடையே மாணவரிடம் வினாக் கேட்டுப் பதில் கூறச் செய்யலாம். மாணவர்களைக் கரும்பலகையில் எழுதச் செய்யலாம்; வினா கேட்கச் செய்யலாம்; இதன் மூலம் மாணவர்களைச் செயல்பட வைக்கலாம்; இதுவே இடைவினை மாற்றமாகும்.

**6. நிறுத்தம்**

ஆசிரியர் விளக்கம் தரும்போதோ, நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போதோ, வினாக் கேட்கும்போதோ, தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போதோ திட்டமிட்டுப் பேச்சு நிறுத்தம் செய்வது கவனத்தை ஒருமுகப் படுத்துவதோடு, சிந்தனையையும் தூண்டும்.

**7. புலன் மாற்றம்**

வகுப்பில் ஆசிரியர் பேசும்பொழுது மாணவர்கள் கேட்கின்றனர் மாணவர்களின் செவி பயன்படுகிறது.

கரும்பலகையில் எழுதும் போதும், படங்களைக் காட்டும் போதும், பொருள்களைக் காட்டும் போதும் அவற்றைப் பார்க்கின்றனர். அப்பொழுது கட்புலன் பயன்படுகிறது.

இவ்வாறு செவிப்புலனும் கட்புலனும் செயல்பட வாய்ப்பளிப்பதே ‘புலன்மாற்றம்’ எனப்படும்.

**3.4.1 மாதிரிநிகழ்வு (பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்)**

| | |
|---|---|
| பயிற்சியாளர் பெயர்: | நாள்: |
| உட்கூறுகள் | சுருக்க எழுத்துக்கள் |
| 1. ஆசிரியர் இடமாற்றம் | இ.மா |
| 2. மெய்ப்பாடுகள் | மெ |
| 3. குரலில் ஏற்றத்தாழ்வு | கு.ஏ.தா |
| 4. கவனம் ஈர்த்தல் | க.ஈ |
| 5. இடைவினை மாற்றம் அல்லது வினை மாற்றம் | வி.மா |
| 6. நிறுத்தம் | நி |
| 7. புலன் மாற்றம் | பு.மா |

**பாடப்பகுதி - காக்கையும் நரியும்**

ஆசிரியர்: குழந்தைகளே! நான் இன்று உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன். ‘காக்கையும் நரியும்’ கரும்பலகையில் எழுதுகிறார். (இ.மா)

ஓர் ஊரில் ஒரு பாட்டி வடை சுட்டு விற்று வந்தாள். அவள் மிகவும் வயதான பாட்டி.

வடை சுட்டுச் சுட்டு தட்டு நிறைய வைத்தாள். (மெ.)

ஆசிரியர்: பாட்டி என்ன சுட்டு விற்றாள்?

மாணவர்: பாட்டி வடை சுட்டு விற்றாள்.

ஆசிரியர்: கரும்பலகையில் விடை எழுதுதல் (இ.மா, பு.மா)

மாணவன் சென்று எழுதுதல் (வி.மா)

ஆசிரியர்: அப்போ, அங்கு ஒரு காக்கை வந்தது (கு.ஏ.தா)

ஒரு வடையைத் திடீர் என எடுத்துக் கொண்டு பறந்து போயிற்று.

வடையை எது எடுத்துக் கொண்டு போயிற்று? (வி.மா)

மாணவர்: ஒரு காக்கை எடுத்துக் கொண்டு போயிற்று? (வி.மா)

ஆசிரியர்: வடையைத் தூக்கிக் கொண்டு போய்ய்............ (மாணவர் கவனித்தல்) (நி.)

ஆசிரியர்: ஒரு மரத்தில் உட்கார்ந்தது பெரிய மரம். (மெ)

ஆசிரியர்: நீலக்கிளை. இங்கே கவனியுங்க. (மரம் படம் வரைதல்) – கிளை நீண்டு இருத்தல் போல வரைதல்) (க.ஈ)

ஆசிரியர்: காக்கை எங்கே போய் உட்கார்ந்தது? (பு.மா் வி.மா)

மாணவர்: மரத்தின் கிளையில் உட்கார்ந்தது.

ஆசிரியர்: அப்போ அங்கே ஒரு நரி வந்தது. நரி காக்கையைப் பார்த்தது. வடையைப் பெற ஆசைப்பட்டது. காக்கை வடை சாப்பிடும்போது எது வந்தது? (வி.மா)

மாணவர்: ஒரு நரி வந்தது.

ஆசிரியர்: நரி காக்கையைப் பார்த்து, காக்கா காக்கா நீ அழகுக் காக்கா! உன் நிறம் கருமை; குரல் இனிமை; ஒரு பாட்டுப் பாடு என்று சொன்னது.

நரி என்ன சொன்னது? (கு.ஏ.தா வி.மா)

மாணவர்: நீ அழகுக் காக்கா் உன் நிறம் கருமம் உன் குரல் இனிமை. ஒரு பாட்டுப்பாடு என்று சொன்னது.

ஆசிரியர்: கருமை - இனிமை – கரும்பலகையில் எழுதுதல் (இ.மா) (மாணவர் எழுதுதல்)

ஆசிரியர்: நரியின் பேச்சைக் கேட்டது.

அந்தக் காக்கை. (நி.)

அந்தக் காக்கை ‘கா’ ‘கா’ என்று பாடியது. பாடின உடனே வடை கீழே விழுந்தது.(கு.ஏ.தா.)

பாடின உடனே என்ன ஆயிற்று? (வி.மா)

மாணவர்: வடை கீழே விழுந்தது.

ஆசிரியர்: நரி வடையைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போய்விட்டது காக்கை ஏமாந்து போயிற்று. எது ஏமாந்து போயிற்று? (கு.ஏ.தா – வி.மா)

மாணவர்: காக்கை ஏமாந்து போயிற்று.

ஆசிரியர்: நரி என்ன செய்தது? (வி.மா)

மாணவர்: வடையைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போயிற்று.

**3.4.2 வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்**

ஆசிரியர் கற்பிக்கும் போது வினாக்கள் கேட்கிறார். மாணவர்கள் சரியான விடையளிக்கும் போது, ஆசிரியர் அடுத்த வினாவைத் தொடுக்கக் கூடாது.

கற்றலில் ஊக்கம் பெற ஆசிரியர் சொல்லாலோ, பிற குறிப்புக்களாலோ தெரிவிப்பின் மாணவர் மகிழ்வர். மாணவர்கள் நன்கு படித்து விடையளித்தலுக்கு ஆசிரியரின் செயல் வலுவூட்டுகிறது. இதனை ‘வலுவூட்டி’ என்பர். இதனைப் பாராட்டல் என்றும் கூறுவர்.

வலுவூட்டிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுமானால் (அ) மாணவர்களின் விடை சரி என்று தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. (ஆ) மேலும் படிக்க மாணவரைத் தூண்டும் (இ) கற்றலில் விருப்பம் ஏற்படும் (ஈ) மாணவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் (உ) வகுப்பு நடைமுறைச் செயலில் மாணவர் பங்கேற்பு மிகுதியாகும் (ஊ) அடுத்து வரும் வினாக்களுக்கான விடையை எதிர்நோக்கச் செய்யும்.

எதிர்மறையான வலுவூட்டிகள் (தவறு-தப்பு-சரியில்லை போன்றவை) கற்றலுக்குத் துணையாக இருப்பதில்லை. இதனால் மாணவர்கள் வேறொரு நிலையில் விடைதரத் தயங்கிப் பின்வாங்கி விடுவர்.

எனவே வலுவூட்டிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தினால் கற்றல் சிறக்கும். தேவை இல்லாமல் அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது.

இவ்வலுவூட்டிகளை மொழிச் சார்புடைய வலுவூட்டிகள் திரும்பக் கூறல், வேறு வகையில் கூறல், மொழிச் சார்புடை ஒலிகள், உதவும் சைகைக் குறிகள், கரும்பலகையில் விடையை எழுதுதல் எனக் கூறுபடுத்தலாம்.

இனி வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறனில் உள்ள உட்கூறுகளைப் பார்ப்போம்.

**1. மொழிச் சார்புடைய வலுவூட்டிகள்**

மாணவர்கள் சரியான விடையளிக்கும் போது அவர்களைப் பாராட்ட வேண்டும். அப்போது பாராட்டு மொழிகளுக்குப் பதிலாக நன்று, மிக நன்று, அருமை, ஆகா, மிக அருமை, சிறப்பானது, அழகு, ஆம், மேலும் சொல்லுக எனச் சில சொற்களைக் கற்பிக்கும் ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். இவையே மொழிச் சார்புடைய வலுவூட்டிகளாகும்.

**2. திரும்பக் கூறல்**

மாணவர்கள் கூறும் சரியான விடையை ஆசிரியர் கேட்டு, அதனை வகுப்பு மாணவர்க்குச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும் போது மாணவன் தன் விடையை வகுப்பு மாணவர் அறியும்படி ஆசிரியர் செய்தார் என மகிழ்கிறான். இவ்வாறு பாராட்டுவது திரும்பக் கூறுவதாகும்.

**3. வேறு வகையில் கூறுதல்**

மாணவன் ஓரளவு சரியான விடை சொன்னால் ஆசிரியர் அதைத் திருத்திச் சிறப்பாகக் கூறலாம். தன்னுடைய பதிலில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி ஆசிரியர் விளக்கினார் என்று அறிந்து மாணவன் மகிழ்வான். எடுத்துக்காட்டு,

ஆசிரியர்: அக இலக்கியத்திற்கும், புற இலக்கியத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

மாணவன்: அக இலக்கியம் இல்லற வாழ்க்கை தொடர்பானது புற இலக்கியம் வெளி உலக வாழ்க்கை தொடர்பானது.

ஆசிரியர்: அக இலக்கியம் தலைவன், தலைவி இணைந்து வாழும் இல்லற வாழ்வு. புற இலக்கியம் கல்வி, வீரம், கொடை, அறம், புகழ் இவற்றால் பெறும் இன்பம்.

மாணவன் சொல்லிய பதிலைத் திருத்திச் செம்மைப்படுத்திச் சிறப்புறக் கூறலாம்.

**4. மொழிச் சார்புடைய ஒலி**

மாணவன் பதில் கூறும்போது ஆசிரியர் ‘உம், உம்’ எனச் சொல்லி மேலும் பதிலைச் சொல்லும்படிச் செய்தலே மொழிச் சார்புடைய ஒலி எனப்படும்.

**5. உதவும் சைகைக் குறிகள்**

மாணவன் சரியான விடை சொல்லும்போது ஆசிரியர் தம் தலையசைப்பால், ஏற்றல், சிறு புன்முறுவல் செய்து மேலும் சொல்லும்படித் தலை அசைத்தல், தட்டிக் கொடுத்தல் போன்றவை மாணவனைப் பாராட்டும் சைகைக் குறிகளாம்.

**6. கரும்பலகையில் விடை எழுதுதல்**

மாணவர் சொல்லும் சரியான விடையை ஆசிரியர் கரும்பலகையில் எழுதினால், தான் சொல்லிய பதிலை மாணவர் அனைவரும் காணுமாறு எழுதினார் என மாணவன் மகிழ்கிறான்.

பதிலை ஆசிரியரும் எழுதலாம், மாணவனையும் எழுதச் செய்யலாம்.

மேலே சொல்லிய உடன்பாட்டு வலுவூட்டிகளுக்கு எதிர்மறையான வலுவூட்டிகளை ஆசிரியர் பயன்படுத்துதல் கூடாது.

**1. விலக்க வேண்டிய மொழிச்சார்புடையவை**

தவறு, தப்பு, சரியில்லை, முட்டாள், நிறுத்து, போதும் போதும், அதுவன்றி - போன்றவை.

**2. விலக்குதற்குரிய சைகைக் குறிகள்**

வெறுப்புடன் நோக்குதல், விலகிச் செல்லுதல், சரியில்லை எனத் தலையசைத்தல் போன்றவை.

3. வலுவூட்டிகளைத் தவறாக வகுப்பறையில் பயன்படுத்தக் கூடாது.

4. வலுவூட்டிகளைப் பயன்படுத்துவதில் பொருத்தமில்லாத நிலை கூடாது. தவறாகச் சொல்லும் மாணவனைப் பாராட்டுவது பேசுதல் போன்றவை.

மாதிரி நிகழ்வு

திறன்: வலுவூட்டிகளைப் பயன்படுத்துதல்

| | பயிற்சியாளர் பெயர்: | நாள்: |
|---|---|---|
| | உட்கூறுகள் | சுருக்க எழுத்துக்களில் |
| 1. | மொழிச்சார்புடை வலுவூட்டிகள் | மொ.சா.வ |
| 2. | திரும்பக் கூறுதல் | தி.கூ |
| 3. | வேறு வகையில் கூறல் | வே.வ.கூ |
| 4. | மொழிச்சார்புடை ஒலிகள் | மொ.சா.ஒ |
| 5. | உதவும் சைகைக் குறிகள் | உ.சை.கு |
| 6. | கரும்பலகையில் விடையை எழுதுதல் | க.வி.எ |

**பாடப்பகுதி - தேம்பாவணி**

ஆசிரியர்: குழந்தைகளே! தாவீது கோலியாத்தை வென்ற கதையைச் சொல்லப் போகிறேன்.

ஆசிரியர்: கோவியாத்து உருவத்தில் எத்தகையவன்?

மாணவன்: கோலியாத்து உருவத்தில் மலை போன்றவன்.

ஆசிரியர்: நன்று, எந்த மலையைப் போன்றவன்? மொ.சா.வ.

மாணவன்: பெரிய மலை போன்றவன்

ஆசிரியர்: ம்........ பெரிய மலைதான். எந்த மலை?

மாணவன்: இமயமலை போன்றவன். ம்..... மிகவும் சரி - மொ.சா.ஒ. மொ.சா.வ.

ஆசிரியர்: யூதேய நாட்டு இஸ்ரவேலர் மீது பிலித்தியர் என்னும் கூட்டத்தினர் படையெடுத்தனர். நாட்டை முற்றுகை இட்டனர்.

ஆசிரியர்: இஸ்ரவேலர் யார் மீது படை எடுத்தனர்? (வடிவேல் நீ சொல்)

மாணவன்: பிலீத்தியர் மீது படை எடுத்தனர்

ஆசிரியர்: ம்...... சரி...... மொ.சா.ஒ.

**வினாக் கேட்டல்**

கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவர்களிடம் பல்வேறு வினாக்களை எழுப்ப வேண்டும். மாணவர் ஏற்ற விடையை அளித்த போதிலும் வேறு ஒரு கோணத்தில் அக்கருத்தைக் கூறுவதற்கு ஆசிரியர் வினாக்களைக் கேட்கலாம்.

மாணவன் அளித்த விடையைப் பகுத்தறிந்து பொருத்தமான விடைகளை அளிக்கும் திசைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

கேட்கும் வினாவிற்கும் அளிக்கும் பதிலுக்கும் தொடர்பினை உருவாக்கி ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய வேண்டும்.

கேட்கும் வினா மாணவரின் சிந்தனையைத் தூண்டும் வகையில் ஏன்? எதற்கு? எப்படி? என்றவாறு அமைய வேண்டும்.

மாணவர் சரியான விடையைச் சொல்லாத நிலையில் அதே மாணவரிடம் எதிர்பார்த்த சரியான விடையைக் காணச் சில குறிப்புகளுடன் கூடிய சரியான பதிலைப் பெற ஆசிரியர் கவனம் செலுத்தலாம்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-8**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

4. கற்பிப்புப் பழகுதல் என்றால் என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................

5. கற்பித்தின்போது இடமாற்றம் பற்றி எழுதுக.

..........................................................................................................................................................

.......................................................................................................................................................

6. மொழிச் சார்புடைய ஒலி பற்றி எழுதுக.

### 3.4.3 விளக்குதல் திறன் (Explaining)

ஆசிரியர் பாடம் கற்பித்தலில் விளக்கமே (விளக்குதல் திறன்) முக்கிய இடம் பெறுகிறது. அப்போது பாடப்பொருள் தொடர்பாக வரும் 'வாய்ச் சொற்கள் தாம்' வலிவு பெறுகின்றன. எனவே திறமையாக விளக்கம் இருந்தால் மாணவர்கள் பாடப்பொருளை நன்கு அறிவர்.

வகுப்பறையில் விளக்குதலுக்கு வாய்ப்புகள் நிறைய உண்டு. 'எவ்வாறு, எப்போது, யார், எவை, ஏன், எப்படி, எது' என்றும் வினாக்களை எழுப்பி விளக்குவதால், அவற்றிற்குரிய பதிலையும் சொல்வதால் மாணவர்கள் தெளிவான விளக்கம் பெறுகின்றனர்.

வரலாறில் முன்பு நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லும் போதும், அறிவியலில் சோதனையின் விளைவுகளை விளக்கும் போதும், மொழிப் பாடத்தில் பாடல்களைக் கற்பிக்கும் போதும் விளக்கங்கள் அதிகமாக இடம் பெறுகின்றன.

எனவே பாடப்பொருளை விளக்குதல் முக்கிய இடம் பெறுகிறது.

பாடக் கருத்துக்களை விளக்கும்போது காரணகாரியத் தொடர்பு வேண்டும் தேவையான செய்திகளை விடுத்தல் கூடாது; எடுத்துக்காட்டுகள் கூறி விளக்குதல் சிறப்பானது.

**பயனுடைய நடத்தைகள்**

1. **தொடங்கும் தொடர்**

பாடப் பகுதியைத் தொடங்கும் தொடர் மையக் கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். எதைப் பற்றி விளக்க இருக்கின்றோம் என்பதைத் தொடங்கும் பொழுதே அறிதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, நீதி இலக்கியங்களின் நோக்கம் வாழ்வில் நல்ல கருத்துக்களைப் பின்பற்ற வேண்டும் என்பதே.

தொடங்கும் தொடர் மாணவர்களுக்கு அவர்கள் கற்கப் போகின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளும் வகையில் அமைதல் நன்று.

2. **இணைப்புச் சொற்கள்**

ஒரு கருத்தை விளக்கும் போது ஒரு கருத்தோடு மற்றொரு கருத்தைத் தொடர்புபடுத்திச் சொல்வதற்கு இணைப்புச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இணைப்புச் சொற்களில் பொருத்தமானவற்றை இடமறிந்து பயன்படுத்த வேண்டும்.

சில இணைப்புச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஆகவே அவ்வாறு இவ்வாறு அதோடு ஆகையால் எனவே பின்னர் பின் முன் ஏனெனில் எப்படியெனில்.

3. **முடிக்கும் தொடர்**

தொடக்கத்தில் இருக்கும் தெளிவைப் போன்று பாடத்தை முடிக்கும்போது அமைய வேண்டும்.

முடிவு நன்கு அமைந்தால் மாணவர்கள் பாடக் கருத்துக்களைத் தொகுத்து மனதில் நிறுத்திக் கொள்ள முடியும்.

4. **விளக்கத்தில் வினாக்கள்**

பாடப் பகுதியில் அமையும் வினாக்கள் விளக்கிய பகுதி சார்ந்ததாக அமைய வேண்டும். விளக்குதல் திறனைச் சோதிக்க இவ்வினாக்கள் பயன்படும்.

**5. பொருத்தமான விடை அளித்த வினாக்கள்**

பாட விளக்கத்தில் இடம் பெற்ற வினாக்கள் அனைத்தும் ஏற்ற பதிலைப் பெறுமாயின், விளக்கம் திறம்பட அமைந்தது எனச் சொல்லலாம்.

பொருத்தமான விடைக்குரிய வினாக்கள் பாடப்பொருளை விளக்குதலை அளந்தறியும் தன்மையுடையனவாக உள்ளன.

**3.5 கற்றல் குறிக்கோள்**

கல்வியின் நோக்கமே கற்றல் குறிக்கோளாக அமையும். கல்வியின் நோக்கம் பாடத்திட்டத்திலும், கலைத் திட்டத்திலும் இடம் பெறும். அக்குறிக்கோள் மாணவனின் தேவையையும், சமுதாயத்தின் தேவையையும் நாட்டின் வளர்ச்சி அடிப்படையிலும் அமையும் அமைய வேண்டும் என்பதே கல்வியின் இலக்காக அமையும்.

உலகில் நம்நாட்டில் மட்டுமின்றி எந்நாட்டிலும் இக்குறிக்கோள் இடம் பெறுவது இயற்கை.

**குறிக்கோள்**

- மாணவன் பெறும் கல்வியின் தரம், திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- அடிப்படைக் கல்வி அறிவையும், பாடப்பொருள் பற்றிய அறிவையும் மாணவர்கள் அடைதல்.
- ஏற்றத்தாழ்வின்றி எல்லா மாணவர்களும் பாடப்பொருள் பற்றிய அறிவு பெறுதல்.
- தனித்திறன், மீத்திறன் பெற்ற மாணவர்களுக்கு அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கித் தரும்.
- தொழிற்கல்வியின் திறன் பெறுதல், சுயதொழில் செய்யும் திறன் பெறுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கான கல்வியைப் பெறுதல்.
- சாதி, மத, இன வேறுபாடற்ற மக்கள் உரிமையுடன் வாழ்வதற்கான கல்வியைப் பெறுதல்.
- கணினி கல்வி அறிவு பெற அனைவருக்கும் வாய்ப்பளித்தல்
- இணைய தளம் மூலம் சுயகற்றல் திறனை வளர்த்தல்.

ஊடகத்தின் வழியே பெறும் தகவல் பரிமாற்றம், கற்றலின் அடிப்படையாக அமைய வேண்டும்.

நீதிக் கருத்துக்களை வலியுறுத்தும் செய்யுள்களில் கருத்தை உணரும் திறனை வளர்த்தல் சிறப்பு நோக்கமாய் அமையும். அணி நயம் அமைந்திருப்பின் அணியைப் பொருத்திக் காட்டுதல் சிறப்பாக இடம்பெறும்.

கவிதையாயின் இலக்கியப் பற்றை உருவாக்குதல், உணர்வுகளைத் தூண்டுதல், கலையுணர் ஆற்றலை வளர்த்தல், கற்பனையாற்றலை வளர்த்தல் ஆகியன சிறப்பு நோக்கங்களாக அமையும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, பண்பு இவற்றை வளர்த்தல் இடம் பெறும்.

அருட் பாடலாக இருப்பின் இறையுணர்வு ஊட்டல், உணர்ச்சியோடு ஒரு செயலைச் செய்தல் சிறப்பு நோக்கங்களாக இடம்பெறும்.

**3.5.1 செய்யுளைத் தொடங்கும் முறை**

செய்யுளைக் கற்பிக்கும் போது பதவுரை, பொழிப்புரை கூறுதல் இவற்றை முதன்மை நோக்கமாகக் கொள்ளுதல் பண்டைய பயிற்று முறை.

இக்காலத்தில் செய்யுள் கருத்துணர்தல், உணர்ச்சியில் ஒன்றுபடுதல், நயம் உணர்ந்து போற்றுதல், பாடிப் பாடி இன்பம் அடைதல் ஆகிய நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் கற்பித்தல் வேண்டும்.

**கற்பித்தலுக்கேற்ற சூழலை அமைத்தல்**

எந்தச் செய்யுளையும் கற்பிக்கும் முன் கற்பிப்பதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டும். செய்யுளின் கருத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்க வேண்டும்.

பள்ளு, குறம், கலம்பகம் முதலான சிற்றிலகக்கியங்களுள் ஒரு பகுதியினையோ, தனிப்பாடல்களையோ கற்பிக்கும் போது இது சிறந்த முறையாகும்.

**முன்னுரை கூறல்**

தகுந்த சூழ்நிலை அமைத்த பின்னர் கற்பிக்க எடுத்துக் கொண்ட செய்யுள், எந்தச் செய்யுளின் தொடர்ச்சி என்பதைச் சொல்லுதல் வேண்டும்.

தொடர்நிலைச் செய்யுளாக இருந்தால் முன்கதைப் பகுதியைச் சொல்ல வேண்டும். தனிப்பாடலாக இருந்தால் அப்பாடல் பாடப்பட்ட சூழலைச் சொல்ல வேண்டும்.

தேவையான இடங்களில் தேவையான முன்னுரையைக் கூறிச் செய்யுளைக் கற்பிக்கத் தொடங்க வேண்டும்.

**3.5.2 செய்யுளை இலக்கிய நயம் தோன்றப் படித்தல்**

கற்பிக்கும் சூழலை உருவாக்கிய பின்னர் முதலில் செய்யுளை இசையுடன் பாடுதல் வேண்டும். பாடவில்லை என்றால் சீர்பிரித்துச் சந்த அமைப்போடு குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்துக் காட்டவேண்டும்.

பாடத் தெரிந்தவரைப் பாடச் செய்து ஒலி நாடாவில் பதிவு செய்து மாணவரைக் கேட்கச் செய்யலாம். இவ்வாறு இரண்டு மூன்று முறை கேட்கச் செய்யலாம்.

செய்யுளில் காணப்படும் சில தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதிகளை எளிமையாகச் சொல்லி, அத்தொடர்களின் பொருள் தெளிவாக விளங்கும்படி நிறுத்திப் படித்துக் காட்ட வேண்டும்.

**கற்பித்தலைத் தொடரும் முறை**

செய்யுளை ஓசையுடன் படித்துக் காட்டிய பின்னர், செய்யுள் கருத்தை, பாடலின் வளர்ச்சியை மாணவர்களை அறியச் செய்ய வேண்டும். பின்னர் இலக்கிய இன்பத்தை உணரத் தூண்ட வேண்டும். இது செய்யுள் கற்பித்தலின் சுவை மிகுந்த பகுதியாகும்.

செய்யுள் நயத்தினை ஆசிரியர் தொடர்ந்து உணர்த்துவதாலும், மாணவர் கேட்பதாலும் செய்யுள் நயம் உணரப்படுகிறது.

மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

**பாடத்தைத் திருப்புதல்**

செய்யுளைக் கற்பித்த பின்னர் சில வினாக்களை எழுப்பி, மாணவர்களைப் பாடல் கருத்தை முழுமையாகச் சொல்லச் செய்யலாம்.

உவமை இடம் பெற்ற பகுதியைப் பொருளோடு பொருத்திக் காட்டச் செய்யலாம். அருஞ்சொற்களுக்குப் பொருள் சொல்லச் செய்யலாம்.

இவை அனைத்தும் திருப்புதல் பகுதியாக அமைந்து கற்பித்தலையும், கற்றலையும் செம்மையாக்கும்.

**3.5.3 துணைக்கருவி**

செய்யுளைக் கற்பிக்கத் தயாரித்த துணைக் கருவிகளைப் பாடப்பகுதியில் ஏற்ற இடத்தில் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும்.

செய்யுள் பகுதி இடம் பெற்ற நூல் எக்காலத்தில் தோன்றியது என அறியச் செய்யலாம்.

நூல் விளக்கும் பாடத்தைக் காட்டி அதில் எப்பகுதியை நாம் படிக்கிறோம் எனச் சொல்லிப் பாடத்தைத் தொடங்கலாம்.

விளக்கப் படங்கள் துணைக் கருவிகளாக அமைந்தால் ஒவ்வோர் அடியை விளக்கும் போதும் தொடரின் இருபொருள்களைக் காட்டும் படங்களைக் காட்டி விளக்க வேண்டும்.

இவ்வாறு துணைக் கருவிகளை ஏற்ற இடத்தில் பயன்படுத்திப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பிக்க வேண்டும்.

**தொடர்பணி**

செய்யுளைக் கற்பித்து முடித்த பின்னர் மாணவர்களுக்கு வீட்டு வேலையாகச் சில பயிற்சி வினாக்களைத் தரவேண்டும்.

அவ்வினாக்களைக் கருத்துணர் வினாக்கள், நயம் உணர் வினாக்கள், செயல்முறை வினாக்கள் என வகைப்படுத்தலாம்.

தொடர்களின் பொருளையோ, பாடல் கருத்தையோ எழுதிவரச் செய்வது கருத்துணர் வினாக்கள்.

நயமுள்ள தொடர்களை எழுதிவரச் செய்தல், எதுகைத் தொடர்களை எழுதி வரச் செய்தல் போன்றவை நயமுணர் வினாக்கள்.

சிலேடைப் பகுதியை விளக்கும் காட்சியைப் படமாக வரையச் செய்தல் போன்றவை செயல்முறை வினாப் பகுதியாம்.

**3.6 உரைநடை பயிற்றலின் நோக்கங்கள்**

உரைநடைப் பாடங்களைக் கற்பித்து அவற்றின் கருத்தை உணர்ந்து கூறுதலை இறுதி நோக்கமாகக் கொள்ளலாம். ஆசிரியர் உரைநடைப் பாடத்தின் மூலம் மொழித்திறன்களை வளர்க்கலாம். உரைநடை கற்பிப்பதன் பொது நோக்கங்களாகக் கீழ்வருவனவற்றைச் சொல்லலாம்.

உரைநடையைக் கற்பிக்கும்போது, பாடத்தின் மூலம் நற்பண்புகளை வளர்த்தலும் முக்கிய நோக்கமாகும். இன்சொல் பேசுதல், மற்றவருக்கு உதவுதல், பணிவுடன் இருத்தல், அன்பு காட்டுதல் முதலான பண்புகளைப் பற்றிப் பேசும்போது சிந்தித்து அவற்றிற்கெனச் சற்று நேரம் ஒதுக்கி, கதைகள் மூலமும் சில நிகழ்வுகள் மூலமும் மாணவர்கள் இப்பண்புகளை வளர்த்துக் கொள்ளத் தூண்ட வேண்டும்.

**கற்பிக்கும் சிறப்பு நோக்கங்கள்**

உரைநடைப் பாடத்தைக் கற்பிக்கும் போது பொது நோக்கங்களோடு, ஒவ்வொரு பாடத்துக்குரிய சிறப்பு நோக்கங்களையும் கற்பிக்க வேண்டும். சிறப்பு நோக்கங்கள் மொழித் திறன்களை வளர்ப்பதாக அமைய வேண்டும். அவை கற்றல் விளைவுகளாகக் கருதப்படும்.

கற்றல் விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன. கற்பிக்கும் பாடத்திற்கேற்ற சிறப்பு நோக்கங்களைத் தேர்ந்தெடுத்துப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

**அ. கேட்டல் திறன்**

1. பாடப் பகுதியைக் கேட்டு மையக் கருத்தை அறிதல். ஆசிரியர் பாடப் பகுதியை வாய்விட்டுப் படித்தல் வேண்டும். மாணவர்கள் கேட்ட பின்னர் மையக் கருத்தைக் கூறச் செய்ய வேண்டும்.

**சுருக்கத்தை அறியச் செய்தல்**

ஆசிரியர் பாடப் பகுதியை வாய்விட்டுப் படிக்க வேண்டும். மாணவர் கேட்ட பின்னர் கருத்தைக் கூறச் செய்தல் வேண்டும்.

**குறிப்பெடுக்கும் திறனை வளர்த்தல்**

ஆசிரியர் பாடப்பகுதியைத் தேர்ந்தெடுத்து வாய்விட்டுப் படிக்க வேண்டும். மாணவர் கேட்ட பின்னர் அப்பாடப் பகுதிக்குரிய குறிப்பைக் கூறச் செய்ய வேண்டும்.

**ஆ. பேசுதல் திறன்**

பேசுதல் தி.றன் மூலம் பெறும் பயிற்சியில் வெவ்வேறு வடிவம் அமைந்த எழுத்துக்களை உடைய சொற்களைப் பேசும் பயிற்சி பெறுதல், ஒலிப்பதற்கு அருமையான தொடர்களைப் பேசும்

பயிற்சி பெறுதல், பாடப்பகுதியைப் படித்து அதன் சுருக்கத்தை எடுத்துக் கூறும் திறன் பெறுதல் ஆகும்.

பேச்சுப் பயிற்சி மூலம் ஒலிப்புத் திறனும், பொருள் உணரும் திறனும், கருத்துக்களைச் சுருக்கிக் கூறும் திறனும் பெறலாம்.

**இ.படித்தல் திறன்**

வரிவடிவம் உணர்ந்து சொற்களைச் சரியாக ஒலிக்கச் செய்தல், சரியான உச்சரிப்போடும், சொல் அழுத்தத்தோடும் படிக்கும் திறனை வளர்த்தல், பொருள் உணர்ந்து குரல் ஏற்றத்தாழ்வுடன் படிக்கும் ஆற்றல் பெறுதல், வாய்க்குட் படித்தல் வாய்விட்டுப் படித்தலுக்கான பயிற்சியைப் பெறுதல் ஆகியவை படித்தல் திறன் மூலம் பெறும் பயிற்சிகளாகும்.

**ஈ.எழுதுதல் திறன்**

சொற்களைக் கேட்டு எழுதும் திறன், வெவ்வேறு ஒலி அமைந்த எழுத்துக்களை உடைய சொற்களைத் தாமே எழுதும் திறன், ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும், ஒரு வரிக்கும் மற்றொரு வரிக்கும் இடம்விட்டு எழுதும் திறன் ஆகியவை எழுதுதல் திறன் மூலம் பெறும் மொழி ஆற்றலாம்.

**வினாக்களுக்கு விடை எழுதுதல்**

பாடப்பகுதியில் அமைந்த வினாக்களைக் கொடுத்துச் சரியான விடை எழுதும் பயிற்சி பெறுதல்.

**3.7 உரைநடைப் பாடம் கற்பிக்கும் முறைகள்**

உரைநடைப் பாடம் கற்பிப்பதன் மூலம் மொழித்திறன் வளர் பயிற்சி, பொது அறிவு, விழுமங்களின் சிறப்பு, வாழ்க்கைத் திறன்கள் ஆகியவற்றை மாணவர் பெறுவர்.

உரைநடைப் பாடத்தைத் தொடங்கும் முன் மாணவர்களுடன் இயல்பான சூழலில் உரையாடிப் பாடத் தொடர்பான செய்திகளை ஆர்வத்துடன் ஏற்படுத்தலாம்.

கணினி பற்றிய பாடம் இடம் பெற்றிருந்தால் மாணவர்களிடம் தகவல் தொடர்புக்குப் பயன்படும் சாதனங்கள் பற்றிக் கேள்வி கேட்டுப் பாடத்தைத் தொடங்கலாம்.

முன்னுரை வழங்கல்

பாடத் தொடர்பான செய்திகளை வரவழைத்து ஆர்வத்தை ஏற்படுத்திய பின்னர் பாடத் தலைப்பைக் கொண்டு முன்னுரை ஒன்று அளிக்க வேண்டும்.

கணிப்பொறி பற்றிய பாடத்திற்கு கணினியைக் கண்டுபிடித்த முன்னோடிகள், கணிப்பொறியின் வகைகள் இவற்றைக் கூறித் தற்காலத்தில் உள்ள மிக விரைவுக் கணினி (சூப்பர் கம்யூட்டர்) பற்றியும் சில செய்திகளைச் சொல்லலாம். இவை பாடத்திற்கு முன்னுரையாக அமையும்.

**பாடப்பகுதியை ஆசிரியர் படித்து விளக்குதல்**

ஆர்வமூட்டுதல், முன்னுரை ஆகிய இரண்டு பகுதிகளும் நிறைவடைந்த பின்னர், ஆசிரியர் அந்தப் பாடவேளையில் கற்பிக்க எடுத்துக் கொண்ட பாடப் பகுதிகளைப் படித்துக் காட்ட வேண்டும். மாணவர் ஒலிப்பிழையின்றிப் படிக்கும் பயிற்சிக்கு வழிகாட்டியாக அமையும்.

பின்னர் ஒவ்வொரு பத்தியாகப் படித்து மாணவர்களிடம் மையக் கருத்தை வரவைக்கலாம்.

**மாணவர்களைப் படிக்கச் செய்தல்**

எளிமையான நடையில் அமைந்த பாடப்பகுதியாயின் மாணவர்களைப் படிக்கச் செய்து மையக் கருத்தை வரவைக்கலாம்.

கடினமான பாடப்பகுதியாயின் ஆசிரியர் நடத்திய பின்னரே மாணவர்களைப் படிக்கச் செய்தல் வேண்டும். ஏனெனில் புதிய சொற்கள், அருஞ்சொற்கள், மரபுத் தொடர்கள், இணைச்சொற்கள் பொருள் வேறுபாடு உள்ள ஒரே ஒலி அமைந்த சொற்கள் ஆகியவை இடம் பெறலாம்.

**செய்திகளை விளக்குதல்**

பத்தியைப் படித்து அதன் மையக் கருத்தை ஆசிரியர் சொல்லலாம் மாணவர்களையும் சொல்லச் செய்யலாம். அக்கருத்தைக் கரும்பலகையில் எழுதிய பின்னர் புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் விளக்கிச் சொற்களஞ்சியப் பெருக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அவற்றை வாக்கியத்தில் அமைத்துப் பழகப் பயிற்சி அளிக்க வேண்டும்.

மேற்கோளாகப் பாடல் வரிகள் இடம் பெறுமாயின் அவற்றையும் விளக்குதல் வேண்டும்.

பாடக் கருத்துக்களை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கற்பித்தல் வேண்டும். தேவையான இடங்களில் பாடப்பகுதிகளை விளக்கும் கருத்துப் படங்கள் போன்ற துணைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

**3.8 இணைத்துக் கற்பித்தல்**

பாடப் பகுதியின் கருத்து செய்யுள் வடிவில் இருப்பின் செய்யுட்பகுதியுடன் இணைத்தும், இலக்கண விதிகளைக் கற்பிப்பதற்கு ஏற்றதாக இருப்பின் இலக்கணப் பாடத்துடன் இணைத்தும் கற்பிக்க வேண்டும்.

உரைநடையில் ஒரு பத்தியைக் கற்பித்த பின்னர் இரண்டொரு மாணவர்களைப் படிக்கச் செய்தல் நன்று. இதே போன்று அப்பாட வேளையில் கற்பிக்க வேண்டிய பத்திகளைக் கற்பித்தல் நன்று.

**மொழிப் பயிற்சியளித்தல்**

ஒரு பாடவேளையில் கற்பிக்க வேண்டிய பகுதியைக் கற்பிக்கும் பொழுது அருஞ்சொற்களை வாக்கியத்தில் அமைத்தல், தொடர்களை வாக்கியங்களில் அமைத்தல், மரபுத் தொடர்கள், பழமொழிகள் உவமைகள் ஆகியவற்றைப் பொருளுணர்ந்து வாக்கியத்தில் அமைக்கப் பயிற்சி அளித்தல் போன்ற மொழிப் பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

உடன்பாடு, எதிர்மறை, செய்தி, வியப்பு, நேர்கூற்று, அயற்கூற்று செய்வினை, செயப்பாட்டுவினை போன்ற வாக்கிய மாற்றங்களை வகுப்பு நிலைக்கு ஏற்றாற்போல் இம்மொழிப் பயிற்சிகளைக் கற்பிக்க வேண்டும்.

**3.8.1 துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல்**

உரைநடைப் பாடத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் தகுந்த துணைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

அரிய சொற்களை எழுதவும், புதிய சொற்களுக்குப் பொருள் எழுதவும், சொற்களைப் பிரித்துக் காட்டவும் கரும்பலகையைப் பயன்படுத்த வேண்டும்.

பாடத்தில் இடம்பெற்ற ஊர்ப் பெயர்களைக் காட்டவும், அங்குச் செல்ல வழியைக் காட்டவும், நாட்டின் எல்லைகளைக் காட்டவும் நாட்டுப் படங்களைப் பயன்படுத்த வேண்டும்.

**பாடத்தைத் திருப்புதல்**

எடுத்துக் கொண்ட பாடப்பகுதியை முழுமையாகக் கற்பித்த பின்னர் மாணவர்கள் புரிந்து கொண்டார்களா என அறிந்திட வினாக்கள் கேட்டல் வேண்டும். இந்நிகழ்வே பாடத்தைத் திருப்புதல் ஆகும்.

சொற்பொருள் கேட்டல், சொற்களையோ தொடர்களையோ வாக்கியத்தில் அமைக்கச் செய்தல் பாடக்கருத்து பற்றிய வினாக்களைக் கேட்டல் இதுவே பாடத்தைத் திருப்புதலாம்.

**3.8.2 கரும்பலகைப் பயன்பாடு**

கற்பிக்க எடுத்துக் கொண்ட பாடத் தலைப்பைக் கரும்பலகையில் எழுத வேண்டும்.

பத்தியின் மையக் கருத்தை எழுதுதல், அருஞ்சொற்பொருள் எழுதுதல், சொற்களைப் பிரித்துக் காட்டுதல், ஒலி வேற்றுமையுடைய சொற்களின் பொருள் வேற்றுமையைக் கரும்பலகையில் எழுதி வாக்கியத்தில் அமைக்கப் பயிற்சி அளிக்கலாம்.

**தொடர்பணி**

ஆசிரியா் திருப்புதல் வினாவாகக் கேட்டவற்றையே வீட்டுப் பணியாகக் கொடுத்து எழுதி வரச் செய்யலாம்.

வினாக்களுக்கு உரிய விடையைப் படித்து வரவும் செய்யலாம்.

சிறுகதை, புதினம், பயணக் கட்டுரை முதலியன உரைநடை இலக்கியங்களாகும். இவற்றை உரிய எடுத்துக்காட்டுடனும் வினாக்களுடனும் விளக்குதல் வேண்டும்.

விழுமம் தொடா்பான செயல்களும், தொடா் அமைப்பையும் வேறுபாடுகளையும் கற்பித்தல் உரைநடைப் பாடம் கற்பித்தலில் அடங்கும்.

**3.9 இலக்கணப் பாடம் கற்பித்தல்**

இலக்கணம் என்பது மொழிக்கு வரையறையாகும். இதில் சொல் முரண்பாடு, கருத்து முரண்பாடு இவற்றிற்குத் தீா்வு காண வேண்டும்.

**கற்பித்தல் நோக்கங்கள்**

'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்பது நன்னூல். இத்தகைய இலக்கணத்தின் இன்றியமையாமை, அதைக் கற்பிக்கும் முறை பற்றித் தெரிந்து கொள்வோம்.

நமது தமிழ்மொழி திராவிட மொழியினத்தைச் சாா்ந்தது. அமிழ்தினினும் இனிய தமிழ் திராவிட மொழிகளில் தலைசிறந்ததாகும்.

இத்தகைய பெருமையுடைய தமிழில் கருத்துக்களைப் பிழையின்றிச் சொல்வதற்கும், பிழையின்றி எழுதுவதற்கும் பயன்படுவது இலக்கணம்.

வழூஉச் சொற்களின்றித் திருத்தமாகப் பேசவும், இலக்கண முறைப்படி சொற்றொடா் அமைக்கவும், சொல்லாட்சியைப் பயன்படுத்த எழுதப் பயன்படுவது இலக்கணம்.

மொழி மரபைப் பாதுகாக்கத் திருத்தமான பேச்சு இன்றியமையாதது.

மயங்கொலிப் பிழையின்றியும், சந்திப்பிழையின்றியும் எழுதப் பயன்படுவது இலக்கணம்.

இன எழுத்தின் சிறப்பையும், குறில், நெடில் வேறுபாட்டையும் அறிந்து எழுதுவதால் பொருள் முரண்பாடு தவிா்க்கப்படுகிறது.

மொழியின் ஒலியியல்புகளை அறிந்து கொள்ள இலக்கணம் அமைவதால் பொருள் தடுமாற்றம் தவிா்க்கப்படுகிறது.

பிறமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்தும் போது எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனத் தமிழிலக்கணம் கூறுகிறது. இதனை நன்னூல் இலக்கண விதி 'தற்சமயம், தாற்பவம்' என வரையறுக்கிறது.

இயல்பு வழக்கு, தகுதி வழக்கு இவற்றை அறிந்து கொள்வதால் சரியான சொல்லாட்சி தெரிகிறது. இதனால் இலக்கணப் பிழை தவிா்க்கப்படுகிறது; அல்லது இலக்கண வழுவமைதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

திணை, பால், எண், இடம், மரபு இவற்றை அறிவதால் வழு, வழாநிலை, வழுவமைதி இவற்றை அறிந்து கொள்கிறோம்.

புணா்ச்சி விதிகளை அறிவதால் செய்யுளில் அமைந்த சொற்றொடா்களைப் பிரித்துப் பொருளுணரும் ஆற்றல் பெறுகிறோம்.

தொகைநிலை, தொகாநிலைத் தொடா்களை அறிவதால் எவ்விடங்களில் வேற்றுமை உருபைப் பயன்படுத்த வேண்டும், எவ்விடங்களில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தக் கூடாது என்ற மரபினை அறிய முடியும்.

யாப்பிலக்கண அறிவு செய்யுளின் அமைப்பை அறிவதோடு புதியன படைக்கும் திறனை வளா்க்கிறது.

அணி இலக்கணம் கருத்துக்களைச் சுவைபடச் சொல்வதற்கும், சுவைபட எழுதுவதற்கும் பயன்படுகிறது.

மேற்கூறிய அனைத்தையும் அறிவதற்குப் பயன்படுவதே இலக்கணப் பாடத்தின் முக்கிய நோக்கமாகும்.

மொழியிலுள்ள ஒலிகள், அவ்வொலிகள் தோன்றும் முறை, சொற்கள் அமைப்பு முறை போன்றவை இலக்கணப் பாடத்தின் மூலம் தெரியும். இவை மொழியாராய்ச்சி செய்வதற்கும் மொழியின் அமைப்பை அறிவதற்கும் பெரிதும் உதவும். இதற்கான அடிப்படை அறிவைப் பெறுமிடம் இலக்கணம்.

வாக்கிய அமைப்புக்கள், வாக்கிய மாற்றங்கள் இவற்றை அறிவதன் மூலம் வாக்கியத் தடுமாற்றமும், பொருள் தடுமாற்றமும் தவிர்க்கப்படும். இதன் மூலம் ஒவ்வொரு பத்தியும் பிழையின்றி அமைந்து பத்தி ஒழுங்கு ஏற்படும்.

பத்தி ஒழுங்கு ஏற்படுவதால் கருத்துக் கோவை சிறப்புற அமையும்.

**3.9.1 இலக்கணத்தைப் பயிற்றும் முறை**

நடுநிலை வகுப்புக்களில் விதிவரு முறையிலேயே இலக்கணம் கற்பிக்க வேண்டும். பாடப் பகுதியிலிருந்தோ, நடைமுறை வாழ்க்கையிலிருந்தோ எடுத்துக்காட்டுக்களைக் கூறி இலக்கண விதியை வரவழைக்க வேண்டும். இவ்வாறு இலக்கண விதிகளை மாணவர்கள் தாங்களாகவே கண்டறிவதால் அவ்விதிகளை மறக்க முடியாது.

அடுத்து உள்ளது விதி விளக்கமுறை. இம்முறையில் இலக்கண விதி முன்னர் கூறப்படும். பின்னர் தகுந்த எடுத்துக்காட்டைக் கூறி இலக்கண விதியோடு பொருத்திக் காட்ட வேண்டும்.

இலக்கணப் பாடம் விதிவருமுறை, விதி விளக்கமுறை என்ற முறைகளின் மூலம் கற்பிக்கப்படுகிறது.

**3.10 விதிவருமுறை**

மாணவர்களுக்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளைக் கொண்டு அவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறிப் பொதுவிதியினை வரவழைத்தல் விதிவரு முறையாகும்.

விதியினை முதலில் சொல்லாது மாணவர்கள் பயன்படுத்தும் சொற்களையே எடுத்துக்காட்டுகளாகச் சொல்லி மாணவர்களே இலக்கண விதியினை வரவைப்பர். எனவே இது சிறந்த முறையாகும்.

மாணவர்களிடம் உரையாடுவதுபோல் பாடத்தைத் தொடங்க வேண்டும். ஆசிரியர் திட்டமிட்டபடி உரையாடலின் இடையே தொடர்களைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் மாணவர்கள் அவ்வாறு சொல்லப்பட்ட எடுத்துக்காட்டுகள் இயல்பாக அமைந்ததாக நினைப்பின் பாடம் சுவைமிக்கதாக இருக்கும்.

ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியைக் கூறித் தொடங்கலாம். மாணவர்கள் ஆசிரியர் வருவதற்கு முன் சொல் விளையாட்டில் ஈடுபட்டனர். அப்போது ஒரு மாணவன் சொல்லினிமையால் மனம் பாலின் இனிக்கும் எனச் சொன்னான்.

சொல், இனிமை, பால், இன், இனிக்கும் எனப் பிரித்து எழுதி இலக்கண விதியை விளக்க வேண்டும்.

முதலில் உள்ள தொடரில் தனிக்குறில் முன் ஒற்று நிலைமொழியில் வந்துள்ளது. வருமொழியில் உயிர் வந்துள்ளது அதனால் நிலைமொழியில் உள்ள ‘ல்’ இரட்டித்தது.

இரண்டாவது தொடரின் (பால்,இன்) நிலைமொழியில் தனி நெடிலின் முன் ஒற்று வந்துள்ளது. வருமொழியின் முதலில் உயிர் வந்தும் நிலைமொழியில் ஒற்று இரட்டிக்கவில்லை எனச் சொல்லலாம்.

இவ்வாறு விதிவருமுறையில் கற்பிப்பதால் பாடம் எளிமையாகிறது.

**3.10.1 விதிவிளக்குமுறை**

மாணவர்கள் எளிதில் கண்டுணர முடியாத சில விதிகளை ஆசிரியர் விதிவிளக்கு முறையில் கற்பிக்கலாம்.

இலக்கண விதியைச் சொல்லி, அவ்விதியைப் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல் ‘விதிவிளக்கு’ முறையாகும்.

இம்முறை பழங்காலத்தில் இலக்கணம் கற்பித்தலில் பயன்படுத்தப்பட்ட முறையாகும்.

மெய்யீற்று வேற்றுமைப் புணர்ச்சியில் ‘ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியைச் சொல்லும் நன்னூல் விதி.

‘‘ணன வல்லினம் வரட்டறவும் பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு, அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பாகும்மே’’

எனச் சொல்லிப் பின்னர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுக் கொடுத்து விளக்க வேண்டும்.

புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியாக இருக்க வேண்டும். வருமொழி முதலில் வல்லினம் வரவேண்டும். அவ்வாறு வரும்போது நிலைமொழி ஈற்று ‘ணகர மெய் டகர மெய்யாகவும், னகர மெய் றகர மெய்யாகவும்’ மாறும்.

மண் (ட்), குடம் →மட்குடம்

பொன் (ற், குடம் →பொற்குடம்

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் மெல்லினமும் இடையினமும் வந்தால் ‘ணகரமும், னகரமும்’ இயல்பாகவே இருக்கும்.

மண், மலை→மண்மலை

பொன், வன்மை→பொன்வன்மை

இங்கு ‘ணகர, னகர’ மெய்களின் பின் வருமொழியில் மெல்லினமும், இடையினமும் வருவதால் இயல்பாகச் சேர்ந்துள்ளதைக் காணலாம். இவ்வாறு விதிவிளக்கு முறையில் இலக்கணப் பாடத்தைக் கற்பிக்கலாம்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-9**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

7. செய்யுள் கற்பித்தலில் கற்றல் சூழலை எவ்வாறு அமைப்பது?

.................................................................................................................................................................

...................................................................................................................................

8. உரைநடையில் இணைத்துக் கற்பித்தல் என்றால் என்ன?

.................................................................................................................................................................

...............................................................................................................................................................

9. புணர்ச்சி விதிகளால் ஏற்படும் பயன் யாது?

.................................................................................................................................................................

........................................................................................................................................................

**3.10.2 துணைக்கருவிகளை தயாரித்தலும் பயன்படுத்துதலும்**

மொழி கற்பித்தலில் பாடப்பொருள் முதன்மை இடம் பெறுகிறது. துணைக்கருவிகள் பாடப்பொருள் கற்பித்தலுக்கு வலுசேர்க்கும் என்பது அங்கை நெல்லிக்கனி உணவுக்கு உப்புச் சுவை கூட்டுவதுபோல் கற்பித்தலுக்குச் சிறப்புச் சேர்ப்பது, கற்பித்தலுக்குப் பயன்படும் நுட்பக் கூறுகளாகிய துணைக் கருவிகளாகும்.

கற்பித்தலில் வெற்றி பெறத் துணைக்கருமுவிகளின் பயன்பாட்டை ஆசிரியர்கள் தெளிவாக அறிய வேண்டும். துணைக்கருவிகளைப் பயன்படுத்தும் பயிற்சியை ஆசிரியர்களுக்குத் தரவேண்டும். அதைப் பணியிடைப் பயிற்சியாகச் செய்யலாம்.

கல்வித் தரத்திற்கும், வளர்ச்சிக்கும் என மத்திய அரசால் இயக்கப்படும் 'தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்', 'மாநில நிறுவனம்' ஆகியன புதுமைகளை உருவாக்குவதுடன் அவற்றை ஆசிரியர்களுக்கு உடனுக்குடன் அறிமுகப்படுத்துவதிலும் அவற்றில் மறுபயிற்சியும், புதிய பயிற்சியும் அளிப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

பள்ளி ஆசிரியர்களின் புதிய கற்பித்தல் முறைக்கு ஆண்டுதோறும் இந்நிறுவனங்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டி ஊக்குவித்து வருகின்றன.

கேட்பவற்றை மாணவர் மறந்துவிடுவர் ஆனால் அக்கருத்துக்களோடு காட்சியும் இடம் பெற்றால் அவை மனதில் பதிவதோடு நிலைத்து நீடித்த பயனைத் தரும்.

**துணைக்கருவிகள் தயாரித்தலுக்கு முன்னோடி**

நம் உடல் உறுப்புக்களாகிய புலன்கள் மூலம் கற்பவற்றைக் கல்வியியல் வல்லுநர்கள் நுட்பமாகக் கணக்கிட்டுக் கீழ்க்கண்டவாறு வரையறுத்துக் கூறியுள்ளனர். நாம் கற்பதைப் பத்து விழுக்காடு என எடுத்துக்கொண்டால்,

| | |
|---|---|
| சுவை மூலம் கற்பது | 1.0% |
| தொடுபுலன் மூலம் கற்பது | 1.5% |
| நுகர்வின் மூலம் கற்பது | 3.5% |
| செவியால் கேட்டுக் கற்பது | 11% |
| கண் மூலம் பார்த்துக் கற்பது | 83% |

என வரையறை செய்யப்பட்டுள்ளது.

இப்புள்ளியியலின்படி கண்ணால் பார்த்தல் (காட்சி), காதால் கேட்டல் (கேள்வி) மூலம் மாணவர் பெறும் கற்றல் பயன் 94 விழுக்காடு ஆகிறது.

இவ்வாறு கற்றல் மூலம் பெற்ற பயன் அடிப்படையில் மாணவர் நினைவில் நிறுத்தும் அளவையும் குறித்துள்ளனர்.

கேட்டல் மூலம் பெற்ற கருத்துக்கள் நூறு விழுக்காடு (100%) எனில், அக்கருத்துக்களில் நினைவில் நிற்பது இருபது விழுக்காடு (20%) மட்டுமே.

காட்சி மூலம் பெற்ற கருத்துக்கள் நூறு விழுக்காடு (100%) எனில், நினைவில் நிற்பது முப்பது விழுக்காடு (30%) மட்டுமே.

கேட்டல் திறன் மூலமும், காட்சித் திறன் மூலம் பெற்றது நூறு விழுக்காடு (100%) எனில், நினைவில் நிற்பது ஐம்பது விழுக்காடு (50%) மட்டுமே.

பேசுவதன் மூலம் பெற்றது நூறு விழுக்காடு (100%) எனில், நினைவில் நிற்பது எண்பது விழுக்காடு (80%) மட்டுமே.

பேச்சுத் திறனை வெளிப்படுத்தியதாலும், செயல்திறனை வெளிப்படுத்தியதாலும் பெற்றது நூறு விழுக்காடு (100%) எனில், நினைவில் நிற்பது தொண்ணூறு விழுக்காடு (90%) என்பர் அறிஞர்.

இக் கருத்துக்களைக் கொண்டு நோக்கினால், காணல் கேட்டல் மூலம் பெறும் கருத்துக்களில் நினைவில் வைப்பது மிகுதி என்றும் அறிகிறோம். பேசுவதோடு செயல்முறை மூலம் பெற்றதில் நினைவில் நிறுத்துவது அதிகமென்றும் அறிகிறோம்.

எனவே, காட்சிக் கேள்விக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவதுடன், மாணவர்களையும் அச்செயலோடு இணைத்துப் பயன்படுத்தும் திறனைப் பெறச் செய்தல் வேண்டும் என்பது புலப்படும்.

**3.10.3 துணைக்கருவிகளைத் தயாரித்தல்**

அறிஞர்களின் வரையறைப்படி கற்றலில் காட்சி மூலமும் செயல் மூலமும் பெறும் பயன் மிகுதி. அப்பயன் கருதி மொழி ஆசிரியர்கள் கற்பித்தலுக்குக் காலத்தின் தேவை கருதி பல்வேறு துணைக்கருவிகளைத் தயாரித்துப் பயன்படுத்த வேண்டும். இலக்கியவாதி செயகாந்தன் அவர்கள் ''காலம் மாறும்போது மனிதனும் மாறித்தான் ஆகவேண்டும்'' எனச்சொல்லிய கருத்து எத்துணை உண்மை என்பது புலனாகிறது.

'ஒரு படம் என்பது ஆயிரம் சொற்களுக்கு நிகராகும்' என்னும் சீனப் பழமொழி கற்றல் கற்பித்தலில் துணைக்கருவிகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

கற்பித்தலில் பயன்படுத்தப்படும் துணைக்கருவிகளை மூவகைப் படுத்துவர். அவையாவன: காட்சித் துணைக்கருவிகள், கேள்வித் துணைக்கருவிகள், காட்சி-கேள்வித் துணைக்கருவிகள் இந்த மூன்று வகையிலுமுள்ள உட்பிரிவுகளை வரன்முறை விளக்கப்படம் (Flowchart) தெளிவாகப் புரிந்து கொள்ளத் துணைபுரியும்.

இத் துணைக்கருவிகளை ஆசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலின் துணைக்கொண்டு தயாரிக்கவும்.

**3.10.4 துணைக்கருவிகளின் பயன்கள்**

மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்கத் துணைக்கருவிகள் பெரிதும் உதவுகின்றன.

கருத்துப் பொருள்களைக் காட்சிப் பொருளாக மாற்றுவதால் துணைக்கருவிகள் கற்றலை எளிதாக்குகின்றன.

கற்றலில் விரைவை ஏற்படுத்துவதால் கற்றலுக்கான காலத்தைக் குறைக்கின்றன.

கற்ற பகுதிகளில் நினைவாற்றலை மிகுதியாக்குகின்றன் மறதியைக் குறைக்கின்றன.

பல்வேறு தூண்டல்களை ஏற்படுத்திக் கற்றலில் கவர்ச்சியை உண்டாக்குவதால், கவனம் ஈர்க்கப்படுகிறது.

சுவையற்ற பாடப்பொருளைக் கூடச் சுவைபட மாற்றுவதால் கற்பித்தல் சிறப்பைப் பெறுகிறது.

துணைக்கருவிகள் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் வலுவூட்டுவதோடு கற்பனை ஆற்றலுக்கும் தூண்டுகோலாக அமைகின்றன.

1. காட்சிப் <u>பொருள்கள்</u> கவனத்தை ஈர்ப்பதோடு கற்பனைக்கு வேலை தருகின்றன.
2. பொம்மைகள் கருத்தை விளக்கிச் சிந்தனைக்கும், சிறிது கற்பனைக்கும் வேலை தருகின்றன.
3. படங்கள் பாடப் பொருளுக்கு மெருகூட்டுவதோடு மிகுந்த கற்பனைக்கு நிலைக்களனாக உள்ளன.
4. வடிவங்கள் கருத்தை மனதில் நிறுத்துவதோடு சற்று அதிகமான கற்பனைக்கு வேலை தருகின்றன.
5. சொற்கள் குறிக்கும் கருத்துகள் அனைத்தையும் கற்பனை வழியே அறிய வேண்டும்.
6. கரும்பலகை நிகழ்ச்சியை விளக்குவதற்கும், படங்களைப் பொருத்திக் கருத்துகளை விளக்குவதற்கும் ஏற்ற கருவி.
7. ஹெராஸ்மன் என்பவர் எந்த மாநிலத்திலும், நாட்டிலும் கரும்பலகைப் பயன்பாடு இன்றியமையாதது என்பதை ஆசிரியர் பயன்படுத்துவதன் மூலம் அறியலாம்.
8. வானொலி மூலம் காலத்தாலும், தொலைவாலும் பிரிக்கப்பட்ட சிறந்த தலைவர்களின் குரல் ஒலியைக் கேட்க முடிகிறது.

9. உலக நிகழ்ச்சிகளைக் (BBC-செய்தி) கேட்பதால் மாணவர் அறிவு இன்றைய நிகழ்வுகளுடன் இணைக்கப்படுகிறது.
10. மாணவர்களிடம் கருத்துக் கவர்ச்சியைத் தூண்டுகிறது.
11. பரந்த ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்குகிறது.
12. ஒளிப்பதிவு - படநாடாப் பதிவுக் கருவி மூலம் அறிஞர்களைப் பார்க்கவும், பேச்சைக் கேட்கவும் முடியும்.
13. சிறந்த ஆசானின் கற்பித்தலைப் பல்வேறு பள்ளி மாணவர்கள் கண்டும் கேட்டும் பயன் பெறலாம்.
14. ஒலிப்பதிவு நாடா கல்வி ஒலிபரப்பினைப் பதிவு செய்து மீண்டும் போட்டுக் கேட்கப் பயன்படுகிறது.
15. கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், இலக்கிய மன்ற நிகழ்வுகள் இவற்றைப் பதிவு செய்து கேட்கப் பயன்படும்.
16. தொலைக்காட்சி புதிய பாட வகைகளில் பொறுப்புணர்வை ஏற்படுத்துகிறது, கற்பித்தலைப் பொருளுடையதாக மாற்றுகிறது.
17. மொழி பயிற்றாய்வுக் கூடம் மாணவர் தம் வேகத்திற்கேற்பக் கற்க உதவுகிறது.
18. வாய்மொழிப் பயிற்சியை வளர்க்கிறது, திருத்தமான ஒலிப்புப் பயிற்சியினைப் பெறவும், உரையாடல் திறன் பெறவும், மேடைப்பேச்சு முறையை அறியவும் முடிகிறது.

**கரும்பலகையின் பயன்கள்**

கரும்பலகையின் துணையின்றி ஆசிரியர் எதனையும் கற்பிக்க முடியாது. உலகில் எந்த நாடாயினும், எந்தக் கல்விக்கூடமாயினும் கரும்பலகை இல்லாத வகுப்பறை இருக்க முடியாது. இதனைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் கற்பித்தல் சாதனமாகக் கொள்ளலாம். ஆசிரியர் முக்கியமான கருத்துக்களைத் தெளிவாகவும், அழகாகவும் எழுதுதல் வேண்டும்.

**பயன்கள்**

ஆசிரியர் முக்கியமான கருத்துக்களை மட்டும் தொடர்ச்சியாக எழுதிக் கோடிட்டுக் காட்டப் பயன்படுகிறது.

வண்ணச் சுண்ணக்கட்டிகளைப் பயன்படுத்துவதால் மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கருத்துகள் மனதில் பதியும்.

மாணவரின் கவனத்தை ஈர்த்துப் பாடப்பொருளில் நிலைபெறச் செய்து கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

கற்றல், கற்பித்தல் என்ற இரு செயல்களும் கல்வியின் நோக்கத்தை நிறைவடையச் செய்கின்றன.

மொழியாசிரியர்கள் இலக்கணப் பாடத்தில் எடுத்துக்காட்டுகளை வண்ணச் சுண்ணக்கட்டிகளால் எழுதுவதால் அச்சான்றுகள் மனதில் பதிவதுடன் என்றும் நிலைத்து நிற்கும்.

வரலாற்று ஆசிரியர்கள் நாட்டுப் படத்தையோ, உலகப் படத்தையோ வரைந்து தலைநகர், தொழில்நகர், வர்த்தகநகர், துறைமுகங்கள், ஆறுகள், ஏரிகள் போன்ற முக்கியமாமன பகுதிகளைச் சுட்டிக்காட்டுவதால் கருத்துகள் மனதில் நிலைப்பதோடு நீடித்த பயனைத் தரும்.

புவியியல் ஆசிரியர்களும் முக்கிய பகுதிகளைச் சுட்டிக்காட்டுவது கற்பித்தலுக்கு வலு சேர்க்கும்.

அறிவியல் ஆசிரியர்கள் படம் வரைந்து பாகங்களைக் குறித்து விளக்குவதால் கற்றல் பயனுடையதாக மாறும். அறிவியல் ஆசிரியர்கள் செய்முறைப் பயிற்சிக்குப் பெரிதும் துணையாக அமைவதோடு சமன்பாடுகளையும், குறியீடுகளையும், முடிவுகளைக் காணும் கணக்குகளையும் எழுதி விளக்கப் பயன்படும்.

கணித ஆசிரியர்கள் கரும்பலகை இன்றிப் பாடத்தை நடத்த முடியாது. முக்கியமான கணக்குகளைச் செய்துகாட்டவும், பயிற்சிகளை விளக்கவும் பயன்படுகிறது. கரும்பலகை இன்றிக் கணிதப்பாடம் இல்லை எனலாம்.

கணினி ஆசிரியர்கள் குறியீடுகளையும், கணிப்பொறியில் இடம்பெறும் தகவல்களின் வகைகளையும், கணிப்பொறியின் இயக்கத்தையும் விளக்கிடக் கரும்பலகை பயன்படுகிறது. வினாடி வினா நிகழ்ச்சியில் பதில்களை எழுதி மதிப்பெண் வழங்க உதவுகிறது.

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மென்பொருள் துறையில் பயிற்சியில் ஈடுபடும் பொறியாளர்களுக்கு கருத்துகளை வழங்கிடக் கணினி தேவையாகவும், சேவையாகவும் அமைகிறது.

கரும்பலகையைக் கற்பித்தல், கற்றலில் இடம்பெறும்.

### 3.10.5 செயல்திட்டமுறை

‘செய்து கற்றல்’ என்ற உளநூல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்திட்ட முறையை **கில்பாட்ரிக்** என்ற அமெரிக்கக் கல்வியாளர் உருவாக்கினார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்லூரியில் தொழிற்பயிற்சிக்கூடத் தலைவரான **சி.ஆர். ரிச்சர்ட்ஸ்** என்பவர் முதன்முதலில் **செயல்திட்டம்** என்னும் தொடரைப் பயன்படுத்தினார்.

பல்வேறு பிரச்சினைகள் அடங்கிய ஒரு செயலை அதன் இயல்பான நிலையில் முழுமையாக நிறைவேறும்படி செய்து முடிப்பதே செயல்திட்டம் என ஸ்டீவன்சன் என்ற கல்வியாளர் கூறியுள்ளார்.

பள்ளிகளில் பயன்படுத்துவதற்கேற்ற நிலையில் கில்பாட்ரிக் என்பவர் செயல்திட்டத்தை வகுத்தளித்தார்.

1. பள்ளி வேலைகளை ஈடுபாட்டுடன் செய்வதன் மூலம் தங்கள் குறிக்கோள் நிறைவேறும் என்று அறியும் மாணவர்களுக்குச் செயலில் ஆர்வம் ஏற்படுகிறது.
2. கற்றலில் சிறந்தது உளவியல் கொள்கையான செய்து கற்றலாகும். இக்கொள்கையைச் செயல்திட்ட முறை பின்பற்றுகிறது. மாணவர்கள் தாங்களே திட்டமிட்டுச் செயலைச் செய்து முடிக்க உதவுகிறது.
3. செயலை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிகளையும், இடையிடையே தோன்றும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும் மாணவர்கள் நேரடி அனுபவங்களின் மூலம் பெறுகின்றனர்.
4. பள்ளி வாழ்க்கை என்பது கற்பனையாக இல்லாமல் வெளியுலகில் நிகழக்கூடிய செயல்களைப் போல் அமைய செயல்திட்ட முறை உதவுகிறது.

கல்வி வல்லுநர்களான ஜான்டூயி, கில்பாட்ரிக் போன்றோர் கருத்துகளே செயல்திட்ட முறையின் அடிப்படைகளாக அமைகின்றன.

**செயலைத் தேர்ந்தெடுத்தல்**

1. செயல் திட்டத்திற்குரிய செயல்களை மாணவர்களே தேர்ந்தெடுக்க வேண்டும்.
2. செயலைத் தேர்ந்தெடுக்கும் அனுபவம் மாணவர்க்கு இன்மையால் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும் ஆனால் அதேநேரத்தில் மாணவர்களே தேர்ந்தெடுத்தார்கள் என்று உணரும்படிச் செய்ய வேண்டும்.
3. செயல்திட்டம் மாணவரின் அறிவு, திறன் ஆகியவற்றிற்கு ஏற்றதாக அமைய வேண்டும்.
4. மாணவர் தேர்ந்தெடுக்காமல், ஆசிரியரால் திணிக்கப் பட்டதாயின் மாணவர் அவ்வளவு ஈடுபாட்டுடன் செயல்பட மாட்டார்கள்.

### 3.11 திட்டமிடுதல்

வள்ளுவர் ‘வினைத்திட்பம்’ என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். இவ்வதிகாரம் செயலை மேற்கொள்ளும் மனஉறுதியையும் திட்டமிடுதலையும் தெள்ளிதின் தெரிவிக்கிறது. வள்ளுவர்

திட்டமிடுதலை ‘எண்ணித் துணிக கருமம்’ என்றார். திட்டமிடாத எச்செயலும் சிறப்புற அமையாது என்பது வள்ளுவர் வாய்மொழி மட்டுமன்று அறிஞர்களின் கருத்துமாகும்.

1. செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் திட்டமிடுதலிலும் செயல் நிறைவடையும் வழிகளை ஆய்வதிலும் மாணவர்க்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.
2. திட்டமிடத் தேவையான அறிவைப் பெற நூலகம் சென்று நூல்களைத் தெரிவு செய்து படிப்பதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.
3. மாணவர்கள் திட்டமிடும்போது மிகச் சிறு தவறு செய்யின் அவர்களே திருத்திக் கொள்வார்கள். பொருளிழப்போ, உயிரிழப்போ நடைபெறக் கூடிய மிகப் பெரிய தவறாயின் ஆசிரியர் தலையிட்டுத் திருத்தலாம்.
4. திட்டமிட்டதை முறைப்படுத்தி எழுதி வைப்பதற்கு ஆசிரியரின் வழிகாட்டுதல் வேண்டும்.

**திட்டமிட்டதை நிறைவேற்றுதல்**

ஒரு செயலைத் திட்டமிட்டால் மட்டும் போதாது. அதைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும். மாணவர்கள் பாடப்பொருள் பற்றிய செயலை நிறைவேற்றப் பயிற்சியும் முயற்சியும் தேவை. செயலை நிறைவேற்ற ஆசிரியரின் துணை இன்றியமையாதது.

**நிறைவேற்றுதல்**

1. செயல்திட்ட முறையில் செயலை நிறைவேற்றுதலே மிகவும் சுவைமிகு பகுதியாகும். இடையில் தோன்றும் இடர்ப்பாடுகளைக் களைந்து செயலை நிறைவேற்றுவதால் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.
2. ஆர்வத்தால் மாணவர்கள் செயல்திட்டத்தின் நோக்கத்திற்கு மாறாகச் சென்றுவிடாதபடி ஆசிரியர் மேற்பார்வை செய்ய வேண்டும்.
3. செயல்திட்டத்தை மாணவர்கள் நிறைவேற்றும் போது ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர் கண்காணித்தல் வேண்டும். செயலைச் சரிபார்க்கும்படி அவர்களையே தூண்ட வேண்டும்.
4. செயல்திட்டத்தை நிறைவேற்றும் போது ஏற்படும் சிக்கலால் மாணவர்கள் செயலைக் கைவிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.இதற்கு ஆசிரியரின் வழிகாட்டுதலே தேவையானது.

**3.12 மதிப்பிடுதல்**

மதிப்பிடுதல் என்பது பொருளின் தரத்தை மதிப்பிடுவது போல் கற்றலின் தரத்தை மதிப்பிடுதலாகும். மதிப்பிடுதல் மூலம் செயல்திட்ட முறையின் வெற்றியை அறிய முடியும்.

1. செயல்திட்டத்தை முடித்தபின் மாணவர் அதன் நிறைகுறைகளை ஆராய்தல் வேண்டும்.
2. செய்யாமல் விடுபட்டவை, செய்யாமல் தவிர்க்க வேண்டியவற்றை மாணவர்களே பட்டியலிட்டுக் கூற வேண்டும்.
3. செயல்திட்டம் நிறைவேற வேறு என்னென்ன வழிமுறைகளைக் கையாளலாம் என மாணவர் சிந்தித்துக் கூறவேண்டும்.

இனிச் செயல்திட்ட முறையின் நிறைகுறைகளை ஆராயலாம்.

**நன்மைகள்**

ஒவ்வொரு செயலிலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. செயல்திட்ட முறையும் இதற்கு விதிவிலக்கன்று. செயல்திட்ட முறையில் உள்ள பயன்கள் சிலவற்றைக் காண்போம்.

1. மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்படும் பண்பினை வளர்த்தலே இத்திட்டத்தின் சிறப்பியல்பாகும்.
2. கடமை உணர்வு, திட்டமிட்டு நிறைவேற்றும் பண்பு, மதிப்பிடுதல், கூட்டுறவு மனப்பான்மை போன்ற பண்புகளைச் செயல்திட்டமுறை மாணவர்களிடம் வளர்க்கிறது.
3. நடைமுறை வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கலுக்குத் தீர்வு காணச் செயல்திட்ட முறை பயிற்சி அளிக்கிறது.

4. உழைப்பின் உயர்வை மாணவர்கள் உணர செயல்திட்டம் வழிவகுக்கிறது.
5. செயல்திட்டம் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கிறது மாணவர்கள் புதியனவற்றைச் செய்யும் திறன் பெறுகிறார்கள்.

**குறைகள்**

1. பாடப்பகுதிகளை ஓர் ஒழுங்குக்குட்பட்டு மாணவர் அறிந்து கொள்ள முடிவதில்லை.
2. செயல்திட்டத்திற்குட்பட்ட பாடங்களை மட்டும் கற்க முடியும்; எல்லாப் பாடங்களையும் கற்க முடியாது.
3. ஒவ்வொரு செயல்திட்டத்தையும் சிறந்த முறையில் நிறைவேற்ற மிகுதியான பொருட்செலவு ஏற்படும்.
4. குறித்த செயல்திட்ட வேலை குறித்த காலத்தில் முடியும் என்று கூறமுடியாது; அளவுக்கு அதிகமான காலவிரையம் ஏற்படும்.
5. வகுப்பறைக்கு வெளியே செயலில் ஈடுபடுவதால் மாணவர்களை ஓர் ஒழுங்குமுறைக்குக் கொண்டுவருவது சிரமம். ஆசிரியர் திறமையாயிருந்தால் எல்லோரும் செயலில் ஈடுபடுவர்; இன்றேல் மாணவர் பலர் செயலில் ஈடுபடாமல் இருப்பர்.

**3.12.1 மொழிப்பாடம் கற்பிப்பதில் செயல்திட்ட முறை**

செயல்திட்ட முறையை உயர்நிலைப் பள்ளித் தமிழ்ப் பாடங்களுக்குப் பயன்படுத்தலாம்.

இலக்கிய மன்ற நிகழ்வு, கலைநிகழ்ச்சிகள், நாடகம் நடத்துதல், வகுப்பு இதழ், பள்ளி இதழ் தயாரித்து வெளியிடுதல், ஆண்டுவிழா நடத்துதல் போன்றவை சிறப்புற சூழல் அமைத்துத் தரலாம். பாடநூல்களை மதிப்பிடச் செய்வதில்கூட இம்முறையைக் கையாளலாம்.

**விளையாட்டுமுறை கற்பித்தல்**

**அறிமுகம்**

விளையாட்டுமுறை கற்பித்தலை மலரும் மொட்டுக்களாகிய சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அளிக்கும் பயிற்சியில் கொண்டுவந்தவர் மாண்டிசோரி அம்மையார் அவர்கள்.நம்முடைய எட்டயபுரத்துக் கவிபாரதியும், இக்கருத்தை வழிமொழிவது போல் 'ஓடி விளையாடு பாப்பா' எனப் பாப்பாவை அழைத்தார். பின்னர் கூடி விளையாடச் சொன்னார். விட்டாரா பாரதி? 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்றார். இதுவும் விளையாட்டுமுறைக் கல்வியின் தொடக்கம்தான்.

**விளையாட்டுமுறை**

விளையாட்டு என்பது குழந்தைகளிடம் இயல்பாக இருக்கின்ற ஒன்று. புறத்தூண்டுதல் ஏதுமின்றிச் சில மகிழ்ச்சியூட்டும் செயல்களில் ஈடுபடுவதே விளையாட்டு.

விளையாட்டுச் செயல்களில் குழந்தைகள் தங்களை மறந்து ஈடுபடுகின்றனர். குழந்தைகளின் விளையாட்டுக்களில் உடற்செயல் மட்டுமன்றிக் கற்பனை போன்ற உளச்செயல்களும் இடம் பெறுகின்றன. இவை படிப்படியே கல்வியாக மலர்கின்றன.

**விளையாட்டும் வேலையும்**

1. செயலின் நிறைவாக ஒரு கருத்தினைப் பெறும் மகிழ்ச்சிக்காக விளையாட்டு நிகழ்வதில்லை. ஆனால் செய்யும் வேலை மூலம் ஒரு கருத்தினையோ, ஒரு முடிவினையோ பெற முடியும். இதுவே விளையாட்டுக்கும், வேலைக்குமிடையே உள்ள வேறுபாடு.
2. ஒருவன் தானாக விரும்பி ஒரு செயலைத் தேர்ந்தெடுக்கிறான். அதனைச் செய்வதால் மகிழ்ச்சியும் ஒரு முடிவும் பெறுகிறான். அவ்வாறு செய்பவனுக்கு அவ்வேலை விளையாட்டாக அமைகிறது. அதே செயலை மற்றவரின் ஆணைக்குட்பட்டு ஒருவன் செய்கிறான். அச்செயல் அவனைப் பொருத்தவரை வேலையாக அமைகிறது. ஆற்று மணலில் ஒரு குழந்தை கோட்டை கட்டுகிறது பின்னர் அழித்து மீண்டும் கட்டுகிறது. அச்செயல் அக்குழந்தைக்கு

விளையாட்டாக அமைகிறது. ஒரு கொத்தனார் செங்கற்களைக் கொண்டு வீடு கட்டுகிறான் அது வேலையாக அமைகிறது.

இந்த விளையாட்டுச் செயல் படிப்படியாக கல்வியாக மாறுகிறது. ஆனால் வேலையை வேலையாக நினைத்துச் செய்யும்போது அது வேலையாக அமைகிறதே தவிரக் கல்வியாகக் கூட அமையவில்லை.

3. இயல்பாக அமையும் விளையாட்டு குழந்தைக்கு 'உடற்கல்வியாக' அமைகிறது. கட்டாயப்படுத்திக் குழந்தையை விளையாட்டில் ஈடுபடுத்துவது விளையாட்டாக அமைகிறதே தவிர உடற்கல்வியாக மாறவில்லை.

**தொடக்கநிலை வகுப்பு – விளையாட்டுமுறைக் கல்வி**

1. குறிப்பிட்ட எழுத்துகளை வட்டமிடல்.

கரும்பலகையில் 'தா, நா.பா' போன்ற எழுத்துகளை எழுதுக. 'தோட்டம், தாத்தா, நான், நோய்' போன்ற சொற்களையும் எழுதுக.

தோட்டம் என்ற சொல்லில் 'தா' வரிவடிவத்தை வட்டமிட்டால் அது பிழைபட அமையும். ஆனால் 'தாத்தா' என்ற சொல்லில் உள்ள 'தா' என்ற வரிவடிவத்தை வட்டமிட்டால் அது பிழைபட அமையாது. இங்கு விளையாட்டுமுறை மூலம் எழுத்தின் வரிவடிவம் அடையாளம் காணப்படுகிறது.

2. படங்களின் பெயர்களில் ஓர் எழுத்து விடுபட்டிருக்க அதனை எழுத்துகளிலிருந்து எடுத்து நிரப்பச் செய்தல்.

□ல்

என இருக்கும். 'கா' என்ற எழுத்தை எடுத்துச் சொல்லாக அமைத்தல்.

3. பொருள்களைப் பார்த்துப் பெயர் எழுதச் செய்தல்.

பல பொருள்களின் படங்கள் அடங்கிப் பெரிய படத்தைக் கொடுத்துக் குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பெயர்களை எழுதச் செய்யலாம். படம், பட்டம், பம்பரம் ......... போன்றவை.

4. பொருத்துதல் விளையாட்டு

| | | | |
|---|---|---|---|
| எடுத்துக்காட்டு: | கதை | - | கேள் |
| | படம் | - | சொல் |
| | பாடம் | - | பாடு |
| | பாட்டு | - | பார் |

5. எழுத்துக் கூட்டல் விளையாட்டு

தனித்தனி எழுத்து அட்டைகளைக் குவித்து வைத்துக் கொண்டு ஆளுக்கொரு எழுத்தாகச் சொல்லிச் சொற்களை உருவாக்குதல் .

எடுத்துக்காட்டு: குமரன், சிவா, பாரதி

6. ஓர் எழுத்து சேர்த்துச் சொல்லாக்குதல்

எடுத்துக்காட்டு: ம – ம் ஸ்ரீ மரம், மடம், மதம்

ற – றம் ஸ்ரீ அறம், மறம், திறம்

**நடுநிலை வகுப்புகளுக்கு**

1. இரட்டைக் கொம்பு சேர்த்துச் சொல்லாக்குதல்

எடுத்துக்காட்டு: பாடு – போடு

காடு – கோடு போன்றவை.

2. சொற்களை முறைமாறிக் கொடுத்து வாக்கியமாக்குதல்

எடுத்துக்காட்டு: திருவினை முயற்சி ஆக்கும்

முயற்சி திருவினை ஆக்கும்.

3. ஓர் ஒலியமைந்த சொற்களைச் சொல்லுதல்

எடுத்துக்காட்டு: காடு, வீடு, ஓடு, பாடு, ஆடு ...... எனக் கூறுதல்.

ஆலை, சாலை, சோலை, பாலை எனச் சொல்லுதல்.

4. கதை அமைத்தல்

ஒரு கதையின் முதல் வாக்கியத்தை ஆசிரியர் சொல்லுவார். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாக்கியமாக அமைத்துக் கதையை முடித்தல்.

5. படம் ஒன்றைக் காட்டி ஏற்ற தலைப்புக் கொடுக்கச் செய்தல்.

6. குழந்தைகள் வட்டமாக நின்றுகொண்டு ஒவ்வொருவரையும் ஒரு குறள் கூறச் செய்தல். அரை நிமிடத்தில் குறள் சொல்லாதவர் வெளியேற வேண்டும் கடைசிவரை விளையாட வேண்டும் சொன்ன குறளை மீண்டும் சொல்லக்கூடாது.

7. ஒரு நிகழ்ச்சி பற்றிய பல வாக்கியங்களைக் கொடுத்துக் கருத்து ஒழுங்காக அமையுமாறு முறைப்படுத்துதல்.

8. ஒரு கதையின் பாதியை ஆசிரியர் சொல்வார் மீதிப் பாதியை மாணவர்கள் சொல்லி முடிக்க வேண்டும்.

9. இரு பொருள் தரும் சொற்களைக் கூறச் செய்தல்.

எடுத்துக்காட்டு: மாலை, ஆடு, ஓடு ......

10. சொற்கள் அமையும்படி விடுகதைகள் சொல்லுதல்.

எடுத்துக்காட்டு: மூன்று எழுத்துக்களால் ஆன சொல்.

தலை போனால் மறைக்கும்

இடை போனால் குரைக்கும்

கடை போனால் குதிக்கும் - குதிரை

மாணவர்களின் திறமைக்கும் சூழலுக்கும் ஏற்ப ஆசிரியர்கள் இவை போன்ற மொழி விளையாட்டுகள் பல அமைத்து மாணவர்களின் சொற்களஞ்சியத்தையும் மொழித் திறனையும் வளர்த்தல் வேண்டும்.

**விளையாட்டு முறையின் நிறைகள்**

1. மனதின் உள்ளுணர்வாலும், ஆர்வத்தாலும் கற்றல் இயல்பாக நிகழ்கிறது.
2. சுய பண்பாட்டு வளர்ச்சி உண்டாகிறது.
3. அனைவரும் கற்றலில் ஈடுபட வாய்ப்பு உள்ளது.
4. அறிதல், பதிவு, முனைவு ஆகிய மூன்று நிலைக் கற்றல் நிகழ்கிறது.

**விளையாட்டு முறையின் குறைகள்**

1. மழலையர் கல்வி, தொடக்கக் கல்வி ஆகிய இரு கல்வி நிலைகளுக்கே விளையாட்டு முறைப் பயிற்சி பொருந்தும்.
2. அனைத்துப் பாடங்களையும் விளையாட்டு முறையில் கற்பிக்க முடியாது.
3. சில குழந்தைகளே விளையாட்டு முறையில் கற்க விரும்புவர்.

தொடக்கப் பள்ளியில் பயிலும் மழலைகள் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர். எனவே அவர்தம் ஆர்வத்திற்கேற்பக் கற்க முடியும்.

### 3.13 நடிப்புமுறை கற்பித்தல்

கருத்துக்களைக் கேட்பதால் ஓரளவு அறிவு பெறுவர். அக்கருத்துக்களே காட்சிகளாக மாறி உணர்ச்சியைத் தூண்டும் வகையில் அமையுமாயின் அது காண்போரின் மனதில் நீங்கா இடம் பிடிக்கும். இதனைத்தான் நடிப்பு என்கிறோம். வகுப்பறைக் கற்பித்தலில் நடிப்பு முறையும் முக்கிய பங்காற்றுகிறது.

நடிப்புமுறை, விளையாட்டு முறையை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலச் சொல்லான ‘ட்ரயல்’ (trail) என்பது நாடகத்தையும், விளையாட்டையும் குறிக்கிறது.

கற்பனையின் விளைவாக நடைபெறுவது நடிப்பு. குழந்தைகளின் கற்பனையில் வீட்டில் உள்ள பொருள்கள் வெவ்வேறு பொருள்களாகத் தெரியும். மரக்கட்டைத் தொடர்வண்டியாகும் நாற்காலிகள் கப்பல்களாகும். சிறுவன் ஒருவன் கடைக்காரனாவான்; வண்டியோட்டியாவான். இப்படிப் பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் பல்வேறு உறுப்பினர்களாக மாறி நடிப்பதில் ஆர்வம் காட்டுவர். இந்த ஆர்வத்தைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தினால் கற்பித்தல் பொருள் உடையதாக அமையும்.

**நடிப்புமுறையும் மொழிப்பாடமும்**

நாடகத்தை நடிப்பதைவிட, நாடகத்தைத் தயாரிப்பதிலேயே அதிகமான மொழிப் பயன்களைப் பெறமுடியும்.

1. நடிப்புக்கு எடுத்துக் கொண்ட பாடப்பகுதிக்கு உரையாடல்கள் எழுதுதல், பாடல்கள் எழுதுதல், முன்னுரை எழுதுதல், விளம்பரங்கள் எழுதுதல் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தலாம். இவற்றால் மாணவர்களது எழுத்தாற்றல் வளரும்.
2. நடிக்க வேண்டிய பகுதியின் உரையாடல்களை மனப்பாடம் செய்வதால் மாணவர்களின் மனப்பாடத் திறன் வளரும்.
3. சிறந்த சொற்களையும் அரிய சொற்றொடர்களையும் மனப்பாடம் செய்வதால் மாணவர்களது சொற்களஞ்சியப் பெருக்கம் அதிகமாகும். நாளடைவில் அவற்றை வாழ்வில் பயன்படுத்தும் திறன் பெறுவர்.

புறநானூற்றுக் காட்சிகளையோ, அகநானூற்றுக் காட்சிகளையோ நாடகமாக நடிக்கும்போது பாடப்பகுதிகள் எளிதாக மாணவர்களைச் சென்றடையும்.

**நடிப்புமுறையின் நிறைகள்**

1. மாணவர்களிடம் உள்ள அச்சம், கூச்சம் அகலும்.
2. மாணவர் கற்றலில் ஆர்வத்தோடு ஈடுபடுவர்.
3. நடிப்புமுறை மொழிப் பாடத்தில் கவர்ச்சியை ஏற்படுத்தும்.
4. நிகழ்ச்சிகளை நேரே பார்ப்பதால் கருத்துக்கள் மனதில் நன்கு பதியும்.
5. குரலில் ஏற்றத் தாழ்வுடன் பேசவும், அழகிய தொடர்களை மனப்பாடம் செய்து பேசவும் வாய்ப்புக் கிடைக்கிறது் அதனால் மொழித்திறன் நன்கு வளரும்.

**நடிப்பு முறையின் குறைகள்**

நடிப்பு முறையில் கற்பிப்பதால் சில குறைகளும் நிகழும்.

1. அனைத்துப் பாடப் பகுதியையும் நடிப்புமுறையில் கற்பிக்க முடியாது; சில பகுதிகளை மட்டுமே கற்பிக்க முடியும்.
2. பாடப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட அதிக நேரத்தை ஒதுக்க வேண்டும் நடிக்கும் அனைவரும் வராவிடில் கற்பிப்பதில் இடையூறு ஏற்படும்.
3. கல்வி உரிய பயனைத் தருவதற்குப் பதில் வெறும் விளையாட்டாக மாறிவிடும். மாணவர் கல்வி முன்னேற்றம் தடைப்படும். நடிப்பு முறையை ஆசிரியர் கவனமாகக் கையாள வேண்டும்.

**மேற்பார்வைப் படிப்பு**

மேற்பார்வைப் படிப்பு என்பது படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் ஒருவகைக் கற்பித்தல் முறையாகும். படிக்கும் முறையில் மாணவர்களுக்கு வழிகாட்டி அவர்களைப் படிக்குமாறு செய்தலே மேற்பார்வைப் படிப்பு முறையாகும்.

மேற்பார்வைப் படிப்பு மூன்று படிநிலைகளைக் கொண்டது. அவை படிப்பதற்குரிய சிறந்த முறைகளையும் வழிகளையும் மாணவர்கள் அறியும்படிச் செய்தல். மாணவர்கள் படிக்கும் பொழுது

ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து படிப்பு முறையில் அமைந்த திறன்களை அவர்கள் அறியும்படிச் செய்தல். புதுப்பாட ஒப்படைப்புகளைக் கற்கும் பொழுது ஆசிரியர் துணையாக இருத்தல்.

**3.14 மேற்பார்வைப் படிப்பை நடைமுறைப்படுத்தும் முறை**

மாணவர்களை ஒரு குறிக்கோளுடன் கற்பதற்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். ஓர் ஒப்படைப்போ, சில வினாக்களோ கொடுத்து நூல்களிலிருந்து அவற்றிற்குரிய விடைகளை எழுதச் செய்யலாம்.அவ்வாறு நூல்களிலிருந்து செய்திகளைத் திரட்டும் பொழுது படிக்கும் திறனை வளர்த்தல் வேண்டும். நூலின் பொருளடக்கம், முன்னுரை, பத்தித் தலைப்புக்கள், பின் இணைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தித் தங்களுக்கு வேண்டிய செய்திகளைத் திரட்டும் திறனை அவர்களிடம் வளர்க்கலாம்.

தேவையான பகுதிகளை ஆழ்ந்து படிக்கவும், தேவையற்ற பகுதிகளை மேலோட்டமாகப் படிக்கவும் பயிற்சி தரப்படுகிறது. நூல் நிலையத்தைப் பயன்படுத்தும் முறையை ஆசிரியர் விளக்குதல் வேண்டும்.

**படிப்பு நேரத்தில் ஆசிரியரின் பங்கு**

1. மாணவர்களைச் சரியான வழியில் செல்லுமாறு நல்வழிப்படுத்துதல் வேண்டும்.
2. மாணவர்க்கு ஏற்படும் ஐயங்களை நீக்குதல் வேண்டும்.
3. மாணவர்களது படிப்புத்திறனை வளர்க்க ஆசிரியர் பல்வேறு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.
4. ஒரு பகுதியைப் படித்து அதிலுள்ள முக்கியக் கருத்துக்கள் அடங்கிய குறிப்புச் சட்டகம் தயாரிக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

**மேற்பார்வைப் படிப்பு முறையை மேற்கொள்ளும் விதம்**

ஒரு பாடவேளைத் திட்டம், இரு பாட வேளைத் திட்டம், தனிப்பாட வேளைத் திட்டம் என வெவ்வேறு முறைகளில் மேற்பார்வைப் படிப்பு முறையை மேற்கொள்ளலாம்.

ஒரு பாடவேளைத் திட்டமாயின் ஆசிரியர் பாடவேளையின் முதற்பகுதியை வழிகாட்டலுக்கும், பிற்பகுதியை மாணவர் செயல்பாட்டிற்கும் விட்டு விடலாம். காலம் குறைவாக இருப்பதால் இருபாட வேளைத் திட்டம் இதைவிடச் சிறந்ததாகும். இரு பாடவேளைத் திட்டத்தில் இரண்டு பாடவேளைகளும் சேர்ந்தாற் போல் அமைவது சிறப்பு. இதனை ஆசிரியர் தன் வசதிக்கேற்ப வேலை நேரத்திற்கு முன்னரோ, வேலை நேரத்திற்குப் பின்னரோ தெரிவு செய்யலாம். இதில் ஒரு பாடவேளையை ஆசிரியர் வழிகாட்டுதலுக்கும் அடுத்த பாடவேளையை மாணவர் செயல்பாட்டிற்கும் ஒதுக்கலாம். மேற்பார்வைப் படிப்பு முறையில் நிறைகளும் உண்டு குறைகளும் உண்டு.

**நிறைகள்**

1. மேற்பார்வைப் படிப்பு முறை விரைவாகக் கற்போருக்கும், மெதுவாகக் கற்போருக்கும் பயன்படும் வண்ணம் அமைந்துள்ளது.
2. மாணவர்கள் முழுமையாகக் கற்றலில் ஈடுபட வாய்ப்பை ஏற்படுத்துகிறது; தேவையைப் பொருத்து ஆசிரியர் வழிகாட்டுதல் வேண்டும்.
3. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பாடப்பகுதியைக் கற்று முடிக்கப் பயிற்சி அளிக்கிறது.
4. மாணவர்கள் தாங்களே கற்பதால் தன்னம்பிக்கை வளர்கிறது.
5. சிறந்த படிப்புப் பழக்கமும், படிக்கும் திறனும் வளர வாய்ப்பு உள்ளது.
6. மாணவர் பங்கேற்பு கற்றல் முறையில் அதிகம்.

**குறைகள்**

1. எல்லோரும் குறிப்பிட்ட காலத்தில் கற்றலை முடிக்க முடியாத நிலை ஏற்படுவதால், கற்றலில் முழுமை பெறாதநிலை ஏற்படும்.
2. இந்த வகைக் கற்றல் முறைக்கான படிப்புத்திறன் எல்லா மாணவர்களிடமும் அமைந்திருக்கும் என்பதற்கில்லை.

3. சில மாணவருக்கு ஆசிரியரின் வழிகாட்டுதல் அதிகமாகத் தேவைப்படலாம். அதனால் ஆசிரியருக்கு வேலைப் பளு அதிகமாகும்.
4. சரியான கற்றல் பகுதியைத் தேர்ந்தெடுத்துச் சரியாகத் திட்டமிடவில்லை என்றால் காலமும் முயற்சியும் வீணாகும்.

**மொழிப்பாடத்தில் மேற்பார்வைப் படிப்பு முறை**

தமிழில் செய்யுள் பகுதியில் பொருள் உணர்தல் திறனில் மாணவர் பயிற்சி பெறும்போது மேற்பார்வைப் படிப்பு முறையைக் கையாளலாம்.

துணைப்பாட நூல்களில் கட்டுரை எழுதிப் பயிற்சி பெறும்போதும், பொதுவான நூல்களிலிருந்து குறிப்பிட்ட செய்திகளைத் திரட்டி எழுதும் போதும் மேற்பார்வைப் படிப்பு முறையைக் கையாளலாம். பொதுவாகச் செய்யுள், உரைநடை, துணைப்பாடம் இவற்றைக் கற்பித்தலுக்கு மேற்பார்வைப் படிப்பு முறை பயன்படும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-10**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

10. கரும் பலகையின் பயன்களை விளக்குக.

................................................................................................................................................................

11. செயல் திட்ட முறையில் திட்டமிடுதல் பற்றி எழுதுக.

................................................................................................................................................................

12. நடிப்புமுறையின் நிறைகளைக் கூறுக.

................................................................................................................................................................

**3.15 பாடநூலின் அமைப்பு**

**பாடநூல்-பொருள்**

கலைத்திட்டத்தின் நோக்கத்தை அடைய ஆசிரியராலும் மாணவராலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய மிகச் சிறந்த கருவியே பாடநூல் ஆகும். கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் நாட்டின் எதிர்காலத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய கல்வி அமைப்பின் ஊடகமாக விளங்குவதே பாடநூல். பாடநூல் குழுவினர் மாணவர்களின் கால வயது, மன வயது, மனப்பான்மை,ஆர்வம்,நுண்ணறிவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எழுத வேண்டும். பாடநூலைத் தயாரிக்கும்போது அடிப்படைக் கூறுகளை மனதில் கொள்ள வேண்டும்.

**பாடநூலைத் தயாரித்தலுக்கான வழிகாட்டல்கள்**

1. பாடத்திட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுதல்
2. பாடநூற் கருத்துகள் மாணவரின் வாழ்வுக்கு உதவுதல்
3. மாணவர்களின் சிந்தனையைத் தூண்டக் கூடியதாக இருக்க வேண்டும்
4. காரண காரியத் தொடர்பை விளக்க வேண்டும்
5. மொழிநடை எளிமையாக இருத்தல் வேண்டும்.
6. பாடத்திட்டத்தின் நோக்கங்களை அடைய உதவ வேண்டும்.
7. பாடத் திட்டத்தை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும்.

**ஹன்ட்டர் மதிப்புப் புள்ளி நிரல்**

கற்பிக்கும் ஆசிரியரால் மட்டுமே நல்ல பாடநூல்களை மாணவர்களுக்குத் தரமுடியும். ஹன்ட்டர் என்பவர் ஹன்ட்டர் புள்ளி அட்டை என்ற ஒன்றை உருவாக்கி நல்ல பாடநூலைத் தேர்வு செய்ய வழிகாட்டியுள்ளார். ஒரு நூலின் உட்கூறுகளுக்கு அவர் மதிப்பெண் புள்ளி அளித்துள்ளனர்.

**ஹன்ட்டர் மதிப்புப் புள்ளி நிரல்**

| | உட்கூறுகள் | புள்ளி |
|---|---|---|
| 1. | ஆசிரியர் தகுதி | 50 |
| 2. | நூலின் விலை மற்றும் கட்டமைப்பு | 100 |

| | | |
|---|---|---|
| 3. | உளவியல் கருத்தடிப்படை | 300 |
| 4. | பாடப்பொருள் | 250 |
| 5. | மொழிநடை | 110 |
| 6. | கற்றலனுபவம் | 140 |
| 7. | ஆசிரியருக்கு உதவும் பிற கூறுகள் | 50 |
| | மொத்தம் | 1000 |

**பாடநூல் தயாரிப்பின் போது மனதிற் கொள்ளத் தக்கன**

1. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுதல்
2. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லுதல்
3. பாடப்பகுதிகளை முடிவு செய்தல்
4. முரண்பாடில்லாமல் கருத்தாக்கம் உருவாக்குதல்
5. கல்வி ஏற்பாட்டின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் எழுதுதல்
6. தாய்மொழிக் கல்விக்கு ஒதுக்கப்படும் கால அளவு
7. மாணவனின் மன வயது, காலவயதைக் கருத்திற்கொள்ளுதல்
8. மொழித்திறன் வளர்பயிற்சி
9. சிறந்த மதிப்பீட்டுக் கொள்கை
10. வாழ்வோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும்
11. ஆசிரியரின் கல்வித்தகுதி பணி அனுபவம் இவற்றின் வெளிப்பாடாக அமைய வேண்டும்.

**3.16 நல்ல பாடநூலில் இருக்க வேண்டிய பண்புகள்**

**ஒரு தரமான பாடநூலின் தன்மைகள்**

ஒரு நல்ல பாடநூல் (1) வடிவமைப்பு (2) உள்ளடக்கம் (3) மொழிநடை (4) மதிப்பிடல் (5) பயிற்சிகள் (6) கற்பித்தல் துணைக் கருவிகள் ஆகிய ஆறு கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**1. வடிவமைப்பு**

நூலின் வடிவமைப்புச் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். வடிவமைப்பில் புறத்தோற்றம், அகத்தோற்றம், விலை, தாளின் தரம், நூல்கட்டமைப்பு, அச்சடித்த முறை ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன.

பாடநூலின் கருத்தாக்கத்திற்கேற்ற வண்ணப்படங்கள் அட்டையில் இடம்பெற வேண்டும். அட்டையின் மேற்புறம் நூலின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பகத்தார் பெயர் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். அகத்தோற்றத்தில் தாளின்தரம், எழுத்துக்களின் புள்ளி அளவு, படங்கள், குறிப்புகள் ஆகியன அடங்கும் தாள்கள் நன்கு தைக்கப்பட்டிருக்க வேண்டும் எழுத்துக்களின் அச்சுமுறை சிறப்பாக இருக்கவேண்டும்.

தரமான வெண்மையான தாளில் அச்சிட வேண்டும். மையத் தலைப்பு, சிறு தலைப்பு, உட்தலைப்பு, மேற்கோள்கள் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டும் வண்ணம் எழுத்துக்களின் அளவும், தடிமனும் வேறுபட வேண்டும் பாடநூலின் தரத்திற்கேற்ப விலை அமைய வேண்டும் எல்லோராலும் எளிதில் வாங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

நூலினை வாங்கும் மாணவர்கள் படித்து முடித்த பிறகும் அந்நூலினைப் பாதுகாக்கும் படியான வடிவமைப்பு, கட்டமைப்பு, தாளின் தரம் ஆகியன அமைந்திருக்க வேண்டும்.

**2. உள்ளடக்கம்**

பாடநூல் பல்வேறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு அதன்கீழ் பல்வேறு பாடத் தலைப்புகள் இடம்பெற வேண்டும். மொழிப்பாடத்தில் இலக்கியம்,இலக்கணம்,மொழி ஆகியவற்றோடு அறிவியல்,

மருத்துவம்,வரலாறு,புவியியல் தொடர்பான பாடங்களும் இடம்பெற வேண்டும். துணைப்பாடம், கடிதம்,கட்டுரை,உரையாடல், நாடகம், சிறுகதை, கவிதை, மொழிப்பயிற்சி ஆகியவையும் இடம்பெற வேண்டும். வழிகாட்டும் குறிப்புகள், அட்டவணைகள், வரைபடங்கள், கலைச்சொற்கள், துணை நூற்பட்டியல் ஆகியனவும் இடம்பெற வேண்டும்.

**3. மொழிநடை**

வகுப்பில் உள்ள மீத்திறன் மிக்க மாணவர், சராசரி மாணவர், பின்தங்கிய நிலையில் உள்ளோர் என அனைவருக்கும் புரியும் வண்ணம் பாடநூல் எளிய மொழிநடையில் அமைய வேண்டும்.

இலக்கியப் பகுதியில் நகைச்சுவை உணர்வூட்டக் கூடிய பகுதிகள் அமைய வேண்டும். பாடப்பகுதியில் ஆசிரியர் தக்க சொற்களையும் தேவைப்பட்டால் மிக்க சொற்களையும் பயன்படுத்த வேண்டும். இன்றியமையாக் கருத்துகள் தடித்த எழுத்துகளில் இடம்பெற வேண்டும்.

**4.மதிப்பிடல்**

பாடநூலைப் பயின்ற பிறகு மாணவர்கள் தங்களைத் தாங்களே சுய மதிப்பீடு செய்ய வேண்டும். அதற்கேற்ற வகையில் எளிய வினாக்கள் இடம்பெற வேண்டும். மாணவர்களின் கற்றலில் பன்முறைப் பயிற்சி பெற இப்பயிற்சிகள் பயன்படும்.

**5. பயிற்சிகள்**

மாணவர்களின் மொழியறிவை வளர்க்கும் பல்வகை மொழித்திறன் வளர்பயிற்சிகள் இடம்பெற வேண்டும். மாணவர்களின் கற்றலில் பன்முறைப் பயிற்சி பெற இப்பயிற்சிகள் பயன்படும்.

**6. கற்பித்தல் துணைக்கருவிகள்**

பாடப்பொருளைக் கற்பிப்பதற்குத் தேவையான வரைபடங்கள், மாதிரிகள், சுழலட்டைகள், குறுந்தகடுகள் போன்றவை பற்றிய குறிப்புகள் இடம்பெற வேண்டும்.

**பாடத்திட்டமும் பாடநூல்களும்**

கற்றல், கற்பித்தல் செயலை நிறைவேற்ற உதவும் வழிமுறையே பாடத்திட்டம். மாணவர்களின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத் தேவைகளை முன்னிறுத்தி சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக மாற்றப் பாடத்திட்டம் உதவுகிறது.

கற்பித்தல் நோக்கங்களை அடைய உதவும் பாதையாகப் பாடத்திட்டம் அமையும். மாணவர்களின் கற்றல் அனுபவம், கற்றல் விளைவுகள், கல்வி வளர்ச்சி ஆகியவற்றைப் பாடத்திட்டம் செயல்படுத்துகிறது. பாடத்திட்டத்தின் குறிக்கோள்களை மாணவர்களுக்குக் கொண்டு செல்லவும், அவர்களின் உடல், உள்ளம் உடலியக்க வளர்ச்சியை உறுதி செய்யவும் பாடநூல்கள் உதவுகின்றன.

பாடத்திட்டமும், பாடநூல்களும் பிரிக்கமுடியாத தொடர்பினைப் பெற்றுள்ளன. தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகிய நிலைகளுக்கேற்ப பாடவளர்ச்சி அமையவெண்டும். மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு மொழிப்பாடங்கள் அமைகின்றன.

கற்பித்தலில் மரபு சார்ந்த முறைகளும், புதிய முறைகளும் பின்பற்றப்படுகின்றன. அண்மையில் புகுந்த நவீன முறைகளும் பின்பற்றப்படுகின்றன. பாடம் கற்பித்தலுக்குப் பல்வேறு கருவிகள் பயன்படுகின்றன. இவை எல்லாம் மேலே உள்ள பாடப்பகுதியில் விளக்கப்பட்டன.

**3.17 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- நுண்ணிலைக் கற்பித்தல் ஒரு பயிற்சி முறையே அன்றி, அதுவே ஒரு கற்பித்தல் முறை ஆகாது.
- நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியில் ஆசிரியர் ஒவ்வொருவரும் தனித்தனித் திறனில் பயிற்சி பெறுகின்றனர்.
- விரிவாகக் கற்பித்தலின் போது ஏற்படும் தன்னம்பிக்கை இல்லாத கற்பித்தலின் போது அனைத்துத் திறன்களையும் ஏற்ற இடங்களில் பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

- கற்பித்தல் திறனின் உட்கூறுகளைக் கையாளும்போது கற்றல் அனுபவமும் கற்பித்தல் அனுபவமும் அதிகமாகிறது.
- வலுவூட்டிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தினால் கற்றல் சிறக்கும். தேவை இல்லாமல் அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது.
- மாணவனின் தேவையையும், சமுதாயத்தின் தேவையையும் நாட்டின் வளர்ச்சி அடிப்படையிலும் அமையும் அமைய வேண்டும் என்பதே கல்வியின் இலக்காக அமையும்.
- ஒவ்வொரு பாடத்துக்குரிய சிறப்பு நோக்கங்களையும் கற்பிக்க வேண்டும். சிறப்பு நோக்கங்கள் மொழித் திறன்களை வளர்ப்பதாக அமைய வேண்டும்.
- பாடத் தொடர்பான செய்திகளை வரவழைத்து ஆர்வத்தை ஏற்படுத்திய பின்னர் பாடத் தலைப்பைக் கொண்டு முன்னுரை ஒன்று அளிக்க வேண்டும்.
- பள்ளி ஆசிரியர்களின் புதிய கற்பித்தல் முறைக்கு ஆண்டுதோறும் இந்நிறுவனங்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டி ஊக்குவித்து வருகின்றன.
- கற்பித்தலில் பயன்படுத்தப்படும் துணைக்கருவிகளை மூவகைப் படுத்துவர். அவையாவன: காட்சித் துணைக்கருவிகள், கேள்வித் துணைக்கருவிகள், காட்சி-கேள்வித் துணைக்கருவிகள்.
- பாடநூல் குழுவினர் மாணவர்களின் கால வயது, மன வயது, மனப்பான்மை,ஆர்வம்,நுண்ணறிவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எழுத வேண்டும்.
- கற்பித்தல் நோக்கங்களை அடைய உதவும் பாதையாகப் பாடத்திட்டம் அமையும்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1. நுண்ணிய கற்பித்தல் என்றால் என்ன?**

ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கற்பித்தலில் உள்ள பாடத்திறன்களில் ஒவ்வொரு திறனிலும் ஒன்றின்பின் ஒன்றாகப் பயிற்சி பெறுவதே நுண்ணியக் கற்பித்தல் திறனாகும். இது ஒரு பயிற்சி நுட்பமாகம். இப்பயிற்சியில் 5-10 மாணவர் இருப்பர்; பயிற்சி நேரம் 5-10 மணித்துளிகள்.

**2. நுண்ணிலைக் கற்பித்தலின் படிநிலைகள் யாவை?**

நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியில் பல படிநிலைகள் உள்ளன. அவை வருமாறு 1. பாடக்குறிப்பு, 2. வகுப்பறை, 3. மாணவர்கள், 4. உற்று நோக்குபவர், 5. மதிப்பிலும் குறியீடுகளும், 6. செயல் விளைவு கூறல் ஆகியவை.

**3. நுண்ணிலைக் கற்பித்தலில், கற்பித்தல் முறை எவ்வாறு அமைய வேண்டும்?**

பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கிறார்; மாணவர் கற்கிறார். அப்போது மாணவர் கவனிக்காமல் இருக்கலாம்; அல்லது பாடம் புரியாமல் இருக்கலாம். இக்குறைப்பாட்டைப் போக்கவே குறைந்த அளவு மாணவர்க்குக் குறைந்த கால அளவில், செம்மையாகவும் செய்து முடிக்க வேண்டும்.

**4. கற்பிப்புப் பழகுதல் என்றால் என்ன?**

கற்பித்தல் நிகழ்வைத் தயாரித்த பின் ஐந்து நிமிடங்கள் கற்பிக்க வேண்டும்; கற்பித்தலில் திறனும் அதன் உட்கூறுகளும் அமைய வேண்டும். இத்திறனில் கற்றலைவிடக் கற்பித்தலே முதலிடம் பெறுகிறது. கற்பிக்கும்போது இருவர் அல்லது மூவர் நோக்கங்களாகவும், மூவர் அல்லது நால்வர் மாணவராகவும் இருத்தல் நன்று.

**5. ஆசிரியர் இடமாற்றம் பற்றி எழுது.**

ஆசிரியர் ஒரே இடத்தில் நின்று கற்பிக்காமல் நகர்தல் வேண்டும். கரும்பலகையில் எழுதுதல், மாணவர்களின் அருகே சென்று பாராட்டுதல், நாட்டுப் பாடத்தில் ஓர் இடத்தைக் காட்டுதல், ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்லுதல் போன்ற செயல்கள் இடமாற்றம் எனப்படும்.

**6. மொழிச் சார்புடைய ஒலி பற்றி எழுது**

மாணவன் பதில் கூறும்போது ஆசிரியர் 'உம், உம்' எனச் சொல்லி மேலும் பதிலைக் சொல்லும்படிச் செய்தலே மொழிச்சார்புடைய ஒலி ஆகும்.

**7. செய்யுள் கற்பித்தலில் கற்பித்தலுக்கேற்ற சூழலை அமைத்தல் என்றால் என்ன?**

எந்தச் செய்யுளைக் கற்பிக்கத் தொடங்கினாலும் கற்பித்தலுக்கேற்ற சூழலை உருவாக்க வேண்டும். செய்யுளில் கருத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்க வேண்டும்.

**8. உரைநடையில் இணைத்துக் கற்பித்தல் என்றால் என்ன?**

உரைநடைப் பாடப் பகுதியின் கருத்து செய்யுள் வடிவில் இருப்பின் செய்யுட் பகுதியுடன் இணைத்தும், இலக்கண விதிகளைக் கற்பிப்பதற்கு ஏற்றதாக இருப்பின் இலக்கணப் பாடத்துடன் இணைத்தும் கற்பிக்க வேண்டும். இதேபோன்று பாடப் பகுதியில் உள்ள பத்திகளைக் கற்பிக்க வேண்டும்.

**9. புணர்ச்சி விதிகளால் ஏற்படும் பயன் யாது?**

புணர்ச்சி விதிகளை அறிவதால் செய்யுளில் அமைந்த சொற்றொடர்களைப் பிரித்துப் பொருளுணரும் ஆற்றலை மாணவர் பெறுவர்.

**10. கரும்பலகையின் பயன்கள் யாவை?**

கரும்பலகையின் துணையின்றி ஆசிரியர் எதனையும் கற்பிக்க முடியாது. ஆசிரியர் முக்கியமான கருத்துக்களை எழுதிக் கோடிட்டுக் காட்டப் பயன்படுகிறது. வண்ணச் சுண்ணக் கட்டிகளைப் பயன்படுத்துவதால் மாணவரின் கவனத்தை ஈர்த்துக் கருத்து மனதில் பதியும்.கற்றல், கற்பித்தல் என்ற இரு செயல்களும் கல்வியின் நோக்கத்தை நிறைவடையச் செய்கின்றன.

**11. செயல்திட்ட முறையில் - திட்டமிடுதல் பற்றி எழுது.**

1. செயல்திட்டத்தைத் தொடங்கும் முன் திட்டமிடுதலிலும், செயல் நிறைவடையும் வழிகளை ஆய்வதிலும் கவனம் செலுத்தப் பயிற்சி அளித்தல்.
2. நூலகம் சென்று குறிப்பெடுக்கப் பயிற்சி பெற வேண்டும்.
3. மாணவர் செய்யும் தவறுகளை ஆசிரியர் திருத்த வேண்டும்.
4. திட்டமிட்டதை எழுதி வைப்பதற்கு ஆசிரியரின் வழிகாட்டுதல் வேண்டும்.

**12. நடிப்பு முறையில் உள்ள நிறைகள் யாவை?**

நடிப்பு முறைக் கற்பித்தலில் உள்ள நிறைகள் வருமாறு.

1. மாணவரிடம் உள்ள அச்சம், கூச்சம் அகலும்.
2. மாணவர் கற்றலில் ஆர்வத்தோடு ஈடுபடுவர்.
3. மொழிப்பாடத்தில் இம்முறை கவர்ச்சியை ஏற்படுத்தும்.
4. மொழித்திறன் நன்கு வளரும்.

**பயிற்சி வினாக்கள்**

1. நுண்ணிலைக் கற்பித்தலின் சிறப்புகள் மற்றும் திறன்களை விவரி.
2. நுண்ணிலைக் கற்பித்தலில் சுழற்சியை விளக்கி எழுதுக.
3. இலக்கணப்பாடம் கற்பித்தலுக்கு விதிவருமுறை எவ்வாறு பயன்படுகிறது?
4. மேற்பார்வைப் படிப்பு என்றால் என்ன?

# 4. மொழிப்பாடம் கற்பித்தல் பிரிவுகளின் அமைப்பு

**பாட அமைப்பு**


4.1 முன்னுரை

4.2 செய்யுள் கற்பித்தல் நோக்கங்கள்

4.2.1 மனப்பாடம் செய்யும் முறையும் பயன்களும்

4.2.2 மனப்பாடம் செய்வதன் பயன்

4.3 வாய்மொழிப் பயிற்சி

4.3.1 சொற்களஞ்சியப் பெருக்கம்

4.3.2 ஒலிப்புமுறைப் பயிற்சி

4.3.3 கற்பனையாற்றலை வளர்த்தல்

4.4 உரைநடை கற்பித்தல்

4.4.1 சொற்பொழிவுகள்

4.4.2 சொற்போர்

4.4.3 பட்டிமன்றம்

4.4.4 வழக்காடு மன்றம்

4.5 உரைநடை கற்பித்தலின் நோக்கங்களும் முறைகளும்

4.6 துணைப்பாடம்

4.6.1 கற்பிக்கும் முறைகள்

4.7 இலக்கணம் கற்பித்தல்

4.7.1 இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள்

4.7.2 இலக்கணம் கற்பிக்கும் முறை

4.7.3 இலக்கணப் பாடம் கற்பித்தலின் தேவைகள்

4.8 விதிவருமுறை

4.8.1 விதிவருமுறையின் நிறைகள்

4.8.2 விதி வருமுறையின் குறைகள்

4.9 விதி விளக்குமுறை

4.9.1 விதிவிளக்கு முறையின் நிறைகள்

4.10 கட்டுரைப் பாடம் கற்பித்தல்

4.10.1 கட்டுரை எழுதுவதன் நோக்கங்கள்

4.10.2 கட்டுரைப் பாடம் கற்பிக்கும் முறைகள்

4.10.3 கட்டுரை வகைகள்

4.11 கடிதம் எழுதுதல்

4.11.1 கடித வகைகள்

4.11.2 கடிதம் எழுதும் முறை

4.12 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை


## 4.1 முன்னுரை

**க**ல்வி நிறுவனங்களில் செய்யுள் கற்பித்தல் என்பது திறன்மிகு பணியாகும். மாணவர்களுக்கு இன்பத்தைத் தருவதுடன் மனதைத் தூய்மைப்படுத்தி வாழ்வைச் செம்மைப்படுத்துவது செய்யுள். எனவே செய்யுள் கற்பித்தல் முக்கிய இடம்பெறுகிறது. இக்கருத்தை நன்னூல்.

"....................................................மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்கும்நூல் அ∴தேபோல் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு"

என அரண் செய்கிறது.

மாணவர்களுக்குச் செய்யுளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் செய்யுளைப் பயிற்றுவிப்பதில் அறிமுகம் செய்தல், படித்தல், விளக்குதல், மனப்பாடம் செய்ய வைத்தல் என்பன அடங்கும். கவிஞன் தான் கண்ட காட்சிகளை மாணவர்களையும் காணுமாறு செய்வது. மொழியாசிரியரின் முதன்மையான கடமை.

**4.2 செய்யுள் கற்பித்தல் நோக்கங்கள்**

செய்யுள் கற்பிக்கும் நோக்கத்தை மொழியாசிரியர்கள் நன்கு புரிந்துகொண்டால்தான் அதற்கேற்பத் திறமையாகக் கற்பிக்க முடியும். செய்யுள் கற்பித்தல் என்பது ஆசிரியர் தன் உணர்ச்சி, ஆற்றல் முதலானவற்றை ஒன்று திரட்டிக் கற்பிக்க வேண்டிய கடினமான பணியாகும்.

**செய்யுள் கற்பித்தலின் முக்கிய நோக்கங்கள்.**

1. முருகுணர்ச்சியை வளர்த்தல்
2. அழகைக் கண்டு இன்புறல்
3. கற்பனையாற்றலை வளர்த்தல்
4. சொல்வளம் அறிதல்
5. ஒலிநயம் உணர்தல்
6. அணிநலன் அறிதல்
7. தொடைநயம் அறிதல்
8. உள்ளுறை உவமம், இறைச்சி, குறிப்புப் பொருள் அறிதல்
9. சுவை உணர் ஆற்றல் பெறுதல்
10. பண்பாட்டு மாற்றத்தை அறிதல்
11. நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்த்தல்
12. நினைவாற்றலை வளர்த்தல்
13. இறையுணர்வை ஏற்படுத்துதல்
14. மறுமலர்ச்சிச் சிந்தனைகளை வளர்த்தல்

ஆகியவை.

**சரியான ஒலிப்புத்திறன்** (உச்சரிப்பு)

செய்யுள் கற்பிக்கும் ஆசிரியர் சிலர் வினாக்களுடன் தொடங்குவர் அடுத்து செய்யுள் உருவான சூழ்நிலையைக் கூறிக் கற்பித்தலைத் தொடங்குவர்.

செய்யுள் கற்பித்தலின் அடுத்த படிநிலை செய்யுளை ஒலிநயத்துடன் படித்தல். செய்யுளை முதலில் ஒலிநயத்துடன் உணர்ச்சியுடன் படிக்க வேண்டும் பின்னர் பொருள் புரியும்படிப் படித்தல் வேண்டும் இதன் மூலம் மாணவர் படிப்புப் பயிற்சி பெறுவர்.

கவிஞனின் உணர்ச்சியை ஒலிநயத்தின் மூலம் செய்யுள் கற்போருக்கு அளிக்கிறது.

ஒலியின் காலஅளவு (குறில்,நெடில்)வன்மை, மென்மை,ஒலித்தல் வேறுபாடு, எடுத்தும் படுத்தும் நலிந்தும் ஒலிக்கும் பொழுது உண்டாகும் பொருள் வேறுபாடு ஆகியவை இணைந்ததே ஒலி நயம். அந்த ஒலி நயத்தைப் புலன்களால் தான் தெரிந்து கொள்ள முடியும்.

செய்யுளை வாய்விட்டுப் படிக்கும் பொழுதுதான் ஒலி நயத்தை மாணவர்கள் உணர்ந்து கவிதையில் தோய்ந்து இன்பம் பெறுவர்.

ஒலிப்புத் திறனின் சிறப்புக்குப் பாரதியாரின் 'கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை' என்ற பகுதியிலிருந்து ஒரு பாடலைக் காணலாம்.

"தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை

எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்''

இப்பாடலை மாணவர்கள் வாய்விட்டுப் படிக்கும்போது தான் ஒலிநயம் உணர்ந்து இன்புற முடியும்.

**4.2.1 மனப்பாடம் செய்யும் முறையும் பயன்களும்**

செய்யுள் கற்பித்தலில் மனப்பாடம் செய்வது ஒரு நிலையாகும். பள்ளிகளில் மாணவர்களைச் செய்யுளை மனப்பாடம் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்துவதால், செய்யுள் கற்பதில் மாணவர்க்கு வெறுப்பு ஏற்படுகிறது. 'செஞ்சொற் கவி இன்பத்தில் திளைக்க வேண்டியவர்கள்' செய்யுளைப் படிக்க வெறுப்புக் காட்டுவது ஒரு நடைமுறை உண்மையாகும்.

மனப்பாடம் செய்வதை எந்த அளவுக்கு வற்புறுத்தலாம், எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பன போன்ற கருத்துகளை ஆய்வோம்.

**மனப்பாடம் செய்யும் முறை:**

செய்யுள் பகுதியைப் பொருள் புரியும்படிப் பிரித்துப் படிக்க வேண்டும். இவ்வாறு பொருள் புரியும்படிப் பிரித்து மனப்பாடம் செய்வதால் இம்முறை எளிதாகும்.

எதுகை, மோனை நயம் அறிந்து மனப்பாடம் செய்வதும் மிக எளிய முறையாகும்.

சந்தமறிந்து சந்தத்தோடு மனப்பாடம் செய்வதும் எளிய முறையாகும்.

மயங்கொலிப் பிழையின்றி ஒலிப்புமுறை அறிந்து மனப்பாடம் செய்வதும் மிக எளிதாகும்.

சுருங்கச் சொன்னால் பொருள் புரியும்படி எதுகை, மோனை நயத்துடன் மயங்கொலிப் பிழையின்றி மனப்பாடம் செய்வது சாலச் சிறந்தது.

**4.2.2 மனப்பாடம் செய்வதன் பயன்**

கருத்துணர்ந்து மனப்பாடம் செய்வதால், மனப்பாடம் செய்த பகுதியிலுள்ள அழகும், அவற்றைத் துய்ப்பதால் பெறும் நுண்ணறிவும் மனதில் என்றும் நிலைக்கும்.

மனப்பாடம் செய்யும் பகுதியிலுள்ள அறிவுரைகள் நிலைத்து நின்று நம்மை நன்னெறிக்கண் செலுத்தும்.

பல பாடல்களை மனப்பாடம் செய்வதால், பல நூல்களிலுள்ள ஒப்புமைப் பகுதிகளை ஒப்பிட்டு நோக்க உதவும்.

மனப்பாடம் செய்வதால் செய்யுளின் பொருள் ஓரளவு மனதில் பதியும்.

வேறொரு சமயம் மனப்பாடம் செய்வதை நினைவில் கொண்டு வரும்போது புதிய பொருள்களையும், நயங்களையும் உணரலாம்.

மனப்பாடம் செய்வதன் மூலம் புதிய சுவைகளைக் கண்டு துய்க்க முடியும்.

பழைய முறைப்படிக் கல்விகற்ற பெரும்புலவர்கள் தாங்கள் கற்ற பல சுவையுள்ள பகுதிகளை நினைவில் கொணர்ந்து தாம் மகிழ்வதுடன் மற்றவரையும் மகிழவைப்பர்.

பல புதிய சொற்களையும், கருத்துகளையும் அறிந்து கொள்ளவும், அவற்றை மனதில் நிலைபெறச் செய்யவும் மனப்பாடம் செய்தல் பயன்படுகிறது.

கவிதைகளின் சந்தச் சுவையும், ஓசை நயமும் மனதில் பதிந்து ஒலித்துக் கொண்டிருப்பதால், இத்தகைய பாடல்களை மேலும் கற்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

வெண்பா, ஆசிரியப்பா போன்ற பாடல்களைப் படித்துப் பழகியோர்க்கு அவற்றைப் போன்ற பாடல் எழுத வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

**4.3 வாய்மொழிப் பயிற்சி**

செய்யுளைக் கற்பிக்கும்பொழுது சில மொழித் திறன்களை நினைவில் கொண்டு, தக்க முறையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

**1. ஓசையை அறியச் செய்தல்**

செய்யுளைக் கற்பிக்கும்போது அந்தப் பாவிற்குரிய ஓசையோடு பாடிக் காட்ட வேண்டும் அல்லது படித்துக் காட்ட வேண்டும். இதன் மூலம் பாடலின் பொருளை அறியச் செய்யலாம். இது ஒரு சரியான வாய்மொழிப் பயிற்சியாகும்.

**2. செய்யுளுக்கு உரிய இசையோடு படிக்கச் செய்தல்**

செய்யுளைச் சந்தத்தோடு மூன்று முறை ஆசிரியர் படித்துக் காட்டிப் பின்னர் மாணவரைக் குழுவாகவும், தனியாகவும் அதே சந்தத்தில் படிக்கப் பயிற்சி தரவேண்டும். இந்தப் படிப்புப் பயிற்சியும் சரியான வாய்மொழிப் பயிற்சியாகும்.

**3. செய்யுளில் உள்ள சொற்களைப் பிரித்துக் காட்டுதல்**

''தெய்வ குலத்திவனை – எளியேன்
தீண்டலு மாகாதினி''

என்ற பாடல் வரிகளை,

''தெய்வ குலத்து இவனை எளியேன்
தீண்டலும் ஆகாது இனி''

எனப் பிரித்துக் கூறிக் கரும்பலகையில் எழுதிக் காட்டினால் மாணவரும் பிரித்துப் படிக்கும் பயிற்சி பெறுவர்.

**4. பொருள் விளங்கும்படி உரைநடைப்படுத்துதல்**

''கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்கும் நம் காது – நம்மை
விட்டு நீர் தூர நின்று
விளம்பினால் கேளாது''

என்னும் பஞ்சதந்திரப் பாடல் வரிகளை,

''நீர் கிட்ட வந்து சொன்னால்
நம் காது கேட்கும்
நீர் நம்மைவிட்டுத் தூர நின்று
விளம்பினால் கேளாது''

என்று உரைநடைப்படுத்திப் படித்துக் காட்ட வேண்டும்.

**5. எதுகை, மோனை – பயிற்சி**

பாடலின் உயிர்நாடி போன்றவை எதுகை, மோனை. நிகழ்காலத்தில் மாணவரிடம் எதுகை, மோனைப் பயிற்சிகூட அருகியுள்ளது. எனவே ஒரு சில பாடல் வரிகளைப் படித்துப் பயிற்சி பெற்றால் 'எதுகையும், மோனையும்' தடையின்றி வரும்.

''உள்ளம் தெளிவுடனே
வள்ளல் மயக்கொழிய''

இவ்வடிகள் எதுகைக்கு எடுத்துக்காட்டாகும்.

''வையகம் வாழ்ந்திடவே
வெயிலில் வெந்திடாமல்''

இப்பாடல் வரிகள் மோனைக்குச் சான்றாகும்.

**6. பொருளுக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் ஒலிக்கப் பயிற்சி அளித்தல்**

''கல்விக்குரிய கலை மகளே''

''களையோடு ஆழும்
கழைக் கூத்தனை

அழைத்து வந்தான்''

என்ற வரிகளைப் படித்துப் பயிற்சி பெறுமாறு ஆசிரியர் பயிற்சி தரவேண்டும். இதன் மூலம் மயங்கொலிப் பிழையின்றி ஒலிப்பர். பாடல் வரியின் பொருளையும் தெரிந்து கொள்வர்.

இவை செய்யுள் கற்பிக்கும்போது மாணவர் பெறும் வாய்மொழிப் பயிற்சியாகும்.

**4.3.1 சொற்களஞ்சியப் பெருக்கம்**

ஒரு மொழியைக் கற்போர் சொல்வளம் பெற வேண்டும். அதுவே கருத்து வளமாக மாறும். அந்தக் கருத்தைத் தொய்வின்றி எடுத்துச் சொல்லும்போது அது மொழிவளமாக மாறுகிறது.

சொற்களஞ்சியப் பெருக்கத்தால்தான் பேச்சிலும், எழுத்திலும் கருத்துகள் மடை திறந்த வெள்ளம் போல் வந்து செல்லும்.

ஒவ்வொரு பாடலையும் ஆசிரியர் படித்துப் பொருள் சொல்லும்போது மாணவர் பல புதிய சொற்களையும், அவற்றிற்குரிய பொருளையும் அறிவர். இவ்வாறு ஆண்டுதோறும் அறியும் சொற்களால் சொற்களஞ்சியத்தை மாணவர் பெறுவர்.

உழவன் வயலில் சேகரித்த நெல்மணிகளைக் கொண்டு களத்தில் கோட்டை கட்டி நெற்களஞ்சியத்தை உருவாக்குகிறான். நெற்களஞ்சியம் உணவுப் பஞ்சத்தைப் போக்குகிறது.

அதுபோல மாணவர்கள் பெறும் சொற்களஞ்சியம் கருத்துப் பஞ்சத்தைப் போக்கும்.

சொற்களஞ்சியப் பெருக்கத்தால் சொற்களை வாக்கியத்தில் பயன்படுத்தும் பயன்பாட்டை அறிவர். இதனால் கருத்துத் தொய்வின்றிச் செல்லும்.

சொற்களஞ்சியப் பெருக்கம் தொலைநோக்குப் பயனுக்குப் பயன்படக் கூடியது.

தொடக்கப்பள்ளி எனில் எளிதான சொற்களோ பயன்படுத்தப்படும்.

நடுநிலைப் பள்ளியில் சற்றுக் கடினமான அருஞ்சொற்கள் இடம் பெறும்.

உயர்நிலைப் பள்ளியில் அருஞ்சொற்களின் எண்ணிக்கை கூடும்.

மேனிலைப் பள்ளியில் அருஞ்சொற்களின் பயன்பாடு அதிகமாக இருக்கும்.

கல்லூரி, பல்கலைக்கழகத் தமிழ்ப்பாடங்களில் அருஞ்சொற்களும், எளிமையான சொற்களும் சம அளவில் இருக்கும்.

சொற்களஞ்சியப் பெருக்கம் எளிமையிலிருந்து அருமை என்ற கற்பித்தல் உத்திக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

வகுப்பு நிலைக்கேற்ப சொற்களஞ்சியப் பயன்பாடு மிகுவது உளவியல் அடிப்படையிலும் சரியானதே.

மாணவனின் காலவயது, மனவயதுக்கேற்ப சொற்களஞ்சியப் பெருக்கம் அதிகமாவதால் கற்பித்தலும், கற்றலும் வலுவூட்டம் பெறுகிறது.

சொற்களஞ்சியப் பெருக்கம் இலக்கிய நயம் உணர்தலின் வாயிலாக அமையும்.

தமிழ்க் கருவூலம் நல்ல நடையில் அமையச் சொற்களஞ்சியப் பெருக்கம் தேவையாகிவிட்டது.

கலைஞனின் உளி கைவண்ணத்தால் சிற்பத்தை உருவாக்குகிறது. அதுபோல எழுத்தாளனின் சொல்வளம் தரமான படைப்பை உருவாக்குகிறது. அந்தப் படைப்பு நல்ல நடையில் அமைந்து கவிதையாக, கட்டுரையாக, கதையாக, புதினமாக உருவெடுக்கிறது.

சிறந்த மொழிநடைக்கும், தனித்தமிழ் நடைக்கும், கருத்துப் பின்னலுக்கும் சொல்வளமே அடிப்படை என்பது அறிஞர் முடிவு.

சொற்களஞ்சியம் புதிய படைப்பின் உயிரோட்டம் எனலாம். அந்த உயிரோட்டத்தினுள்ளே மலரின் மணம் போலக் கருத்து இடம்பெறும்.

ஒவ்வொரு சொல்லும் கவிஞனின் கருத்து வளத்திற்குத் துணை நிற்கின்றது. இக்கருத்துக்கு உரைகல்லாக அமைவது புறநானூற்றில் இடம்பெற்ற பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடல்.

''படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்

உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே''

இதில் பேச்சு வழக்கில் உள்ள சொற்களும் உண்டு பேச்சுவழக்கில் இல்லாத சொற்களும் உண்டு. அவற்றை எம்முறையில் பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சி இதன் மூலம் கிடைக்கிறது.

சொற்களின் உறவு, பொருளுணர்ச்சி, ஒலி இன்பம், சுவை இன்பம் இத்தனை சிறப்பையும் சொல் அளிக்கின்றது.

கவிஞன் தான் கையாளும் சொற்களின் மூலம் கற்போர்க்கு உணர்வையும், கவிதை இன்பத்தையும் தருகிறான்.

கம்பனைச் சொல்லின் செல்வனாகவும், கவிச்சக்கரவர்த்தியாகவும் உயர்த்தியது அவன் சொற்களைக் கையாண்ட முறையேயாகும்.

கம்பன் பாமரன் அறிந்த சொல்லால் கவிதைக்குப் பரமபதம் அளித்துள்ளான். அதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

- ''எடுத்தது கண்டனர் இற்றது கேட்டனர்''
- ''சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை
  ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்''
- ''வீரத்தைக் களத்தே போட்டு
  வெறுங்கையோடு இலங்கை புக்கான்''

**4.3.2 ஒலிப்புமுறைப் பயிற்சி**

மாணவர்கள் செய்யுளைப் பொருள் புரியும்படிப் பிரித்துப் படிக்க முற்படும்போது ஒலிப்பு முறையில் தெளிவு ஏற்படுகிறது. அவ்வாறு ஆசிரியர் தரும் பயிற்சியின்போது குறில் நெடில் வேறுபாடு, வல்லின மெல்லின, இடையின வேறுபாடு. இவற்றை அறிந்து ஆசிரியர் பயிற்சி தருவர். மாணவரும் பயிற்சி பெறுவர். இதற்கு நாபிறழ் பயிற்சி இன்றியமையாதது. இந்த நாபிறழ் பயிற்சி சிறப்பாக அமையின் ஒலிப்புமுறை சிறப்பாகத் தெளிவாக அமைந்துவிடும்.

மயங்கொலிப் பிழையை ஏற்படுத்துவன லகர, ளகர, ழகர வேறுபாடுகள் ரகர றகர வேறுபாடுகள் நகர னகர ணகர வேறுபாடுகள். இந்த வேறுபாடுகளைத் தொடக்கப் பள்ளியில் எழுத்துக்களை ஒலிக்க அளிக்கும் பயிற்சியின் போதே ஆசிரியர்கள் ஒலிக்கப் பழகியிருக்க வேண்டும். அப்போது ஓரளவு ஒலிப்புமுறைப் பயிற்சி ஏற்பட்டிருக்கும்

அந்தப் பயிற்சியைச் செய்யுள் கற்பிக்கும் போதும் தமிழ் ஆசிரியர்கள் தொடரவேண்டும் தொடர்ந்தால் ஒலிப்புமுறைப் பயிற்சி வெற்றி பெறும்; இன்றேல் ஒலிப்புமுறைப் பயிற்சி தோல்வி அடையும்.

ஒலிப்புமுறைப் பயிற்சியில் சந்திப்பிழையும் ஒன்று. சந்திப்பிழை தவிர்த்தல் என்பது எழுத்தில் மட்டும் அன்று; பேச்சிலும் சந்திப்பிழை தவிர்த்தல் நிறைவு பெறவேண்டும். உணவில் கல் இருந்தால் சுவைத்தலில் தடை ஏற்படும் ஒலிக்கும் சொற்களில் சந்தி எழுத்துக்களால் (க்,ச்,த்,ப்) தடை ஏற்பட்டால் சொற்கள் ஒலிப்பில் தடை ஏற்படும்.

கவிதைக்குக் கற்பனை சிறப்புச் சேர்க்கும் அந்தக் கற்பனைக்கு மெருகூட்டுவது உணர்ச்சி; உணர்ச்சி இல்லையேல் கவிதையில் உயிரோட்டமிருக்காது. அந்தக் கவிஞனின் உணர்ச்சியைத் தமிழ் ஆசிரியர்கள் ஒலிப்பு முறையின் போது வெளிப்படுத்திப் படிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்.

குரலில் ஏற்றத்தாழ்வும் உணர்ச்சியின் வெளிப்பாடே. ஒன்பான் சுவைகளை உணர்ச்சியின் மூலமே வெளிப்படுத்த முடியும். இத்தகைய ஒலிப்புமுறைப் பயிற்சியால் மாணவர்கள் தமிழ்ச் செய்யுளின் மீதும், தமிழாசிரியர் மீதும் பற்றுக் கொண்டு ஒலிப்பு முறைப் பயிற்சியில் வெற்றி பெறுவர்.

ஒலிப்புமுறைப் பயிற்சிக்குச் சங்க இலக்கியங்களும், கம்பன் பாடல்களும் தக்க சான்றாகும்.

குற்றாலக் குறவஞ்சி நாடகப் பாங்குடையது. அதில் இடம்பெற்ற பாடல்கள் குரல் ஏற்றத்தாழ்விற்கும், உணர்ச்சிக்கும், மயங்கொலிப் பிழை தவிர்த்தலுக்கும் சரியான எடுத்துக்காட்டாகும். பின்வரும் பாடல் வரிகளே அதற்குத் தக்க சான்றாகும்.

''கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்ககழ்ந் தெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்து முல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்''

சூர்ப்பனகை நடந்துவரும் அழகை மெல்லினச் சொற்களால் கம்பர் வர்ணிக்கும் முறையில் மெல்லினப் பயிற்சி ஏற்படும்.

''பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி. இதில் உணர்ச்சிகளும், வல்லின ஒலிகளும் மிகுந்து காணப்படுகின்றன. இதுவும் ஒலிப்புமுறைப் பயிற்சிக்கோர் எடுத்துக்காட்டு என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

''அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே''

கண்ணகியின் கோபத்தின் வெளிப்பாடாக இருந்தாலும் இதில் வல்லினப் பயிற்சியும், மயங்கொலிப் பிழை தவிர்த்தலுக்கான பயிற்சியும் இடம் பெற்றுள்ளது.

எதுகை, மோனை இரண்டும் சங்கப்பாடல் முதல் இக்காலப் புதுக்கவிதை வரை அனைத்திலும் இடம் பெற்றுள்ளது. எதுகை, மோனை நயத்தையும் ஆசிரியர் ஒலிக்கப் பயிற்சி அளிக்கும்போது ஒலிப்புமுறை செம்மைபெறும். இதில் குரல் ஏற்றத்தாழ்வு முதல் சந்திப்பிழை தவிர்த்தல் வரை அனைத்தும் இடம் பெறும்.பின்வரும் பாடலைச் சரியான முறையில் ஒலிப்பதற்கான பயிற்சி அளித்தால் எல்லாவகைப் பிழைகளும் தவிர்க்கப்படும்.

''இத்தைச் செய்யாதே இதனை இயம்பாதே
சொத்தைப் பரிபாலிச் சோம்பித்திரியாதே
''வித்தை விரும்பென்று நாளும் விதவிதமாய்
அத்தை தனைப்போல் அறிவுறுப்பார் யாரேயோ''

பின்வரும் நளவெண்பாப் பாடல் வரிகள் மோனை நய ஒலிப் பயிற்சிக்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

''கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ?''

இவ்வாறு ஒலிப்புமுறைப் பயிற்சிகளைப் பாடலை நடத்தும்போதே ஆசிரியர்கள் தரவேண்டும். ‘‘சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்’’ என்பது தானே தமிழ்மொழி.

**4.3.3 கற்பனையாற்றலை வளர்த்தல்**

கவிதைக்கும், பாடலுக்கும், செய்யுளுக்கும் பெருமை சேர்ப்பது கற்பனையாற்றல். கற்பனையாற்றல் கவிதைக்கு உயிரோட்டத்தை ஏற்படுத்துவதோடு கவிஞனையும் அடையாளம் காட்டுகிறது. இத்தகைய கற்பனை ஆற்றலைத் தாய்மொழி மூலமே வளர்த்திட முடியும்.

கவிஞன் தான் கண்ட பொருள்களின் அழகை, காட்சியின் சிறப்பை வர்ணனையோடு வெளிப்படுத்தப் பயன்படுவது கற்பனையாற்றல்.

இரஸ்கின் என்ற மேனாட்டறிஞர் ‘‘கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது; சொற்களால் உணர்த்த முடியாது; அது பயன்களைக் கொண்டு அறிய முடிவது’’ என்கிறார்.

கற்பனை மனதின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது என்பது உளவியலார் கருத்து.

கவிஞன் புலன்களாலும், அனுபவத்தாலும் கற்பனையால் தான் கண்டவற்றைத் தனது படைப்புக்கள் வழியாக மற்றவர்களையும் அனுபவிக்கச் செய்வான்.அதுதான் கற்பனையின் வெளிப்பாடு. கவிதைக்கு மட்டுமே இத்தகைய ஆற்றல் உண்டு.

‘‘தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?’’

இளங்கதிரவனை வருணிக்கும் பாரதியார் ‘‘கதிரவனின் கதிர்கள் உருக்கி ஓடவிட்ட தங்கம் போல் பரவுகின்றன. உருக்கி ஓடவிட்டாலும் அதன் சூடு குறைந்திருக்கிறது என்கிறார் பாரதி.

கற்பனைத் திறன் இல்லாதோர்க்கு இது ஓர் இயல்பான நிகழ்ச்சி. ஆனால் கவிஞன் கற்பனையில் தன்னை மறக்கிறான். காணும் கதிர், கவிஞன், கவிஞனின் கற்பனை உணர்வுகள் ஆகிய மூன்றும் அவனை இன்ப உலகிற்கு அழைத்துச் செல்கின்றன. கவிஞன் தன் கற்பனையால் பெற்ற உணர்ச்சிகளை நம்மையும் பெறுமாறு செய்கிறான். இத்தகைய ஓர் நிகழ்வை தாய்மொழி மூலமே பெற முடியும்.

சங்கப்புலவர் நாவல் மரம் ஒன்றைக் கடற்கரை அருகே காண்கிறார். கருநிற நாவற் கனிகள் உதிர்ந்து கிடக்கின்றன; மரத்தருகே கருநிற வண்டுகள் பறந்து கொண்டிருக்கின்றன; நிலத்தில் விழும் பழங்களை நண்டுகள் உண்ணுகின்றன. அந்நண்டுகளை நாரைகள் உண்ணுகின்றன. இதைக்கண்ட கவிஞர் கற்பனை தோன்றப் பாடுகிறார்.

பழத்தை இழுத்துச் செல்லும் நண்டினைக் கண்ட வண்டு நாவற்பழத்தை வண்டென நினைத்து அதை மீட்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. வண்டுகள் கூட்டமாக நண்டினைச் சூழ்ந்து கொண்டன.

வண்டுகளின் இரைச்சல் நாரைக்குக் கேட்க, நாரை நண்டைப் பிடிக்கிறது. ஆனால் நண்டு நாவற்பழத்தை விட்டுவிடுகிறது. அம்மூவனார் கற்பனை நயம் தோன்ற வர்ணிக்கும் பாடல் வருமாறு.

‘‘பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மாந்தை அன்ன’’

பாரதிதாசன் வானத்தில் மேகத்தைக் காண்கிறார். அம்மேகங்கள் நிலவின்மேல் தவழ்ந்து சென்றன. நிலவு ஒருகால் வெளிப்படுவதும், ஒருகால் மறைவதுமாக உள்ளது.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-11**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. செய்யுள் கற்பித்தலின் நோக்கங்களை விளக்குக.

..................................................................................................................................................

..........................................................................................................................

2. மனப்பாடம் செய்வதன் நோக்கங்களை எழுதுக.

நிலவைப் பெண்ணாகக் கண்டார். வான்மேகத்தை நீலநிற ஆடையாகக் கண்டார். அந்தக் கற்பனை கவிஞனின் கைவண்ணத்தால் கவிதையாக ஊற்றெடுக்கிறது. அக்கவிதை ஊற்றின் சாரம் வருமாறு.

''நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலா என்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோல முழுதும் காட்டிவிட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ''

மாணவர்களுக்குச் சங்க இலக்கியம் முதல் தற்கால இலகக்கியம் வரை உள்ள பாடல்களில் இடம்பெற்ற கற்பனைத் திறத்தைத் தரமான பாடல்களால் தாய்மொழியால் மட்டுமே தரமுடியும்.

தாய்மொழிச் செய்யுள் கற்பித்தலின் மூலம் அவர்தம் கற்பனைத் திறத்தை வளர்க்கலாம்; கவிஞனாக மாற்றலாம்.

செய்யுள் கற்பித்தல் மூலம் ஒலிப்புமுறைப் பயிற்சி, சொற்களஞ்சியப் பெருக்கம், இலக்கிய நயம் உணர்தல், இலக்கணப் பயன்பாடு போன்ற மொழித்திறன்கள் பலவற்றை மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர்.

**4.4 உரைநடை கற்பித்தல்**

உரைநடைப் பாடம் முதல்வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை இடம் பெற்றுள்ளது.

உரைநடைப் பாடம் கற்பிப்பதன் மூலம் ஒலியமைதி, சொற்களஞ்சியப் பெருக்கம், வாய்க்குள் படித்தல், வாய்விட்டுப் படித்தல், பத்தியமைப்பு முறை,சொல்மரபு,சொற்றொடர் மரபு, சொல்லாட்சிகளைப் பயன்படுத்துதல்,மொழித்தூய்மை,பிழையின்றி எழுதுதல், மரபுத்தொடர், நடைமுறை இலக்கணம் என மொழித்திறன் அனைத்தும் அறிகின்றனர்.

உரைநடைப் பாடத்தின் மூலம் மொழித்திறன்களை வளர்ப்பதோடு, வாழ்க்கைத் திறன்களை வளர்க்க வேண்டும்.

உரைநடைப் பாடத்தின் மூலம் சொல்ல எடுத்துக்கொண்ட கருத்தோடு, நற்பண்புகளை வளர்ப்பதும் ஆசிரியரது நோக்கமாகக் கொள்ள வேண்டும். இச்சொல் பேசுதல், பிறருக்கு உதவுதல், பெரியோரிடம் பணிவாக நடத்தல்,மற்ற உயிர்களிடம் அன்போடிருத்தல் முதலான நற்பண்புகள் எல்லாம் வளர்கின்றன.

ஆசிரியர் பாடம் கற்பித்தலின் போது இதற்கென நேரம் ஒதுக்கிக் கதைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைக் கூறுவதோடு அவற்றின் மூலம் வெளிப்படும் நீதிகளையும் கூறி எதிர்கால வாழ்வுக்கு மாணவன் தயார் செய்யப்படுகிறான்.

உரைநடைப் பாடம் கற்பிக்கப் பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கலந்துரையாடல் முறை.

உரைநடைப் பாடப்பகுதியை ஆசிரியர் படித்தும் விளக்கலாம் மாணவர்களைப் படிக்கச் செய்தும் விளக்கலாம். அப்போது மாணவர் பங்கேற்புக்கும் வாய்ப்பளிக்கலாம்.

**கலந்துரையாடல்**

**ஆர்வமூட்டல்**

பாடம் தொடங்கும் முன் மாணவர்களுடன் இயல்பான சூழலில் உரையாடிப் பாடத் தொடர்பான கருத்துகளை நினைவூட்டலாம். பாடக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளும் செய்திகளைக் கூறி ஆர்வமூட்டலாம்.

எடுத்துக்காட்டாக தமிழகக் கட்டடக் கலை என்ற பாடத்தைத் தொடங்கும்முன் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக நின்று காலம் காலமாகப் பெருமை பேசும் தமிழகக் கோயில்கள் பற்றி மாணவரிடம் கேட்கலாம்.அதன் மூலம் ஆசிரியர் சில கருத்துகளைக் கூறிப் பாடத்தைத் தொடங்கலாம்.

**முன்னுரை வழங்கல்**

பாடத் தொடர்பான செய்திகளைக் கூறி ஆர்வமூட்டிய பின்னர் தமிழகக் கோயில்களில் ஏதாவதொன்றைச் சான்றாகக் கூறிப் பாடத்தைத் தொடங்கலாம்.

பாடப்பகுதியை ஆசிரியர் படித்தல்

ஆர்வமூட்டலும், முன்னுரையும் முடித்த பின்னர் ஆசிரியர் பாடப் பகுதியைப் படிக்க ஆயத்தமாக வேண்டும்.

அந்தப் பாடவேளையில் எத்தனை பத்திகளைக் கற்பிக்க எடுத்துக் கொண்டார்களோ அத்தனை பத்தியையும் ஆசிரியர் இருமுறை படித்துக் காட்டவேண்டும். இதன் மூலம் மாணவர்கள் ஒலிப்பிழையின்றிப் படிக்கப் பயிற்சி பெறுகின்றனர்.

முதல் பத்தியில் தமிழகக் கோயில்களைக் கட்டிய முறையை விளக்கலாம். கருங்கற்கள், சுண்ணாம்பு, கரும்பஞ்சாறு, முட்டை முதலியவை கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. கட்டும் தொழிலில் தொழிலாளர்கள், தொழிற்கருவிகள், யானைகள் முதலியன பயன்படுத்தப்பட்டன. இதனால் தமிழகக் கோயில்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆகியும் அழியாமல் கட்டடக் கலையின் பெருமையைப் பேசுகின்றன என்ற விளக்கத்தைக் கொடுத்து முதல் பத்தியை நிறைவு செய்த பின்னர் மாணவர்களிடம் அப்பத்தியின் மையக் கருத்தினைக் கூறச் செய்யலாம்.

பின்னர் மாணவர்களிடம் பண்டைய கட்டடங்கள் எவற்றால் கட்டப்பட்டன? என்ற வினா தொடுத்த பின்னர் கருங்கற்களால் என்ற பதில் வரும்.

ஆசிரியர் கோயில்கள் கருங்கற்களால் கட்டப்பட்டன; வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டன என்ற விளக்கத்தைத் தரலாம்.

மாணர்வர்கள் கருங்கல்லால் கட்டப்பட்ட செய்தியைச் சொன்னீர்கள்; செங்கல் பயன்பாடு பற்றிச் சொல்லவில்லை என்பர். செங்கல் பயன்பாடு பற்றியும், சுடுமண்ணால் கட்டப்பட்ட சிறுசிறு வீடுகள் பற்றியும் அடுத்த பத்தியில் செய்திகள் இடம் பெற்றுள்ளன எனக் கூறுவார்.

கட்டடக் கலையின் மணிமகுடமான தஞ்சைப் பெரிய கோயில் பற்றிய செய்திகளை மூன்றாம் பத்தியில் இருந்து விளக்குவார்.

மாணவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்பைக் கேட்பர்.

ஆசிரியர் கோபுரத்தின் நிழல்கூடக் கீழே விழாமல் கட்டப்பட்டது தான் அதன் சிறப்பு என விளக்குவார்.

இவ்வாறு கலந்தாய்வு முறையில் பாடப்பகுதிகள் விளக்கப்படும். ஆசிரியர் பாடப்பகுதியில் இடம்பெற்ற அருஞ்சொற்கள், அவற்றின் பொருள் மரபுத்தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள் அவற்றின் பயன்பாடு ஆகியவை பற்றி விளக்குவார்.

மாணவர்களும் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தும் முறையை அறிகின்றனர்.

இவ்வாறு கலந்துரையாடல் மூலம் கற்பித்தல் தொடரும்.

**மாணவர்களைப் படிக்கச் செய்தல் (கலந்துரையாடல்)**

ஆசிரியர்கள் மாணவர்களைப் படிக்கச் செய்தும் விளக்கலாம்; இம்முறை அத்துணை சிறந்ததன்று.

புதிய பாடப் பகுதியைப் படிக்கும்போது புதிய சொற்களும் அருஞ்சொற்றொடர்களும் இடம் பெறலாம்; இவற்றை ஒலிப்பதில் சிக்கல் ஏற்படலாம்.

இருந்தும் மீத்திறன் மாணவர்களைக் கொண்டு மேற்கூறிய 'கட்டடக் கலை' தொடர்பான பாடப்பகுதியை மாணவர்களைப் படிக்கச் செய்யலாம். ஒலிப்பதில் குறைபாடு இருப்பின் ஆசிரியர் படிக்கப் பயிற்சி தரலாம்; மாணவர்களை மையக் கருத்தைச் சொல்லச் செய்யலாம்; குறைபாடு இருப்பின் ஆசிரியர் சொல்லலாம்.

பத்தியின் கருத்துக்களை ஆசிரியர் விளக்கலாம்; மாணவர் ஐயம் ஏற்படும் இடங்களில் வினாக்கள் தொடுக்கலாம்.

இவ்வாறு எடுத்துக்கொண்ட பாடப்பகுதிக்குரிய பத்திகளை அந்தப் பாட வேளைக்குள் ஒவ்வொரு பத்தியாக மாணவர்களைப் படிக்கச் செய்து மையக் கருத்து, அருஞ்சொற்பொருள், பத்திக்குரிய விளக்கம் இவற்றைத் தரலாம்.

மாணவர்களை வினாக்கள் தொடுக்கச் செய்து ஆசிரியர் விளக்கம் அளிக்கலாம்.

பாடப்பகுதியின் நிறைவாக அந்தப் பாட வேளைக்குரிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறலாம்; பின்னர் கருத்துகளைப் பகுத்து விளக்கலாம்.

மாணவர்களுக்குத் தொடர்பணி கொடுத்து அந்தப் பாட வேளைக்குரிய பாடப்பகுதியை நிறைவு செய்து ஆசிரியர் கலந்தாய்வு முறையில் பாடம் கற்பித்தலை முடித்து வைக்கலாம்.

**4.4.1 சொற்பொழிவுகள்**

பாடம் கற்பித்தலில் பண்டையோர் கண்ட பயிற்று முறைகளில் 'சொற்பொழிவு முறையும்' ஒன்று. இதனை 'விரிவுரை முறை' என்றே வழங்குவர்.

ஆசிரியர் தாம் கற்பிக்கும் 'பாடப்பகுதியைக் கலை நயத்தோடு, நுட்பமாக எடுத்துச் சொல்வதே சொற்பொழிவு முறையாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் சொற்பொழிவு என்பது மேடைப் பேச்சினைக் குறிக்கும். பண்டைக் காலத்திலிருந்தே புலமைமிக்க ஆசிரியர்கள் தாங்கள் பெற்ற அறிவுப்பூர்வமான, ஆக்கப்பூர்வமான கருத்துகளைச் சொற்பொழிவு வாயிலாக எடுத்துச் சொல்லி வந்தனர்.

ஆசிரியர் கற்பிக்க எடுத்துக்கொண்ட பாடப்பகுதியை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில், புரிந்து கொள்ளும் திறனுக்கு ஏற்ப விளக்கி உரைத்தல் விரிவுரை முறையாகும்.

இம்முறை மூலம் ஆசிரியர், மாணவர் (1) கற்பனவற்றை வகை தொகை செய்கிறார் (2) வாய்மொழியாகப் பாடக் கருத்துக்களை வெளியிடுகிறார் (3) மாணவர்களின் முன்னறிவு ஆர்வம், புரிந்துகொள்ளும் திறன் போன்றவற்றிற்கு ஏற்றவாறு பாடப் பொருளுக்கேற்ற எடுத்துக்காட்டுகளைத் தருகிறார்.

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் நூலுக்குரிய சிறப்புகளாக 'நூலின் அழகு' என்ற தலைப்பில் பத்துக் கருத்துகளை விளக்குகிறார். இவற்றை விரிவுரை முறைக்குரிய இலக்கணமாக எடுத்துக் கொள்ளலாம். அவை (1) சுருங்கச் சொல்லல் (2) விளங்க உரைத்தல் (3) நவின்றோர்க்கு இனிமை (4) நன்மொழி புணர்த்தல் (5) ஓசையுடைமை (6) ஆழமுடைத்தாதல் (7) முறையின் வைப்பு (8) உலகம் மலையாமை (உலக நடைமுறையோடு மாறுபடாது ஒத்துப்போதல்) (9) விழுமியது பயத்தல் (சிறந்த கருத்துகளை எடுத்துச் சொல்லுதல் (10) விளங்கு உதாரணத்தாகுதல் (பொருத்தமான எடுத்துக்காட்டுகளைத் தருதல்) ஆகிய பத்தும் ஆகும்.

இவை விரிவுரை முறை கற்பித்தலுக்குப் பொருத்தமானதாகும்.

விரிவுரையில் இடம்பெறும் கருத்து சுருக்கமாக இருக்க வேண்டும். ஒரு கருத்தை விளக்க நீண்டநேரம் ஆகுமாயின் கேட்பவர்க்குச் சலிப்பு ஏற்பட்டுக் கேட்டல் தொடர்ச்சி விட்டுப் போகும். மூன்று மணித்துளிகளுக்குள் விளக்கப்படும் கருத்து 'சுருங்கச் சொல்லல்' என்னும் அழகின் பாற்படும்.

சுருங்கச் சொல்லும்போது குறைந்த கால அளவில் மிகுதியான கருத்துக்களைச் சொன்னால் கேட்பவரின் மனதில் பதியாது. எனவே சுருங்கச் சொல்லும்போது விளங்க வைத்தலும் இன்றியமையாதது.

பவணந்தியார் 'நவின்றோர்' எனக் குறிப்பிடுவது நூலைப் படிப்பவரைக் குறிக்கும். அ∴து இங்குக் கற்போராகிய மாணவரைக் குறிக்கும். கற்பவர் மனம் இனிதே கருத்தை மனதில் பதிய வைத்து என்றும் நிலைத்த நீடித்த பயனைத் தரவேண்டும். அதுவே நவின்றோர் இனிமை ஆகும்; அத்தகைய நிலையில் 'நவின்றோர்க்கினிமை' என்ற பயிற்சி அமைய வேண்டும்.

ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது சொற்களில் இனிமை வேண்டும். அந்த இனிமை மாணவர் மனதில் தேனாக இனிக்க வேண்டும். இனிமை என்பது சொல்லில் இனிமை; விளக்கத்தில் தெளிவு; மொழிநடையில் எளிமை ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். இப்பண்புகளுடன் விரிவுரை அமையுமாயின் 'நன்மொழியாக' இருக்கும்; இல்லை என்றால் புன்மொழியாக மாறிவிடும்.

விரிவுரை சிறப்பாக அமைய ஆசிரியரின் குரல்வளம் நன்கு அமைய வேண்டும்; பாடப் பொருளுக்கேற்ப ஏற்ற இறக்கங்களோடு விரிவுரை அமையவேண்டும். பாடப் பொருளுக்கேற்ப உணர்ச்சியுடன் கூடிய ஒலிப்பு, மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒலிப்பு மற்றும் விரைவு ஆகியன தேவையாகும்.

விரிவுரை நிகழ்த்துவதில் ஆசிரியரே அடிப்படையாக இருக்கிறார். அவர் எடுத்துரைக்கும் கருத்தில் செறிவும், மொழிநடையும் அமைய வேண்டும். பொருட் செறிவு இல்லாத சொற்கள் கேட்பவருக்குச் சலிப்பையும், சோர்வையும் ஏற்படுத்தும்.

விரிவுரையின் சிறப்புப் பண்பு கருத்துக்களை நிரல்பட அமைப்பதாகும்; கருத்துக்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைய வேண்டும்; தொடர்பில்லாத கருத்துக்கள் கருத்துத் தடுமாற்றத்தை ஏற்படுத்தும்; ஆகவே கருத்துக்களின் ''முறைவைப்பு'' இன்றியமையாதது.

கற்பிக்கும் பாடப்பொருளைக் கற்போர் ஏற்றுக்கொள்ளும் வகையில் வெளிப்படுத்த கற்போரின் அறிவுத் தரத்திற்கு ஏற்ப விரிவுரை அமைய வேண்டும்.

கற்பித்தல் நோக்கங்களை நிறைவேற்றுவதே கற்பிப்பு முறையின் நிறைவு இலக்காகும்.

விரிவுரையில் ஆசிரியர் தொடர்ந்து கருத்துக்களைச் சொல்லிக்கொண்டே சென்றால் கற்பித்தல் இலக்கு நிறைவேறும் என்பதில்லை. கருத்துக்களுக்கேற்ற எடுத்துக்காட்டுக்களே விரிவுரைக்கு வலுவூட்டும்.

விரிவுரையில் ஆசிரியர் திறன்பெறச் சொற்பொழிவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**4.4.2 சொற்போர்**

மற்போர் மனித ஆற்றலால் நிகழ்வது சொற்போர் சொல்லாற்றலாலும், கருத்தாற்றலாலும் நிகழ்வது. யாருடைய கருத்துக்கள் வலிவும் பொலிவும் பெறுகின்றனவோ அக்கருத்துக்கள் வெற்றி பெறும்.

சொற்போரில் இருவகை உண்டு. ஒன்று இரு அணியினர் மோதும் பட்டிமன்றம்; மற்றொன்று வழக்கு தொடுத்தும், வழக்கை மறுத்தும் பேசும் வழக்காடுமன்றம் ஆகியவை.

பட்டிமன்றம் பாடத்தலைப்பை ஒட்டியும் அமையலாம். பாடத்தின் இணைச் செயலாகவும் அமையலாம்.

வழக்காடு மன்றமும் பாடத் தலைப்பை மையமாகக் கொண்டும், பாடத்தின் இணைச் செயலாகவும் அமையலாம்.

சில தலைப்புக்கள் வாழ்வுக்குப் பயன்படும் வகையில் வாழ்வைச் செம்மைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. அவற்றைப் பாடத் தலைப்பை மையமாகக் கொண்டதாகக் கொள்ளலாம்.

1.ஊடகங்களால் நன்மையே! தீமையே! 2.சமுதாயத்தைச் சீரழிப்பது மேலைநாட்டு நாகரிகமே! சமுதாயத்தைச் செப்பனிடுவது மேலைநாட்டு நாகரிகமே! 3.அணு ஆக்கசக்திக்கே! அணு அழிவுச் சக்திக்கே!

வகுப்பாசிரியர் வாரந்தோறும் வகுப்பிலேயே சில நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்; ஒரு மாதத்தில் இரண்டு தமிழ் நிகழ்ச்சிகளுக்கு அனுமதிக்கலாம். அவற்றில் ஒன்று சிந்தனை ஆற்றலையும், மற்றொன்று படைப்பாற்றலையும் வளர்க்கக் கூடியதாக அமைய வேண்டும்.

மாதம் ஒரு பட்டிமன்றமோ வழக்காடு மன்றமோ தலைமை ஆசிரியரின் ஒப்புதலோடு, வகுப்பாரிசிரியரின் ஒத்துழைப்போடு, தமிழாசிரியர் நடத்தலாம்.

**4.4.3 பட்டிமன்றம்**

தற்காலத்தில் ஊடகங்கள் சமுதாயத்தை, மாணவர்களின் வாழ்வை மாற்றி அமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ளன. எனவே ஊடகங்களால் சமுதாயத்திற்கு நன்மையே! என்ற தலைப்பில் பேச மாணவர்களில் பேச்சாற்றல் திறன் உள்ள மூவரைத் தேர்வு செய்யலாம்.

ஊடகங்களால் சமுதாயத்திற்குத் தீமையே! என்ற தலைப்பில் பேச முன்புபோல மூவரைத் தெரிவு செய்யலாம்.

இந்த இரு அணியினர்க்கும் தமிழாசிரியர் பயிற்சி தரலாம்.

முதல் நிகழ்ச்சி என்பதால் நடுவர் பொறுப்பைத் தமிழாசிரியரே ஏற்றுக் கொள்ளலாம்; அடுத்த நிகழ்ச்சியிலிருந்து மாணவர் ஒருவரை நடுவராகத் தேர்வு செய்யலாம்.

நிகழ்ச்சி நாளன்று தலைமை ஆசிரியரை அழைத்துத் தலைமை ஏற்கச் செய்யலாம்; வகுப்பாசிரியரையும், மற்ற ஆசிரியர்களையும் ஒத்துழைப்புக் கொடுக்கச் சொல்லலாம்; தமிழ் மாணவர்களைப் பார்வையாளராக அழைக்கலாம்.

நிகழ்ச்சி தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும். நடுவர் ஒவ்வொரு அணியினர்க்கும் நேரப்பகிர்வுச் செய்வார். தமிழாசிரியரின் நடுவர் உரைக்குமுன் தலைமை ஆசிரியர் வாழ்த்துரை நல்குவார்.

பின்னர் தமிழாசிரியர் நடுவர் உரை நிகழ்த்திப் பட்டிமன்றத்தைப் பாங்குறத் தொடங்குவார். பின்னர் ஊடகங்களால் நன்மையே! என்ற அணித் தலைவர் ஐந்து மணித்துளி பேசுவார். அடுத்து நடுவரின் கருத்துரைக்குப் பின் ஊடகங்களால் தீமையே! என்ற அணித்தலைவர் மறுப்புரை ஐந்து மணித்துளி வழங்குவார்.

இரு அணியினைச் சேர்ந்தவரும் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட மூன்று மணித்துளி பேசுவர். இவ்வாறு பட்டிமன்றம் சொற்போராக மாறும்.

விழா நிறைவாக நடுவர் தமது தீர்ப்பை நன்முறையில் வழங்குவார். பார்வையாளராக இருந்த தலைமை ஆசிரியர் ஊடகங்களால் நன்மையும் உண்டு! தீமையும் உண்டு! என்ற தனது கருத்தைச் சொல்லி நிகழ்ச்சியை நிறைவு செய்வார். நன்றி உரைக்குப் பின் நாட்டுப் பண்ணோடு நிகழ்ச்சி நிறைவடையும்.

**4.4.4 வழக்காடு மன்றம்**

தலைமை ஆசிரியர் வழிகாட்டுதலோடு வகுப்பாசிரியரின் ஒத்துழைப்போடு மாணவர்களைத் தெரிவு செய்து தமிழாசிரியர் வழக்காடு மன்றத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.

அணு ஆக்க சக்திக்கே! அணு அழிவுச் சக்திக்கே! என்ற தலைப்பைத் தெரிவு செய்யலாம். நடுவராகத் தமிழாசிரியர் இருக்கலாம்; அல்லது மாணவர் ஒருவரைத் தெரிவு செய்யலாம்.

வழக்குத் தொடுப்பவராக ஒருவரையும், வழக்கை மறுப்பவராக ஒருவரையும் மாணவர்களில் தெரிவு செய்யலாம்; நிகழ்ச்சியை ஒரு மணிநேரத்திற்குள் முடிக்குமாறு அமைக்கலாம்.

வழக்கமாக நடுவரின் தீர்ப்பிற்குப் பின் நன்றியுரை இடம்பெறும் நிகழ்ச்சி நாட்டுப் பண்ணோடு நிறைவடையும்.

இவ்வாறு மாணவர்களுக்குச் சொல்லாற்றலையும், சிந்தனை ஆற்றலையும் வளர்க்கும் வகையில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம் ஆகியவற்றிற்குத் தமிழாசிரியர் ஏற்பாடு செய்யலாம்.

தற்காலத்தில் சொல் அரங்கம், அரட்டை அரங்கம் போன்ற நிகழ்வுகளை மாணவர்களின் சொல்லாற்றலை வளர்க்கும் வகையில் நடத்தலாம். இவை ஊடகங்கள் மூலம் பரவிய சொற்போர் நிகழ்வுகளாம்.

**4.5 உரைநடை கற்பித்தலின் நோக்கங்களும் முறைகளும்**

உரைநடை படிப்புப் பயிற்சிக்கான களமாகும் வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல் இரண்டு பயிற்சியோடு பொருள் புரிந்து விரைவாகப் படித்தல் என்ற படிப்புப் பயிற்சிகள் உரைநடை கற்பித்தலின் மூலம் நிகழ்கின்றன. மொழித்திறன்களைக் கையாளும் திறன்களையும் இங்கேதான் பெறுகின்றனர்.

**உரைநடை கற்பித்தலின் நோக்கங்கள்**

உரைநடைப் பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் மொழித்திறன்களை வளர்த்தலை ஆசிரியர் முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

பாடத் தொடர்பான நற்பண்புகளை வளர்க்க வேண்டும். கனிவாகப் பேசுதல், பணிவாக நடத்தல், மற்றவர்க்கு உதவுதல், எல்லோரிடமும் அன்புடன் நடத்தல் போன்ற பண்புகளை மாணவரிடம் வளர்க்க வேண்டும்.

பாடவேளையில் அவற்றிற்கெனச் சற்றுநேரம் ஒதுக்கி இப்பண்புகள் தொடர்பான கதைகளைச் சொல்லலாம்; நிகழ்ச்சிகளின் மூலம் பண்புகளை விளக்கலாம்; இவையெல்லாம் மாணவர்களைப் பண்புகளை வளர்க்கத் தூண்டும் வழிமுறைகளாம்.

**உரைநடைப் பாடம் கற்பிக்கும் சிறப்பு நோக்கங்கள்**

உரைநடைப் பாடத்தைக் கற்பிக்கும்போது ஒவ்வொரு பாடத்துக்கும் சிறப்பு நோக்கங்களும் உண்டு.

சிறப்பு நோக்கங்கள் மொழித்திறன்களைக் கூடுதலாக வளர்ப்பதாக அமைய வேண்டும். அவையே கற்றல் விளைவுகளாகக் கருதப்படும்.

எந்தப் பாடத்திற்கு எந்தச் சிறப்பு நோக்கம் தேவைப்படுகிறதோ அந்தச் சிறப்பு நோக்கத்தைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அந்நோக்கங்களைக் கொண்டு மொழியாசிரியர் உரைநடைப் பாடத்தைக் கற்பித்தல் வேண்டும்.

**அ. கேட்டல் திறன்**

உரைநடைப் பாடத்தின் பத்தியை ஆசிரியர் வாய்விட்டுப் படிக்கும்போது மாணவர் கருத்தூன்றிக் கேட்பர். பின்னர் ஆசிரியர் மையக் கருத்தைக் கூற வேண்டும்.

அப்பத்தியின் கருத்துச் சுருக்கத்தையும் ஆசிரியர் சொல்லலாம்.

அப்பாடப் பகுதியின் பத்தியைக் கேட்ட பின்னர் பொருத்தமான குறிப்புகளை, அவர்களை வாய்மொழியாகக் கூறச் செய்வதோடு எழுதச் செய்தல் வேண்டும்.

**ஆ. பேசுதல் திறன்**

வெவ்வேறு வடிவமைப்புக் கொண்ட சொற்களைக் கொண்டு பேசச் செய்தல் வேண்டும்.

அருஞ்சொற்கள் அமைந்த தொடரை எழுதிப் படிக்கச் செய்வதோடு,அவ்வகைத் தொடர்களைப் பயன்படுத்திப் பேசச் செய்தல் வேண்டும்.

பாடப் பகுதியைப் படித்து அதன் சுருக்கத்தை எடுத்துக் கூறச் செய்தல் வேண்டும்.

**இ. படித்தல் திறன்**

வெவ்வேறு வடிவம் அமைந்த சொற்களைக் கரும்பலகையில் எழுதிப் படிக்கச் செய்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு: 1. பாடுபடு 2. சாறு பிழி

பத்தியில் அமைந்த வெவ்வேறு ஒலிப்புடைய சொற்களைச் சரியான உச்சரிப்போடும், அழுத்தத்தோடு படிப்பதற்கும் பயிற்சி அளித்தல்.

நல்ல மொழிநடையும், பொருட் செறிவும் மிகுந்த பாடப் பகுதியைப் பொருளுக்கேற்ப விரைவாகப் படிக்கச் செய்தல் வேண்டும்.

**ஈ. எழுதுதல் திறன்**

வெவ்வேறு ஒலிப்புடைய சொற்களை ஆசிரியர் சொல்ல, மாணவர்களை எழுதச் செய்தல் வேண்டும்.

வெவ்வேறு ஒலிப்புத் திறன் கொண்ட சொற்களை மாணவர்களே தெரிவு செய்து அவர்களை எழுதச் செய்தல் வேண்டும்.

**உ. விடை எழுதும் திறன்**

பாடப்பகுதியில் அமைந்த இன்றியமையாத வினாக்களுக்குரிய விடையை மாணவர்களை எழுதச் செய்தல் வேண்டும்.

இவ்வாறு மொழிக் கற்பித்தலின் அடிப்படைத் திறன்களாகிய மேற்கூறிய திறன்களை மொழியைக் கையாள்வதற்கேற்ப வளர்த்தல் வேண்டும்.

**பாடம் கற்பிக்கும் வழிமுறைகள்**

உரைநடைப் பாடம் கற்பித்தலின் மூலமே மாணவன் மொழித்திறனைக் கையாளும் முறையை அறிகிறான்; மேலும் பொதுஅறிவு வளர்ச்சியடையவும் உதவுகிறது தேசிய விழுமங்கள், வாழ்க்கை வாழ்வதற்கான திறன்கள், வாழ்விற்குத் தேவையான உயர் பண்புகள் ஆகியன உரைநடைப் பாடத்தின் மூலமே பெறுகிறோம்.

சான்றோர்களின் வரலாறு, அரிய நிகழ்ச்சிகள் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. இவை ''கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்ற அடிப்படையில் மாணவர்களைச் சென்றடையும் வகையில் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்.

தற்காலத்தில் கல்வியியல் வல்லுநர்கள் கருத்துப்படி கறிபித்தல் முறைகளுக்கு முதன்மை கொடுக்கப்படவில்லை; மாணவர்களின் கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

தற்காலக் கற்பித்தல் செயல்வழிக் கற்றல், படைப்பாற்றலை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

உரைநடைப் பாடத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் கற்பிப்பவராக இல்லாமல் கற்றலுக்குத் தூண்டுகோலாக விளங்க வேண்டும். கற்றலை எளிமையாக்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் பகுதியில் உள்ள விழுமங்களை மாணவர் தங்கள் மனதில் பதிய வைக்குமாறு விளக்கங்களும், நிகழ்ச்சிகளும், சிறுகதைகளும், எடுத்துக்காட்டுகளும் ஆசிரியரால் பயன்படுத்தப்பட வேண்டும்.

செயல்வழிக் கற்றல், படைப்பாற்றல் வழிக்கற்றல் இவற்றில் காணப்படும் கற்றல் உத்திகளை ஆசிரியர்கள் முறைப்படி அறிந்து கற்பிக்க வேண்டும்.

உரைநடைப் பாடத்தினை மேற்கூறிய முறையில் கற்பிக்கும் நோக்கங்கள் வருமாறு.

1. இலக்கியத்தில் இடம்பெற்ற மையக் கருத்தை வெளிக் கொணர்தல்.

2. வாய்விட்டுப் படிக்கப் பயிற்சி தருதல்
3. தொடர்புடனும், பிழையில்லாமலும் எழுதப் பயிற்சி தருதல்
4. நடைமுறையில் உள்ள எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்திக் கற்கத் தூண்டுதல்

இவ்வாறு உரைநடைப் பாடத்தைச் செவ்வனே கற்பிக்க வேண்டும்.

**பிற பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தல்**

உரைநடைப் பாடத்தின் கருத்து செய்யுட் பகுதியில் இருப்பின் அத்துடன் இணைத்தும், இலக்கண விதிகளைக் கற்பிப்பதற்குப் பொருத்தமாக இருப்பின் இலக்கணப் பாடத்துடன் இணைத்தும் கற்பித்தல் வேண்டும்.

ஆசிரியர் கற்பிக்க எடுத்துக்கொண்ட பாடத்தில் அறிவியல் செய்திகளும் வரலாற்றுச் செய்திகளும் இருந்தால் அவ்வப் பாடங்களுடன் இணைத்துத் தொடர்பை விளக்கிக் கற்பித்தால், பாடப்பகுதிகள் மனதில் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு பாடப்பொருளைத் தொடர்புபடுத்திக் கற்பித்தால் ஒரே நேரத்தில் உரைநடைப் பாடப்பொருள் மனதில் நிற்கும் முதன்மை நோக்கம் நிறைவேறும்.அதேநேரத்தில் செய்யுள், இலக்கணப் பாடத்திற்குரிய துணைக்கருத்துக்களும் மனதில் நின்று ஒரே நேரத்தில் மூன்று பயனைத் தருகிறது.

இதனால் மாணவர்களுக்குப் பாடத்தில் ஆர்வம் ஏற்படுவதுடன் பாடப்பொருள் மனத்தில் நன்கு பதியவும் துணையாக இருக்கும்.

புதிய அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதவும், சொற்களைப் பிரித்துக் காட்டவும் கரும்பலகையைப் பயன்படுத்த வேண்டும்.

சொற்களை வாக்கியத்தில் அமைத்துப் பயன்படுத்தப் பயிற்சி அளிப்பதால் மொழித்திறன் வளர்வதோடு இலக்கணத்தில் அதே வாக்கியத்தை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தும் போது இலக்கணப் பாடம் எளிதாவதோடு இணைப்புப் பயிற்சியும் சிறப்புறுகிறது.

இவ்வாறு பலவித முறைகளைப் பயன்படுத்தி பாடப்பகுதியைக் கற்பிக்க வேண்டும்.

உரைநடையில் ஒரு பத்தியைக் கற்பித்த பிறகு, அதனை மாணவர்களைப் படிக்கச் செய்தல் வேண்டும். மையக் கருத்தினையும், பத்தியில் உள்ள கருத்துக்களைச் சுருக்கியும், தொகுத்தும் கூறச் செய்ய வேண்டும்.

இதேபோன்று அப்பாட வேளையில் கற்பிக்க வேண்டிய பத்திகளைக் கற்பித்தல் நன்று.

உரைநடைப் பாடத்தில் இடம்பெறும் ஒலி வேறுபாடு ஏறத்தாழ ஒரே நிலையில் அமைந்து (அரம்-அறம் மரம்-மறம் பனி-பணி) பொருள் வேறுபாடுடைய சொற்களின் பொருள் உணர்ந்து வாக்கியத்தில் அமைத்துப் பயிற்சி அளிக்கும்போது அவற்றை இலக்கணப் பாடத்தில் பயன்படுத்தும் போது பாடம் எளிதாகிறது.

'மரபுத் தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள்' இவற்றின் பொருளை உணர்வதோடு அவற்றின் பயன்பாட்டையும் மாணவர் அறிவர். இவை கட்டுரை எழுதும் போது கருத்துச் செறிவுக்கும், கருத்துச் சிறப்புக்கும் இனிய, எளிய மொழிநடைக்கும் பயன்படும். இதனாலும் இணைப்புப் பயிற்சி பொலிவுறும்.

சுருங்கச் சொன்னால் உரைநடைப் பாடம் கற்பித்தல் இலக்கண முறைப்படித் தொடர்களைப் பயன்படுத்தவும், சிறந்த மொழிநடைக்கும் உயர்ந்த கருத்து நிலைப்பாட்டிற்கும் பயன்பட்டு மொழித்திறனை வளர்க்கிறது.

**4.6 துணைப்பாடம்**

துணைப்பாடம் கற்பிப்பதில் மொழித்திறன் வளர்ச்சியை மாணவர் ஓரளவே பயன்பெறுவர்; இருந்தாலும் முக்கியத் தேவையான நீதிகளைப் பெற ஏதுவாக அமைகிறது.

உரைநடைப் பாடத்தில் கருத்துக்களை முழுமையாகச் சொல்ல வாய்ப்பில்லாத நிலையில் துணைப்பாடம் பயன்படுகிறது. இத்துணைப்பாடக் கருத்துக்கள் வாழ்வுக்குத் துணையாக இருந்து பயன்படக் கூடியவை.

**துணைப்பாடப் பகுதி கற்பித்தலின் நோக்கங்கள்**

மொழிக் கற்பித்தலில் பயன்படும் மற்றொரு பாடநூல் துணைப்பாடம். முதன்மைப் பாடத்திற்கு அடுத்தநிலையில் துணைப்பாடம் கருதப்படுகிறது.

தற்போது துணைப்பாடப் பகுதியில் சிறுகதைகள், கடிதங்கள் முதலியன தரப்படுகின்றன; இலக்கிய வடிவங்களை அறிந்துகொள்ளத் துணைப்பாடம் பயன்படுகிறது.

சொற்களஞ்சியப் பெருக்கம், பொருள்உணர்திறன், கருத்துக்களைப் பெறும்வாயில் முதலிய மொழித்திறன்கள் பெறப்படுகின்றன.

வாய்க்குட் படிப்பு, அகன்ற படிப்பு ஆகிய படிப்புப் பயிற்சிக்கு அடித்தளமாக அமைகிறது.

அகராதி பயன்படுத்தும் பழக்கத்திற்கு வழிகாட்டியாக அமைகிறது.

கருத்துக்களைச் சுருக்கியும், விரித்தும் எழுதும் உயர்நிலைத் திறன்களைப் பெறவும் துணையாய் அமைகிறது; தூண்டுகோலாக அமைகிறது. கட்டுரை, கடிதம் போன்ற தகவல் பரிமாற்ற வடிவங்களைக் கையாளும் திறனை வளர்த்தலும் துணைப்பாடம் கற்பித்தலின் முதன்மை நோக்கமாகும்.

கட்டுரை, கடிதம் போன்ற தகவல் பரிமாற்ற வடிவங்களைக் கையாளும் திறனை வளர்த்தல்.

பத்தாம் வகுப்பு வரை துணைப்பாடம் தனி நூலாக இல்லாமல் துணைப்பாடப் பகுதியாகவே உள்ளது. அப்பகுதியைத் தமிழாசிரியர்கள் கற்பிப்பதற்குத் தேவையான நடைமுறைகள் இங்கு விவரிக்கப்பட உள்ளன.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-12**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

4. உரைநடைப் பாடத்தில் ஆர்வமூட்டலை எவ்வாறு ஏற்படுத்தலாம்?

..........................................................................................................................................

..........................................................................................................................

5. விடை எழுதும் திறனைப் எவ்வாறு பெறலாம்?

..........................................................................................................................................

......................................................................................................................................

6. துணைப்பாடப் பகுதியை விளக்கும் முறையை கூறுக.

..........................................................................................................................................

.................................................................................................................................

**4.6.1 கற்பிக்கும் முறைகள்**

**1. ஆர்வமூட்டல்**

துணைப்பாடத்தைத் தொடங்கும்போது தேவையான கருத்துகளைக் கூறி ஆர்வமூட்ட வேண்டும்.

**2. மாணவர் படித்தல்**

ஆசிரியர் முன்பே திட்டமிட்டபடி எந்தப் பக்கம் முதல் எந்தப் பக்கத்தில் எந்தப் பத்தி வரை மாணவர் படிக்க வேண்டும் எனச் சொல்ல வேண்டும்.

மாணவர்கள் ஒரு பக்கம் படிக்க மூன்று மணித்துளி (மூன்று நிமிடம்) வரை கொடுக்கலாம். மாணவர்களை முன்னரே வீட்டிலும் படித்துவரச் செய்யலாம்.

**3. வினாக்கள் கேட்டல்**

மாணவர்களிடம் குறிப்பிட்ட பத்திகளின் தலைப்பையும் மையக் கருத்தையும் வினாக்கள் மூலம் வரவழைத்துக் கரும்பலகையில் எழுதவேண்டும். அவற்றையே குறிப்புச் சட்டகமாக அமைத்துக் கொள்ளலாம்.

**4. விளக்குதல்**

முதலில் பொதுக் கருத்தை வரவழைத்தல் வேண்டும்; பின்னர் மேற்கோள் செய்யுள், பழமொழிகள், கதைக் குறிப்புக்கள் ஆகியவற்றை மாணவர் அறிந்துள்ளனரா என அறிந்து கொள்ளலாம். மாணவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்றால் குறிப்பிட்ட பகுதியைக் கற்பிக்க வேண்டும்.

**5. தொகுத்தல்**

மாணவர்கள் கூறும் பதில்களைத் தொகுத்துக்கூறச் செய்தல் வேண்டும்; மாணவர் கூறவில்லை என்றால் ஆசிரியரே தொகுத்துக் கூறலாம்.

**6. சுருக்கிக் கூறுதல்**

அவ்வாறு தொகுத்த செய்திகளைக் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் சுருக்கிக் கூறலாம். இத்தகைய பயிற்சியின் போது பத்தித் தலைப்பையும், பத்தியில் உள்ள முக்கியக் கருத்துகளையும் மாணவர் அறிவர்.

**7. சொற்கள்**

துணைப்பாடம் நடத்தும்போது அதில் இடம் பெற்றுள்ள புதிய சொற்களை விளக்கும்போது மாணவர் அறிந்திருப்பர். அப்பொழுதே ஆசிரியர் அவற்றைக் கரும்பலகையில் எழுதுதல் நன்று. மாணவர்களும் குறிப்பேட்டில் எழுதி அகராதியைப் பார்த்துப் பொருள் தெரிந்து கொள்ளலாம்.

**8. கட்டுரை எழுதுதல்**

பாடம் கற்பிக்கும்போது வகுப்பில் தயாரித்த குறிப்புச் சட்டகத்தை வைத்துக் கொண்டு மாணவர்களைக் கட்டுரை எழுதச் செய்தல் வேண்டும்.

நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் மாணவர்கள் ஆசிரியர் வழிகாட்டுதலோடு குறிப்புச் சட்டகம் தயாரிக்க வேண்டும். பின்னர் மாணவர் தம்மிடம் இருக்கும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதச் செய்ய வேண்டும்.

நாள்கள் செல்லச் செல்ல மாணவர்களைக் குறிப்புச் சட்டகம் தயார் செய்யச் சொல்லி, அவர்களிடம் இருக்கும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதச் செய்யலாம்.

இம்முறையில் துணைப்பாடத்தைக் கற்பித்தால் துணைப்பாடம் கற்பித்தல் நோக்கம் நிறைவேறும்.

**பிற பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தல்**

துணைப்பாடப் பகுதிகளைத் தனியே கற்பித்தலைவிடச் செய்யுள் பாடத்துடனோ, உரைநடைப் பாடத்துடனோ இணைத்துக் கற்பிக்கும்போது கருத்துக்களும், கதை நீதியும் வரப்பெற்று மனதில் நின்று நீண்டகால வாழ்விற்குப் பயன்படும்.

எடுத்துக்காட்டாக நெல்லிக்கனி என்ற நாடகம் துணைப்பாடமாக உள்ளது. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி வழங்கிய வரலாற்றைத் தமிழ் உலகம் அறியும். இந்தக் கருத்து அமைந்த செய்யுள் புறநானூற்றில் உள்ளது.

முதலில் நெல்லிக்கனி நாடகம் தொடர்பான செய்திகளைக் கூறி மாணவர்களை ஆர்வமூட்டலாம். பின்னர் மாணவர்களை அதியமானாகவும், ஔவையாகவும், அமைச்சர்களாகவும், வாயிற்காவலர்களாகவும் பாத்திரமேற்றுப் படிக்கச் செய்து கருத்துகளை விளக்கலாம்.

மாணவர்களிடம் ஔவைக்கு அதியன் நெல்லிக்கனி கொடுத்ததன் நோக்கத்தையும், அதன் பயனையும் வினாக்கள் மூலம் வரவைக்கலாம். மாணவர்களிடம் தமிழ்ச்சுவையின் பயனைத் தெரிந்து கொள்ளலாம்.

இதே கருத்தமைந்த புறநானூற்றுச் செய்யுளை மாணவர்களிடம் கேட்கலாம். அவர்கள் செய்யுளைச் சொல்லமாட்டார்கள். பின்னர் ஆசிரியரே செய்யுளைச் சொல்லிக் கருத்தை விளக்கலாம்.

மாணவர்களிடம் செய்யுளின் மையக் கருத்தைக் கேட்கலாம்; மாணவர்கள் சொல்லவில்லை என்றால் ஆசிரியரே விளக்கலாம்.

தமிழ்ப்புலவர் வாழ தமிழ் வாழும்; தமிழ் வாழ தமிழ்க் கருத்துக்கள் வாழும்; தமிழ்க் கருத்துக்கள் வாழ தமிழன் வாழ்வான்; உலகம் வாழும்.

பாடப்பகுதியிலும், பாடப்பகுதியோடு தொடர்புடைய செய்யுட் பகுதியிலும் இடம்பெற்ற அருஞ்சொற்பொருளையும், கவிதை நயத்தையும் ஆசிரியர் விளக்கலாம்.

முடிவில் ஔவையால் தமிழ்ச் சமுதாயமும் உலக சமுதாயமும் வாழும் என்ற உயரிய நீதியைச் சொல்லி ஆசிரியர் துணைப்பாடப் பகுதியை நிறைவு செய்யலாம்.

**துணைப்பாடம் கற்பித்தலின் பயன்கள்**

1. துணைப்பாடப் பயிற்சியின் மூலம் ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு இரண்டிற்கான பயிற்சியும் சிறப்புறுகிறது.
2. கதைகள் மூலம் அறியும் நீதி தனிமனித வாழ்விற்கும், சமுதாய வாழ்விற்கும் பயன்படுகிறது.
3. சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு அடிப்படையாய் அமைகிறது.
4. பழமொழிகள், பொன்மொழிகள், மரபுத் தொடர்கள் இவற்றைக் கையாளும் மொழித்திறனைப் பெறுகின்றனர்.
5. வாய்விட்டுப் படித்தல், வாய்க்குப் படித்தல் பயிற்சிக்கான களனாக அமைகிறது.
6. ஒலிப்புத்திறன், உச்சரிப்பு இவற்றிற்கு வடிகாலாக அமைகிறது.
7. மாணவர்களுக்குக் கட்டுரைப் பயிற்சி கொடுக்கப்படுவதால் புதியன படைக்கும் திறன் பெறுகின்றனர்.
8. வினாக்கள் கேட்பதன் மூலம் மாணவர்தம் சிந்தனைத் திறனும் செயல்திறனும் மேலோங்குகிறது.
9. கருத்துக்களைச் சுருக்கிச் சொல்லும் திறனும், தொகுத்துச் சொல்லும் திறனும் பெறுகின்றனர்.
10. பத்தி மரபையும், மொழி மரபையும் அறிகின்றனர்.

**4.7 இலக்கணம் கற்பித்தல்**

மொழிக்கு வரையறை இலக்கணம். வயலுக்கு வேலி போலவும், வீட்டிற்குச் சுற்றுச்சுவர் போலவும் இருந்து மொழியைக் காப்பது இலக்கணம்.

மொழியைப் பிழையின்றிப் பேசவும், படிக்கவும், எழுதவும் பயன்படுவது இலக்கணம். மொழி அமைப்பைப் பாதுகாப்பதோடு மொழித் தூய்மைக்கும், நல்ல மொழிநடைக்கும் பயன்படுவது இலக்கணம்.

தமிழ் இலக்கியத்தைப் பயிலவும், பல நுட்பமான கருத்துகளைச் சுவைக்கவும் இலக்கணத்தை மாணவர்கள் கவனத்துடன் படிக்க வேண்டும்.

சிவஞான சுவாமிகள் அருளிய,

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

இப்பாடல் இலக்கணம் பயிலுவதன் இன்றியமையாமையை எடுத்துச் சொல்கிறது.

**4.7.1 இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்கள்**

இலக்கணம் என்பது மொழிக்கு விளக்கம் தரும்; தெளிவை ஏற்படுத்தும். மொழியின் மரபைக் காக்கவும், மொழிப்பயிற்சி அளிக்கவும் இலக்கணம் பயன்படுகிறது.

இலக்கணம் பள்ளிகளில் கற்பிக்கப்படுவதன் நோக்கங்களைக் காணலாம்.

1. இலக்கணத்தின் மூலம் மொழியின் அமைப்பை அறிந்து கொள்ளலாம்.
2. மொழியைத் திருத்தமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் துணையாய் இருக்கிறது.
3. எழுத்து வழக்கு, பேச்சு வழக்கில் ஏற்படும் பிழைகளைத் திருத்திக் கொள்ளப் பயன்படுகிறது.
4. செய்யுட்களைப் பிரித்துப் பொருளுணரவும், பொருளுணர்ந்து படிக்கவும் பயன்படுகிறது.
5. இலக்கிய இன்பங்களைப் பெறத் தூண்டுகிறது.
6. மொழியின் இயல்புகளையும், பண்புகளையும் அறியப் பயன்படுகிறது.
7. இலக்கண விதிகள் படைப்பாற்றலை வளர்க்கின்றன.
8. ஒலிப்பு முறைகளை நன்கு அறிய முடிகிறது.
9. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐவகை இலக்கணங்களைக் கற்றுத் தெளிவு பெற உதவுகிறது.
10. மொழிமரபு மாறாமல் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது.
11. மொழியில் பெரிய மாறுதல் ஏற்பட்டு, வரும்தலைமுறையினருக்கு மொழியின் அமைப்பே விளங்காத நிலை ஏற்படாதபடி தடுப்பதற்கு இலக்கணம் பயன்படுகிறது.

**4.7.2 இலக்கணம் கற்பிக்கும் முறை**

தொடக்கநிலை வகுப்புகளில் விளையாட்டு முறையில் இலக்கணம் கற்பித்தால் நிறைவான பயன் கிடைக்கும். ஐந்தாம் வகுப்பில் விதிவருமுறையில் கற்பிக்கலாம். எடுத்துக்காட்டுகள் எளிமையாகவும், மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையிலும் அமைய வேண்டும். கற்பிக்கும் போது பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி மாணவர் உள்ளத்தில் பதியச் செய்ய வேண்டும்.

நடுநிலை வகுப்புகளில் விதிமுறையிலேயே இலக்கணம் கற்பிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டுகளை ஆசிரியர் சொல்லாமல் மாணவர்களிடமிருந்து வரவைக்க வேண்டும்.

உயர்நிலை வகுப்புகளிலும் விதி வருமுறையையே பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும்.

சில பகுதிகளை விதிவிளக்க முறையிலும் கற்பிக்க வேண்டும். இவ்வாறு கற்பிக்கும்போது மாணவர்களிடமிருந்து மேலும் பல எடுத்துக்காட்டுகளை மாணவரிடமிருந்து வரவைத்துக் கற்பித்த கருத்துக்கு வலிமை சேர்க்க வேண்டும்.

விதிவருமுறையின் இறுதியில் விதிவிளக்க முறையைப் பயன்படுத்தினால் இலக்கணப் படிப்பு நன்கு அமையும். பின்வரும் எடுத்துக்காட்டுகளை வகுப்பறைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களை ஒவ்வொருவராக வாய்விட்டுப் படிக்கச் செய்ய வேண்டும்.

1. திருமகள் தாமரையில் இருப்பாள்
2. தலைக்கு ஒன்று கொடு
3. இந்தியா வென்றது
4. பொங்கல் உண்டேன்

இங்குத் ‘தாமரை, தலை, இந்தியா, பொங்கல்’ போன்ற சொற்கள் எவற்றைக் குறிக்கின்றன என மாணவர்களிடம் கேட்கின்றார் ஆசிரியர்.

1. தாமரை - மலரைக் குறிக்கும்
2. தலை - மனிதனைக் குறிக்கும்
3. இந்தியா - இந்திய அணியைச் சேர்ந்த வீரர்களைக் குறிக்கும்
4. பொங்கல் - உணவைக் குறிக்கும்

என மாணவர்கள் பதில் அளிக்கும் சூழலை ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். அப்போது மாணவர்கள் தாமரை என்பது தாமரைக் கொடியைக் குறிக்காமல் மலரைக் குறிக்கும் அதேபோல தலை என்பது தலையை உடைய மனிதனைக் குறிக்கும் இந்தியா என்பதும் இந்திய அணியினராகிய வீரரைக் குறிக்கும் பொங்கல் என்பது தொழிலைக் குறிக்காமல் பொங்கல் உணவைக் குறிக்கும்.

இவ்வாறு ஒன்றன் பெயர் அப்பெயரைக் குறிக்காமல் அப்பெயரோடு தொடர்புடைய பொருளைக் குறிக்குமாயின் அது ஆகுபெயர் ஆகும்.

ஆசிரியர் விதிவருமுறையில் எளிமையான எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பாடப்பகுதியை விளக்கும்போது இலக்கணப் பாடம் எளிதாகிறது.

இங்கு ஆசிரியரின் வழிகாட்டுதலோடு எளிமையான எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பாடப்பகுதி விளக்கப்படுவதால் எளிதாக மாணவரைச் சென்றடையும்.

பின்னர் ஆகுபெயரின் வகைகளைக் கூறித் தாமரை என்பது பொருளாகுபெயர், தலை என்பது சினையாகு பெயர், இந்தியா என்பது இடவாகு பெயர், பொங்கல் என்பது தொழிலாகு பெயர் எனக் கூறிக் காரண காரியத் தொடர்பை விளக்கலாம்.

இவ்வாறு எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு இலக்கண விதியைப் படிப்படியே வரவழைக்கும்போது ஆகுபெயரும் அதன் வகைகளும் எளிதான பாடமாக அமைகின்றன.

தமிழாசிரியர் மற்ற ஆகுபெயர்களையும் விதிவருமுறையில் விளக்க வேண்டும்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்க்கும் விதிவருமுறையிலேயே இலக்கணப் பாடத்தை நடத்தலாம்.

பாடப்பகுதியில் சில குறிப்புகளைக் கூறி மாணவர்களிடமிருந்தே சில எடுத்துக்காட்டுகளை வரவைக்கலாம்.

நான்காம் வேற்றுமையைக் கற்பிக்கும்போது நான்காம் வேற்றுமை ஏழு பொருளில் வரும் என்பதைக் கூறி அப்பொருள்களுக்கான விளக்கத்தையும் தருதல் வேண்டும்.

பின்னர் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைக் கூறி மாணவர்களைப் படிக்கச் செய்து பதிலையும் வரவைக்கலாம்.

1. ஏழைக்கு ஆடை கொடுத்தான்
2. இராமனுக்குப் பகை இராவணன்
3. இராமனுக்கு நண்பன் குகன்

இங்குள்ள எடுத்துக்காட்டுகளில் நான்காம் வேற்றுமை உருபைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பின்னர் ஏழைக்குக் கொடுப்பது கொடை என்பதை மாணவர்களைச் சொல்லச் செய்து கொடைப் பொருளைக் கூறவேண்டும்.

இரண்டாம் எடுத்துக்காட்டைப் படிக்கும்போதே ‘கு’ உருபு பகைப்பொருளில் வந்துள்ளதை மாணவர் அறிவர். இதை மிக எளிதாகவே விளக்கலாம்.

மூன்றாம் எடுத்துக்காட்டு நட்புப் பொருளில் வந்துள்ளது; மாணவர் எளிதாக அறிவர்; நட்புப் பொருள் இலக்கணத்தில் ‘நேர்ச்சி’ என்ற சொல்லால் குறிக்கப்படுவதைச் சுட்டலாம்.

இவ்வாறு நான்காம் வேற்றுமை உருபு வந்துள்ள மற்ற நான்கு பொருள்களையும் எடுத்துக்காட்டுகளைச் சொல்லி இலக்கண விதியை வரவைக்கலாம்.

இவ்வாறு நடத்தும்போது இலக்கணப் பாடம் எளிதாகிறது.

**4.7.3 இலக்கணப் பாடம் கற்பித்தலின் தேவைகள்**

1. மொழிமரபை அறிவதற்கும், மொழிமரபைப் பயன்படுத்துவதற்கும் இலக்கணப் பாடம் தேவை.
2. எதிர்கால மரபினர்க்கு மொழிமரபு இன்னதென உணர்த்துவதற்கும், மொழிமரபு விளங்காத நிலை ஏற்பட்டுவிடாதபடி தடுப்பதற்கும் இலக்கணம் கற்பிக்கப்படுகிறது.
3. மொழிமரபைப் பின்பற்றி எழுதப்பட்ட இலக்கியங்களைப் படித்தறிந்து நயங்களை அறிவதற்கும் இலக்கணம் உதவுகிறது.
4. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவற்றிற்குரிய தொடர்பை அறிய இலக்கணத்தின் தேவை அவசியமாகிறது.

5. இலக்கணக் கருத்துகள் சுருக்கமாக இருப்பதால் கருத்துகளைச் சுருக்கமாக அறிவதற்கும், வெளிப்படுத்துவதற்கும் பயன்படுகிறது.
6. கற்றலை விரைவுபடுத்த உதவுகிறது.
7. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையால் மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.
8. மொழியின் ஒலிகள், ஒலிகள் தோன்றும் முறை, சொற்கள் அமையும் முறை போன்றவற்றை இலக்கணத்தின் மூலம் அறிகிறோம்.
9. மொழி ஆராய்ச்சிக்கும், மொழியின் அமைப்பை அறிவதற்கும் பெரிதும் பயன்படுகிறது.
10. இலக்கணப் புலமையானது இலக்கியப் புலமையும் மொழிப்புலமையும் பெற உதவுகிறது.
11. பேசும் போதும், எழுதும் போதும் ஏற்படும் மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இலக்கணம் தேவை.
12. சொற்கள், சொற்றொடர்கள், பத்தி மரபுகளில் ஏற்படும் பிழைகளைத் தவிர்ப்பதற்கு இலக்கணம் தேவை.
13. கொச்சை மொழிப் பழக்கத்தை நீக்கி இலக்கிய வழக்கைப் பேச்சிலும், எழுத்திலும் கொண்டு வரலாம்.
14. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொல்லறிந்து பயன்படுத்த உதவுகிறது.
15. திணை, பால், எண், இடம் இவற்றின் சிறப்பையும் இவற்றை வாக்கியங்களில் பிழையின்றிப் பயன்படுத்தவும் உதவுகிறது.
16. மொழியறிவை உறுதிப்படுத்துவது இலக்கணம்.
17. ஆழ்ந்த இலக்கண அறிவு மொழியின் பல நுட்பங்களை அறிய உதவுகிறது.
18. மொழியைக் கற்பிக்கத் துணையாக இருப்பது இலக்கண அறிவு.
19. செய்யுளைப் பொருள் மாறாமல் பிரிக்கவும், பொருள் உணரவும் பயன்படுகிறது.
20. செய்யுளில் இடம்பெறும் இலக்கண அமைதிகளையும், அரிய சொல்லாட்சிகளை அறியவும், சிலேடை நயம், உள்ளுறை இறைச்சிப் பொருள் ஆகியவற்றை அறியவும் உதவுகிறது.

இலக்கணம் கற்பிப்பதன் நோக்கம், தேவை ஆகியவற்றையும் இலக்கணம் கற்பிக்கும் முறையைப் பொதுவாகவும் அறிய உதவுகிறது.

இனிச் சிறப்பாக இலக்கணத்தை கற்பிக்க இலக்கணம் வல்லார் ஏற்படுத்திய முறைகள் இரண்டு. அவை, 1.விதிவருமுறை 2.விதிவிளக்கமுறை ஆகியவை.

**4.8 விதிவருமுறை**

எடுத்துக்கொண்ட இலக்கணத் தலைப்புக்கு ஏற்ப நடைமுறையில் உள்ள எடுத்துக்காட்டுக்களை மாணவர்களைச் சொல்லச் செய்யலாம் அல்லது ஆசிரியரே சொல்லலாம். அவ்வெடுத்துக்காட்டை விளக்கி அதன் மூலம் இலக்கண விதியை வரவைத்தல் விதிவருமுறையாகும்.

மாணவர்கள் பயன்படுத்தும் சொற்றொடர்களைக் கொண்டு இலக்கண விதியை வரவைப்பதால் இது சிறந்த முறையாகும்.

மாணவர்களிடம் உரையாடுவது போல் ஆசிரியர் பாடத்தைத் தொடங்க வேண்டும். உரையாடலின் இடையே திட்டமிட்டு ஆசிரியர் சில தொடர்களைப் பயன்படுத்த வேண்டும். இத்தொடக்கம் இயல்பாக அமைந்தால் மாணவர்களுக்குப் பாடம் சுவைமிக்கதாக அமையும்.

ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியைக் கூறுவதாகத் தொடங்கலாம்.

வரும்வழியில் சிறுவன் ஒருவன் மாமரத்தின் மீது கல்லெறிந்தான்; தோட்டக்காரன் வருவதைக் கண்டு ஓடினான்; கீழே விழுந்தான்; அவன் காலொடிந்தது.

இவ்வாறு நிகழ்வைச் சொல்லி சிறுவன் என்ன செய்தான்? ‘கல் எறிந்தான் என்றும், அவனுக்கு என்ன நேர்ந்தது? ‘கால் ஒடிந்தது’ என்றும் வினாக்கள் மூலம் பதில் வரவழைத்துத் தனித்தனியே கரும்பலகையில் எழுதிப் பின்னர் பிரித்து எழுதச் செய்யலாம்.

‘கல், ல், எறிந்தான்’, ‘கால், ஒடிந்தது’ என எழுதுவர்.

இவற்றைத் தொடர்ந்து ‘பொன்னாசை, பொய்யுடல்’ போன்ற தொடர்களை எழுதி, அவற்றைப் பிரித்துக்காட்டி, ‘தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்’ என்ற விதி எவ்வாறு பொருந்துகிறது என விளக்க வேண்டும். இவ்வாறு இலக்கணவிதி வரவழைக்கப்பட்டுக் கருத்து மாணவர்களைச் சென்றடைகிறது.

**4.8.1 விதிவருமுறையின் நிறைகள்**

1. மாணவர்கள் தாங்கள் தெரிந்த செய்திகளில் இருந்து தெரியாத செய்தியை அறிய முடியும். மாணவர்கள் புதிய விதியினைத் தாமே நினைவில் கொண்டு வருவதால் மனதில் நன்றாக நிலைத்து நிற்கும்.

2. புதிய விதியைச் சிந்தித்துத்; தாமே எண்ணி மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர். அதனால் அவ்விதி மனத்தில் நன்கு பதிகிறது.

3. விதிவருமுறையால் மாணவர்களுக்குப் பாடத்தில் ஆர்வம் ஏற்படுகிறது; தாங்களே ஒரு விதியைக் கண்டுபிடித்த மகிழ்ச்சி ஏற்படுகிறால் அவர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்கிறது.

**4.8.2 விதி வருமுறையின் குறைகள்**

விதிவருமுறையில் கற்பிப்பதில் சில குறைகளும் உள்ளன.

1. விதிவருமுறையின்படி பல எடுத்துக்காட்டுகளைப் பார்த்து மாணவர்கள் ஒவ்வொரு விதியை அறிவதற்கு நீண்ட நேரமாகும்.

2. இம்முறையைப் பின்பற்றிக் கற்பித்தால் மாணவர்கள் பெறவேண்டிய இலக்கண அறிவு முழுமையையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்பித்து முடித்தல் முடியாததாகும்.

3. எடுத்துக்காட்டுகள் மூலம் பொதுவிதியைக் கண்டுபிடிக்கச் செய்வதற்கு, ஆசிரியர் தனித்திறமை உடையவராக இருத்தல் வேண்டும்.

4. ஒரு பாடத்தலைப்பின் தயாரிப்புக்கு நீண்ட நேரமாகும்.

**4.9 விதி விளக்குமுறை**

மாணவர்கள் எடுத்துக்காட்டுகளின் மூலம் மிக எளிதில் கண்டுணர முடியாத இலக்கண விதிகளை விதிவிளக்கு முறையில் கற்பிக்கலாம்.

இலக்கண விதியைச் சொல்லி அதனைப் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல் விதிவிளக்கு முறையாகும். இம்முறை பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட கற்பித்தல் முறையாகும்.

மெய்யீற்றுப் புணர்ச்சியில் ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியைக் கூறும் நன்னூல் விதி.

“ணன வல்லினம் வரட்டறவும், பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பாகும்மே”

என்று கூறி விளக்கமளித்து ஒவ்வொரு துணைவிதிக்கும் எடுத்துக்காட்டுகள் தருதல் வேண்டும்.

புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியாக இருக்க வேண்டும் அவ்வாறு இருக்கும்போது வருமொழி முதலில் வல்லினம் வந்தால், நிலைமொழி ஈற்று ணகர மெய் டகர மெய்யாகவும், னகர மெய் றகர மெய்யாகவும் மாறும்.

மண் + குடம் →மட்குடம்

பொன் + குடம் →பொற்குடம்

வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் மெல்லினமும், இடையினமும் வந்தால் ணகர மெய்யும், னகர மெய்யும் மாற்றமின்றி இயல்பாகவே இருக்கும்.

மண் + நன்று → மண் நன்று

பொன் + வன்மை → பொன்வன்மை

அல்வழிப் புணர்ச்சியாக இருந்தால் வருமொழி முதலில் மூவினமும் வந்தால் ணகரமும், னகரமும் இயல்பாக இருக்கும்.

பொன், சிறந்தது → பொன் சிறந்தது

விண், நிறைந்தது → விண் நிறைந்தது

இவ்வாறு ஒவ்வொரு விதியையும் விளக்கி எடுத்துக்காட்டைச் சொல்லி விளக்கலாம்.

**4.9.1 விதிவிளக்கு முறையின் நிறைகள்**

1. இலக்கணத் தலைப்பை மிக விரைவாகவும், நிறைவாகவும் கற்பிக்கலாம்.
2. இலக்கண விதிகளும், எடுத்துக்காட்டுகளும் நூலில் இடம்பெறுவதால் ஆசிரியர் மிக எளிதாகக் கற்பிக்கலாம்.
3. நீண்டநேரம் பாடப்பொருளைத் தயாரிக்கத் தேவைப்படாது.

**விதிவிளக்கு முறையின் குறைகள்**

1. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்ல வேண்டும் என்ற கற்பித்தல் முறைக்கு முற்றிலும் முரணானது.
2. ஆசிரியர் இலக்கண விதியை விரைவாகக் கற்றுத் தரலாம்; ஆனால் மாணவர்கள் விதியை நன்றாக அறிந்து கொண்டார்களா எனச் சொல்ல முடியாது.
3. இம்முறையில் ஆசிரியர் சொல்வதை மாணவர்கள் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்; வேறு வேலை செய்வதில்லை. ஆதலால் கற்பிக்கப்படும் இலக்கண அறிவு நீண்ட நாளுக்கு நிலைத்திருக்கும் எனச் சொல்ல முடியாது.

விதிவிளக்குமுறை, விதிவருமுறை ஆகிய இரு முறைகளிலும் நிறைகளும் உள்ளன; குறைகளும் உள்ளன. ஆசிரியர் இலக்கணம் கற்றுத் தரும்போது எது ஏற்ற முறையோ அதைத் தெரிவு செய்து கற்பிக்க வேண்டும்.

**4.10 கட்டுரைப் பாடம் கற்பித்தல்**

சொற்களைக் கொண்டு வாக்கியங்களால் கட்டி உரைப்பது கட்டுரையாகும்.

ஒரு பொருள் பற்றிய கருத்துகளை ஒழுங்குபடுத்திப் பொருட்செறிவோடு, விளக்கமாக இனிய எளியநடையில் எடுத்துரைப்பதே கட்டுரையாகும்.

கட்டுரையில் ‘சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி உரைத்தல்’ முதலான சிறப்புக்கள் இருக்க வேண்டும்.

மாணவர்கள் கட்டுரைப் பயிற்சியில் திறன்பெற நூலகம் சென்று பல நூல்களைப் படிக்க வேண்டும். செய்திகளையும், மாத, வார, நாள் ஏடுகளையும் படிக்க வேண்டும். இவற்றை எல்லாம் படித்துக் குறிப்பெடுக்க வேண்டும். அப்போது கட்டுரை எழுதுவது எளிதாகும்.

**4.10.1 கட்டுரை எழுதுவதன் நோக்கங்கள்**

கட்டுரை எழுதுவதன் மூலம் மொழித் திறன்களை வளர்க்கலாம். கட்டுரை எழுதுவதன் நோக்கங்களைக் காண்போம்.

1. மொழித்திறன்களை வளர்க்க உதவுகிறது.
2. செய்திகளைத் திரட்டவும், பகுக்கவும், தொகுக்கவும் மாணவர் தெரிந்து கொள்கின்றனர்.
3. மொழிப்பயிற்சி திறன்பெறு பயிற்சியாக அமையும்.

4. மேற்கோள்களை உரிய இடத்தில் பயன்படுத்தும் முறையை அறிகின்றனர்.
5. சொற்றொடர் அமைப்புக்களையும், பத்தி மரபுகளையும் தெரிந்து கொள்கின்றனர்.
6. படைப்பாற்றலையும், சிந்தனை ஆற்றலையும் வளர்க்க உதவுகிறது.
7. கருத்துக்களைச் சுருக்கி எழுதவேண்டிய இடத்தில் சுருக்கியும், விரித்தும் எழுத வேண்டிய இடத்தில் விரித்தும் எழுதப் பயிற்சி அளித்தல்.
8. ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்க்கிறது.
9. செய்திகளை வகைப்படுத்த உதவுகிறது.
10. இலக்கிய நயத்துடனும், திறத்துடனும் கருத்துக்களைச் சொல்லப் பயன்படுகிறது.
11. சொல்லாட்சித் திறனை வளர்க்கிறது.
12. காலவரையறைக்குட்பட்டு எழுதப் பயிற்சி தருகிறது.
13. நல்ல நடையில் எழுதப் பயிற்சி அளிக்கிறது.
14. மரபுத்தொடர், பழமொழிகள், பொன்மொழிகள் இவற்றைக் கையாளப் பயிற்சி தருகிறது.
15. வருணனை, இயற்கைப் புனைவு போன்ற திறன்களையும் வளர்க்கிறது.

**4.10.2 கட்டுரைப் பாடம் கற்பிக்கும் முறைகள்**

**வாய்மொழிக் கட்டுரை**

ஒரு பொருளைப் பற்றி இலக்கணப் பிழையின்றி வாய்மொழியாகப் பேசுவது, உரையாடுவது, விவாதிப்பது வாய்மொழிக் கட்டுரை எனப்படும்.

வகுப்பில் ஆசிரியரும், மாணவரும் விவாதித்துக் கட்டுரை எழுதத் தேவைப்படும் கலைச்சொற்கள், வாக்கியங்கள், தொடக்கம், விளக்கம், முடிவு ஆகியவற்றை முன்கூட்டியே அறிந்து கூறுவதும் வாய்மொழிக் கட்டுரையாம்.

**ஆசிரியர் தரும் குறிப்புகள்**

கட்டுரை எழுதப் பயிற்சி அளிக்கும்போது தொடக்கத்தில் தலைப்பைத் தருவதோடு, அத்தலைப்புக்கான குறிப்புக்களையும் தரவேண்டும்.

மாணவர்களிடம் தலைப்புத் தொடர்பான நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து வருமாறு செய்ய வேண்டும்.

மரபுத் தொடர்கள், வருணனைத் தொடர்கள், சொல்லாட்சிகள், மேற்கோள்கள் இவற்றையும் எழுதச் செய்யலாம்.

இவற்றைக் கட்டுரையாக எழுதப் பயிற்சி தரலாம். செய்திகளை நிரல்பட எழுதுவதற்கும் மேற்கோள்களைக் கையாள்வதற்கும் மாணவர் பயிற்சி தரலாம்.

**கட்டுரை எழுதுவதன் வளர்ச்சி நிலைகள்**

கட்டுரை எழுதுவதில் படிப்படியாகப் பயிற்சி தரவேண்டும். எளிமையிலிருந்து அருமை என்ற நிலையை மனதில் கொண்டு கட்டுரை எழுதச் செய்தல் வேண்டும்.

**முதல் வகைப் பயிற்சி**

தலைப்பை மையமாகக் கொண்டு அதில் இடம்பெறும் கருத்துகளை மையமாகக் கொண்டு முன்னுரை எழுத வேண்டும்.

பொருளுரையை மூன்று அல்லது நான்கு சிறுதலைப்புக்களாகப் பிரித்துக் கொண்டு, சிறு தலைப்புக்களுக்கேற்ற கருத்துக்களை எழுதச் செய்தல் வேண்டும். தலைப்பில் இடம்பெற்ற கருத்துக்களின் தொகுப்பும், முடிவான கருத்தோ அல்லது நீதியோ இடம்பெற வேண்டும். இப்பயிற்சியை முதல்வகைப் பயிற்சியாகக் கொள்ள வேண்டும்.

**இரண்டாம் வகைப் பயிற்சி**

இரண்டாம் நிலையில் மாணவர்கள் மற்றவர் உதவியின்றித் தாமே எழுதும் பயிற்சியைத் தரவேண்டும். மாணவர்கள் பார்த்துக் கேட்டு அறிந்த பொருள் பற்றி ஆறு, ஏழாம் வகுப்புக்களில்

கட்டுரைப் பயிற்சியாக எழுதச் செய்தல் வேண்டும். கதைக் கட்டுரைகளையும், படக்கட்டுரைகளையும் இரண்டாம் வகைப் பயிற்சியாகக் கொள்ளலாம்.

**மூன்றாம் வகைப் பயிற்சி**

மூன்றாம்நிலைப் பயிற்சியில் கட்டுரைத் தலைப்பைக் கொடுத்து முன் தயாரிப்போடு தாமாகவே நன்கு எழுதும் பயிற்சியைத் தரவேண்டும்.

ஏழாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இவ்வாறு தாமாகவே எழுதும் பயிற்சியைப் படிப்படியே தரவேண்டும்.

இந்நிலைப் பயிற்சியில் வரலாற்றுக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, கருத்தியல் கட்டுரை போன்ற கட்டுரைகளும், கடித வகைகளும் இடம்பெற வேண்டும்.

இவ்வாறு ஆசிரியர் துணையோடும்,ஆசிரியர் வழிகாட்டுதலோடும், ஆசிரியர் வழிகாட்டுதலின்றித் தாமே எழுதவும் கட்டுரைப் பயிற்சி அளிக்க வேண்டும்.

**மொழிப்பயிற்சி**

கட்டுரை எழுதும் பயிற்சியில் வாக்கியப் பயிற்சி இன்றியமையாதது. பழமொழி, பொன்மொழி, மரபுத் தொடர்களைக் கையாளும் பயிற்சியைத் தரவேண்டும். இத்தகைய மொழிப் பயிற்சியே கட்டுரை சிறப்பாக எழுதப் பயன்படும்.

தமிழ் இலக்கண மரபுப்படி எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற நிலையில் வாக்கியங்களை எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

வாக்கியப் பயிற்சியில் உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை, செய்வினை, செயப்பாட்டு வினை, தன்வினை, பிறவினை, முன்னிலை வினை, ஏவல்வினை, நேர்கூற்று, அயற்கூற்று என இவ்வகைத் தொடர்களை எழுதிப் பழகுவதோடு கருத்துக்களை நிரல்பட எழுதும் பயிற்சியைப் பெற்றால் கட்டுரைப் பயிற்சி தானாக வரும்.

**4.10.3 கட்டுரை வகைகள்**

கட்டுரைகளை அவற்றில் அமைந்துள்ள செய்திகளைக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| **வகை** | **தலைப்பு** |
|---|---|
| 1. மொழியியல் கட்டுரை | தமிழின் தொன்மை |
| 2. அறிவியல் கட்டுரை | தற்கால அறிவியல் |
| 3. பொருளியல் கட்டுரை | சேமிப்பும் அதன் பயன்களும் |
| 4. சமூகஇயல் கட்டுரைகள் | நாட்டு ஒற்றுமையில் மாணவர் பங்கு |
| 5. வரலாற்றுக் கட்டுரை | பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் |
| 6. நாட்டுநலப்பணி இயக்கங்கள் | நாட்டு நலப்பணி மன்றத்தின் செயல்பாடுகள் |
| 7. விழா நிகழ்வுகள் | தமிழர் திருநாள் |
| 8. கல்வியியல் கட்டுரை | சமச்சீர் கல்வி |
| 9. தொழில் கட்டுரை | பொருளாதார முன்னேற்றத்தில் நவீன தொழில்நுட்பம் |
| 10. தன் வரலாற்றுக் கட்டுரை | ஆறு தன் வரலாறு கூறுதல் |
| 11. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை | பெருந்தலைவர் காமராசர் வரலாறு |
| 12. வருணனைக் கட்டுரை | நீலவானத்தில் நித்திலக் குவியல் |

**1. வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை**

ஒருவரது பிறப்பு முதல் வாழக்கை முழுவதையும் விவரித்துக் கூறுவது வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை. நம்நாட்டுத் தலைவர்கள், நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், அறிவியல் அறிஞர்கள், விளையாட்டு வீரர்கள், வீரச்செயல் செய்த மகளிர் போன்றவர்களைப் பற்றி வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதலாம்.

எடுத்துக்காட்டு: 1. மகாத்மா காந்தி 2. தீரன் சின்னமலை 3. வீரபாண்டிய கட்டபொம்மன்

**2. வருணனைக் கட்டுரை**

இயற்கைக் காட்சிகள், அழகு ஓவியங்கள், கடவுள் உருவக்காட்சி இவற்றை அழகிய சொற்களால் கற்பனை கலந்து சிறப்புற விவரிப்பதே வருணனைக் கட்டுரை.

எடுத்துக்காட்டு 1. குற்றாலக் காட்சி 2. எழில்மிகு உதகை 3. மகாபலிபுரச் சிற்பங்கள்

**3. சிந்தனைக் கட்டுரை**

மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் ஆசிரியர் கட்டுரைத் தலைப்பைக் கொடுத்துக் கட்டுரை எழுதச் செய்யலாம்.

எடுத்துக்காட்டு 1. அணு ஆக்கசக்திக்கே 2. மின்சாரம் இல்லையேல்

**4. கற்பனைக் கட்டுரை**

ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக் கொண்டு கற்பனைத் திறனை வெளிப்படுத்தி எழுதும் கட்டுரை கற்பனைக் கட்டுரையாகும். இதனால் மாணவர்களுக்குக் கற்பனைத் திறன் வளரும்; சிந்தனை ஆற்றல் மேம்படும்.

எடுத்துக்காட்டு 1.நான் முதலமைச்சரானால் 2.நான் அறிவியல் வல்லுநரானால், வரும் ஆண்டுகளில் வல்லரசு இந்தியா

**5. படக் கட்டுரை**

படங்களில் ஒன்றை மாணவரிடம் அளித்து, அந்தப் படங்களை மையமாகக் கொண்டு கட்டுரை எழுதச் செய்வது படக் கட்டுரை ஆகும். மாணவர்கள் தாங்கள் முன்னர் கண்ட புலக்காட்சி வழியே பெற்ற அனுபவங்களைத் தான் இப்போது காணும் படக் காட்சியைக் கொண்டு கட்டுரை எழுதுவது படக்கட்டுரையாகும்.

**6. கதைக் கட்டுரை**

ஆசிரியர் பல்வேறு வரலாற்றுக் கதைகளையும், வாழக்கைக் கதைகளையும் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவற்றைக் கட்டுரையாக எழுதுமாறு ஒப்படைப்பு அளிக்கலாம். இதனால் மாணவரின் கேட்டல் திறன், எழுதுதல் திறன், படைப்பாற்றல் திறன், கற்பனையாற்றல் ஆகியன வளரும்.

எடுத்துக்காட்டு 1.வீர சிவாஜி 2.இராஜா தேசிங்கு 3.நான்கு சிங்கமும் எருதும்

**7. வரலாற்றுக் கட்டுரை**

வரலாறு ஒரு தனிநபரின் வரலாறாக இருக்கலாம் ஒரு நாட்டின் வரலாறாகவும் இருக்கலாம். வரலாற்றைக் கட்டுரையாக எழுதுவதன் மூலம் மாணவர்களுக்குச் செய்திகளைச் சேகரித்தல், பகுத்தல், தொகுத்தல், ஆய்வு மனப்பான்மை ஆகியன வளரும்.

எடுத்துக்காட்டு 1.காவிரி தன் வரலாறு கூறுதல் 2.தஞ்சைப் பெருமன்னர் இராஜராஜன் 3.கங்கைகொண்ட சோழபுரம் ஒரு வரலாற்றுச் சின்னம்.

**8. ஆய்வுக் கட்டுரை**

ஏதாவது ஒரு பொருளையோ, தலைப்பையோ எடுத்துக்கொண்டு ஆய்வுப் போக்கில் அமையும் கட்டுரை ஆய்வுக் கட்டுரையாகும்.

உயர்நிலைக் கல்வியில் இடம் பெறும் ஆய்வுக்கட்டுரைகள் இன்று பள்ளி நிலையிலேயே இடம் பெறுகின்றன. இதனால் மாணவர்களின் ஆய்வுப் போக்கு வளரும்.

எடுத்துக்காட்டு 1. பொருளாதார முன்னேற்றத்தில் கணினியின் பங்கு 2. மாணவர்களும் பள்ளிச் சுதந்திரமும் 3. அன்பு வழியே அறிவுவழி.

### 4.11 கடிதம் எழுதுதல்

நாம் நேரில் கண்டு செய்திகளைத் தெரிவிக்காத நிலையில் கடிதம் மூலம் தெரிவிக்கலாம்.

நம் உறவினர்களோடும், அரசு அலுவலர்களோடும் நேரில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில் அவர்களுக்குச் செய்திகளைத் தெரிவிக்கப் பயன்படுவது கடிதம் ஆகும்.

**கடிதம் எழுதுவதன் நோக்கங்கள்**

கடிதம் எழுதுவதன் நோக்கங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன.

1. செய்தியை அறிவித்தல்
2. எடுத்துக்கூறத் தயக்கம் ஏற்படும் நிலையில் செய்திகளை வெளியிடப் பயன்படுகிறது.
3. உறவுக்குப் பாலமாக அமைகிறது.
4. படைப்பாற்றலை வளர்க்கிறது.
5. மொழிப்பயிற்சியை அளிக்கிறது.
6. சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படுகிறது.
7. மற்றவர்களைப் பாராட்டவும், நன்றி தெரிவிக்கவும் உதவுகிறது
8. மொழியில் ஏற்படும் பிழைகளை நீக்க உதவுகிறது
9. கருத்துகளைக் கோவையாக எழுதப் பயிற்சி கிடைக்கிறது.
10. கருத்துகளை விரித்தும், தொகுத்தும் எழுதும் பயிற்சி கிடைக்கிறது,

**4.11.1 கடித வகைகள்**

கடிதங்களைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உறவுமுறைக் கடிதம் 2. அலுவலகக் கடிதம்

அலுவலகக் கடிதங்களைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. வேலைவாய்ப்புக் கடிதங்கள்
2. வணிக நிறுவனங்களுக்கு எழுதும் கடிதங்கள்
3. தேவைகளை நிறைவேற்ற வேண்டி அரசு அலுவலர்களுக்கு எழுதும் விண்ணப்பங்கள்

**4.11.2 கடிதம் எழுதும் முறை**

உறவுமுறைக் கடிதம் ஒரு முறையிலும், அலுவலகக் கடிதம் ஒரு முறையிலும் அமையும். இந்த அமைப்பு முறை தெரிந்தால்தான் கடிதம் செவ்வனே அமையும். இல்லையென்றால் கடிதம் எழுதும் முறையில் தொய்வு ஏற்படும்.

**1. உறவுமுறைக் கடிதம்**

நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதும் கடிதமே உறவுமுறைக் கடிதமாகும்.

தலைப்பு இரண்டு மூன்று சொற்களில் கடிதத்தின் தன்மைக்கேற்ப அமைய வேண்டும்.

அடுத்து வலப்பக்க மூலையில் இடம், நாள் இடம்பெற வேண்டும்.

அதனை அடுத்து கடிதத்தின் கருத்துப் பகுதி இடம்பெறும். கருத்துப் பகுதியின் தொடக்கம் விளியாக அமையவேண்டும். பின்னர் முதல் பத்தியில் நலம் விசாரிப்பு மட்டும் இடம்பெற வேண்டும். அதனை அடுத்து எழுத வேண்டிய செய்திகள் இரண்டு பத்திகளிலோ அல்லது மூன்று பத்திகளிலோ இருக்க வேண்டும். இறுதிப் பத்தி கடிதத்தின் நிறைவுப் பகுதியாக அமைய வேண்டும்.

கடிதத்தின் கீழ் வலப்பக்கத்தில் கையெழுத்துப் பகுதி இடம்பெற வேண்டும். சற்றுத் தள்ளி இடப்பக்கத்தில் அஞ்சல் முகவரி இடம் பெறவேண்டும். அஞ்சல் முகவரி யாருக்கு அனுப்புகிறோமோ அவர்களின் முகவரியாகும் என்பதை மாணவர் பலர் மறந்து தங்கள் முகவரியையே எழுதுவது தவறு.

நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதும் செய்திகள் கடிதத்திற்கேற்ப மாறுபடும். கடிதங்களில் ''பழமொழிகள், பொன்மொழிகள், அறிஞர்களின் கருத்துக்கள்'' இடம் பெறுமாயின் கடிதத்தில் கருத்துப் பொலிவும், நடை மிடுக்கும் அமையும்.

**2. அலுவலகக் கடிதம்**

அலுவலகக் கடிதங்களின் அமைப்புமுறை பொதுவாக ஒரே நிலையை உடையன. ஆனால் கடிதத்தின் தன்மைக்கேற்ப சிற்சில மாற்றங்கள் ஏற்படும்.

**1. வேலைவாய்ப்பு வேண்டிக் கடிதம்**

தலைப்பு இரண்டு அல்லது மூன்று சொற்களில் இடம் பெற வேண்டும்.

வலப்பக்க மூலையில் இடம், நாள் இடம் பெற வேண்டும்.

பின்னர் அனுப்புநர் முகவரி இடம் பெற வேண்டும்; அதனைத் தொடர்ந்து பெறுநர் முகவரி எழுத வேண்டும்.

கடிதத்தின் கருத்துப் பகுதியில் முதலில் விளிப்பகுதி அமைய வேண்டும்; அதனை அடுத்து 'பொருள்' இடம் பெற வேண்டும்.

கடிதத் தொடக்கத்தில் கடிதம் எழுதுவோரின் அறிமுகம் இடம் பெற வேண்டும். அதனை அடுத்து வேலைவாய்ப்பு வேண்டுவோரின் கல்வித் தகுதி, பணி அனுபவம் பற்றித் தனித் தனிப் பத்திகளில் எழுத வேண்டும்.

அடுத்த பத்தியில் பணிக்கான உறுதிமொழியை எழுத வேண்டும்; நிறைவுப் பகுதியில் வேலைவாய்ப்பை வழங்குமாறு கேட்டல் வேண்டும்.

கடிதத்தின்கீழ் வலப்பக்கத்தில் கையெழுத்துப் பகுதி இடம் பெற வேண்டும்.

இடப்பக்கத்தில் சற்றுத்தள்ளி அஞ்சல் முகவரி தெளிவாக எழுதப்பட வேண்டும்; இம்முகவரி வேலைவாய்ப்பு நிறுவன முகவரியாக அமைய வேண்டும்.

வேலைவாய்ப்பு வேண்டுவோரின் 'தன் விவரக் குறிப்பு' கடிதத்தோடு இணைக்கப்பட வேண்டும்.

**2. வணிக நிறுவனங்களுக்கு எழுதும் கடிதம்**

வணிக நிறுவனக் கடித அமைப்பும் மேற்கூறிய கடித அமைப்பில் அமையும்; ஆனால் செய்திகள் கடிதத் தன்மைக்கேற்ப மாறும்.

கடிதக் கருத்துப் பகுதியின் நிறைவுக்குப்பின் தேவையான நூற்பட்டியல் இடம் பெறவேண்டும்.

அதனை அடுத்துக் கையெழுத்துப் பகுதியும், அஞ்சல் முகவரியும் இடம்பெற வேண்டும்.

இக்கடிதத்தில் தன்விவரக் குறிப்புத் தேவையில்லை.

**3. தேவைகளை நிறைவேற்ற வேண்டி எழுதும் கடிதங்கள்**

கடித அமைப்பு மேற்கூறிய முறையிலேயே அமைய வேண்டும்.

அனுப்புநர் முகவரி பகுதி மக்கள் எழுதுவதாக அமைய வேண்டும்.

பெறுநர் முகவரி, அலுவலக முகவரியாக இருக்க வேண்டும்.

கடிதத்தின் முதல் பத்தியும் பகுதி மக்கள் சார்பாக எழுதுவதாக அமைய வேண்டும்.

அஞ்சல் முகவரியும் பகுதி மக்களைக் குறிப்பிட்டு எழுதப்பட வேண்டும்.

கடிதம் பற்றிய கருத்து விளக்கங்களைப் படித்துத் தமிழாசிரியர் மாணவர்களை வழிநடத்த வேண்டும்.

இங்கு வகைக்கோர் கடிதம் எழுதும்முறை எடுத்துக்காட்டுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது; அவற்றை மாணவர் படித்துப் பயன் பெறுவார்களாக.

**நயம் பாராட்டுதல்**

'நயம்' என்ற சொல் இனிமை என்ற பொருளைத் தரும். 'நயம்பட உரை' என்பது ஔவை வாக்கு. கருத்துகளைப் பக்குவமாகவும், இனிமையாகவும் சொல்ல வேண்டும் என்பது இதன் பொருள். தமிழ் இலக்கியங்கள் குறிப்பாகச் செய்யுள் கருத்துகளை நயம்பட உரைக்க வேண்டும். அப்போதுதான் அச்செய்யுள் அல்லது பாடல் சிறப்புப் பெறும்.

நயம் பாராட்டுதல் என்றால் பாடலில் அமைந்துள்ள சிறப்புக்களை எடுத்துச் சொல்வது என்பது பொருள். அதாவது பாடலில் அமைந்துள்ள கருத்து - சொல் நயம், பொருள் நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவற்றை எடுத்துச் சொல்வதே நயம் பாராட்டுதல் ஆகும்.

இங்குப் பரணியில் இடம் பெற்ற செயங்கொண்டார் கைவண்ணத்தில் உருவான பாடல் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

> ''வெடித்த கழை விசைதெறிப்பத் தரைமேல் முத்தம்
> வீழ்ந்தனஅத் தரைபுழுங்கி சுழன்று மெய்ம்மேற்
> பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
> போலவேல் கொப்பளங்கள் போலும் போலும்''- **செயங்கொண்டார்.**

பின்னர் நயங்களை விளக்கி முடிவுரையோடு நிறைவு செய்ய வேண்டும்.

**முன்னுரை**

''ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி'' என்பது பரணியின் இலக்கணம் பற்றிக் கூறுகிறது. பரணிகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது செயங்கொண்டாரால் அருளப்பெற்ற கலிங்கத்துப் பரணியாகும். இங்குக் கொடுக்கப்பட்ட பாடல் சொல்நயம், பொருள்நயம், அணிநயம் மிகுந்த பாடல்களைக் கொண்டது. இவற்றையும், சந்தம், சுவை, உவமை, உருவகம் போன்றவற்றையும் எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திரண்ட கருத்து**

கலிங்கத்துப் பரணியில் 'காடு பாடியது' பகுதியில் இடம்பெற்று உள்ள இப்பாடல் பாலை நிலத்தின் பண்பைக் கூறுகிறது.

மூங்கில்களின் கணுக்கள் வெப்பத்தால் வெடிக்கின்றன. அவற்றிலிருந்து வெளிப்பட்ட முத்துக்கள் பாலை நிலத்தில் சிதறிக் கிடக்கின்றன. அம்முத்துக்கள் பாலை நிலத்தின் வெம்மையால் வெளிப்பட்ட வியர்வைத் துளிபோலக் காட்சி தருகின்றன. வெம்மை தாங்காது பாலை என்ற மானிடனின் உடலில் தோன்றிய கொப்பளங்கள் போலவும் காட்சி தருகின்றன.

**சொல் நயம்**

இனிமை மிகு சொற்களை இடமறிந்து பயன்படுத்துவதே சொல் நயமாகும். மூங்கிலில் இருந்து வெம்மையால் வெளிப்படும் முத்துக்கள் விரைவாக வெளிப்படும். அதனைத் 'தெறிப்ப' என்ற சொல்லால் குறிப்பிடாமல் 'விசை தெறிப்ப' என்று குறிப்பிடுவது ''சொல் நயம்'' அமைந்த தொடராகும்.

**பொருள் நயம்**

கதிரவன் வெப்பம் பாலை நிலத்தைக் கடுமையாகத் தாக்கும். அதனால் கானல் நீர்த்துளிகள் தோன்றும். அவற்றைப் பாலை என்ற பெண்ணின் உடலில் தோன்றிய கொப்பளங்களாகக் கூறியுள்ளார். இது பொருள் நயம் அமைந்ததாகும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-13**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

7. இலக்கணம் படிப்பதன் நோக்கம் யாது?

..............................................................................................................................................

8. விதிவரு முறையில் இலக்கணம் கற்பித்தலை விவரி.

..............................................................................................................................................

9. சிறப்பானக் கட்டுரை எழுதப் பயன்படுவது யாவை?

..............................................................................................................................................

10. சொல் நயம் என்றால் என்ன?

..............................................................................................................................................

**அ**

பாலைநில வெம்மையால் தோன்றிய கானல்நீரை வியர்வையாகக் கூறினார். அத்துளிகள் வெம்மையால் தோன்றியதால் கொப்பளங்களைப் போன்று இருந்ததாகக் கவிஞர் கூறுவதால் கருத்துவிளக்கக் கற்பனை அமைந்துள்ளது.

**தொடை நயம்: மோனைத் தொடை**

‘ஊிசை தெறிப்ப, ஊீழ்ந்தன’ என்ற சீர்களில் சீர்மோனை அமைந்துள்ளதைக் காணலாம்.

**எதுகைத் தொடை**

‘வெடித்த, பொடித்த’ என்ற சீர்களில் அடி எதுகை வந்துள்ளது.

**முரண் தொடை**

‘வெடித்த, பொடித்த’ என்ற சொற்களின் பொருள் முரண்படுவதால் ‘பொருள் முரண்’ அமைந்துள்ளதைக் காணலாம்.

**சந்தம்**

எதுகை மோனையுடன் கூடிய இனிய சந்தத்தை இப்பாடல் பெற்றுள்ளது.

**சுவை**

பாலைநிலக் கொடுமையையும், அதனால் ஏற்படும் எதிர் விளைவுகளையும் பாடல் விளக்குவதால் இப்பாடல் அவலச் சுவை நிரம்பியது.

**தலைப்பு**

‘பாலைக் கொடுமை’ என்ற தலைப்பு இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு.

**முடிவுரை**

‘பரணிக்கோர் செயங்கொண்டார்’ என்ற சிறப்புக்குரியவர் செயங்கொண்டார். அவர்தம் கைவண்ணத்தால் கலிங்கத்துப்பரணியைச் சொல்லழகு, பொருளழகு நிரமபியதாகப் படைத்துள்ளார். இப்பாடலும் சொல் நயம், பொருள் நயம் நிரம்பிச் சுவை நயமும் பெற்றுத் திகழ்கிறது.

**சுருக்கி வரைதல்**

சுருக்கி எழுதுதல் பயிற்சி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்தம் மொழித்திறனை வளர்க்கக் கொடுக்கும் பயிற்சியாகும்.

கொடுக்கப்பட்ட பகுதியில் உள்ள கருத்துக்களைக் கோவையாக, சுருக்கமாகத் தெளிவாக மூன்றில் ஒரு பங்காக எழுதுவதே சுருக்கி வரைதல் ஆகும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ‘மரபுத் தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள், ஆகியவற்றை அவ்வாறே எடுத்தாண்டு எழுதி முடிக்க வேண்டும்.

நூல்களைப் படித்துக் குறிப்பெடுக்க இப்பயிற்சி உதவும். குறிப்பாக நூலகப் பயன்பாட்டிற்குச் சுருக்கி வரைதல் பயிற்சி பெரிதும் உதவுகிறது.

இதில் திருந்தாப்படிவம் முதன்முதலில் எழுதி அடிக்கப்பட வேண்டும். அதில் பத்தியில் உள்ள சொற்களைவிடச் சற்றுக் குறைவாக இருத்தல் வேண்டும்.

பின்னர் அப்பகுதியைக் கருத்துத் தொய்வில்லாமல் சுருக்கி எழுத வேண்டும். அது கொடுக்கப்பட்ட பத்தியில் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டும்.

சுருக்கி எழுதப்பட்ட பகுதிக்குப் பொருத்தமான தலைப்புக் கொடுக்க வேண்டும்.

கொடுக்கப்பட்ட பத்தியில் உள்ள சொற்கள், திருந்தாப் படிவத்தில் உள்ள சொற்கள், திருந்திய படிவத்தில் உள்ள சொற்கள் ஆகியவையும் எழுதப்பட வேண்டும்.

**சிறப்பியல்புகள்**

மொழித்திறன் வளர் பயிற்சிக்கு இன்றியமையாத் தேவையாகும்.

விரிவுரையாளரும், சொற்பொழிவாளரும் உரையாற்றும் போது குறிப்பெடுக்கப் பயன்படும்.

நூல்களைப் படிப்போர் முக்கியக் கருத்துக்களைச் சுருக்கி எழுதப் பயன்படுகிறது.

செய்தித் தாள்களிலும், ஊடகங்களிலும் பணியாற்றும் நிருபர்கள், ஆசிரியர்கள், துணையாசிரியர்கள், பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், அரசு அலுவலகங்களில் பணியாற்றும் எழுத்தாளர்கள் முதலியோருக்கு இப்பயிற்சி பெரிதும் பயன்படும்.

தாய்மொழிவழிக் கல்வியில் ஒரு பகுதியைக் கருத்தூன்றிப் படிப்பதற்கும், சொல்லையும், பொருளையும் குறிப்பிட்ட அளவில் அறிவதற்கும் இப்பயிற்சி பயன்படுகிறது.

சிறுசிறு வாக்கியங்களாக எளியநடையில் எழுதும் பயிற்சி பெறுகின்றனர்.

சொந்த நடையில் எழுதப் பயிற்சி பெறுகின்றனர். அருஞ்சொற்களை எளிய சொற்களாக மாற்றுவதால் பொருள் உணரும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

படைப்பாற்றலை வளர்த்தல்

நூல்களைக் கற்றும், அறிவாளர் உரைகளைக் கேட்டும் நற்கருத்துக்களையும், இலக்கியச் சுவைகளையும் அறிகின்றனர். இவ்வாறு கற்றும் கேட்டும் பெறும் அறிவால் சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படுகிறது.

இலக்கிய இன்பத்தால் கற்பனை ஆற்றலும், அழகுணராற்றலும் வளர்கிறது. இலக்கியக் காட்சிகளையும், பக்திக் காட்சிகளையும் கண்டு இன்புறும் நிலையைப் பெறுகின்றனர்.

தாங்கள் நுகர்ந்த இன்பத்தைப் புதிய இலக்கிய வகையாகப் படைக்கும் ஆர்வம் வளர்கிறது; அதுவே கவிதையாக, கதையாக, தொடர்கதையாக, கட்டுரையாக உருவெடுக்கிறது.

இவ்வாறு கற்பனையால், இலக்கியச் சிறப்புக்கள் உருவெடுப்பதே புதிய படைப்பு. அவை வர்ணனையோடும், சொல்லழகோடும், பொருள் அமைதியோடும் அமையும்போது சிறந்த இலக்கிய வகையாக மாறுகிறது.

காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் அமைக்கும் திறனுடையோர் உணர்ச்சிகளையும். அழகினையும் சொற்களில் அமைத்துச் சந்த நயத்தை இணைக்கும்போது அது கவிதையாக மாறுகிறது.

கவின்மிகு காட்சிகள், உணர்ச்சிமிகு வசனங்கள் அமைந்து இலக்கியப் பின்னணியையும், வரலாற்றுப் பின்னணியையும் கொண்டு படைக்கும்போது நாடகம் உருவாகிறது.

ஒரு நிகழ்ச்சியை மையக்கருத்தாகக் கொண்டு சிறந்த பாத்திரப்படைப்போடு, நல்ல மொழிநடையில், கதைப்பின்னலைச் சிறப்பாக அமைத்தால் அது சிறுகதையாக அமைகிறது.

ஒருவன் அல்லது ஒருத்தி வாழ்வை மையமாகக் கொண்டு பாத்திர வார்ப்போடும், மொழிநடைச் சிறப்போடும், வர்ணனையோடும், கதைப்பின்னல் தொய்வின்றிச் செல்லுமாயின் அதுவே புதினமாக மாறுகிறது.

எந்தத் துறையில் ஈடுபட்டுப் புதியன படைக்க வேண்டுமாயினும் அதற்குக் கருவியாக அமைவது மொழிநடையாகும். சொற்சிறப்பும், சொல்லாட்சிப் பாங்கும், பொருட்சிறப்பும் அமையும்போது அந்தப் படைப்பு என்றும் வாழும் இலக்கியமாக மாறுகிறது.

இக்கருத்துக்களுக்கு அரண் செய்வது போல்,

> ''கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
> மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான் - மலரவன்செய்
> வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாப் புகழ்கொண்டு
> மற்றிவர் செய்யும் உடம்பு''

இப்பாடல் எழுதிய புலவனின் கருத்து அமைந்துள்ளது.

மலரவனாகிய பிரம்மனின் நாவில் கலைமகள் இருந்தாலும், பிரம்மா படைக்கின்ற இவ்வுடம்பு அழிகிறது. ஆனால் கலைமகளின் அருளால் தமிழ் ஆர்வலர்கள் படைக்கின்ற நூல்கள் எக்காலத்திலும் அழிவதில்லை; புகழுடன் என்றும் நிலைத்து நீடித்து நிற்கின்றன.

**4.12 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- மொழித்துறையில் படைப்புக்கு மொழியே கருவியாக அமைகிறது; எனவே படைப்பாற்றலை வளர்ப்பது மொழிப்பாடத்தின் நோக்கங்களில் ஒன்று.

- இப்பகுதியில் செய்யுள் கற்பித்தலின் சிறப்பையும், உரைநடை கற்பித்தலின் உயர்வையும், துணைப்பாடம் கற்பித்தலின் பயனையும், இலக்கணம் கற்பித்தலின் இலக்கையும், கட்டுரைப் பயிற்சியின் இன்றியமையாமையையும் தெளிவாக மாணவர்களும், தமிழ் ஆசிரியர்களும், கல்வியியல் பயிற்சி ஆசிரியர்களும் அறிவர்.
- ஒரு மொழியைக் கற்போர் சொல்வளம் பெற வேண்டும். அதுவே கருத்து வளமாக மாறும்.
- மாணவனின் காலவயது, மனவயதுக்கேற்ப சொற்களஞ்சியப் பெருக்கம் அதிகமாவதால் கற்பித்தலும், கற்றலும் வலுவூட்டம் பெறுகிறது.
- தற்காலத்தில் ஊடகங்கள் சமுதாயத்தை, மாணவர்களின் வாழ்வை மாற்றி அமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ளன.
- பாடத் தொடர்பான நற்பண்புகளை வளர்க்க வேண்டும்.கனிவாகப் பேசுதல், பணிவாக நடத்தல், மற்றவர்க்கு உதவுதல், எல்லோரிடமும் அன்புடன் நடத்தல் போன்ற பண்புகளை மாணவரிடம் வளர்க்க வேண்டும்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1. செய்யுள் கற்பித்தல் நோக்கங்களில் சிலவற்றைக் கூறுக.**

செய்யுள் கற்பிக்கும் நோக்கத்தை மொழியாசிரியர்கள் நன்கு புரிந்துகொண்டால்தான் அதற்கேற்பத் திறமையாகக் கற்பிக்க முடியும். செய்யுள் கற்பித்தலின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு,

1. சொல்வளம் அறிதல்
2. ஒலிநயம் உணர்தல்
3. கற்பனையாற்றலை வளர்த்தல்
4. பண்பாட்டு மாற்றத்தை அறிதல்
5. இறை உணர்வை ஏற்படுத்துதல்

**2. மனப்பாடம் செய்வதனால் ஏற்படும் பயன் யாது?**

கருத்துணர்ந்து மனப்பாடம் செய்வதால் மனப்பாடம் செய்த பகுதியில் உள்ள அழகுச் சிறப்பும், அவற்றைத் துய்ப்பதால் பெறும் நுண்ணறிவும் என்றும் நிலைக்கும்.

மனப்பாடம் செய்யும் பகுதியில் உள்ள அறிவுரைகள் மனதில் நிலைத்து நின்று நம்மை நல்வழிப்படுத்தும்; பல நூல் கருத்து மனதில் நிலைக்கும்.

**3. சொற்களஞ்சியப் பெருக்கத்தால் பெறும் பயன்யாது?**

ஒரு மொழியைக் கற்போர் சொல்வளம் பெற வேண்டும். அதனால் கருத்துவளம் பெருகி, கருத்துகளைத் தொய்வின்றி எடுத்துச் சொல்லலாம். சொற்களஞ்சியப் பெருக்கத்தால் பேச்சிலும், எழுத்திலும் கருத்துக்கள் மடைதிறந்த வெள்ளம் போல் வெளிப்படும்.

**4. உரைநடைப் பாடத்தில் ஆர்வ மூட்டலை எவ்வாறு ஏற்படுத்தலாம்?**

பாடம் தொடர்பான செய்திகளைக் கூறிப் பாடத்தைத் தொடங்கலாம். பாடக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் செய்திகளைக் கூறி ஆர்வமூட்டலாம்; பாடம்தொடங்கும் முன் இயல்பான சூழலில் உரையாடி பாடத் தொடர்பான கருத்துக்களை நினைவூட்டலாம்.

**5. விடை எழுதும் திறனைப் பெறுவது எப்படி?**

பாடப் பகுதியில் அமைந்த இன்றியமையாத வினாக்களுக்குரிய விடையை மாணவர்களை எழுதச் செய்தல் வேண்டும். தொடக்கத்தில் வினாவுக்குரிய விடையைக் குறித்துக் கொடுத்தும், பின்னர் மாணவர்களே விடையை இனங்கண்டு எழுதவும் பயிற்சி தர வேண்டும்.

**6. துணைப்பாடம் பகுதியை விளக்கும் முறையை எழுது.**

முதலில் பாடப்பகுதியில் உள்ள பொதுக் கருத்தை வரவைத்தல் வேண்டும். பின்னா் மேற்கோள், செய்யுள், பழமொழிகள், கதைக் குறிப்புக்கள் ஆகியவற்றை மாணவா் அறிந்துள்ளனரா என அறிந்து கொள்ளலாம். மாணவா்கள் தெரிந்து கொள்ளாத பகுதியை மீண்டும் தெரிந்துக் கொள்ளுதல் வேண்டும்.

**7. இலக்கணம் படிப்பதன் நோக்கம் யாது?**

மொழியைப் பிழையின்றிப் பேசவும், படிக்கவும், எழுதவும் பயன்படுவது இலக்கணம். இலக்கணப் பயிற்சி மொழி அமைப்பைப் பாதுகாப்பதோடு மொழித் தூய்மைக்கும், நல்ல மொழி நடைக்கும் பயன்படுவது.

**8. விதி வருமுறை என்றால் என்ன?**

எடுத்துக்காட்டை விளக்கி அதன் மூலம் இலக்கண விதியை வரவைப்பது விதி வருமுறை ஆகும்.

**9. கட்டுரை சிறப்பாக எழுதப் பயன்படுவன யாவை?**

கட்டுரை எழுதும் பயிற்சியில் வாக்கியப் பயிற்சி இன்றியமையாதது. பழமொழி, பொன்மொழி, மரபுத் தொடா்களை கையாளும் பயிற்சியைத் தரவேண்டும். இத்தகைய மொழிப் பயிற்சியே கட்டுரை சிறப்பாக எழுதப் பயன்படும்.

**10. சொல் நயம் என்றால் என்ன?**

இனிமைமிகு சொற்களை இடமறிந்து கருத்துச் சிறப்போடு பயன்படுத்துவதே சொல் நயமாகும்.

**பயிற்சி வினாக்கள்**

1. ஆறாம் வகுப்பு இரண்டாம் பருவத்திற்குரிய ஒரு செய்யுட் பகுதியை எவ்வாறு கற்பிப்பாய் என்பதை விளக்குக.
2. உரைநடைப் பாடம் கற்பித்தலின் நோக்கங்களை விளக்குக.
3. அலுவலகக் கடிதம் எழுதும் முறையை விளக்குக.
4. விதிவிளக்கு முறை என்றால் என்ன?
5. கட்டுரை எழுதுவதின் நோக்கங்கள் யாவை?

## 5. கற்பித்தலில் புதுமைப் போக்குகளும் மதிப்பீடும்

**பாட அமைப்பு**

5.1 முன்னுரை

5.2 மொழிக் கல்வியில் கணினி

5.3 கற்பித்தல் வகைகள்

5.4 இணையச் செயல்பாடு

5.5 விண்ணரங்கம்

5.6 மொழிக் கல்வியில் வானொலி

5.6.1 தொலைக்காட்சி

5.7 மதிப்பீடு

5.8 அளவிடல்

5.9 தேர்வு வகைகள்

5.9.1 அடைவுத் தேர்வு

5.9.2 தேர்வின் காலஅளவும், மதிப்பெண்களும்

5.9.3 நல்ல தேர்வின் நற்பண்புகள்

5.9.4 வினாத்தாள் அமைப்பு

5.9.5 நல்ல தேர்வின் சிறப்புக்கள்

5.9.6 தேர்வுச் சீர்திருத்தங்கள்

5.9.7 மதிப்பீட்டின் பண்புகள்

5.9.8 அளவீடு

5.10 புறவயத் தேர்வு

5.11 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

## 5.1 முன்னுரை

**அ**றிவியல் ஒரு பாடம் என்ற நிலையிலேயே கடந்த நூற்றாண்டுகளில் இருந்தது. காலமாறுதலுக்கு ஏற்ப மனிதனின் அறிவு பல புதுமைகளைப் படைக்கத் தொடங்கியது. மனித அறிவு, அறிவியல் என்று மாறி அந்த அறிவியலும் பல புதுமைகளைப் படைக்கத் தொடங்கியது. அந்தப் புதுமைகள் விண்ணிலும், மண்ணிலும் உலவுகின்றன.

அறிவியல் கல்வியில் இருந்த புதுமைகள் கல்வித் துறையின் பல பகுதிகளுக்கும் பரவியது. கற்பித்தலில் காட்சி கேள்விக் கருவிகள் என்ற நிலையில் இருந்த புதுமை, இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளது. அதன் விளைவுதான் கற்பித்தலில் இன்று இடம் பெற்றுள்ள புதுமைப் போக்குகள்.

இன்று இயந்திர மனிதன் விண்கலங்களை இயக்குவது போல் எதிர்கால இயந்திர மனிதன் வகுப்பறைக்கு வந்து பாடம் நடத்தவும் கூடும்.

மொழிப்பாடம் விரிவுரை முறையிலும், கலந்தாய்வு முறையிலும், வினாவிடை முறையிலும் நடத்தப்பட்டது; நடத்தப்படுகிறது. அந்த மொழிப்பாடத்தில் வானொலி செய்த கல்விப் பணியை தொலைக்காட்சி தொடர்ந்தது; அது இன்று காண் ஒலிக் காட்சிக் கல்வியாகவும், மொழிப் பயிற்றாய்வுக்கூடமாகவும் உருவெடுத்துக் கற்பித்தலைச் சிறப்பித்து வருகிறது.

### தகவல் தொழில்நுட்பமும் மொழி கற்பித்தலும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பம் மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்தது! காலப்போக்கில் கற்பித்தலில் இடம் பெறத் தொடங்கியது இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கற்பித்தலில் இன்றியமையாப் பொருளாக மாறிவிட்டது. தற்போது கற்பித்தலில் ஒரு புதுமையாக நடமாடத் தொடங்கியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்தில் கணினியின் பங்கு அளப்பரியது. பாடப்பொருளில் ஏற்படும் ஐயங்களை அவ்வப்போது தீர்த்து வைக்கிறது. அதோடு கற்பித்தலுக்கு வேண்டும் செய்திகளைத் திரட்ட உதவுகிறது. பல மணிநேரம் நூலகம் சென்று பெற முடியாத தகவல்களை ஒருசில மணித்துளிகளில் கணினி தருகிறது.

### கணிப்பொறி – கணினி – Computer

மின்னணுக் கருவியான கணினி தரவுகளை (data) ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப முடிவுகளைத் தரும்.

கணினியில் உள்ளீடு, வெளியீடு, மையச் செயல்பாட்டு அலகு என்ற மூன்று முக்கியப் பகுதிகள் இருக்கும்.

மையச் செயல்பாட்டுப் பகுதி என்பது நினைவு அலகு, கட்டுப்பாட்டு அலகு, கருத்துரு அலகைக் கொண்டது.

**கற்பித்தலில் கணிப்பொறியின் பங்கு**

மாணவர்களின் நிலைக்கேற்பத் திட்டமிடுதல் நடைபெறுகிறது. கணிப்பொறியின் உதவியுடன் நடைபெறும் கற்பித்தலும் கணிப்பொறியின் மேலாண்மையுடன் நடைபெறும் கற்பித்தலும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கணினி உதவியுடன் நடைபெறும் கற்பித்தல்**

இதில் கணினிக்கும், கற்போருக்கும் இடையே தகவல் பரிமாற்றமும் இடைவினையும் நிகழ்கிறது.

கணினியில் முன்னரே தயாரிக்கப்பட்ட பாடங்கள் பற்றிய விவரங்கள் அடங்கியிருக்கும். அதனை மாணவர்களுக்கு அளிக்கிறது.

மாணவன் திரையில் தெரியும் குறிப்புக்களைக் கவனித்துக் கற்கிறான். அவனுடைய செயல்திறன் பற்றிய பின்னூட்டத்தைக் கணினி உடனுக்குடன் அளிக்கிறது் இங்குக் கணினி ஆசானின் பணியை மேற்கொள்கிறது.

கணினி வழிக் கற்பித்தலின் கூறுகள் வருமாறு:

**1. முறையான பயிற்சி (Drillard practice)**

கணினி ஓர் ஒழுங்கமைப்பில் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிக்கிறது. மாணவர்கள் அதனைக் கற்றுப் பதில் அளிக்க வேண்டும். சரியான விடைக்குப் பாராட்டும், தவறான விடைக்குத் தவறு என்ற துலங்கலையும் அளிக்கிறது.

மீண்டும் மீண்டும் மாணவன் பயிற்சி பெற்றுத் தனது தவறுகளை உடனே திருத்திக் கொள்ளக் கணினி வாய்ப்பளிக்கிறது.

**2. தனிக்கல்வி முறை (Tutorial mode)**

சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டுப் பாடப்பொருள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பல வினாக்கள் கேட்கப்பட்டிருக்கும். மாணவரின் பதிலைக் கணினி பகுத்து ஆய்ந்து சரியான விடைக்குரிய பின்னூட்டத்தை அளிக்கும்.

**3. பிரதிபலிக்கும் முறை (Stimulation mode)**

வாழ்க்கை நிலையின் செயல்பாடுகளை மாணவர்கள் கணினி மூலம் கற்றுக் கொள்கின்றனர்.

**4. கண்டுபிடிக்கும் முறை (Discovery method)**

இம்முறையில் மாணவர்க்குச் சிக்கல்கள் கொடுக்கப்படுகின்றன; செய்து தவறிக் கற்றல் மூலம் மாணவர்கள் சிக்கல்களைத் தீர்க்கின்றனர்.

**5. விளையாட்டு முறை (Gaming mode)**

விளையாட்டு முறையில் புதிய செய்திகளை மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

**5.2 மொழிக் கல்வியில் கணினி**

கணினியின் வளர்ந்த நிலையே மொழி பயிற்றாய்வுக் கூடம். தகவல் தொழில்நுட்பம் வளர்ந்த நிலையில் மொழி கற்பித்தலில் மொழி பயிற்றாய்வுக் கூடம் பெரிதும் பயன்படுகிறது.

ஆசிரியரும் மாணவரும் அவரவர்க்கென்று ஒதுக்கப்பட்ட பகுதியில் அமர்ந்த பிறகு ஆசிரியர் முன்பே பதிவு செய்யப்பட்ட பாடங்களை ஒலி பரப்புவார்.

ஒவ்வொரு மாணவனும் தனித்தனியாகத் தகவல் தொழில்நுட்பத்தினை மேற்கொள்வார்.

ஒரு கல்வியாண்டுக்குத் தேவையான பாடங்கள் முன்பே தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பிற்குத் தயாராக வைக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாணவரிடமும் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்த முடிகிறது; இங்கு எந்த மொழியையும் கற்பிக்கலாம்.

**ஆசிரியர் பகுதி (Teacher Console)**

மொழியாசிரியரின் பகுதியில் அனைத்து மாணவர்களுடனும் தொடர்பு கொள்ளவும், செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் வசதி உண்டு. இதன் மூலம் மாணவர் குழுக்கள், பாடங்கள் இவற்றிற்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியும்.

தாய்மொழி பேசுவோரின் பேச்சைக் கேட்கவும், மாணவர் குரலைக் கேட்கவும் முடியும்.

குறிப்பிட்ட மாணவனின் பேச்சை நிறுத்திக் குறிப்பு எடுக்கவும் முடியும்.

குழு விவாதங்களை ஒருங்கிணைக்கவும் முடியும் இதற்குத் தலையணிக் கருவிகளும், ஒலிப்பதிவு நாடாக் கருவிகளும் பயன்படும்.

ஒலிப்பதிவு நாடாக் கருவிகளில் ஒலிப்பதிவு செய்யவும், ஒலிபரப்புச் செய்யவும் உதவும் பொத்தான்கள் உண்டு.

ஒவ்வொரு மாணவருடன் தனித்தனியாகக் கலந்துரையாட உதவும் பொத்தான்கள் உண்டு.

பயிற்சி பெறாத மாணவர்களிடம் தனிக் கவனம் செலுத்த முடியும்.

**மாணவர் பகுதி**

கணினியில் தங்களது பெயரையும் எண்ணையும் தட்டச்சு செய்தால் ஆசிரியர் பகுதியிலிருந்து அவர்களுக்குரிய பாடப்பகுதி திரையில் காட்டப் பெறும்.

முன்பே பதிவு செய்யப்பட்ட பகுதியை மாணவர் தலையணிக் கருவி மூலம் கேட்கின்றனர் கேட்டதை உச்சரிப்பர்; அதைப் பதிவு செய்து சரியான பதிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.

உச்சரிப்பு சரியானதா என்பதை அறியும் வசதி கணினியில் உண்டு. முடிவில் சுய மதிப்பீடு செய்த ஒலிப்பதிவை மொழி ஆசிரியரிடம் ஒப்படைக்கின்றனர்.

தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பாடங்களை ஒவ்வொரு மாணவனும் கேட்டு, பேசி ஒப்பிடவும், தன்னைத் தானே மதிப்பிடவும் உதவுகிறது.

உச்சரிப்பில் தேர்ச்சி, ஒலிப்புநிலை, மொழியில் சரளமுடைமை ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

**தலையணிக் கருவிகள் (Head phones)**

மொழி வல்லுநருடன் பயிற்சி பெறும் மாணவர்கள் தொடர்பு கொள்ளத் தலையணிக் கருவிகள் உதவுகின்றன.

மொழி வல்லுநர் பேசுவதைக் கேட்க தலையணிக் கருவிகளைப் பயிற்சியாளர் காதில் பொருத்திக் கொள்ள வேண்டும். மொழி வல்லுநர் பேசுவதைக் கேட்டு, தலையணித் தொகுதியுடன் இணைந்த நுண்ணொலிக் கருவியில் பதிலளிக்க வேண்டும் மற்றவரின் பேச்சுக் குறுக்கீட்டை இது தடுக்கிறது.

**பேச்சொலிக் கருவிகள் (Mikes)**

மாணவர்கள் பிற மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும் பொதுவான குழுப் பயிற்சியில் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும் இக்கருவிகள் உதவுகின்றன.

**கட்டுப்பாட்டுக் கருவி (Control panel)**

இது மொழி வல்லுநரின் பகுதியில் இருப்பதாகும். தேவைப்படும் போது மாணவருடன் தொடர்பு கொள்ளவும், இல்லையெனில் தொடர்பைத் துண்டிக்கவும் இக்கருவி பயன்படுகிறது.

**நுண்ணொலிகள் (microphones)**

இக்கருவிகள் அளவில் சிறியவை. தலையணித் தொகுதியுடன் இணைந்து வாய்க்கு அருகில் பேசுவதை உள்வாங்கி, ஒலிப்பதிவு நாடாக் கருவிகளில் பதிய வைக்க இவை துணையாக உள்ளன.

**பயிற்சி மற்றும் பதிவிற்கான இரட்டைப் பகுதி நாடாக்கள்**

மாணவர்கள் இவ்வகை நாடாக்கள் மூலம் ஒலிப் பயிற்சியைப் பெறவும், தங்கள் ஒலியைப் பதிவு செய்யவும் முடியும்.

நாடாவின் ஒரு பகுதியில் மாதிரி ஒலிப்புக்கள் இருக்கும் அடுத்த பகுதி காலியாக இருக்கும்.

ஒலிப்புகளைக் கேட்டு, பின்னர் காலியான நாடாப் பகுதியில் தங்கள் ஒலிப்பினை மாணவர் பதிவு செய்யலாம். மாதிரி ஒலிப்பதிவானது, மாணவர் தங்கள் ஒலிப்பயிற்சியை அழித்து, மீண்டும் பதிவு செய்து பயிற்சி பெற இத்தொடர் உதவுகிறது.

**மொழிப் பயிற்றாய்வுக் கூடம் செயல்படும் முறை**

மொழி வல்லுநர் அவருடைய பகுதியிலிருந்து முன்பே பதிவு செய்யப்பட்ட பதிவு நாடாவை இயக்குவார்; அதிலிருந்து பேச்சொலி மாணவருக்கு அனுப்பப்படும்.

மொழி வல்லுநரின் மையப் பகுதி நாடாக் கருவியிலிருந்து வரும் ஒலித் தொகுப்பை ஒவ்வொரு மாணவரும் தங்களுக்குரிய நாடாக் கருவியில் பதிவு செய்வர்.

தாங்கள் பெற்ற மாதிரி ஒலி வடிவத்தை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்து, கேட்டுப் பயிற்சி பெறும் மாணவர் பன்முறை பயிற்சி பெறுவர்.

இரட்டை நாடாக் கருவியில் தங்கள் பேச்சைப் பதிவு செய்து மாதிரிப் பேச்சுடன் ஒப்பிட்டுப் பார்ப்பர்.

மாதிரிப் பேச்சு, பயிற்சிப் பேச்சு இரண்டும் ஒத்துவரும் வரை மீண்டும் மீண்டும் ஒலிப்புப் பயிற்சியை மாணவர் மேற்கொள்வர்.

**5.3 கற்பித்தல் வகைகள்**

மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் பேச்சுப் பயிற்சியே முக்கியப் பயிற்சியாகும்.

இப்பயிற்சிக் கூடத்தின் மேல் நான்கு முறையில் மொழிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. ஒலிபரப்புமுறை (Broadcast method)
2. தொலைபேசி எண்ணைச் சுழற்றும் முறை (Dial access)
3. நூலகச் செயல்பாட்டுமுறை (Library operation)
4. கலவை முறை (Combination type)

**மொழி கற்பித்தலில் இணையம் (இணையதளம்)**

உலகெங்கும் கணினியில் உள்ள செய்திகளை இணைத்தலையே ‘இணையம்’ என்கின்றனர் இதனை ஆங்கிலத்தில் இண்டர்நெட் (Internet) என்கின்றனர்.

இலக்கியம், வரலாறு, புவியியல், வானவியல், அறிவியல், கணிதம், திரைப்படம் என எண்ணற்ற துறைசார்ந்த பல்வேறு தலைப்புக்களில் இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பெற முடிகிறது.

இணைய இணைப்புப் படிப்படியாகத் தான் வளர்ச்சி பெற்றது. 1960இல் ஒரு கணினியிலிருந்து மற்ற கணினிக்குச் செய்தியை மாற்ற மின்காந்த நாடாவைப் பயன்படுத்தினர். இதனால் காலவிரயம் ஏற்பட்டது.

பின்னர் ஒரு கட்டத்தில் இருந்த கணினிக்குள் செய்திகளை இணைத்தனர். இதற்கு ‘ஈதர்நெட் அட்டை’ என்னும் சிறு பலகையைப் பொருத்திச் செயல்பட வைத்தனர். இந்தக் குறும்பரப்பு இணைப்புக்குக் குறும்பரப்பு வலைப்பின்னல் என்று பெயர்.

இதனைத் தொடர்ந்து ஒரு வட்டாரத்துக்குள் இருந்த கணினியை இணைத்தனர். இது அகன்ற பரப்பு வலைப்பின்னல் (www – wide area network) எனப்பட்டது. இந்த வலைப் பின்னலைக் கொண்டு உலகம் முழுவதும் உள்ள கணினிகளை ஓரளவு இணைக்க முடிந்தது. இவ்விணைப்பின் போது

நாடுகள், கண்டங்கள், கடல்கள், மலைகள் என இடையூறுகள் பல ஏற்பட்டன. இந்தத் தடைகளை நீக்கும் பொருட்டுச் செயற்கைக்கோள் வழி இணைப்புத் தரப்பட்டது.

பின்னர் பூமியைச் சுற்றி நாடுகளின் மீது வளையவரும் விண்வெளிக் கலன்களிடையே இணைப்பை ஏற்படுத்தினர். இது உலகம் முழுவதும் வலை அமைப்பை ஏற்படுத்த வழிவகுத்தது. இந்த முழுமைக்கு இணையம் (Internet) எனப் பெயர். சுவிட்சர்லாந்தில் 'சேர்ன்' என்னும் அணுத்துகள் ஆய்வு மையம் உள்ளது. அங்கு 'பிம்பெர்னர்லீ' என்ற இயற்பியல் வல்லுநர் பணியாற்றி வந்தார்.

இவர் 1989இல்; உலகளாவிய வலைப்பின்னலுக்கு 'World wide web' எனப் பெயரிட்டார். இது 'www' என அழைக்கப்பட்டது. இது 'வையக விரிவு வலை' என அழைக்கப்பட்டது. 1991 மே மாதம் இது அறிமுகப்படுத்தப்பட்டது் இவ்வமைப்பு அழியாமல் பல செய்திகளைப் பாதுகாக்கிறது.

**5.4 இணையச் செயல்பாடு**

இணையத் தொடர்பைப் பெறப் பின்வரும் பொருள்களைப் பெற்று இணைக்க வேண்டும். அவையாவன,

1. கணினி (Computer)
2. தொலைபேசி (Tele-communication)
3. மாற்றி (Modem)
4. தொடர்பு மென்பொருள் (Communication Software)
5. இணையச் சேவை வழங்குநர் (Internet Service Provider-ISP)

இப்போது ஒளியிழைத் தடங்கள்வழி (Optical fibre)இணைய இணைப்பைப் பெற முடிகிறது.

**உறுப்பினர் எண்ணிக்கை இணைப்பு (DSL)**

உறுப்பினர் எண்ணிக்கை இணைப்பு வழி 'அதிவேக வையக விரிவுவலை' இணைப்பினைப் பெறலாம். இது 30 mbps (mega bits per second) வேகத்தில் செயல்படுகிறது; இந்த இணைப்பையே பெரும்பாலோர் பயன்படுத்துகின்றனர்.

இணைய இணைப்புக்கான மாற்றி (modem) வகைகள்

பெரிய நகரங்கள் தொடங்கி குக்கிராமம் வரை அனைத்து இடங்களிலும் பரவலாக இணையம் பயன்படுத்தப்படுகிறது. இணைய இணைப்பிற்குக் கணினி மற்றும் தொலைபேசி இணைப்பு ஆகிய இரண்டையும் தவிர, மாற்றி (kodem) எனப்படும் பொறி பயன்படுகிறது. 'மாற்றி' வழியாகத் தான் செய்திகளை ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணினிக்கு அனுப்பவும், பெறவும் முடியும்.

**தமிழ் இணையம்**

தகவல் பரிமாற்ற நெடுஞ்சாலையில் கணினித் திரையின் வாயிலாகத் தமிழ் பயணம் செய்து வருகிறது.

இந்திய மொழிகள் பலவற்றை ஒப்புநோக்கும் போது கணினியில் தமிழ் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இணையத்தில் பயன்பட்ட முதல் இந்திய மொழி தமிழ்மொழியே!

தமிழ் ஆட்சி மொழியாகவுள்ள அரசுகளும், தனியார் நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், தமிழ் ஆர்வலர்களும் தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் இணையத்தில் இடம்பெறச் செய்துள்ளனர்.

மேலைநாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் முயற்சி பல மேற்கொண்டு இணையத்தில் தமிழ் விரிவாகவும், விரைவாகவும் பரவும்வகை செய்துள்ளனர்.

**மின்கற்றல்**

கணினி சார்ந்த மென்னுருக்களைப் பயன்படுத்திக் கற்பது மின்னணுசார் கல்வி எனக் குறிப்பிடப்படுகிறது.

கணினியின் வளர்ச்சியால் ஏற்பட்ட வலைதளங்கள் கற்றல் தொடர்பான கருத்துக்களைப் பெறுவதற்கும், கற்றலை நிகழ்த்தவும் பயன்படுகின்றன.

குறிப்புக்களை முறைப்படுத்தி வைக்க கணினி நினைவலையில் (memory) கோப்புகளின் (files) மடிப்புகள் (folders) தாவுதளங்கள் (data bases) ஆகியவற்றை உருவாக்குதல்.

கற்பவர் தம்முடைய பதிவுகளைக் குறிக்கச் சொல் தொகுப்பினையும் (word processor) வரைவுகளையும் (Graphics) பயன்படுத்துதல்.

தம்முடைய கற்றல் கருத்தைப் பதியவும், பின்னர் எடுக்கவும் தன்தளக் குறிப்பு (blogs), கூட்டுத்தளப் பதிவு (wild) ஆகியவற்றை ஏற்படுத்துதல்.

தேவையான எடுத்துக்காட்டுக்களை ஒளிப்படமாக்க எண்ணுரு (digital) படக் கருவியைப் பயன்படுத்துதல்.

தகவல் குவியல்களை வலை தளத்திலிருந்து பெறுதல்; இவற்றை உரியவாறு பயன்படுத்திக் கற்றலை நிகழ்த்துதல் ‘மின்னணுசார் கற்றல்’ எனப்படுகிறது.

இத்திறன்கள் மின்கற்றலுக்கு மட்டும் அல்லாது, மரபுமுறைக் கற்றலுக்கும் பயன்படுகின்றன. கணினித் திரையில் கற்றல் கருத்தைக் காணலாம். மேலும் அதற்குரிய வன்படியையும் (Hard copy) கற்றலுக்குப் பயன்படுத்தலாம். எனவே இது மரபு முறையில் அமைந்த கல்வியாகவும் திகழ்கிறது.

ஆதலால் மின்னணுசார் கல்வி, முழுமையாக மரபு முறையிலிருந்து விலகி நிற்க முடியாது.

கணினி தொழில்நுட்பப் பயன்பாட்டால் ஏற்பட்ட மின்னணுசார் கற்றலில், கற்றல் கருத்தைப் பதிவு செய்தல், அனுப்புதல், பெறுதல் என்பனவற்றிற்கு வளிக்கோளம் (Air) இணைப்பு ஊடகமாக உள்ளது. எனவே இது ‘வளிக்கோளம் சார்கற்றல் (online learning) எனக் கூறப்படுகிறது.

**5.5 விண்ணரங்கம் (ஒளியரங்கம்) (Tele video conference)**

**காணொலி (EDUSAT – Educational Satellite)**

விண்ணரங்க நிகழ்வுகளில் காண்பவரின் இடைவினையும்(Interactive) இணைக்கப்படுவதாகத் தொழில்நுட்பம் உள்ளது. காணொலியில் ஒரு முறைத் தகவல் மட்டுமே அமைந்திருக்கும்.

EDUSAT 20.10.2004இல் விண்வெளிக்கு இந்தியாவால் GSLV (GSNL-Geosynomonous Satellite Laurce vehicle) அனுப்பப்பட்ட விண்கலமாகும். கல்விக்கெனவே விண்வெளியில் சுழன்றுவரும் இவ்விண்கலத்தின் வழியாக கற்றல் பொருள்களையும், சூழல்களையும் தொலை நிலையாக இந்தியாவிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

பெங்களூரிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு(ISRO), மூலம் விண்சார் கல்வி வடிவமைக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியான அகல் அலைவரிசை இணையம் 28.7.2005இல் மேனாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் அவர்களால் திருவனந்தபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இது வகுப்பறைக் கல்வி முதல் தொலைதூரக் கல்விவரை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. 12,500 கல்வி நிறுவனங்களிலுள்ள 50இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

மாநிலக் கல்வி வாரியங்கள், தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், நடுவணரசு பாடத்திட்டக் குழு, இந்திராகாந்தி திறந்தநிலை தேசியப் பல்கலைக்கழகம், மற்ற இந்திய

பல்கலைக்கழகம், 'விண்கல்வியின் உதவியுடன் தங்களது கற்பிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றிலிருந்து ஒளிப்பரப்பப்படும் நிகழ்ச்சிகள் இந்திய அளவில் ஏறத்தாழ 5000 ஊடாட்ட முனைகளில் (Interactive terminal) காணப்படுகின்றன.

இந்தியாவில் வணிக நோக்கில் இயங்கிவரும் இணைப்புத் தொலைக்காட்சி சேவை நிறுவனங்கள், விண்சார் கல்வியியல் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளைப் பெற்றுத் தொடர்புபடுத்துமாயின் (Relay) தொலைக்காட்சிப் பெட்டி உள்ள ஒவ்வொரு வீடும் விண்கல்வியின் பயனைப் பெறமுடியும். வணிக நிறுவனங்கள் இக்கல்விப் பணிக்கு முன்வர வேண்டும்.

கல்விசார்ந்து கற்றல் தனியாள் கற்றலாக (Individualized learning) இருந்தமையால், அதன் பயன்பாடு விரிவடையவில்லை. ஒரேநேரத்தில் பலரும் பயன்பெறக் கணினி, மென்னுரு ஆகியன மிகுதியாகத் தேவை. எனவே பொருட்செலவு மிகுந்தது.

மின்னணுத் தொடர்பு முறையில் இரு இடங்களில் உள்ளோர் உரையாடும் முறைக்குத் தொலை அரங்கம் (Tele conference) என்று பெயர்.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் நான்கு வகை விண்ணரங்கங்கள் பயன்பாட்டில் உள்ளன.

1. குரல் பரிமாற்ற அரங்கம் (Audio conference)
2. குரல் வரைவுப் பரிமாற்ற அரங்கம் (Audio graphic conferenc)
3. ஒளியரங்கம் (Video conference)
4. வலைதள அரங்கம் (Web-based conference)

**குரல் பரிமாற்ற அரங்கம்**

வெவ்வேறு இடங்களில் உள்ள இருசாரார் தொலைபேசி அமைப்புவழி, தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் குரல் பரிமாற்ற அரங்கமாகும். இதற்குத் தொலைபேசி இணைப்பு முறை தேவை.

ஒலிபரப்புக் கருவி, ஒலிவாங்கி முதலியன இவ்வரங்க அமைப்பிற்கு முதன்மையான தேவைகளாகும். கற்பிக்கும் ஆசிரியரின் குரலை, வகுப்பறையில் இருப்போர் கேட்பதற்கும், வினா கேட்டு ஐயத்தைத் தீர்த்துக் கொள்ளவும், உரிய கருவிகளைப் பொருத்திக் குரல் பரிமாற்ற அரங்கத்தை நடத்தலாம்.

**குரல்வரைவுப் பரிமாற்ற அரங்கம்**

குரல் பரிமாற்றத்தோடு, அசைவற்ற படங்கள், வரைவுகள் முதலியவற்றைக் கணினி குமிழ்ப் பலகையைப் பயன்படுத்தி இணைத்து நடத்தப் பெறுவது குரல் வரைவுப் பரிமாற்ற அரங்கமாகும்.

**ஒளியரங்கம்**

வளியரங்கம், விண்ணரங்கம் எனவும் ஒளியரங்கம் பெயர் பெற்றுள்ளது. ஓரிடத்தில் நிகழும் கருத்தாடல், கற்பிப்பு நிகழ்ச்சி முதலியவற்றை அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட அலைவரிசையில் ஒளிபரப்பி, மற்ற இடங்களில் உள்ளோரைத் தொலைக்காட்சி வழியாகப் பெறச் செய்தல் ஒளியரங்கமாகும்.

ஒளியரங்கத்தில், பார்வையாளர்கள், ஒளியரங்கம் நிகழ்த்துவோரிடம் கணினி வழியாகத் தொடர்பு கொள்ள முடியும். இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்காக ஒளியரங்கங்கள் நடத்தப்படுகின்றன.

**வலைதள அரங்கம்**

வலைதள அரங்கம் - இதன் பெயருக்கேற்ப வலைதள உதவியால் நிகழ்த்தப்படும் அரங்கமாகும்.

இவ்வரங்கம் கற்றல் பனுவல்களை வழங்கவும், அன்றாட நிகழ்ச்சிகளைக் காணவும் இணையத் தொடர்புடைய கணினி தேவை.

வலைதள அரங்கத்தில் தகவல் தொடர்பு இருவழியிலும், ஒரு வழிவரவாகவும் அமையலாம்.

கல்வி வளர்ச்சிக்குத் தொலை அரங்கம் ஓர் அரிய ஊடகமாகத் திகழ்கிறது.

நான்கு வகைப்பட்ட தொலை அரங்கங்கள் நிறுவனம் சார்ந்த கல்வியிலும், நிறுவனம் சாராக் கல்வியிலும் மிகவும் பயன்தரக் கூடியனவாக உள்ளன.

கணினி வழிக் கல்வி, தனியாள் கற்றலுக்கு உரியதென்னும் நிலையை மாற்றி, குழுக் கற்பித்தலுக்கு உரியதாக்கிய பெருமை தொலை அரங்கத்திற்கு உண்டு.

கல்வியில் ஆசிரியரின் பங்கேற்பு தவிர்க்கவியலாதது. திறமைமிக்க ஆசிரியரின் கற்பித்தல் திறன் எங்கும் உள்ள கற்போருக்குக் கிடைக்கத் தொலை அரங்கம் பயனுள்ளதாக உள்ளது.

தகவல் பரிமாற்றப் பாதைப் போக்கில் தொடர்பிழப்பும் (communication loss) மாற்றமும் இயல்பான முறையால் ஏற்படக் கூடும். இவற்றைத் தொலை அரங்கங்கள் தவிர்க்கின்றன.

தலைநகர் தில்லியில் நடைபெறும் வகுப்பினைச் சென்னையிலுள்ளோர் நேரடியாகக் கண்டு வகுப்பாசிரியரிடம் உரையாடும் வசதியைப் பெறுகின்றனர்.

**5.6 மொழிக் கல்வியில் வானொலி**

வானொலி மூலம் கூத்தபிரான் அவர்கள் சிறுவர்களுக்கான, நிகழ்ச்சிகளை ‘பாப்பா மலர்’ என்ற பெயரில் ஒலிபரப்புகின்றனர். ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது. கதைகளாகவும், சிறுவர் பாடலாகவும் இருந்தவை காலப்போக்கில் கல்வி ஒலிப்பரப்பாக மாறின.

கல்வி ஒலிபரப்பையும் சுமார் நாற்பதாண்டு காலமாக உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு ஒலிபரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதற்காகப் பாடத்திட்டத்தைக் கொண்டு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாகின்றது.

வானொலி நிகழ்ச்சிகளில் ‘கல்வி ஒலிபரப்பு’ ஒரு முக்கியப் பகுதியாக விளங்குகிறது.

கல்வியின் பல்வேறு துறைகளில் சிறப்புச் செயல்களாற்றிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் புதிய கண்டுபிடிப்புகள், உடல்நலம் பற்றிய குறிப்புகள், நோய் தடுக்கும் முறைகள், உற்பத்திப் பெருக்கங்கள், கைத்தொழில் முறைகள் ஆகியவற்றுடன் பாடங்களைக் கற்பிக்கும் முறைகள் குறித்துச் சிறந்த வல்லுநர்களால் தயாரிக்கப் பெற்ற நிகழ்ச்சிகள் வானொலி மூலம் ஒலிபரப்பப் படுகின்றன. மிக அண்மையில் கண்டறியப் பெற்ற புதுமைகளைப் பற்றிய செய்திகள், விளக்கங்கள் குறித்து வானொலி மூலம் அறிந்து கொள்ளலாம்.

வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும் போது நேரடியாகவும் கேட்கலாம்; ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து தேவையான போது போட்டும் கேட்கலாம்.

நிகழ்ச்சியை ஒலிபரப்பும் பொழுதே கேட்க வேண்டுமாயின், அதற்கான முன்னேற்பாடுகள் செய்யப் பெற வேண்டும்.

‘வகுப்பு வானொலி நிகழ்ச்சி கேட்கிறது’ என வகுப்புக்கு உள்ளே வரும் வழியில் அந்த அறிவிப்பை வைக்க வேண்டும். அப்பொழுதுதான் எவரேனும் இடையில் வந்து இடையூறு ஏற்படுத்த மாட்டார்கள்.

வானொலி நிகழ்ச்சியைக் கேட்கும் முன்பு மாணவர்கள் என்ன நிகழ்ச்சி குறித்துக் கேட்க இருக்கின்றனர். எப்படிக் குறிப்புக்கள் எழுத வேண்டும் என்பன குறித்து ஆசிரியர்கள் தெளிவாகக் கூறி மாணவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

நிகழ்ச்சிக்குப் பின் மாணவர்கள் கேட்டவற்றைப் பற்றி அவர்களை வாய்மொழியாகக் கூறச்செய்தல் வேண்டும். பின்னர் எழுதச் செய்ய வேண்டும். அப்போதுதான், வானொலி நிகழ்ச்சியால் பெறும் கல்விப் பயனை நிறைவாகப் பெற முடியும்.

வானொலியில் கருத்துக்களைக் கேட்க முடியும் ஆனால் காட்சிகளைப் பார்க்க முடியாது. தொலைக்காட்சியிலோ காட்சிகளைப் பார்க்கவும், நிகழ்ச்சிகளைக் கேட்கவும் முடியும். இனித் தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்வி ஒளிபரப்பைச் சிறிது காண்போம்.

**5.6.1 தொலைக்காட்சி**

அண்மைக் காலமாக கல்வியியல் வல்லுநர்களால் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான பாடப்பகுதிகள் முன்பே தயாரிக்கப்பட்டு ஒளிப்பரப்பப்படுகின்றன.

வானொலி போன்றே தொலைக்காட்சியும் கற்றலில் பல பயனுள்ள நன்மைகளைத் தருகிறது.

தொலைக்காட்சியில் காட்சியை நேரே காண்பதற்கும் அவை குறித்த கருத்துகளைக் கேட்பதற்கும் வாய்ப்பு இருப்பதால் வானொலியைவிட தொலைக்காட்சியே சிறந்தது.

தமிழ் கற்பித்தலிலும், வாழ்க்கைக் கல்வி தொடர்பான கற்பித்தலிலும் தொலைக்காட்சி சிறப்பிடம் பெறுகிறது.

இந்தியாவில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொலைக்காட்சிப் பயன் நடைமுறைக்கு வந்தது. இதில் கல்வி ஒலி-ஒளிபரப்பும் நடைபெறுகிறது.

பத்தாம்வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு, பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளுக்கான பாட வகைகள் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டு ஒலி-ஒளிபரப்புச் செய்யப்படுகின்றன.

தொலைக்காட்சி என்பது தொலைவில் உள்ளவற்றை நோக்குவதும், கேட்பதுமாகும். தொடக்கக் காலத்தில் விண்ணில் செலுத்தப்பட்ட ஒலி-ஒளி மின்காந்த அலைகள், வான் வழியாக வளிமண்டலத்தில் அதிகதூரம் சென்று திரும்புவதில்லை.இப்போது செயற்கைக்கோளைப் பயன்படுத்தித் தொலைதூரக் காட்சிகளை உலகளாவிய அளவில் ஒளி பரப்புகிறார்கள்.

காட்சிகளாக உள்ள ஒலி-ஒளி அலைகளை மின்காந்த ஒலி-ஒளி அலைகளாக மாற்றி விண்வெளியில் அனுப்புகின்றனர். இந்த அலைகள் தொலைக்காட்சிப் பெட்டிகளால் உறிஞ்சப்பட்டு மீண்டும் ஒலி-ஒளி அலைகளாக மாற்றப்படுவதால, நாம் காணவும், கேட்கவும் முடிகிறது. இந்தக் காட்சிகள் குறுந்தகடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

வாழ்க்கைக்கல்வி சிறப்புடன் நிறைவேற இக்குறுந்தகடு பயன்படுகிறது. மாணவர்களின் கற்றல் பழக்கவழக்கங்களை இது மாற்றி வருகிறது.

கண்மணிப் பூங்கா, கல்வி நிகழ்ச்சி, மனைமாட்சி, வாழ்க்கைக்கல்வி, உழைப்பவர் உலகம் முதலான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதால் சிறுவர்களும் பெரியோர்களும் மகிழ்வதோடு புத்தறிவும் பெறுகின்றனர்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-14**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. கற்பித்தலில் கணிப்பொறியின் பங்கு பற்றி எழுதுக.

..........................................................................................................................

..........................................................................................................................

2. இணையம் - பெயர்வரக் காரணம் யாது?

..........................................................................................................................

..........................................................................................................................

3. வலைதள அரங்கம் என்றால் என்ன?

..........................................................................................................................

..........................................................................................................................

4. கற்பித்தலில் தொலைக்காட்சி எவ்வாறு சிறப்பிடம் பெறுகிறது?

..........................................................................................................................

..........................................................................................................................

இக்கருவி மாணவர்கள் புதிய பாடவகையில் கவனம் செலுத்த உதவுகிறது. கற்றலையும், கற்பித்தலையும், பொருளுடையதாக மாற்றுகிறது. இது நாட்டில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதோடு, தரமாகக் கற்பிப்பவர் திறனையும் பலப்படுத்தத் துணையாக இருக்கிறது.

வானொலியைப் போன்றே உரையாடல், நாடகம், சொற்பொழிவு, இசை முதலானவை இடம் பெறுவதால், மொழி கற்பித்தலுக்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பயன்படுத்தலாம்.

தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்வி ஒளிபரப்புக்கு முன்தயாரிப்பும், தொடர் பயிற்சியும் வேண்டும்.

தற்போது தொலைதூரக் கல்விக்கும், கற்பிக்கும் முறைகளைச் செய்து காட்டலுக்கும் தொலைக்காட்சியைப் பயன்படுத்துகின்றனர்.

பள்ளிக் கல்விக்குத் தேவையான பாடங்களையும் ஒலி-ஒளிக் காட்சிகளாகத் தயாரித்துத் தொலைக்காட்சி நிலையங்கள் ஒளிபரப்புகின்றன.

தொலைகாட்சியின் ஆற்றலை மொழி கற்பித்தலில் மிகுதியாகப் பயன்படுத்தும் நிலை வருங்காலத்தில் வரும்.

தற்காலத்தில் கற்பித்தலில் புதிய போக்குகள் பின்பற்றப்படுகின்றன.

தொடக்க காலத்தில் கற்பித்தலில் வானொலி புகுந்தது. பின்னர் தொலைக்காட்சி கற்பித்தலில் பங்கேற்றது. அதன் பின்னர் கற்பித்தலில் கணினி துணைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. தற்காலத்தில் மொழி கற்பித்தலில் மொழி பயிற்றாய்வுக் கூடம் பயன்படுத்தப்பட்டு வலுவூட்டமிக்க கற்பித்தலாக்கியுள்ளது.

### 5.7 மதிப்பீடு

இப்பகுதியில் கற்பித்தலின் நிறைவாக நடைபெறும் முதன்மைச் செயல்களில் ஒன்றாகக் கருதப்படும் மதிப்பிடுதல் பற்றியும், மதிப்பிடுதலுக்குக் கருவியாக அமையும் வினாக்கள் பற்றியும், விரிவாகக் காணலாம்.

மதிப்பிடுதல், அளவிடுதல், கணித்தல் ஆகிய மூன்றும் பெரும்பாலும் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன.

கற்பித்தலின் நிறைவான செயல் மதிப்பிடுதல். ‘மதிப்பீடு’ என்னும் சொல் தேர்வு என்னும் பொருளில் கையாளப்படுகிறது.

கற்றல் களங்கள் அனைத்திலும் பெற்ற தேர்ச்சியால் உருவான திறன்.

கற்றல் களங்கள் அனைத்திலும், உளம் பதித்தல். கற்போரின் தன்மையினைப் பற்றிய முடிவுகளைக் கூறுதல் மதிப்பீடு.

அளவீடு, முடிவுரைத்தல், மதிப்பீடு

**தமிழ் கற்பித்தலில் விளைவுகளை மதிப்பிடல்**

பள்ளியில் கற்றலினால் மாணவர்கள் அடையும் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றின் விகிதத்தையும் அளவையும் அறிவதே கல்வியில் ‘மதிப்பிடுதல்’ என வழங்கப்படுகிறது.

சாதாரணமாக கல்வித் துறையில் வாய்மொழித் தேர்வுகள், கட்டுரைத் தேர்வுகள், புறவயத் தேர்வுகள் என மூவகைத் தேர்வுகள் நடைமுறையில் உள்ளன.

மாணவர்கள் முன்னர் அடைந்துள்ள வளர்ச்சியினைக் கொண்டு மேலும் வளர்ச்சி பெற ஊக்குவிப்பதே இச்செயல் முறையில் ஆசிரியரின் தொழில்.

மாணவர்கள் மொழிக் கல்வியால் எத்தகைய பயன்களை எந்த அளவிற்குப் பெற்று வருகின்றனர் என்பதை அப்போதைக்கப்போது ஆசிரியர் அளவிடலும்,மதிப்பிடலும் பள்ளி நடைமுறையில் இன்றியமையாதன.

கற்பித்தல்-கற்றல் ஆகியவற்றால் விளையும் பயன்களை மதிப்பிடுதல் ‘கல்வியியல் மதிப்பீடு’ எனப்படுகிறது.

கல்வியின் நோக்கங்கள் இலக்குகள் ஆகியவற்றைப் பொருத்தே கல்வி முறையில் காணப்படும் மதிப்பிடலின் தன்மை அமையும்.

**5.8 அளவிடல் - மதிப்பிடல் வேறுபாடு**

கல்வியில் மதிப்பிடுதல் ஆசிரியரின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும்.

மதிப்பிடலில்,அளவிடல் முறைகளும் உள்ளன. எனினும் மதிப்பிடல், அளவிடல் இவற்றிற்கிடையே வேறுபாடும் உள்ளது.

அளவிடுதல் என்பது ஒரு நிலையின் இயல்பினைத் திட்டவட்டமாக விவரித்தலைக் குறிக்கும். ஆனால் ‘மதிப்பிடல்’ என்பது இந்நிலையின் உண்மைப் பயன்களை ஆராய்ந்து முடிவுக்கு வருதலைக் குறிக்கும்.


அடைவுச் சோதனை ஒன்றில் மாணவன் ஒருவன் 50 மதிப்பெண் பெற்றிருக்கிறான் என்பது அளவீடு என்பதற்கு எடுத்துக்காட்டு. இம்மாணவனது மதிப்பெண்களைப் பிற மாணவர் மதிப்பெண்களோடு ஒப்பிட்டு, அவனது அடைவினைப் பற்றி ஒரு முடிவுக்கு வருதலே மதிப்பீடு எனலாம்.

எனவே மதிப்பீடு என்பது பாடப்பொருளை மாணவர்கள் உட்கொண்டுள்ள இயல்பைச் சோதித்து அறிதல் நிலையின் உண்மைப் பயன்களை ஆராய்ந்து முடிவுக்கு வருதலைக் குறிப்பதாகும்.

**கல்வியின் குறிக்கோள் - அனுபவங்கள் - மதிப்பிடுதல்**

கற்றல் கற்பித்தல் செயல்முறையில் மூன்றுவகை அடிப்படைக் கூறுகள் உள்ளன. அவை முறையே கல்வியின் குறிக்கோள்கள், கற்றல் அனுபவங்கள், மதிப்பிடுதல் என்பனவாம்.

கற்றல் முறையில் இம்மூன்று உட்கூறுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன. இத்தொடர்பைக் கீழே தரப்பட்டுள்ள படம் விளக்கும்.




கல்வியின் குறிக்கோள், கற்றல் அனுபவம், மதிப்பிடுதல் என்னும் மூன்றையும் ஒரு முக்கோணத்தின் மூன்று முனைகளுக்கு ஒப்பிடலாம். இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன.

ஒன்றின் வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டால் மற்ற இரண்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். அத்துடன் ஒன்றின் வெற்றி மற்ற இரண்டினைப் பொருத்தே அமைகிறது என நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

கல்வியின் குறிக்கோள்களை எய்தும்வண்ணம் கற்றல் அனுபவங்கள் அமைதல் வேண்டும். மாணவன் ஒருவன் கல்வியின் குறிக்கோள்களை அடைந்தானா? கற்றல் அனுபவங்களைப் பெற்றானா? என்பனவற்றை மதிப்பிட்டறிதல் வேண்டும். எனவே அதற்கு ஏற்ற வண்ணம் மதிப்பீட்டு முறைகள் அமைதல் வேண்டும்.

**மதிப்பிடுதலின் பயன்கள்**

மாணவர் ஒவ்வொருவரும் பாடப்பொருளை எந்த அளவு கற்றுள்ளனர்? என அறியவும், பிற கல்வி இலக்குகளில் எந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளனர் என்பதனை அறியவும் மதிப்பீடு உதவுகிறது.

கற்றலில் மாணவர்க்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை அறிந்து, அவற்றை அகற்ற மதிப்பீடு துணையாய் உள்ளது.

ஆசிரியர் கற்பித்த பாடப்பொருளையும், எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் போன்றவற்றை எந்த அளவு நினைவில் வைத்துள்ளனர்? என்பதனை அளந்தறியவும் உதவுகிறது.

மாணவரின் ஆளுமை, நுண்ணறிவு என்பவற்றின் அடிப்படையில் மாணவர்களை வகைப்படுத்தி கற்பித்தலை மாற்றி அமைக்கப் பயன்படுகிறது.

கல்வி ஏற்பாடு, பாட அமைப்பு, பாடத்திட்டங்கள் ஆகியவற்றில் அவ்வப்போது மாறுதல்களைச் செய்ய மதிப்பிடுதல் காரணமாகிறது.

**அறிதல், புரிதல், ஆளல், ஆற்றல்**

கற்றல் நோக்கங்களை வரையறை செய்தல், கற்பித்தல், கற்பித்தலுக்கு முன்னரும், கற்பிக்கும் போதும், கற்பித்த பின்னரும், கற்றல் போக்கினை அளவிடுதல் ஆகியன கல்வியில் முக்கிய நிகழ்வுகளாம். எனவே கல்வியாளர்கள் இத்தளங்களைக் குறித்து ஆழ்ந்தும் அகன்றும் ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பெஞ்சமின் புளும் அவர்களும் அவருடன் பணியாற்றியோரும் ஆவர்.

1939ஆம் ஆண்டிலிருந்து 1956வரை கற்றல், கற்பித்தல் பற்றியும் அவற்றின் முக்கியத் தேர்வுகள் பற்றியும், மதிப்பீடு பற்றியும் ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

1956லிருந்து 2000வரை அவர்தம் கருத்துக்கள் உலகெங்கும் கல்வியியலில் பின்பற்றப்பட்டது.

பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய பெஞ்சமின் புளும் செயல்படுத்திய கருத்துக்கள் 2001ஆம் ஆண்டு அவர்தம் மாணவர் ஆண்டர்சன் என்பவரால் சிற்சில மாற்றங்களுடன் வெளிவந்தது.

கற்றல் அறிவு, உணர்வு, செயல் ஆகிய மூன்று நிலைகளில் நடைபெறும் இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன் இம்மூன்று களங்களைச் சார்ந்தே மதிப்பீடு அமையும்.

புளுமின் வகைமை 2001இல் சில மாற்றம் பெற்றது. அதனைப் பற்றிய விளக்கம் மட்டும் இப்பகுதியில் உள்ளது.

| புளும் வகைமை | ஆண்டர்சன் வகைமை |
|---|---|
| 1. மதிப்பிடல் (Evaluation) | ஆக்கம் (Create) |
| 2. தொகுத்தல் (Synthesis) | மதிப்பிடல் (Evaluation) |
| 3. பகுத்தல் (Analysis) | பகுத்தல் (Analysis) |
| 4. ஆளல் (Application) | ஆளல் (Apply) |
| 5. புரிதல் (Comprehension) | புரிதல் (Comprehension) |
| 6. அறிதல் (Knowledge) | அறிதல் (Knwoledge) |

புளுமின் மதிப்பிடலை ஆறாம் நிலையில் வைத்திருந்தார். ஆனால், ஆண்டர்சன் அதனை ஐந்தாம் நிலைக்குக் கொண்டு சென்றார்.

**5.9 தேர்வு வகைகள்**

மதிப்பிடுதலில் முதன்மை வகிப்பது தேர்வாகும் தேர்வு பற்றியும் அதன் வகைகள் பற்றியும் காண்போம்.

கற்றலில் நிறைவாகக் கருதப்படுவது தேர்வு. கற்பவரின் அடைவைக் கணிப்பதற்கும் கற்றல் விளைவை மதிப்பிடுவதற்கும் உரிய ஊடகமாகத் தேர்வு கருதப்படுகிறது.

**தேர்வு வகைகள்**

| பயன் அடிப்படை | தன்மை அடிப்படை |
|---|---|
| 1. அடைவுத் தேர்வு | மரபுத் தேர்வு |
| 2. மொழி வல்லமைத் தேர்வு | தரப்படுத்தப்பட்ட தேர்வு |
| 3. குறையறி சோதனை | ஆசியர் தயாரிக்கும் தேர்வு |

4. நாட்டச் சோதனை ஆசிரியர் தயாரிக்கும் தேர்வு

**அடைவுத் தேர்வு**

மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவில் குறிப்பிட்ட பாடப் பொருளில் பெற்ற அடைவினை அளவிடுவதற்குப் பயன்படும் தேர்வு அடைவுத் தேர்வாகும்.

**நோக்கங்கள்**

1. மாணவரின் அடைவினை அறிதல்
2. நினைவாற்றலை அறிதல்
3. பொருள் உணர் ஆற்றலை அறிதல்
4. கற்பித்தலில் உள்ள குறைகளைக் கண்டறிதல்

**1. தயாரிக்கும் அடைவுத் தேர்வு**

கற்றலுக்குப் பின் மாணவர்களின் அடைவினைக் கண்டறிய ஆசிரியரே சோதனையை உருவாக்குகிறார். கற்றலுக்கு முன்னும், கற்றலுக்குப் பின்னும் உள்ள மாற்றத்தை இதனால் ஆசிரியரால் அளந்தறிய முடியும்.

வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு ஆகியன ஆசிரியர் தயாரிக்கும் அடைவுத் தேர்வில் அடங்கும்.

**2. தரப்படுத்தப்பட்ட அடைவுத் தேர்வு**

தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் வல்லுநர் குழுவால் உருவாக்கப்படுகின்றன. பிறகு பகுப்பாய்வு மற்றும் மீள்பார்வை செய்யப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் பொருத்தமான முறையில் வினாக்கள் உருவாக்கப்படுகின்றன.

வினாக்களை எழுதத் தேவையான விளக்கக் குறிப்புக்களையும் உதவித் தர அட்டவணைகளையும் கொண்டிருக்கும்.

பல ஆசிரியர்கள் பல இடங்களில் சோதித்த வினாக்களின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட தேர்வு அமையும். இத்தேர்வினை எந்த ஆசிரியரும், எந்தச் சூழலிலும், எந்த மாணவர் குழுவிலும் பயன்படுத்தலாம்.

**5.9.1 அடைவுத் தேர்வு**

ஒரு சோதனையின் முக்கிய நோக்கம் மாணவனது அடைவினை அளப்பது ஆகும். ஓர் அடைவுத் தேர்வைத் தயாரிப்பதில் கீழ்க்காணும் படிநிலைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1. சோதனையைத் திட்டமிடுதல்
2. சோதனையைத் தயாரித்தல்
3. சோதனையைக் கொடுத்தல்
4. விடைகளைத் திருத்தி மாணவர் அடைவினை மதிப்பிடுதல்
5. சோதனையை மதிப்பிடுதல்

**1. சோதனையைத் திட்டமிடுதல்**

சோதனை அமைக்கத் திட்டமிடுதலில் பின்வரும் கூறுகள் இருக்கவேண்டும்.

**நோக்கங்களைத் தெளிவாக்குதல்**

தமிழ்ப் பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் அடையவேண்டிய கற்பித்தல் நோக்கங்களைத் தெரிவு செய்யவேண்டும். அறிந்து கொள்ளுதல், புரிந்து கொள்ளுதல், பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் மாணவரின் அடைவினை மதிப்பிட வேண்டும். இந்த நோக்கங்களை நடத்தை நோக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

**வினா வகைகள்**

வினாத்தாளில் எவ்வகை வினாக்கள் இடம்பெற வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். கட்டுரை வினா, சிறுவினா, புறவய வினா போன்ற வினா வகைகளைத் தேர்வில் இடம்பெறச் செய்ய வேண்டும்.


ஒவ்வொரு வகையிலும் எத்தனை வினாக்கள் இருக்க வேண்டும், சோதனையில் இடம்பெற வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தீர்மானிக்க வேண்டும்.

தேர்வின் காலஅளவு, வினாக்களின் வகைகள், மாணவர்களின் மனவளர்ச்சி, பாடப்பொருளின் அளவு, கடினத்தன்மை போன்றவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**5.9.2 தேர்வின் காலஅளவும், மதிப்பெண்களும்**

மாணவர்கள் தேர்வு எழுதவேண்டிய காலஅளவு, தேர்வின் மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைத் தீர்மானிக்க வேண்டும். தேர்வினை 100 அல்லது 75 அல்லது 50 அல்லது 25 போன்ற பொருத்தமான மதிப்பெண்களுக்குத் தயாரிக்கலாம். தேர்வின் மதிப்பெண்கள், வினா வகைகள், மொத்த வினாக்கள், பாடப்பொருளின் தன்மை இவற்றைப் பொருத்து தேர்வின் காலஅளவு வரையறை செய்யப்பட வேண்டும்.

**அடைவுத் தேர்வின் வகைகள்**




**ஆசிரியர்களால் உருவாக்கப்படும் தேர்வுகள்**

ஆசிரியர்கள் உருவாக்கும் தேர்வுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. வாய்மொழித் தேர்வு 2. எழுத்துத் தேர்வு

1. **வாய்மொழித் தேர்வு**

பேச்சில் மொழிவளம், உச்சரிப்பு, மொழிநடை, குரல் எடுப்பும் படுப்பும், உணர்வு வெளிப்படும் பாங்கு ஆகிய மொழிக்கூறுகளை வாய்மொழித் தேர்வின் மூலம் மதிப்பீடு செய்யலாம்.

எல்லாப் பாடப்பகுதிகளிலும் வினா கேட்கலாம். மாணவரைப் பற்றிய மதிப்பீடு உடனுக்குடன் கிடைத்து விடுகிறது. மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது மதிப்பீடு செய்ய இயலாது கூச்சமும், பலமும் உள்ள மாணவரை மதிப்பீடு செய்ய முடியாமல் போகலாம்.

2. **எழுத்துத் தேர்வு**

ஆசிரியர்களால் உருவாக்கப்படும் வினாக்கள் மூலம் மாணவர்களின் கற்றல் விளைவை அளந்தறிய எழுத்துத் தேர்வு பயன்படுகிறது. எழுத்துத் தேர்வில் கட்டுரை வினாக்கள், சிறு வினாக்கள், புறவய வினாக்கள் என அமையலாம்.

இவ்வினாக்கள் முன்கூட்டியே திட்டமிட்டு அமைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் ஆயத்த நிலையில் நினைவு கூர்ந்து தொகுத்துக் கருத்தை வெளியிடும் திறன் பெறுகிறார்கள்.

இத்தேர்வுகளால் மாணவர்களின் தரத்தைத் துல்லியமாக அளவிட முடியாது; மனப்பாட ஆற்றல் மட்டும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்; நம்பகத்தன்மை குறைவு.

**5.9.3 நல்ல தேர்வின் நற்பண்புகள்**

நல்ல தேர்வு என்பது எதனை அளவிடத் தயாரிக்கப்பட்டதோ அதனைத் துல்லியமாகவும், பொருத்தமாகவும் அளவிட வேண்டும். மாணவரின் திறமை, தன்மைக்கு ஏற்ப அவர்களைக் குழுவாகப் பிரிக்க வேண்டும்.

நல்ல தரமான தேர்வானது கீழ்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. நம்பகத்தன்மை (Reality)
2. ஏற்புடைமை (Validity)
3. புறவயப்பாடு (Objectivitiy)
4. எளிமைப்பாடு (Simplicity)
5. தர அளவுப்பாடு (Standardization)
6. சமன்பாடு (Equility)
7. ஒருமைப்பாடு (Uniformity)
8. பயன்பாடு (Usage)

**1. நம்பகத்தன்மை**

ஒரு குறிப்பிட்ட பண்பினை ஒரு தேர்வு எத்தனை முறை அளந்தறிந்தாலும் மாறாத முடிவுகளைக் கொடுக்குமாயின் அதனை அத்தேர்வின் நம்பகத்தன்மை என்கிறோம்.

சோதனை ஒன்றை ஒரு குறிப்பிட்ட மாணவர் குழுவிற்கு மீண்டும் மீண்டும் கொடுத்தாலும், அளிக்கும் விடைகளின் தன்மையும், மதிப்பெண்களும் மாறாமல் இருந்தால் அதுவே நம்பகத் தன்மையாகும்.

**நம்பகத் தன்மையைப் பாதிக்கும் காரணிகள்**

1. தேர்வின் நீளம்
2. மதிப்பெண் பகிர்வு
3. தேர்வின் தன்மை (எளிமை அல்லது கடினம்)
4. புறவயத் தன்மை

**நம்பகத் தன்மையை அறியும் முறைகள்**

**1. தேர்வு – மறுதேர்வு முறை**

ஒரே தேர்வினை மீண்டும் இளைவெளிவிட்டு நடத்திக் கிடைத்த மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ ஒரே மதிப்பெண் இருந்தால் மாணவர்களின் தேர்வு நம்பகத்தன்மை உடையது என முடிவு செய்யலாம்.

**இணைத்தேர்வு**

ஒரே பாடத்தில், ஒரே நோக்கத்தில், ஒரே தன்மையான இரண்டு வினாத்தாளை ஒரே மாணவர் குழுவிற்கு, ஒரே காலக்கட்டத்தில் கொடுத்துச் சோதிக்க வேண்டும். அச்சோதனையில் மதிப்பெண் மாறாதிருந்தால் அத்தேர்வு நம்பகத்தன்மை உடையது என்று பொருள்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-15**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

5. அடிப்படைத்தேர்வு என்றால் என்ன?

............................................................................................................................................................

..............................................................................................................................

6. நம்பகத்தன்மை என்றால் என்ன?

............................................................................................................................................................

.......................................................................................................................................................

**2. ஏற்புடைமை**

அளந்தறியப்படும் பண்பினைச் சரியாக அளவிட ஒரு சோதனை உதவுமாயின் அது ஏற்புடைமை உடையது எனலாம்.

ஒரு குறிப்பிட்ட திறனையோ, கருத்துக்களையோ ஒரு தேர்வு சோதித்தறிய உதவுமானால் ஏற்புடைமைப் பண்பை மட்டும் அளந்தறிய உதவ வேண்டும்.

**3. புறவயப்பாடு**

மதிப்பீட்டாளரின் விருப்பு வெறுப்புக்கள், ஒருபுறச் சாய்வு ஆகியவற்றால் எத்தனை முறை, எத்தனை தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலும் மதிப்பெண் மாறாமல் இருக்க வேண்டும். ஒரு தேர்வின் புறவயப்பாட்டைப் பாதுகாக்க வேண்டுமாயின்,

1. மதிப்பெண் தெளிவாகச் சுட்டப்படுதல்
2. புறவயப்பட்ட வினாக்கள் மட்டும் அளிக்கப்படுதல்
3. திட்டமிடப்பட்ட விடைக் குறிப்பு
4. வரையறை செய்யப்பட்ட மதிப்பீட்டு முறை
5. தேர்வாளரின் மதிநுட்பம்

ஆகியன சிறப்பாக அமையுமாயின், சோதித்தறிய உதவுமாயின் நம்பகத் தன்மையைப் பாதுகாக்க வேண்டுமாயின்,

மதிப்பீடு மாணவர்களின் ஏற்புடைமையை அளந்தறிய உதவும்.

**4. எளிமைப்பாடு**

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எளிமையாக அமையும் வகையில் தேர்வு அமைப்பு இருக்க வேண்டும். விரைவாகவும், துல்லியமாகவும், இயல்பாகவும் எழுதும் வகையில் வினா வடிவமைப்பு இருக்க வேண்டும்.

தேர்வானது மாணவர்கள் எழுதுவதற்கும், ஆசிரியர்கள் மதிப்பிடுவதற்கும் ஏற்ற வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.

**5. தர அளவுப்பாடு**

மாணவர்களிடையே பல்வேறு சமயங்களில், பிற பள்ளிகளில் பல்வேறு தேர்வாளர்களால் கேட்கப்பட்ட வினாக்களைத் தொகுத்து ஒப்புநோக்கி நிலைப்படுத்தப்பட்ட வினாக்களுக்குத் தர அளவுப்பாடு வினாக்கள் என்று பெயர்.

**6. சமன்பாடு**

வேகமாகக் கற்போர், மெதுவாகக் கற்போர், சராசரி மாணவர்கள் ஆகிய மூவருக்கும் ஏற்ற வகையில் சமமாக எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அமையும் வினாத்தாள் தான் சமன்பாடு உடையதாகும்.

**7. ஒருமைப்பாடு**

பாடப்பகுதியில் அனைத்துப் பகுதியிலிருந்தும் சமமான மதிப்பெண் அமையுமாறு வினாத்தாள் கொடுப்பதை ஒருமைப்பாடு அல்லது சமன்பாடு என்பர்.

**8. பயன்பாடு**

தேர்வின் நோக்கம் நிறைவேறும் வகையில் தேர்வு அமைக்கப்பட வேண்டும். எனவே ஒரு தேர்வு மாணவருக்கும், ஆசிரியருக்கும் பயனளிக்கும் வகையில் அமைவதே அத்தேர்வின் பயன்பாட்டுத் தன்மை ஆகும்.

**தேர்வின் நிறைகள்**

1. முதல்,இடை, கடை என முப்பருவத்தில் நடைபெறும் தேர்வுகள் கற்பித்தலின் இன்றியமையாச் செயல்.
2. வாய்மொழித் தேர்வுகள் அவ்வப்போது மாணவர்களை மதிப்பீடு செய்யப் பயன்படுகின்றன.
3. எழுத்துத் தேர்வுகள் மாணவர்தம் நினைவாற்றலையும், பாடப்பொருள் அறிவையும் சோதிக்கப் பயன்படுகின்றன.
4. கல்வியின் நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என அறியப் பயன்படுகிறது.
5. அடைவுத் தேர்வு குறிப்பிட்ட பாடப்பகுதியில் மாணவர் பெற்ற அடைவினை அளந்தறியப் பயன்படுகிறது.
6. குறையறி சோதனை குறிப்பிட்ட பாடப் பகுதியில் மாணவர் எதிர்கொள்ளும் கற்றல் இடர்ப்பாடுகளை நீக்கப் பயன்படுகிறது.
7. புறவயத் தேர்வில் மாணவன் பாடப்பொருளையும், பாடத் தொடர்பான செய்திகளையும் அறிந்துள்ளானா என முழு மதிப்பீடு செய்யப் பயன்படுகிறது.
8. குறிப்பிட்ட கால அளவில் மாணவர் பெறும் திறன் மதிப்பீடு செய்யப்படுகிறது.
9. கற்றல், கற்பித்தலில் ஏற்படும் குறைபாடுகளைக் களையப் பயன்படுகிறது.
10. மாணவர்களின் நடத்தை மாற்றத்தை அளந்தறியவும் பயன்படுகிறது.

**தேர்வின் குறைகள்**

1. முழு பாடப்பகுதியையும் குறிப்பிட்ட காலத்தில் சோதித்தறிவது சிரமம்.
2. முப்பருவத் தேர்விலும் இக்குறைபாடு தொடர்கிறது.
3. மாணவர் தம் ஆளுமைத் தன்மையை அளந்தறிய இயலாது.
4. நூல் கருத்துக்களை வெளியிடும் கருவியாக மாணவனை மாற்றுகிறது.
5. மாணவர் தம் பொதுஅறிவும், உலகியலறிவும் சோதிக்கப்படுவதில்லை.
6. அறிவியல், நவீன தொழில்நுட்பத்திற்கேற்ற வகையில் தேர்வு முறை இல்லை.
7. மாணவனின் சிந்தனையும், ஆய்வுப் போக்கும் தடைப்படுகிறது.
8. கற்றல், கற்பித்தல் குறைபாடுகள் முழுமையாகக் களையப் படுவதில்லை.
9. அகவயத் தேர்வில் பாடப்பொருள் அறிவு முழுமையாகச் சோதிக்கப்படுவதில்லை.
10. புறவயத் தேர்வு வினாத்தாள் தயார் செய்யக் காலமும், பொருளும் மிகுதியாகச் செலவாகிறது.

**5.9.4 வினாத்தாள் அமைப்பு**

**மாதிரி வினா வடிவமைப்பின் படிநிலைகள்**

தமிழ்மொழிப் பாடத்தைப் பொருத்தவரை செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் என்னும் பகுதிகள் அமையும்.

பாட வகைகளுக்கேற்ப மதிப்பெண் ஒதுக்க வேண்டும். பாடப் பகுதிகளை வரையறை செய்ய வேண்டும்.

முதல் தாளில் செய்யுள், உரைநடை இடம்பெறும் அவற்றிற்குரிய பாடப் பகுதிகளை வரையறை செய்து மதிப்பெண்ணும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**முதல் தாள்**

செய்யுள் 60%

உரைநடை 40%

-----------

100%

இரண்டாம் தாளில் இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழியாக்கம், மொழிப்பயிற்சி ஆகியன இடம்பெறும்.

| | |
|---|---|
| இலக்கணம் | மொழியாக்கம் |
| துணைப்பாடம் | மொழிப்பயிற்சி - கட்டுரை, கடிதம் |

**காலமும் மதிப்பெண்ணும்**

தேர்வுக்குரிய காலத்தையும், மதிப்பெண்ணையும் ஆசிரியரே வரையறை செய்கிறார்.

**3. நோக்கங்களும், மதிப்பெண்ணும்**

| | |
|---|---|
| அறிதல் | 10% |
| புரிந்து கொள்ளுதல் | 30% |
| பயன்படுத்துதல் | 20% |
| வெளியிடுதல் | 20% |
| பாராட்டல் | 20% |
| | ---------- |
| | 100% |

**வினாக்களை உறுதி செய்து மதிப்பெண் வழங்குதல்**

மொழிப்பாடத் தேர்வுகளில் கட்டுரை வினா, குறுவினா, புறவய வினா என வினா அமையும்.

| | | |
|---|---|---|
| சான்று: | கட்டுரைவினா | 20% |
| | குறுவினா | 40% |
| | புறவயவினா | 40% |
| | | ---------- |
| | | 100% |

**வினா நிலைகள்**

ஒரு தேர்வில் எளிய, சுமாரான, கடினமான வினாக்கள் கலந்து அளிக்கப்பட வேண்டும்.

**வினா வடிவமைப்புத் திட்டம் தயாரித்தல்**

நோக்கங்கள் அடிப்படையில் அமைந்த வினா வகைகள் அனைத்தும் வினா வடிவமைப்புத் திட்ட அட்டவணையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

வினாத்தாள் எழுதுதல்

உரிய படிவத்தில் செம்மையாக வினாத்தாள் எழுதப்பட வேண்டும்.

**கவனிக்கப்பட வேண்டியவை**

1. பலவுள் தெரிவு – நான்கு விடைதர வேண்டும்.
2. நிரப்புதல், வினாவின் இடையில் அமைய வேண்டும்.
3. பொருத்துக பகுதியில் வினாப்பகுதி குறைவாகவும், விடைப்பகுதி அதிகமாகவும் இடம்பெற வேண்டும்.

**விடைக்குறிப்பு**

வினா தயார் செய்த ஆசிரியரே விடையையும் தயார் செய்ய வேண்டும்.

புறவய வினா விடை அவ்வாறே அமைதல் நலம்; குறுவினா விடை சுருக்கமாக இருக்க வேண்டும்; கட்டுரை விடை குறிப்புக்களாக இடம்பெற வேண்டும்.

**மதிப்பெண் பங்கீடு**

சரியான விடைக்குரிய மதிப்பெண்ணை ஆசிரியரே வரையறை செய்ய வேண்டும் தவறான விடைக்கு மதிப்பெண் வழங்கப்பட மாட்டாது.

**வினாத்தாள் தயாரித்தல்**

திட்ட நகலைத் தயாரித்த பின்பு அதன் அடிப்படையில் வினாத்தாளைத் தயாரிக்கும் பொழுது நினைவில் கொள்ள வேண்டியவை.

1. திட்ட நகல் அடிப்படையில் வினா வகைகள், வினாக்களுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்கள், வினாத்தாளுக்குரிய பாடப்பொருள் ஆகியவை அமைய வேண்டும்.
2. ஒவ்வொரு வினா வகையின் தொடக்கத்திலும் தேவையான குறிப்புக்களைத் தருதல் வேண்டும்.
3. வினாக்களை அளிக்கும்போது மாணவர்களின் விருப்பத்திற்கு (Option) இடமளிக்கக் கூடாது.
4. ஒவ்வொரு வினாவிற்கும் ஒதுக்கப்பட்ட மதிப்பெண்களை அவ்வினா வகையின் தொடக்கத்தில் குறிப்பிட வேண்டும்.
5. ஒன்றுக்கு மேற்பட்ட வினா வகைகளைக் கேட்க வேண்டும்.
6. ஒரே வகையைச் சேர்ந்த வினாக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.
7. விடைகளை அளிக்கும்போது மாணவர்களது விருப்பத்திற்கு (Option) இடமளிக்கக் கூடாது இதில் இரண்டு வகை உண்டு.

**வெளிவாய்ப்பு**

இம்முறையில் பல வினாக்கள் கேட்கப்பட்டு, ஏதேனும் சில வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குமாறு கூறுதல்.

**அகவாய்ப்பு**

ஒரே நோக்கம், சம அளவு, கடினத் தன்மையுள்ள இரண்டு வினாக்கள் கொடுக்கப்படும் அதில் ஒன்றிற்கு மட்டும் விடை அளிக்குமாறு கூறுதல்.

வினாத்தாளைக் கொடுத்தல்

சோதனையைத் தயாரித்த பிறகு அதனை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**மாணவர்கள் விடையை மதிப்பிடுதல்**

மாணவர்களது விடைகளை எளிதாக மதிப்பிடுவதற்கு ஆசிரியர் வழிகாட்டும் விடை நிரல், வினாக்களுக்கு மதிப்பெண்கள் கொடுக்கும் முறை இவற்றைக் குறிப்பிட வேண்டும்.

வழிகாட்டும் விடை நிரலில் புறவய மற்றும் குறுவினாவிற்கான விடைகள் இடம் பெற்றிருக்கும். விடைக்கான கருத்துக்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைந்தால் தேர்வாளர் புறவயத் தன்மையுடன் மதிப்பெண்களை வழங்க முடியும்.

**5.9.5 நல்ல தேர்வின் சிறப்புக்கள்**

1. கற்றல், கற்கும் மாணவர்கள் நிலை என இவற்றின் சார்பாக மட்டும் தொடர் முழு மதிப்பீடு அமைவதன்று இது பன்னோக்குப் பயன்பாடுகளைக் கொண்டது.
2. விளைபயன் மிகுமாறு ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ளுதல்.
3. ஒழுங்குமுறைப்பட்ட கணிப்புகளைத் தொடர்ச்சியாகப் படிப்புசார், படிப்பு இணைக் கற்றல் பரப்புக்களில் கற்போரின் திறன் அடைவு ஆகியவற்றை மதிப்பிட உதவும்.
4. கற்றலில் எப்பகுதியில் இடர்ப்பாடு ஏற்படுகிறது? எவரெவருக்கு இடர்ப்பாடு நிகழ்கின்றது? கற்றலால் ஏற்படும் முன்னேற்றம், இடர்ப்பட்ட பகுதிகளில் நேர்ந்த கற்றல் நிகழ்வு ஆகியவற்றை அறிதல்.

5. கற்றலில் தம் நிலை அறிதல், தம்மைத் தாமே மதிப்பிடல், கற்றலில் ஊக்கத்தை ஏற்படுத்துதல், கற்றல் நோக்கங்களை அடைய முற்படுதல், கற்றலில் உள்ள குறைகளைத் தீர்த்தல் ஆகிய கற்றல் போக்குகளில் கற்போர் இயங்குதல்.
6. கற்போரின் நாட்டங்களையும், ஆர்வங்களையும் ஆசிரியர் அடையாளங்கண்டு அவற்றிற்கு ஏற்ப ஆற்றுப்படுத்துதல்.
7. கற்போர், தங்களுக்கு எதிர்காலக் கற்றல் பரப்புக்களைத் தேர்ந்தெடுத்தல்.
8. படிப்பு சார்ந்த, படிப்பு இவ்வளவு எனப்பட்ட இரு பரப்புக்களிலும் தங்களின் இயலுமை, ஈடுபாடு ஆகியனவற்றைக் கணித்து எதிர்கால வாழ்வினைத் திட்டமிடல்
9. தேர்வுகள் கற்றலைச் செம்மையாக்குகின்றன.
10. தேர்வுகளால் கற்றல் செம்மையாக்கப்பட வில்லை எனில் மறுதேர்வு நடத்தப்பட வேண்டும்.
11. வரையறுத்த, விரும்பிய செயல் திறன்.

**5.9.6 தேர்வுச் சீர்திருத்தங்கள்**

பண்டைக் காலத்தில் குருகுல முறை இருந்தது. அங்குக் குருவிடம் கற்ற மாணவர்கள், தன் குரு கல்வி நிறைவடைந்தது எனச் சொல்லும் வரை கல்வி கற்பர். குருவிற்கு மாணவனது கல்வியில் தன்னிறைவு ஏற்பட்ட பின்னரே சீடனாகிய மாணவனைத் தன் பள்ளியாகிய பர்ணசாலையிலிருந்து நெஞ்சம் நிறைந்த விடை கொடுத்து அனுப்புவார்.

அன்றைய கல்வி செவிவழிக் கல்வியாகவே இருந்தது. கல்விப் பயிற்சியில் அப்போதைக்கப்போது மாணவர்கள் குருவிடம் தாம்கற்ற பாடத்தை ஒப்பிப்பர். அன்றைய தேர்வும், மதிப்பீடும் உடனுக்குடன் நிறைவடைந்தது. இது குருகுலக் கல்வியின் தொடக்கநிலை.

சற்றுக் காலம் கடந்த பின்னர் ஏடும், எழுத்தாணியும் மாணவர்க்குக் கிடைத்தது.

குரு பாடத்தைக் கற்பிப்பார். சீடனாகிய மாணவர் அதனை ஒப்பிப்பார். இதுவே வாய்மொழித் தேர்வு. பின்னர் தான் ஒப்பித்ததை ஏட்டில் எழுதினர். அதைக் குருவிடம் காண்பித்துத் திருத்திக் கொள்வர். இது அடுத்த கட்டத் தேர்வுமுறை.

குருகுலக் கல்வி திண்ணைப் பள்ளியானது.எழுதுபொருட்கள் வந்தன. கற்பித்தல் மாணவர்க்குத் திண்ணையாகிய பள்ளியில் நடந்தது. முதலில் வாய்மொழித் தேர்வும், பின்னர் எழுத்துத் தேர்வும் நிறைவடைந்தது. அத்தேர்வு ‘சிலேட்டு’ எனப்படும் பலகையில் நடந்தது. அதன் பின்னர் தேர்வு தாளில் புகுந்தது. அப்போது தேர்வில் தாளும், கரிக்கோலும் (பென்சிலும்) பயன்படுத்தப்பட்டன.

பின்னர் பள்ளியிலும், கல்வி நிறுவனங்களிலும் கல்வி புகுந்தது. மாணவர் சேர்க்கை, வருகைப்பதிவு, நிர்வாகக் குறிப்புகள் இடம் பெற்றன.

தேர்வில் கட்டுரை வகை வினாக்கள் கேட்கப்பட்டுத் தேர்வு நடத்தினர். இதில் தேர்வாளர்க்குத் தேர்வில் குறுவினாக்களும் இடம் பெற்றன. இவ்வாறு கேட்பதைவிடக் குறுவினாக்கள் பல கேட்கப்படலாம் எனச் சொல்லப்பட்டது.

காலப்போக்கில் இத்தேர்வில் மாற்றங்கள் புகுந்தன. அந்த மாற்றத்தின் விளைவே குறையறி சோதனை; அடைவுச் சோதனை. இத்தகைய தேர்வில் கட்டுரை வகை வினாக்களால் குறைகள் களையப்பட்டன. புதிய தேர்வு முறையிலும் குறைகள் இல்லாமல் இல்லை.

கட்டுரை வகை விடைகளில் செய்திகளைத் தொகுத்து முறைப்படுத்தி முன்னுரை, பொருளுரை, முடிவுரை கூறுமாற்றலால் அழகான எழுத்தமைப்பு, பத்தி அமைப்புடன் கட்டுரையாகத் திறன்கள் தேர்வில் வெளிப்பட்டன.

ஆனால் இத்தன்மைகளை ஒரே வார்த்தை அல்லது இடுகுறிச்சோதனைகளால் பெற முடியாது.

எனவே பெரும்பான்மையான கல்வி நிலையங்கள் அகவய வினாக்கள், புறவய வினாக்கள் என இவ்விரு வகை வினாக்களையும் கையாள்கின்றன.

ஏ.எல். முதலியார் கல்விக்குழு அறிக்கையில் தேர்வைப் பற்றிக் கூறிய பின்வரும் கருத்துக்கள் இங்குப் பொருந்தும்.

1. குறித்தவாறு நிறைவேற்றும் தேர்வினால் கட்டுரை வகை விடை இடம்பெறும் தேர்வுகளில் உள்ள குறைகளைக் குறைக்கலாம்.
2. முடிவாகத் தகுதியை உறுதி செய்வதை நடத்தும் தேர்வைப் பொருத்ததாக அமையக் கூடாது. அகமதிப்பீட்டுத் தேர்வு என்ற துணைத் தேர்வு நடத்தி அம்மதிப்பெண்ணையும் தேர்வு மதிப்பெண்ணோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தேர்வுச் சான்றுகளில் மதிப்பெண் இடுதலைவிட நிலைகள் (Grade) இடல் பின்பற்றப்படல் வேண்டும். பள்ளியில் பதிவேடுகளிலும் நிலைகளே (Grade) குறிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

தேர்வு அகவயமும், புறவயமும் நிறைந்ததாக இன்று காணப்படுகிறது.

எதிர்காலத்தில் என்ன மாற்றம் வேண்டுமாயினும் காலத்தின் தேவையை அடிப்படையாக வைத்து வரலாம்.

தரப்படுத்தப்பட்ட தேர்வுகள்

1. சோதனைகளில் அடங்கிய பாடப் பொருள் எங்குக் கற்பிக்கப்பட்டாலும் அங்குப் பயன்படுத்தக் கூடியவையாய் இருக்கும்.
2. பாடப்பொருள் பற்றிய பொதுக் கருத்துகள் பற்றிய விளக்கங்கள் அடங்கியிருக்கும்.
3. நன்கு உருவாக்கப்பட்டு அதிக அளவு நம்பகமும் ஏற்புடைமையும் இருக்கும் புறவயத் தன்மை வாய்ந்த வினாக்கள் மிகுதியாய் இருக்கும்.
4. குறுவினாக்கள் மட்டுமே பொதுவாகக் காணப்படும்.
5. தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் வல்லுநர் குழுவால் உருவாக்கப்படுகின்றன.
6. பாடப்பொருளைப் பகுப்பாய்வு செய்தும், மீள்பார்வை செய்தும் எல்லா மாணவர்களுக்கும் பொருத்தமான முறையில் வினாக்கள் உருவாக்கப்படுகின்றன.
7. வினாக்களை எழுதுவதற்குரிய விளக்கக் குறிப்புக்களையும்,உதவும் தர அட்டவணைகளையும் கொண்டமையும்.
8. பல ஆசிரியர்களால் பல இடங்களில் சோதிக்கப்பட்ட வினாக்களின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட தேர்வு அமையும்.
9. தரப்படுத்தப்பட்ட தேர்வினை எந்த ஆசிரியரும் எந்தச் சூழலிலும் எந்த மாணவர் குழுவிலும் பயன்படுத்தலாம்.

**5.9.7 மதிப்பீட்டின் பண்புகள்**

1. ஒரு தேர்வு பொருளுடையதா, பொருத்தமுடையதா என மதிப்பிட்டால்தான், அத்தேர்வால் வெளிப்படுத்தப்பட்ட முடிவுகள் பொருளுடையதும், பொருத்தமுடையதுமாகும்.
2. வரையறுக்கப்பட்ட அளவுகள் இரண்டு, அவை 1. ஏற்புமை 2. நம்புமை
3. தேர்வை மதிப்பிட ஏற்புமை, நம்புமை என்பதைக் கல்வியாளர் மேற்கொள்ளும் புள்ளியியல் அடிப்படையில் அமைந்த அலகுசார் அளவையாகும்.
4. தேர்வின் ஏற்புடைமை, நம்பகத்தன்மை ஆகியவை அலகுசார்ந்த அளவையாகும். அதனால் தேர்வின் தன்மை பற்றித் துல்லியமாக அளக்க முடியும்; துல்லியக் கணிப்பு நோக்கில் இவ்விரு அளவைகளும் தேர்வை மதிப்பிடத் தேவையாகிறது.

5. தேர்வு வினாக்களின் தொகுப்பு; தொகுப்பு நிலையில் முழுமையாக நோக்கும்போது வினாப் பண்புகளோடு, வேறுபல அளவீட்டுக் கருவிகளின் தாக்கமும் தேர்வில் அமையும் வாய்ப்பு உள்ளது.
6. பாடப்பொருள், கற்பித்தல் நோக்கம், வினா வடிவம், விடை அளிக்கும் காலம் போன்றவற்றின் இடைவினைத் தாக்கம் தேர்வில் ஏற்படலாம். எனவே தேர்வை மதிப்பீடு செய்ய அதற்கென வரையறுக்கப்பட்ட ஏற்புமை, நம்புமை போன்ற அளவீடுகள், தேவைப்படுகின்றன.
7. தேர்வு ஏற்புமை என்பது அலகு சார்ந்த அளவை. ஏற்புமை குறைவாக உள்ளதா, மிகுதியாக உள்ளதா, எத்துணை அளவு உள்ளது என்பதை வெளிப்படுத்த உதவும்.
8. ஏற்புமையை அறிவதற்கும், அளப்பதற்கும் தேர்வாளர்கள் பெற்ற மதிப்பெண்களே சான்றாக அமையும். சான்று அடிப்படையில் ஏற்புமை உள்ளடக்கத் தொடர்புச் சான்று, தகுநிலைத் தொடர்புச் சான்று என வகைப்படுத்தப்படுகிறது.

**உள்ளடக்கத் தொடர்புச் சான்று**

உள்ளடக்கத் தொடர்புச் சான்றை ஒரு தேர்வு கொண்டிருக்க வேண்டுமாயின் பாடப்பொருளின் எல்லாப் பகுதிகளுக்கும் உரிய மாதிரிகள் தேவை.

உள்ளடக்கத் தொடர்புச் சான்றின் அடிப்படையில் அடைவுத் தேர்வில் ஏற்புமையை ஏற்படுத்தக் கீழே உள்ள கருத்துகளை நினைவில் கொள்ள வேண்டும்.

1. அளந்தறிய வேண்டிய கற்றல் விளைவுகளை இனம் காணல்.
2. வினா மாதிரிகளைத் தேர்ந்தெடுக்கும் திட்ட வரைவை மேற்கொள்ளலாம்.
3. இனங்காட்டப்பட்ட கற்றல் விளைவுகளை வெளிப்படுத்துவதற்குரிய பொருத்தமான வினாக்களைத் தயாரித்தல்

போன்ற செயல்பாடுகளால் உள்ளடக்கத் தொடர்புச் சான்று அடிப்படையில் தேர்வின் ஏற்புமையை மிகுவிக்கலாம்.

அடைவுத் தேர்வைத் தயாரிப்பதில் உள்ளடக்கத் தொடர்புச் சான்றாக விளங்கும் வினாக்களுக்கே முதன்மையிடம் கொடுக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட மூன்று அணுகுமுறைகளைத் தேர்வாளர்கள் பின்பற்ற வேண்டும்.

**தகுநிலைத் தொடர்புச் சான்று**

தகுநிலைச் சான்று அளவினை வெளிப்படுத்தப் பல அளவைகளைப் புள்ளியியலார் வகுத்துள்ளனர்; அவற்றுள் ஒன்று இணைப்புக்கெழு.

செய்யுள் கற்றலின் விளைவுகளுள் ஒன்று, சிந்தனை வளர்ச்சி; செய்யுள் தேர்வு ஒன்றில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் அவர்கள் சிந்தனை ஆற்றல் அளவினை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். செய்யுள் தேர்வு தகுநிலைச் சான்றுடையதாயின், அத்தேர்வின் மதிப்பெண்கள் சிந்தனைத் திறனை அறிய நடத்தப்பட்ட தேர்வு மதிப்பெண்களோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். தோடர்பினைக் காட்டும் அளவை தான் இணைப்புக் கெழுவாகும்.

**நம்புமை**

தேர்வில் வழங்கப்பட்ட மதிப்பெண் தேர்வரின் தகுதிக்கேற்ப உள்ளது என்பதை அறிவிக்கும் அளவு நம்புமையாகும்.

தேர்வின் உள்நிலையிலிருந்து அறியப்படுவது நம்புமை. நம்புமையின் அளவினைக் கணிப்பதற்கு இணைப்புக்கெழு பயன்படுகிறது.

இணைப்புக் கெழுவைக் கணக்கிட இருவகை மதிப்பெண் தொகுதிகள் தேவை. இருவகைப்பட்ட மதிப்பெண் தொகுதிகள் மறுதேர்வு வடிவம், இணைத்தேர்வு வடிவம், இருகூர் தேர்வு வடிவம் ஆகியவற்றால் பெறப்படுகின்றன.

இம்முறையில் பெறப்படும் இணைப்புக்கெழு நம்புமைக்கெழு எனப்படும்.

### 5.9.8 அளவீடு

எண்களாகப் பரவிக் கிடக்கும் தரவினை முழுமைப்படுத்திக் காணவும், அவை சிதறிக் கிடக்கும் தன்மையைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படும் புள்ளியியல் அளவைகள் இரு வகைப்படும். அவையாவன:

1. மையப் போக்கு அளவைகள்
2. சிதறல் அளவைகள்

**மையப் போக்கு அளவைகள்**

எண்களாகப் பரவிக் கிடக்கும் தரவினை ஒருசேர நோக்கி, அதன் தன்மையை அறியப் பயன்படுவன மையப்போக்கு அளவைகள். சராசரி, இடைநிலை அளவு, முகடு என்ற மூன்றும் மிகவும் பயன்படுத்தப்படுகின்றன. தரவிலுள்ள எண்கள் பரந்து கிடக்கும் பண்பைக் காட்டுவன சிதறல் அளவையாகும். இப்புள்ளியியல் அளவைகளைக் கணிக்கும் முறைகளை எடுத்துக்காட்டுகளைக் கொண்டு கீழ்வரும் பகுதி விளக்குகிறது.

**கூட்டுச் சராசரி (Mean)**

எண்களின் கூட்டுத் தொகையை, எண்களின் எண்ணிக்கையால் வகுக்கக் கிடைக்கும் எண் சராசரியாகும்.

ஒரு குழுவிலுள்ள ஒவ்வொரு எண்ணலளவையையும் தனித்தனியே எடுத்துக்கொண்டு மதிப்பெண்ணுக்குரிய மாணவர் பற்றிப் பொருத்தமான முடிவுக்கு வர இயலும்.

எடுத்துக்காட்டாக ஒரு வகுப்பில் கபிலன் என்ற மாணவனின் மதிப்பெண் 50 அவ்வகுப்பின் பிறிதொரு பிரிவில் நக்கீரன் என்னும் மாணவரின் மதிப்பெண் 60 எனின் இம்மதிபெண்களைப் பார்த்த மாத்திரத்தில் நக்கீரன் மிகுந்த அடைவு உடையவர் என நினைக்கத் தோன்றும்.

ஆனால் கபிலனின் பிரிவில் உள்ள மாணவர்கள் பெற்ற சராசரி மதிப்பெண் 68. நக்கீரனின் பிரிவில் உள்ள மாணவர் பெற்ற சராசரி மதிப்பெண் 65.

இப்போது முன்னர் நினைத்த முடிவு சரியானது அன்று எனத் தெரியவரும். ஒரு குழுவை முழுமையாக வைத்து, அதிலுள்ள உறுப்பினர்களின் எண்ணல் அளவைகள் பற்றி மதிப்பிடுவதற்குச் சராசரி என்னும் நடுஅளவு (நடுவு) பயன்படுகிறது.

15, 25, 10, 12, 4, 10, 8 - இத்தரவின் சராசரி (நடுவு)

(15, 25, 10,12, 4, 10, 8) % 7 = 12

சராசரி மூன்று வகைப்படும். கூட்டுச்சராசரி, பெருக்கற் சராசரி, விகிதச் சராசரி என்பன அவை.

கல்வியியல் மதிப்பீட்டில் பயன்படுத்தப்படுவது கூட்டுச் சராசரியாகும். இதுவே இங்குச் சராசரி எனக் குறிக்கப்படுகிறது.

**இடைநிலை அளவு (Medians)**

எண்களாக உள்ள தரவின் நடுவில் அமையும் அளவெண் இடைநிலை அளவு ஆகும். இதனை அகடு எனவும் வழங்கலாம்.

எண்ணல் அளவைகள் ஏறு வரிசையாகவோ, இறங்கு வரிசையாகவோ இருக்க நடுவிலுள்ள எண்ணலளவை இடைநிலையளவு ஆகும்.

எண்ணலளவைகள் : 45, 62, 35, 48, 39

வரிசை முறைகள் : 35, 39, 42, 48, 62

இடைநிலை அளவு : 42

எண்ணலளவைகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருப்பின் வரிசை முறையில் நடுவில் ஓர் எண்ணே இருக்கும். அவ்வெண் இடைநிலை அளவு ஆகும்.

எண்ணலளவைகளின் எண்ணிக்கை இரட்டைப் படையாக இருப்பின் அவற்றின் நடுவில் இரு எண்கள் அமையும்.

35, 39, 42, 48, 62, 65

இத்தரவில் ஆறு எண்ணலளவைகள் உள்ளன.இவற்றில் 42,45 ஆகிய இரு எண்ணலளவைகள் தரவின் நடுவில் உள்ளன. இத்தரவில் இடைநிலை அளவு (42+48)+2=45. இரட்டை அளவு கொண்ட எண்களின் இடைநிலை அளவு நடுவில் உள்ள இரு எண்களின் சராசரியாகும்.

**முகடு (Mode)**

எண்ணலளவைகளில் எதன் எண்ணிக்கை பிறவற்றிலிருந்து மிகுந்து உள்ளதோ அந்த எண்ணலளவை முகடு எனப்படும்.

40, 40, 42, 35, 40, 45 இவ்வெண்களுக்கு முகடு 40.

40, 50, 60, 40, 30, 50, 45, 50 இவ்வெண்ணல் அளவைகளுக்கு இரு முகடுகள் உள்ளன. ‘ஒன்று 40, மற்றொன்று 50.

ஒரு தரவில் ஒன்றுக்கு மேற்பட்ட முகடுகள் இருக்கலாம்; ஆனால் சராசரியோ, இடைநிலை அளவோ ஒன்றுக்கு மேற்பட்டிருக்காது.

**வீச்சுச்சிதறல் அளவைகள்**

சிதறல் அளவைகளுள் ஒன்று வீச்சு. ஒரு தரவிலுள்ள எண்ணல் அளவைகளுள் மிக அதிக மதிப்புடையதற்கும், மிகக் குறைந்த மதிப்புடையதற்கும் இடையேயான எண் மதிப்பு அத்தரவின் வீச்சு ஆகும்.

43, 32, 41, 75, 30, 80 - இவற்றில்

| | |
|---|---|
| அதிக மதிப்படைய எண்ணலளவு | 80 |
| கீழ்நிலை எண்ணளவு | 30 |
| வீச்சு | 50 |

**விலக்கச் சராசரி (Average Deviation)**

ஓர் எண் அது அமைந்துள்ள எண்ணலளவைக் குழுவின் சராசரியிலிருந்து எத்துணை அளவு விலகியுள்ளது என்பதைக் குறிக்கும்.

எண் விலக்கம் எனப்படும் ஒரு குழுவிலுள்ள எண்ணலளவைகள் 5, 6, 4, 8, 3, 10 எனின் இவற்றின் சராசரி 5+6+4+8+3+100+6=6 ஆகும். எண்ணலளவைகள் ஒவ்வொன்றின் விலக்கம் சராசரியிலிருந்து கீழ்வருமாறு அமைந்துள்ளன.

5 – 6 = -1

6 – 6 = 0

4 – 6 = -2

8 – 6 = 2

3 – 6 = -3

10 – 6 = 4

விலக்கங்களின் கூட்டுத்தொகை -1+0(-2)+2+(-3)+4=0

விலக்கங்களின் சராசரியைக் கணக்கிட்டால், 0/5=0 என ஆகிறது. இக்கணக்கீட்டால் சராசரியாக அமைந்துள்ள விலக்கம் 0 ஆகிறது. விலக்கமே இல்லை எனக் கருதத் தோன்றுகிறது. இது தவறான கணிப்பாகும்.

இக்குறைபாட்டைப் போக்க விலக்கச் சராசரி என்பதற்கு மாறுபாடான ஒரு வரையறையைப் புள்ளியியல் தருகிறது. எண்ணலளவை ஒவ்வொன்றும், சராசரியிலிருந்து விலகியிருக்கும் எண் மதிப்பை மட்டும் கொண்டு, விலக்கங்களின் கூட்டுத்தொகையைக் கணக்கிட வேண்டும். இதிலிருந்து பெறப்படும் சராசரியே விலக்கச் சராசரி எனக் கொள்ளப்படுகிறது.

எனவே 5, 6, 4, 8, 3, 10 என்பனவற்றில் விலக்கச் சராசரி

(1+0+2+2+3+4)% 6=2 ஆகும்.

-2ஐ எதிர்எண் குறிநீக்கி எழுதும் போது 2 எனவாகிறது. இவ்வாறே எதிர் எண்களின் குறிகளையும் நீக்கி எழுதும் முறையை அறிக. எதிர் எண் குறிகளை நீக்கி எண் மதிப்பை மட்டுமே காட்டும் அளவிற்கு **மட்டு** என்று பெயர்; விலக்கச் சராசரி விலக்கங்களுடைய மட்டுகளின் சராசரி மதிப்பாகும்.

## jpl;ltpyf;fk; my;yJ jutpyf;fk; (Standard Deviation)

எதிர் எண்களின் எண் குறிகளை நீக்கி மட்டுகளைக் கூட்டிக் காணப்படும் விலக்கம் விலக்கச் சராசரி. எதிர் எண்களைத் தவிர்ப்பதற்காக அவற்றிற்குரிய எண்குறிகளை நீக்கிச் சராசரி விலக்கம் காண மேற்காட்டிய முறை பின்பற்றப்படுகிறது.

பின்ன எண்கள் வகுத்துக் கொள்ளப்பட்ட பிரிவு இடைவெளியில் அடங்காமல் உள்ளன. எனவே 20-29 எனும் பிரிவு இடைவெளியை 19.5–29.5 என்றும் 30–39 எனும் பிரிவு இடைவெளியை 29.5–39.5 என்றும் மாற்றி அமைக்கப்படும்போது பின்ன எண்களும் உட்படுத்தப்படுகின்றன.இவ்வாறே பிற பிரிவு இடைவெளிகளும் உண்மைப் பிரிவு இடைவெளிகளாக மாற்றப்பட்டுப் பிரிவு இடைவெளிகள் தொடர்ச்சி அறாதவாறு அமைக்கப்படுகின்றன் வரைபடத்தில் குறிப்பதற்கும் இம்மாற்றம் தேவைப்படுகிறது.

பிரிவு இடைவெளிகளில் உள்ள எண்ணலளவைக் கணக்கிடும்போது உண்மைப் பிரிவு இடைவெளிகளில் கீழ் எல்லைகளை முன் பிரிவில் சேர்த்து எண்ண வேண்டும். அதாவது 19.5–29.5 எனும் பிரிவு இடைவெளியில் 19.5க்கு அடுத்துவரும் எண்ணலளவைகளே சேர்க்கப்பட வேண்டும். 20 – 29 எனும் பிரிவு இடைவெளியில் 20 எனும் எண்ணும் சேர்க்கப்பட வேண்டும்.ஆனால் 19.5–29.5 என்பதில் 19.5 நீக்கப்பட வேண்டும். இவ்வாறே பிற உண்மைப் பிரிவு இடைவெளிகளும் கருதப்பட வேண்டும். உண்மைப்பிரிவு இடைவெளிகளில் ஒன்றன்கீழ் எல்லை முந்தைய உண்மைப் பிரிவு இடைவெளியின் மேல் எல்லையாக அமைவதை நோக்குக.

**நிரல் - 3**

பிரிவு இடைவெளியில் மத்தியப் புள்ளிகள் நிரலாகக் குறிக்கப்பட்டுள்ளன.எல்லை மதிப்புகளைக் கூட்டி இரண்டால் வகுக்கக் கிடைக்கும் எண் மத்திய புள்ளியாகும்.

(19.5+29.5)+2=49+2=24.5

(29.5+39.5)+2=69+2=34.5

---------------------------

(79.5+89.5)+2=69+2=84.5

**நிரல் - 4**

ஒவ்வொரு பிரிவு இடைவெளியிலும் அடங்கும் எண்ணலளவைகளின் நிகழ்வு நிரல்படுத்தப்பட்டுள்ளன. நிகழ்வெண் $\mathscr{F}$ எனும் எழுத்தால் குறிக்கப்படுகிறது.

**5.10 புறவயத் தேர்வு**

தற்காலத்தில் கல்வி நிறுவனங்களில் தேர்வு நடத்துவதில் பலமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சிறப்பாகத் தேர்வு நடத்துவதில் இருவகைப் போக்கு உள்ளது. கற்பித்த ஆசிரியர்களே தேர்வு நடத்துதல் உள்ளகத் தேர்வு எனப்படுகிறது.

தேர்வு எழுதுவோருக்குத் தொடர்பில்லாதவர் தயாரிக்கும் தேர்வுகள் புறவயத் தேர்வு ஆகும். இது வட்ட, மாவட்ட, மாநில அளவில் நடைபெறுவதாகும். தொடர் முழுமை மதிப்பீடு, நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் இப்:போது தொகுநிலைத் தேர்வுகள் எல்லா வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும், நடத்தப்படுகின்றன. அவற்றின் நம்புமை ஆய்வுக்குரியது.

புறவய வினா வகைகள்

**1. நினைவுகூர் வகை**

புறவய வினா வகைகளில் கோடிட்ட இடத்தை நிரப்புதல்; ஒப்பிட்டுக் காட்டல்; ஒரு தொடரை வாக்கியத்தில் அமைத்தல் ஆகியன அடங்கும்.

**2. பலவுள் விடை தேர்வு அமைப்பு**

நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் ஒன்றை மட்டும் மாணவர்கள் தேர்வு செய்து விடையாக எழுத வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-16**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

7. வினாத்தாளில் ஒருமைப்பாடு என்றால் என்ன?

.............................................................................................................................................................

...........................................................................................................................................

8. தரப்படுத்தப்பட்ட தேர்வுப் பண்புகளைக் கூறுக.

.............................................................................................................................................................

...........................................................................................................................................................

9. இடைநிலை அளவு என்றால் என்ன?

........................................................................................................................................................

10. நினைவுகூர்தல் வகையில் எவ்வகை வினாக்கள் இடம் பெறும்?

........................................................................................................................................................

**3. சரி**

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடர் அருகே சரி, தவறு என்பதில் ஏதாவது ஒன்றைச் சுட்டுதல் மாணவர் பணியாம்.

**4. பொருத்துக**

இரண்டு வரிசையில் அமைந்திருக்கும் வினாக் கூறுகளுள் சரியான தொடர்புடையவற்றை இணைக்கவோ அல்லது விடையின் எண்ணை எழுதுதல் வேண்டும்.

**5. அகவயத் தன்மை – குறுவினா**

ஒரு தொடரில் விடைதரும் வினா, ஒரு சொல்லில் விடை தரும் வினா, நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை தரும் வினா ஆகியன குறுவினாவினுள் அடங்கும்.

1. இவற்றைத் தயாரிப்பது எளிது.
2. உண்மைத் தகவல்கள் கிடைக்கும்.
3. பாடப்பொருள் அனைத்தும் உள்ளடங்கும்.
4. மொழிப் பிழையினால் மதிப்பீடு பறிக்கப்படலாம்.
5. நம்பகத்தன்மை குறையும்.

**தேர்வு நடத்தும் கொள்கைகள்**

தேர்வினை ஆசிரியர் நன்கு திட்டமிட்டுச் சரியாக அமைக்க வேண்டும். சரியான வினாத்தாள் அமைந்தால்தான் சரியான விடைகளும், சரியான மதிப்பெண்களும் கிடைக்கும். எனவே அடைவுச் சோதனையைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும்.

ஆசிரியர் கவனத்தில் கொள்ளத்தக்கன

1. தேர்வு நடத்த இருக்கும் பாடப்பகுதியை வரையறுத்தல்.
2. காலமும் மதிப்பெண்ணும் தருதல்
3. பாடப் பகுதிகளுக்கேற்ற நோக்கங்களைக் குறிப்பிடுதல்
4. நோக்கங்களுக்கேற்ற மதிப்பெண் தருதல்.
5. தேர்வில் இடம்பெறும் வினா வகைகளை முடிவு செய்தல்
6. வினா வகைகளுக்குரிய மதிப்பெண் வழங்கல்
7. வினா நிலைகளுக்குரிய கவனம் செலுத்துதல்
8. வினாத்தாளைச் செம்மையாகத் தயாரித்தல்.

**5.11 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- அறிவியல் கல்வியில் இருந்த புதுமைகள் கல்வித் துறையின் பல பகுதிகளுக்கும் பரவியது.
- மனித அறிவு, அறிவியல் என்று மாறி அந்த அறிவியலும் பல புதுமைகளைப் படைக்கத் தொடங்கியது.
- கணினியின் வளர்ந்த நிலையே மொழி பயிற்றாய்வுக் கூடம்.
- மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் பேச்சுப் பயிற்சியே முக்கியப் பயிற்சியாகும்.
- எண்ணற்ற துறைசார்ந்த பல்வேறு தலைப்புக்களில் இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பெற முடிகிறது.
- இணையத்தில் பயன்பட்ட முதல் இந்திய மொழி தமிழ்மொழியே!
- மேலைநாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் முயற்சி பல மேற்கொண்டு இணையத்தில் தமிழ் விரிவாகவும், விரைவாகவும் பரவும்வகை செய்துள்ளனர்.
- தகவல் குவியல்களை வலை தளத்திலிருந்து பெறுதல்; இவற்றை உரியவாறு பயன்படுத்திக் கற்றலை நிகழ்த்துதல் 'மின்னணுசார் கற்றல்' எனப்படுகிறது.
- கற்றல் கற்பித்தல் செயல்முறையில் கல்வியின் குறிக்கோள்கள், கற்றல் அனுபவங்கள், மதிப்பிடுதல் என்ற மூன்றுவகை.
- கற்போரின் நாட்டங்களையும், ஆர்வங்களையும் ஆசிரியர் அடையாளங்கண்டு அவற்றிற்கு ஏற்ப ஆற்றுப்படுத்துதல்.
- புறவயத் தேர்வு வினாக்கள் மிக எளிய முறையில் அமையும்; மதிப்பிடுவதும் எளிது மதிப்பீடு நம்பகமானதாக இருக்கும். விடையளிக்கும் காலமும் மதிப்பீடு செய்யும் காலமும் குறையும்; ஆனால் வினாத் தயாரிப்பது கடினம்; செலவு அதிகம்; அனுமானம் செய்து விடையளிக்க வாய்ப்பு ஏற்படும்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1. கற்பித்தலில் கணிப் பொறியின் பங்கு யாது?**

மாணவர்களின் நிலைக்கேற்ப கற்பித்தலில் திட்டமிடல் நடைபெறுகிறது. இதில் கணிப் பொறியின் உதவியுடன் நடைபெறும் கற்பித்தலும், கணிப்பொறியின் மேலாண்மையுடன் நடைபெறும் கற்பித்தலும் இடம்பெறும்.

**2. இணையம் எனப் பெயர் பெறக் காரணம் யாது?**

உலகெங்கும் கணினியில் உள்ள செய்திகளே இணைத்தலையே இணையம் என்றகின்றனர். இதனை ஆங்கிலத்தில் இண்டர்நெட் என்கின்றனர். இலக்கியம்இ வரலாறுஇ புவியியல், வானவியல், அறிவியல், கணிதம், திரைப்படம் என எண்ணற்ற துறை சார்ந்த பல்வேறு தலைப்புக்களில் இணையத்தின் வழியாகச் செய்திகளைப் பெற முடிகிறது. இச்செய்திகளைக் கணினி இணைப்பு மூலம் உலகெங்கும் பரப்புகின்றனர். இந்நிகழ்வு இணைய வழிக் கல்வியாக மாறுகிறது.

**3. வலைதள அரங்கம் என்றால் என்ன?**

வலைதள அரங்கம் - இதன் பெயருக்கேற்ப வலைதள உதவியால் நடத்தப்படும் அரங்கமாகும். இவ்வரங்கம் கற்றல் பனுவல்களை வழங்கவும், அன்றாட நிகழ்ச்சிகளைக் காணவும் இணையத் தொடர்புடைய கணினி தேவை.

**4. கற்பித்தலில் தொலைக்காட்சி எவ்வாறு சிறப்பிடம் பெறுகிறது?**

தமிழ் கற்பித்தலிலும், வாழ்க்கைச் கல்வி தொடர்பான கற்பித்தலிலும் தொலைக்காட்சி சிறப்பிடம் பெறுகிறது.

**5. அடைவுத் தேர்வு என்றால் என்ன?**

மாணாவர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவில் குறிப்பிட்ட பாடப்பொருளில் பெற்ற அடைவினை அளவிடுதற்குப் பயன்படும் தேர்வு அடைவுத்தேர்வு ஆகும்.

**6. நம்பகத்தன்மை என்றால் என்ன?**

ஒரு குறிப்பிட்ட பண்பினை ஒரு தேர்வு எத்தனை முறை அளந்தளித்தாலும் மாறாத முடிவுகளைக் கொடுக்குமாயின் அதனை அத்தேர்வின் நம்பகத்தன்மை என்கிறோம்.

**7. வினாத்தாளில் 'ஒருமைப்பாடு' என்றால் என்ன?**

பாடப்பகுதியில் அனைத்துப் பகுதியிலிருந்தும் சமமான மதிப்பெண் அமையுமாறு வினாத்தாள் கொடுப்பதை ஒருமைப்பாடு அல்லது சமன்பாடு என்பர்.

**8. தரப்படுத்தப்பட்ட தேர்வின் பண்புகளில் மூன்றை மட்டும் கூறு.**

தரப்படுத்தப்பட்ட தேர்வின் பண்புகளில் சில.

1. பாடப்பொருள் பற்றிய பொதுக்கருத்துக்கள் பற்றிய விளக்கங்கள் அடங்கியிருக்கும்.
2. வல்லுநர் குழுவால் உருவாக்கப்பட்டிருக்கும்.
3. பாடப் பொருளைப் பகுப்பாய்வு செய்தும், மீள் பார்வை செய்தும் எல்லா மாணவர்க்கும் பொருத்தமான முறையில் வினாக்கள் உருவாக்கப்பட்டிருக்கும்.

**9. இடைநிலை என்றால் என்ன?**

எண்களாக உள்ள தரவின் நடுவில் அமையும் அளவெண் இடைநிலை அளவு ஆகும்.

**10. நினைவுகூர்தல் வகையில் எவ்வகை வினாக்கள் இடம் பெறும்?**

புறவய வினா வகைகளில் கோடிட்ட இடத்தை நிரப்புதல், ஒப்பிட்டுக் காட்டல், ஒரு தொடரை வாக்கியத்தில் அமைத்தல் ஆகியன அடங்கும்.

**பயிற்சி வினாக்கள்**

1. மொழிக்கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கினை விளக்குக.
2. மொழிக்கற்பித்தலில் இணையத்தின் பங்கினை விளக்குக.
3. தேர்வு என்றால் என்ன? ஒரு நல்லத் தேர்வின் நற்பண்புகளை விவரி.
4. தேர்வுச் சீர்திருத்தம் பற்றிய கருத்துக்களை எழுதுக.
5. அளவீடு, மதிப்பீடு – விளக்குக.

# 6. திறன்களைக் கற்பித்தல்

**பாட அமைப்பு**

6.1 முன்னுரை

6.2 கேட்டல் திறன்

6.3 பல்வேறு திறன் கேட்டல்

6.4 பேசுதல் திறன்

6.4.1 தெளிவான பேச்சின் இயல்புகள்

6.4.2 பேச்சாற்றலை வளர்த்தல்

6.5 படித்தல் - விளக்கம்

6.5.1 படிக்கக் கற்பிக்கும் முறைகள்

6.6 சொற்களஞ்சியப் பெருக்கம்

6.6.1 வாய்க்குள் படித்தல்

6.6.2 வாய்விட்டுப் படித்தல்

6.7 கட்டுரைகள்

6.8 உரைநடைப் பாடத்தை ஆழ்ந்து படிப்பதன் நோக்கங்கள்

6.9 எழுதுவதன் நோக்கம்

6.10 வாய்மொழிப் பயிற்சி

6.11 கற்றல் கற்பித்தலுக்கான உபகரணங்களைத் தயாரித்தல்

6.12 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

## 6.1 முன்னுரை

**மொ**ழிப்பாடம் கற்பித்தலின் அடிப்படை நோக்கமே மொழியில் மாணவர்கள் புலமைபெற்று மொழித்திறனை வளர்ப்பதே ஆகும். மொழித்திறனை வளர்த்தால் மாணவர் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களில் பயிற்சி பெற்று மொழியை நன்கு கையாளும் நன்னிலையைப் பெறுவர்.

மொழியின் அடிப்படைத் திறன்களாகிய நான்கில் கேட்டல் திறன் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகிறது. புதிய செய்திகளைப் பொருளுணர்ந்து கருத்து வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது கேட்டலேயாகும்.

மொழித்திறன்களில் புலன்களே (உறுப்புக்களே) பெரும்பங்காற்றுகின்றன.

கேட்டல் திறனுக்குக் களமாக இருப்பது செவி; பேசுதல் திறனுக்கும், படித்தல் திறனுக்கும் களனாக அமைவது, வாய் உறுப்புக்கள்; எழுதுதல் திறனில் கை அசைவுகளும், மூளையும் பெரும்பாங்காற்றுகின்றன.

மிகப் பழங்காலத்தில் கற்றல் கேட்டல்வழியே நடந்தது என்பதைக் குருகுலக் கல்வி காட்டுகிறது. காலப்போக்கில் கேட்டுக் கற்ற கல்வி ஏட்டில் புகுந்து எழுத்துக்கல்வியாக மாறியது. மொழியின் அடிப்படைத் திறன்களாகிய நான்கும் பண்டுதொட்டு இருந்து வருகின்ற மொழிக்கல்வியாகும்.

கேட்டல்வழி நிகழும்கல்வியை நன்னூல்,

**"சித்திரப் பாவையின் அத்தக வடங்கிச்**
**செவிவாயாக நெஞ்சுகள னாகக்**
**கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து"**

எனக் கூறுகிறது.

நால்வகைத் திறன்களில் முதலில் நிற்பது கேட்டல் திறனாகும்.

### 6.2 கேட்டல் திறன்

**கேட்டல் வரையறை:** ‘கேட்டல்’ என்பது மற்றவர் பேசும் எழுத்துகள், சொற்கள், பொருள் உணர்த்தும் வாக்கியங்கள் ஆகியவற்றைக் கேட்டலாகும். கேட்டலை மொழித்திறன் அறிந்தோர் மூவகையாகப் பகுத்துள்ளனர். அவை,

அ. இயல்பாகக் கேட்டல்

ஆ. ஆழ்ந்து அகன்று கேட்டல்

இ. நுட்பமான கருத்தைக் கேட்டல்

**இயல்பாகக் கேட்டல்:** இயல்பாகக் கேட்டல் என்பது பாடல்களைக் கேட்டல்; மேலும் பல கருத்துகளைக் கேட்டல் ஆகும்.

வள்ளுவரின் இறைவாழ்த்துக் குறள்களை ஆசிரியர் சொல்லும்போது மாணவர் இயல்பாகக் கேட்கத் தொடங்குவர்.

‘பண்டைத் தமிழ் மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்’ என ஆசிரியர் சொல்லத் தொடங்கும்போதே தொடக்கப் பள்ளி மாணவன் கூட இயல்பாய்க் கேட்பதைக் காண்கிறோம்.

**ஆழ்ந்து கேட்டல்:** மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் ஆசிரியர் சொன்னால்தான் ஆழந்து கேட்பர்.

“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்” என்ற வெற்றிவேற்கைச் செய்யுளை இரண்டாம் வகுப்பு மாணவனுக்குச் சொன்னால் ஆழ்ந்து கேட்பான். அதைவிடுத்து ‘ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்.” என்ற வள்ளலார் பாடலைப் பாடத் தொடங்கினால் புரியாமல் விழிப்பான்.

**நுட்பமாகக் கேட்டல்:** ஆசிரியர் செய்யுளில் உள்ள அருஞ் சொற்களுக்கும் பொருள் கூறுகிறார். அதை மாணவன் நுட்பமாகக் கேட்பான்.

இலக்கணப்பாடம் கற்பிக்கும்போதும் கருத்துக்களைப் புரிந்து மனதில் பதியவைக்க நுட்பமாகக் கேட்பான்.

**கேட்டல் திறனை வளர்த்தல்**

இன்றைய காலகட்டத்தில் காட்சி – கேள்விக் கருவிகளின் விரைவான வளர்ச்சியால் பார்த்தலும், கேட்டலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

வானொலி கேட்டல், அறிஞர்கள் பேசுவதைக் கேட்டல், கருத்தரங்கு நிகழ்வுகளைக் குறிப்பெடுத்தல், பள்ளிவிழாவில் பங்குபெற்ற சிறப்பு விருந்தினரின் சொற்பொழிவைக் கேட்டுக் குறிப்பெடுத்தல் ஆகிய பயிற்சிகளை மாணவர்க்கு அளிப்பதன் மூலம் கேட்டல்திறனை வளர்க்கலாம்.

தொடக்கப்பள்ளியில் தொடக்க நிலை வகுப்பு மாணவர்களுக்குச் சொல்வதைக் கேட்டெழுதுதல், பயிற்சி அளிப்பதன் மூலம் கேட்டல்திறனை வளர்க்கலாம்.

**சிறுவினா மூலம் கேட்டல் பயிற்சி அளித்தல்**

ஆசிரியர் பாடத்தைத் தொடங்கு முன் மாணவரின் முன்னறிவினைச் சோதிக்கச் சிறுசிறு வினாக்கள் கேட்பர். இவ்வினாவைக் கேட்பதோடு மாணவர் பதில்அளிக்கவும் ஆசிரியர் உதவவேண்டும். இவற்றின் மூலம் கேட்டல்திறனை ஆசிரியர் வளர்க்கலாம்.

‘கம்பராமயணத்தை எழுதியவர் திருவள்ளுவர்’ எனத் தவறான கருத்துக்களைக் கூறும்போது மாணவர் அதனைத் திருத்துவர். இதன் மூலமும் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

**வானொலி கேட்டல்**: வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டுக் குறிப்பெடுக்கும் பழக்கத்தினை மாணவரிடம் உருவாக்க வேண்டும்.

வானொலி நிகழ்ச்சியில் பேச்சாளரின் பேச்சைக் கேட்கத்தான் முடியும்.எனவே இவ்வாறு பல நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் மாணவர்தம் கேட்டல் திறனை வளர்ப்பர்.

மாணவர்களின் குறிப்புகளை ஆசிரியர் மதிப்பீடு செய்து கொடுப்பதன் மூலம் அவர்களின் கேட்டல் திறனை அறியலாம்.

கேட்ட நிகழ்ச்சிபற்றிய கருத்தினை மாணவரிடம் கேட்கும் சிறுசிறு வினாக்கள் மூலம் அறியலாம்.

வானொலி நிகழ்ச்சியை ஒலிநாடாவில் பதிவுசெய்து கேட்பதன் மூலம் கேட்டல்திறனை மாணவர் வளர்க்கலாம்.

கேட்டல் திறன் மூலம் கேட்டல் திறன் வளர்வதோடு அக்கருத்துக்களைச் சுருக்கி எழுதும் திறனும் பெறுகின்றனர்.

**கேட்டல் திறன் பயிற்சிக்கான செயல்கள்**

1. வானொலியில் சொற்பொழிவாளரின் பேச்சினைக் கேட்கச் செய்தல்.
2. இலக்கியப் பேரவை, ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினரின் பேச்சைக்கேட்டுக் குறிப்பெடுத்து வகுப்பில் சொல்லச் செய்தல்.
3. செய்யுள் பகுதியை விளக்குதல் - மாணவர் கேட்டல் - மாணவர்தம் அறிதல் திறனை வினாக்கள் மூலம் தெரிந்து கொள்ளுதல்.
4. நாபிறழ், நாநெகிழ் பயிற்சி அளித்தல்.
5. ஒலிப்புத்திறன் பயிற்சி அளித்தல்.
6. பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி பாடல்களைக் கேட்கச் செய்தல்.
7. பல்வேறு எழுச்சிமிகு எதுகை மோனை அமைந்த உரையாடல்களைக் கேட்கச் செய்தல்.

**6.3 பல்வேறு திறன் கேட்டல்**

மொழிக்கருத்துகளைப் பார்க்கும் நிலையைவிடக் கேட்டல் நிலையே ஆற்றலுடையது. வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்ததை மாணவர் கேட்டு நீண்ட நாள் நினைவில் கொள்வர்.கற்றல், கேட்டல் திறன் வாய்மொழிப் பயிற்சியாக மாறுகிறது. குரான், விவிலியம் ஆகிய புனித நூல்கள் கேட்டல் திறன் மூலமே மாணவரைச் சென்றடைந்தன.

தமிழ்ப்பாடல்களைப் பொருத்த அளவில் செய்தியை அறிதல், நயம் பாராட்டல், எதுகை மோனை அறிதல், சொல்நயம், பொருள்நயம் அறிதல் ஆகிய சுவைமிகு மொழித்திறன்கள் கேட்டல் பயிற்சியின் மூலமே மாணவர்களைச் சென்றடைகின்றன.

சிறுவகுப்புக் குழந்தைகளுக்கு ஆசிரியர் கதை சொல்வார்; இதன் மூலம் குழந்தைகளுக்குக் கேட்டல் பயிற்சி கிடைக்கிறது. ஒற்றுமையுடைய சொற்கள் மாணவர்தம் கேட்டல் திறனை வளர்க்கின்றன.

**1. செய்திகளை அறிதல்**

மற்றவர் பேசும்போது கேட்பதால் அவரின் குரல் ஏற்றத்தாழ்வு, பேசும் முறை, சொல்லும் கருத்துகள், கருத்துகளின் ஒழுங்கமைப்பு ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆசிரியர் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் என எதை நடத்தினாலும், அதை மாணவர் கேட்பதன் மூலம் புதிய கருத்துகளை அறிகின்றனர். நம் உடல் உறுப்புகளில் திறன்மிகு உறுப்பு செவி; எனவேதான் திருவள்ளுவர் கேள்விச் செல்வத்திற்கு சிறப்புக் கொடுத்துள்ளார். அச்சிறப்பின் வெளிப்பாட்டை,

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை"**

என்ற குறள் கூறுகிறது. கவிதையின் அழகையும், நயத்தையும் உணரும்படி ஆசிரியர் இனிமையாகப் பாடவேண்டும். கேட்டல்திறன் வழியாக மாணவர் கவிதை அனுபவத்தையும், பா நயத்தையும் அறிவர்.

செய்யுளைப் பிரித்துப் பொருள் காணும் ஒலிநயம் கருத்துக்களை நினைவில் கொள்ளக் காரணமாகிறது.

**ஏட்டைத் துடைப்பது கையாலே – மன**

**வீட்டைத் துடைப்பது மெய்யாலே**

**வேட்டை அடிப்பது வில்லாலே – அன்புக்**

**கோட்டைப் பிடிப்பது சொல்லாலே.** பாரதி

**2. நயம் அறிதல்**

கவிஞன் தான்பெற்ற உணர்ச்சியை, அனுபவத்தைத் தன் பாடலைப் படித்தவர்களிடமும் உண்டாக்க நினைக்கிறான். பாடலில் இடம்பெறும் கற்பனை, அழகுணர்ச்சி, சொல்நயம், பொருள்நயம், தொடை நயம், அணி நயம், சந்தம், சுவை போன்றவற்றைப் பாடலில் இருந்து வெளிப்படுத்துவதே நயம் பாராட்டல்.பாநயம் பாராட்டுதலை ஆசிரியர் கற்பிப்பதன் மூலம் மாணவர்தம் கேட்டல்திறன் வளரும்.

**கேட்டல்திறன் மூலம் சொல்வளம் மேம்படுதல்**

செய்யுளின் நடைக்கேற்ப இயல்பாய் அமையும் சொற்களைச் சுவை மிக்கதாய்ப் படைக்கிறான். அச்சுவையை நம்மையும் வந்தடையுமாறு செய்வது கேட்டல் திறன்; கம்பன் கவி நயத்தை,

**“கல்லும் புல்லும் கண்டுரு**

**கப்பெண் நின்றாள்”**

என்ற பாடல்வரியைக் காணும்போது கேட்கும்போது நாமும் நயமுடைய இனிய பாடல்களையே படைக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

**ஒலிநயம்**

செய்யுளை ஒலி நயத்தோடு படிக்கும்போதோ,பாடும்போததோ எதுகை, மோனை, இயைபு, முரண் அமைந்த சந்தமே ஒலிநயமாகும். ஓலிநயத்தின் சிறப்பைக் காதால் கேட்டு மனதால் உணரும்போது அதன் சிறப்பு வெளிப்படும்.

ஓலிநயத்தின் சிறப்பை உரையாசிரியர் பேராசிரியர், “பாவென்பது சேட்புலத்திலிருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஒதுங்கால்அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கேதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை” என்கிறார்.

நந்திக்லம்பகத்தில் தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்ப உணர்வை நயமிகு விருத்தப் பாடலில் கவிஞன் வடித்துள்ளான்.அதனை ஆசிரியர் இனிமையாகப் படிக்கும்போதோ, பாடும்போதோ அப்பாடலைக் கேட்கும் மாணவர் நயம் உணர்ந்து நவில்தொறும் பாநயச் சிறப்பைத் துய்ப்பர். அப்பாடல் கீழே இடம்பெற்றுள்ளது.

**மலர்ச்சூழல் அமர்ந்தினிய**
**வண்டார்க்கும் காலம்;**
**வரிக் குயில்கள் மாவில் இளந்**
**தளிர் கோதும் காலம்;**
**சிலர்க் கெல்லாம் செழுந்தென்றல்**
**அமுதளிக்கும் காலம்**
**தீவினை யேற்கு அத்தென்றல்**
**தீவிசயம் காலம்**

**யாப்பு**

கவிதையில் சொற்கள் யாப்பு முறைப்படி வரிசையில் அமையும்போது அக்கவிதை படிப்போனுக்கும், கேட்போனுக்கும் இன்பம் தரும்.

‘எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா’ முதலிய முப்பத்து நான்கைச் செய்யுள் உறுப்புக்களாகத் தொல்காப்பியர் சொல்லியுள்ளார்.

கவிஞனின் உணர்ச்சியைக் கேட்டு இன்புற இவ்வுறுப்புக்களின் பயன்மிகுதி.

எதுகை, மோனை நயங்களை மாணவர்க்கு எடுத்துரைப்பது ஆசானின் கடமையாகும்.

**"வெடித்த கழை விசை தெறிப்ப**

**பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும்"**

என்ற பாடல்வரிகளைப் படிக்கும்போதும், கேட்கும்போதும் ஒலிநயம் உணர்ந்து இன்புறார் இரார்.

**உவமை:** பொருள்களிடையே காணப்படும் ஒப்புமையைப் பாடல்கள் மூலம் விளக்கும்போது மாணவர் அவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமையையும், நயத்தையும் கேட்டு இன்புறுவர். ஒப்புமை நயத்தைப் புலவர்கள் உவமை மூலம் சித்திரித்துள்ளனர்.அவர்தம் கைத்திற வன்மைக்குச் சான்று. கம்பராமாயணப் பாடலில் கூனியைத் தீமையெலாம் சேர்ந்து உருவெடுத்தல் போன்று காட்சி தரும் கூனி எனக் காட்டும் கவிதைச் சித்திரத்தை,

**"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்**

**துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள்."**

இப்பாடல் வரிகளில் காணலாம்.

**இனிமை சேர்க்கும் அணிநயம்**

தண்டியலங்காரம் முப்பத்தாறு அணிகளைத் திறம்படக் கூறியுள்ளது. அணிகள் மணிகளாய்ப் (மாணிக்கம்) பாடலில் அமைந்து கருத்தை விளக்கும்போது, அதைக் கேட்போர்க்குக் கவிநயம் இனிக்கும். அந்த அனுபவம் மாணவர்க்குப் பிற பாடல்களில் உள்ள அணிநயத்தைச் சுவைக்கும் திறனைத் தருகிறது.

வாலியின் மீது இராமன் மறைந்திருந்து அம்பு தொடுக்கின்றான்.இராமன் இல்லறத்தோடு, வில்லறத்தையும் துறந்தான் எனக் கம்பன் கூறும்போது கவிநயம் இனிக்கிறது.

இராமன் வில்லேந்தி வெவ்வேற்காளை வாலியை வதைக்க வரும் காட்சியைக் கம்பன் நம் மனக் கண்ணால் காணுமாறு கொண்டு வந்து நிறுத்துகின்றான். இதனைக் கம்பன் வானத்திலுள்ள நீலக்கார் முகிலில் தாமரை மலர் பூத்து நிற்பதாகக் காட்டுகிறான். அக்காட்சி வருமாறு,

**"கண்ணுற்றான் வாலி நீலக்**

**கார்முகில் கமலம் பூத்து**

**மண்ணுற்று வரிவில் ஏந்தி**

**வருவதே போலும் மாலை"** (கம்பராமாயணம்)

இவ்வுவமை நயத்தைக் கேட்கும்போது கவிநயம் கனிச்சுவையாகக் கருத்தினில் இனிக்கிறது.

**3. விளம்பரம் கேட்டல்**

விளம்பரமாவது பொருள்களைப் பற்றியோ, நிகழ்ச்சி பற்றியோ வானொலி, தொலைக்காட்சி, ஒலிநாடா இவற்றின் மூலம் அவற்றின் சேவையையும், தேவையையும் தெரிவிப்பதாகும். அவற்றின் கவின்மிகு, கவர்ச்சிமிகு கருத்துக்களைக் கேட்போர் மனதில் பதிந்து அவற்றைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்துகிறது.

சிறியவர் முதல் முதியோர் வரை விளம்பர வாசகங்களால் ஈர்க்கப்பட்டு அதில் தம் மனதை ஈடுபடுத்தி இன்பம் காண்பர்.உதாரணமாக, நரசுஸ் காபி விளம்பரத்தைக் கேட்கும்போது, "காபிண்ணா நரசுஸ் காபிதான்! பேஷ்! பேஷ்! - என்ற விளம்பரத்தைக் கேட்கும்போது அக்காபியைச் சுவைத்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இதன் மூலம் அந்தப் பொருளை வாங்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே உருவாகிறது.

**6.4 பேசுதல் திறன்**

மொழித்திறன்களில் ஒன்று பேசுதல் திறன்; தமிழ் மொழியைப் பேச்சுமொழியாகப் பயன்படுத்தும் நிலையில் வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடும்.

பேச்சு மொழி ஒருவகையாகவும், எழுத்துமொழி ஒருவகையாகவும் அமைந்தாலும் பேச்சு மொழியே எழுத்து மொழிக்கு அடிப்படையாம். பயிற்சி இன்மை காரணமாகவும், அச்சம் கூச்சம் காரணமாகவும் மாணவர்கள் வகுப்பில் சிறப்பாகப் பேசமாட்டார்கள்.

மாணவர்களுக்குப் பேச்சுத் திறனில் உள்ள குறைபாடுகளை ஆசிரியர்கள் கண்டறிந்து அவற்றை நீக்கிடத் தரமான பேச்சுப் பயிற்சிக்கு வழிகாண வேண்டும்.

**பேசுதல் திறன் - விளக்கம்**

ஒருவன் தான் சொல்ல விரும்பும் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக மற்றவர்கள் பொருள் உணரும் வகையில் பேச வேண்டும்.இலக்கணப் பிழை இல்லாமலும், விரைவாகவும், உணர்ச்சியுடனும், வாக்கியப் பிழையின்றியும் எடுத்துச் சொல்வதே பேசுதல் திறனாகும்.

**பேசுதல் திறனின் பண்புகள்**

மாணவர்கள் பேசுதல் திறனை வளர்த்துக் கொண்டால்தான் மற்றவர்களுக்குக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்ல இயலும். உரிய நேரத்தில் பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாகப் பேசுதலே பேசுதல் திறனாகும்.

நன்னூல் பேசுதல் திறனைப் பற்றி "மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும்" எனச் சொல்கிறது. பேச்சுத்திறனை வள்ளுவர் 'சொல்வன்மை' எனக் குறிப்பிடுகிறார். இதனைக் கட்டுரை 'வன்மை' எனவும் அறிஞர் குறிப்பிடுவர்.

மாணவர்களுக்குத் தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை என அனைத்து வகுப்புக்களிலும் பேச்சுத் திறனை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**6.4.1 தெளிவான பேச்சின் இயல்புகள்**

தெளிவான பேச்சு ஒலிப்பிழையின்றிக் குரலில் ஏற்ற இறக்கத்துடன், உணர்ச்சியுடன், பொருள் தெளிவுடன், பிழையின்றி அமைய வேண்டும்.

1. **அழுத்தம் திருத்தமாகப் பேசுதல்**

ஒருவன் மூலம் கருத்துக்கள், பயன்படுத்தும் சொற்கள், உரிய இடத்தில் பயன்படுத்தும் முறை இவற்றை வைத்து அவனை உயர்வாகவோ, தாழ்வாகவோ எண்ணுகின்றனர்.எனவே பேசுவதற்கு முன் எக்கருத்துக்களை எவ்வாறு பேசவேண்டும் எனத் திட்டமிட்டுப் பேசினாலே பேசுதல் திறனில் வெற்றி காணலாம்.

நாம் பேசும் கருத்துக்களுக்கு வலிமை சேர்ப்பது அழுத்தம் திருத்தமாகப் பேசுவதே ஆகும். அழுத்தம் திருத்தமாகப் பேசுவதாவது, கருத்தில் தெளிவு, உணர்ச்சியில் தெளிவு, ஒலிப்பில் தெளிவு, பயன்படுத்தும் சொற்களில் தெளிவு ஆகியன அடங்கும்.

**கருத்தில் தெளிவு**

ஒருவன் தான் சொல்ல விரும்பும் கருத்துகளைத் தெளிவாகப் பொருள் புரியும்படிச் சொல்ல வேண்டும். அப்போதுதான் கேட்பவர் செவிமடுத்துக் கேட்பர். குரலில் தடுமாற்றமும், சொற்களில் தடுமாற்றமும், கருத்தில் தடுமாற்றமும் இன்றிப் பேச வேண்டும். அதுவே தெளிவான பேச்சு.

**உணர்ச்சியில் தெளிவு**

தன் பேச்சாற்றலில் கேட்பவரை ஈர்க்கும் வகையில் உணர்ச்சி இருக்க வேண்டும். பேசுவோர் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைக் கேட்போரும் பெற வேண்டும். பேசும்போது குரலில் ஏற்றத்தாழ்வுடன் சுவைக்கேற்பப் பொருத்தமாகப் பேச வேண்டும். அப்பேச்சில் இடம்பெறும் கருத்துகளும் தெளிவாக இருக்கவேண்டும்.

**ஒலிப்பில் தெளிவு**

இன்றைய உலகு விரைவான உலகு. எனவே மாணவர்களுக்குப் படிப்புப் பயிற்சி குறைவு; எனவே பேசும்போது ஒலிப்பில் தெளிவு இல்லை. அழுத்தம் திருத்தமாகப் பேச ஒலிப்பயிற்சியே

இன்றியமையாதது. எனவே மாணவர்களுக்கு ஒவ்வொரு எழுத்தையும் தெளிவாக உச்சரிக்க ஆசிரியர் பயிற்சி தர வேண்டும்.

தமிழில் ஒலிப்பிழையின்றிப் பேச மயங்கொலிப்பிழையைத் தவிர்த்தல் வேண்டும். சொற்களில் 'லகர, ளகர, ழகர' ஒலி வேறுபாட்டை உணர்ந்து அதற்கேற்பப் பேச வேண்டும்; 'நகர, னகர, ணகர' வேறுபாடும் நுட்பமானது; பொருள் வேறுபாட்டைத் தருவது; இவற்றையும் பயன்படுத்தும் முறையை அறியவேண்டும். 'ரகர, றகர' வேறுபாட்டை அறியாததால் சொற்பிழையும், கருத்துப் பிழையும் ஏற்படுகிறது.

பேச்சுப் பயிற்சிக்கு உரிய தொடர்களாகப் பின்வருவனற்றைக் கொள்ளலாம்.

1. **வைகறைத் துயில் எழு**
2. **காலை எழுந்தவுடன் படிப்பு**
3. **பழம் பழுத்துத் தொங்குகிறது**
4. **மலைமேல் மழை பொழிந்தது.**

சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் இடைவெளிவிட்டுப் பேச வேண்டும்.

**2. இலக்கணப் பிழையின்றிப் பேசுதல்**

ஒருவர் தான் பேசுவதைப் பிழையின்றிப் பேசவேண்டும்; அப்போதுதான் கேட்போருக்குப் பொருள் தடுமாற்றம் ஏற்படாது.

வாக்கியங்கள் இலக்கண முறைப்படி அமையுமாயின் கருத்துப்பிழை ஏற்படாது.

திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது பிழையில்லாமல் அமையுமாயின் இலக்கணப்பிழை தவிர்க்கப்படும்.

இலக்கணப் பிழையின்றிப் பேச பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தக்கூடாது; எழுத்து வழக்குச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

உயர்திணை உயர்திணை முடிவையும், அஃறிணை அஃறிணை முடிவையும் பெற வேண்டும்.

ஐந்து பால்களும், அவ்வவற்றிற்குரிய வினை முடிவுகளைப் பெற வேண்டும்.

ஒருமை, ஒருமைக்குரிய முடிவையும், பன்மை பன்மைக்குரிய முடிவையும் பெற வேண்டும்.

'கூறியது கூறல், வெற்றெனத் தொடுத்தல்' தவிர்க்கப்பட வேண்டும்.

**மரபுமொழிகள்**

நம் முன்னோர்கள் எத்தகைய மொழி மரபைப் பயன்படுத்தினார்களோ அத்தகைய மொழி மரபை நாமும் பின்பற்ற வேண்டும்.மரபுத் தொடர்கள் உட்பொருளைக் கொண்டிருக்கும்; உட்பொருளறிந்து அவற்றைப் பேச்சில் பயன்படுத்த வேண்டும்.

மரபில் 'பெயர்மரபு, வினைமரபு, இளமைப் பெயர் மரபு, பயன்பாட்டு மரபு' எனப் பல மரபுகள் உள்ளன. பெயருக்கேற்ற வினைச் சொற்களையும், வினை மரபுச் சொற்களையும் பயன்படுத்த வேண்டும்.

**வினை மரபுச் சொற்கள்**

1. காகம் கரையும்
2. குதிரை கனைக்கும்
3. கழுதை கத்தும்
4. ஆந்தை அலறும்

**பெயருக்கேற்ற வினைச் சொற்கள்**

1. சோறு உண்
2. பழம் தின்
3. பால் பருகு

**மரபுத் தொடர்களும் அவற்றின் பொருள்களும்**

1. எடுப்பார் கைப்பிள்ளை - யார் எதைச் சொன்னாலும் கேட்டு நடப்பவர்
2. தாளம் போடுகிறான் - துன்பப் படுகிறான்
3. ஆகாயத் தாமரை - இல்லாத ஒன்று
4. கோயில் பெருச்சாளி - மற்றவர் சொத்தைத் திருடி உண்பவர்

**பொதுவாகப் பேச்சில் பயன்படுத்தும் பழமொழிகள்**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. அடியாத மாடு படியாது
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல
4. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

**6.4.2 பேச்சாற்றலை வளர்த்தல்**

பேசுதல் திறனில் பயிற்சிபெற்றால்தான் பேச்சாற்றல் வளரும்; பேச்சாற்றல்தான் நம் செயல்களில் வெற்றியைத் தேடித் தரும்; பேச்சாற்றலை வளர்க்கப் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**தொடக்கநிலையில் பேச்சுத்திறன் பயிற்சிகள்**

மாணவர்களிடையே பேசுதல் திறனை வளர்ப்பதற்கான செயல்கள் பாடவழிச் செயல்களாக அமைகின்றன. மாணவர்களின் வயதிற்கேற்ப பயிற்சி முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவை மாணவர்கள் சரியான ஒலிப்புத் திறனுடனும், திருத்தமாகவம், பிழையின்றியும், பொருத்தமாகவும் பேச உதவுகின்றன.

தொடக்கநிலையில் சொற்போர், கலந்துரையாடல், வினாடிவினா ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் பேச்சாற்றலை வளர்க்கலாம்.

**சொற்போர்**

ஒரு தலைப்பின் கீழ் உள்ள கருத்துகளை ஆதரித்தும், மறுத்தும் மாணவர்கள் தனித்தோ அல்லது குழுவாகவோ பேசுவது சொற்போர் ஆகும். சொற்போர் மூலம் மாணவர்களின் சிந்தனை விரிவடைகிறது. தான் பேசும் கருத்துகளைத் தொடர்ச்சியாக, அழுத்தமாக, விரைவாக வெளிப்படுத்த சொற்போர் உதவுகிறது.

**சான்று**

ஆசிரியப்பணி அறப்பணியா? அன்புப் பணியா?

வாழ்வுக்குத் தேவை செயல் திறனா? மனப் பக்குவமா?

**கலந்துரையாடல்**

‘இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவரோ ஒரு பொருளைப் பற்றிப் பேசுவது’ கலந்துரையாடல்.

இதனால் மாணவர்களின் சிந்தனை வளர்கிறது; உற்று நோக்கும் திறன் மேம்படுகிறது; ஆசிரியர், மாணவர் உறவு மேம்படுகிறது. அன்பு, நட்பு, மற்றவர் கருத்துகளை மதித்தல் முதலிய பண்புகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

குழந்தைகளிடம் காணப்படும் அச்சம், கூச்சம், தடுமாற்றம் போன்ற தேவையற்ற பண்புகள் விலகும். கலந்துரையாடல் தன்னிச்சையாகச் செயல்படவும், ஆதாரத்துடன் கருத்துகளை வெளியிடவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

**வினாடி வினா**

மாணவனின் பண்பு ‘வினாவை விடுத்தல்’ என நன்னூலில் கூறப்படுகிறது; கேட்கப்படும் வினாவிற்கு ஒரு வினாடிக்குள் விடையளிப்பதால் வினாடி வினா எனப்படுகிறது.

வினாடி வினாக்கள் எளிமையாகவும், குறுகிய வடிவிலும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் உடனுக்குடன் சரியான விடை அளிப்பர்.

விரைவாக நிறைவாக விடையளிக்கும் பயிற்சியின் மூலம் மாணவர்களின் பேசுதல் திறனுக்கும், நினைவாற்றல் வளர்தல் திறனுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-17**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. கேட்டலின் வகைகள் யாவை?
........................................................................................................................................................
........................................................................................................................................

2. நயம் பாராட்டுதல் என்றால் என்ன?
........................................................................................................................................................
........................................................................................................................................................

3. கருத்துக்களுக்கு வலிமை சேர்ப்பது எது?
........................................................................................................................................................
................................................................................................................................................

4. கலந்துறையாடல் எதற்கு வாய்ப்பளிக்கிறது?
........................................................................................................................................................
................................................................................................................................................

**3. படித்தல் திறன்**

மொழியானது முதலில் ஒலிவடிவாக இருந்தது; பின்னர் அவ்வொலிகளுக்கு எழுத்து வடிவம் உண்டாயிற்று. மொழிக்கு முதல் காரணமான ஒலிகள் சேர்ந்து எழுத்துக்கள் உருவாயின; இதையே நன்னூல்,

**"மொழிமுதற் காரணமாம் அணுத் திரள்ஒலி**
**எழுத்தது முதல் சார்பென இருவகைத்தே"**

எனக் கூறுகிறது.

எழுத்தின் வரிவடிவங்கள் நூலாக வெளிவருகின்றன.அவ்வெழுத்துக்களின் வழி கருத்துக்களை உணர்கிறோம்.

**6.5 படித்தல் - விளக்கம்**

எழுத்து வடிவங்களைக் கண்களால் கண்டு, வாயால் ஒலித்து, அவற்றின் பொருளை உணரும் செயலே படித்தல் எனப்படும். படித்தல்திறன் மூலம் உலக அறிவைப் பெற முடியும்; எனவே மாணவர் பெறும் திறன்களுள் 'படித்தல் திறன்' முக்கிய இடம் பெறுகிறது.

**படிக்கக் கற்பித்தலின் நோக்கங்கள்**

1. திருத்தமான ஒலிப்புடன் படிக்கப் பயிற்சி அளித்தலே படிக்கக் கற்பித்தலின் முதன்மையான நோக்கம்.
2. லகர, ளகர, ழகர ஒலிவேறு பாடறிந்து படிக்கப் பயிற்சி அளித்தால் மயங்கொலிப் பிழை தவிர்க்கப்படும்.
3. ரகர, றகர வேறுபாடறிந்து படிக்கப் பயிற்சி அளித்தால் மிகுதியான பொருள் வேறுபாட்டை அறிய முடியும்.
4. குறில் நெடில் வேறுபாடு, எகர ஏகார, ஒகர ஓகார ஒலி வேறுபாடுகள் திருத்தமாய் உள்ளனவோ என அறிய வாய்விட்டுப் படித்தல் உதவும்.
5. இவற்றைப் பிழையாக ஒலித்தால் பொருள் வேறுபாடும், முரண்பாடும் ஏற்படும்.
6. வாய்விட்டுப் படித்தலின் நோக்கம் திருத்தமான ஒலிப்புப் பயிற்சியும், பொருள் வேறுபாட்டைத் தவிர்த்தலுமாம்.

7. வாய்க்குட் படித்தல் விரைவாகப் படித்தலுக்கும், பொருள் உணர்ந்து படித்தலுக்கும் அடிப்படையாய் அமையும்
8. ஆழ்ந்து படித்தல் நுட்பமான கருத்துக்களை அறிய உதவும்.
9. அகன்று படித்தல் மையக் கருத்தை அறிய உதவும்.
10. எழுத்தின் வரி வடிவங்களை அறிய உதவும்.

### 6.5.1 படிக்கக் கற்பிக்கும் முறைகள்

கேட்டல் திறன் பேசுதல்திறனுக்கு அடிப்படையாய் அமைவது.அதுபோல் படித்தல்திறன் எழுதுதல் திறனுக்கு அடிப்படையாய் அமையும். படிக்கும்போது ஒவ்வொரு எழுத்தையும் அறிவுப் பூர்வமாகவும் படம் பிடித்ததுபோலவும் மனதில் நிலைக்கச் செய்வர். இதனால் எழுதுதல் திறன் எளிதாக அமையும்.

**தொடக்க வகுப்பில் கற்பிக்கும் முறைகள்**

வாய்விட்டுப் படிக்கும்போது சில இடங்களில் சொற்களைச் சேர்த்தும், சில இடங்களில் சொற்களைப் பிரித்தும் பழக்க வேண்டும். அப்போதுதான் பொருள், தெளிவு ஏற்படும். அப்போதுதான் காரண காரிய முறையில் சொற்களை அமைக்க முடியும்.

தாமரை, பாட்டி வீட்டுக்குப் போனாள். இங்குச் சொற்களைப் பிரித்துப் படிக்க வேண்டும். அப்போதுதான் பொருள் தெளிவு ஏற்படும். தாமரை என்ற பெண் பாட்டி வீட்டுக்குப் போனாள் என்ற கருத்து தெரியும். தாமரை பாட்டி, வீட்டுக்குப் போனாள். இங்குத் தாமரை என்ற பெயரைக் கொண்ட பாட்டி யாரோ ஒருவர் வீட்டுக்குப் போனாள் என்ற கருத்து சொற்களைச் சேர்த்துப் பார்ப்பதால் தெரியும்.

எனவே எங்கே சொற்களைச் சேர்க்க வேண்டும்; எங்கே சொற்களைப் பிரித்து எழுத வேண்டும் என்ற வரையறையை மாணவர் தெரிந்துகொள்கின்றனர்.

**சேர்த்துப் படிக்க வேண்டிய இடங்கள்**

1. பெயர் அடைமொழி, வினை அடைமொழிகள் வரும்போது சேர்த்துப் படிக்க வேண்டும். **எடுத்துக்காட்டு:** 1. உயரமான வீடு, 2. வேகமாகச் சென்றான்.
2. நேர்இணை, எதிர் இணைகளைச் சேர்த்துப் படிக்கவேண்டும்.
   **எடுத்துக்காட்டு:** 1. ஈடு இணையற்ற, 2. ஏற்றத்தாழ்வின்றி, 3. செக்கச்செவேரென
3. வேற்றுமை உருபோ, சொல்லுருபோ சேர்ந்து வரும்போது சேர்த்துப் படிக்க வேண்டும். **எடுத்துக்காட்டு:** 1. இராமனைப் பார்த்தேன், 2. வீட்டுக்குச் சென்றான்,
   3. கபிலனுடன் சென்றான், 4. வீட்டிலிருந்து எடுத்தேன்.
4. எண்கள் வரும்போது சேர்த்துப் படிக்க வேண்டும்.
   **எடுத்துக்காட்டு:** 1. ஓர் இடத்தில், 2. இரண்டு சிறுவன், 3. மூன்று வேந்தர்

**இடைவெளிவிட்டுப் படிக்க வேண்டிய இடங்கள் சில.**

1. விளிவேற்றுமையாக வரும் பெயரைத் தனியே படிக்க வேண்டும்.
   **எடுத்துக்காட்டு:** 1. கோபாலா படி! 2. கீரா கேள்!
2. எழுவாயைத் தனியாகவும், அடுத்து வரும் செயப்படுபொருள், பயனிலைகளைத் தனியாகவும் படிக்க வேண்டும்.
   **எடுத்துக்காட்டு:** 1. மன்னன் தன் நாட்டைப் பார்த்தான்
3. வாக்கியத்தில் ‘உம்’ என்ற இடைச்சொல் தொடர்ந்து வரும்போது ஒவ்வொரு இடத்திலும் நிறுத்திப் படிக்க வேண்டும்.
   **எடுத்துக்காட்டு:** 1. ஆசிரியர் மாணவர் முன்னேற்றத்துக்காகவும், பள்ளி
   முன்னேற்றத்துக்காகவும் பாடுபட்டார்.
4. பல பொருள்களை அடுக்கிக் கூறும்போது பிரித்துப் படிக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** மாணவன் மைக்கோல், கரிக்கோல், தாள் ஆகிய அனைத்தும் வாங்கினான்.

5. வினையெச்சங்கள் தொடா்ந்து வரும்போது நிறுத்திப் படிக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** மருத்துவா் மலைக்குச் சென்று மூலிகையைப் பறித்துத் திரும்பி வந்தாா்.

**ஒலியமைதியுடன் படித்தல்**

கொடுக்கப்பட்ட பகுதியில் தொடா்கள் என்ன உணா்வுடன் உள்ளனவோ அதே உணா்வுடன், குரல் ஏற்றத் தாழ்வுடன், ஒலிப் பிழையின்றிப் படித்தல் வேண்டும். அதற்கான பயிற்சியை ஆசிரியா்கள் மாணவா்களுக்குத் தரவேண்டும்.

வீர உரை அமைந்த தொடரை வீர உணா்ச்சியுடனும், இரக்க உணா்வுடைய தொடரைப் பணிவுடன் இரக்க உணா்வுடனும், ஏவலைக் கட்டளையிடும் முறையிலும் அமைக்க வேண்டும்.

மனோன்மணீயத்தில் ஜீவகன் ஆற்றிய உரையை, "நீங்கள் போா்க்களத்தில் வீரத்தைக் காட்டும்போது ஏற்படும் புண்கள், புண்கள் அல்ல! அவை புகழின் அடையாளம்!" இங்கே உள்ளவாறு வீர உணா்வுடன் படிக்கப் பயிற்சி தருதல் வேண்டும்.

வறுமையில் வாடும் ஒருவன் பொருள்வளம் உள்ளவனிடம், "ஐயா! எங்களுக்கு உதவுங்கள்!" எனக் கேட்பதைப் பணிவுடன் இரக்க உணா்வுடன் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு உணா்ச்சிகளுக்கு ஏற்ப படிக்கப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**உள்ளதை உள்ளவாறு படித்தல்**

உள்ளதை உள்ளவாறு படித்தல் என்பது ஓரெழுத்தினை விடாமல் ஒலிப்பது; அவ்வாறு விட்டால் பொருள் மாறும்; தமிழ் தலைகீழாக மாறிவிடும்.

**எடுத்துக்காட்டு:** 'காவல் சிறப்பாக இருந்தது' என்பதில் வகரத்தை எடுத்துவிட்டால் 'கால் சிறப்பாக இருந்தது' என மாறும்; சொல் மட்டும் மாறாது; பொருளும் மாறும்.

ஒரு சொல்லுக்குப் பதில் வேறு சொல்லைப் பிழைபடச் சொன்னாலும் சொல்மாறுவதோடு பொருளும் மாறும். எனவே தக்க சொல்லைப் பயன்படுத்தப் பயிற்சி தருதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** "ஆய கலைகள் அறுபத்து நான்கு" என்பதில் 'கலைகள்' என்ற சொல்லிற்குப் பதில் களைகள் என்ற சொல்லைப் பயன்படுத்தினால் "ஆய களைகள் அறுபத்து நான்கு" எனப் படித்தால் அது தமிழுக்கே களையாக அமைந்துவிடும்.

**எழுத்துமுறைப்படிப்பு**

எழுத்துமுறைப்படிப்பு மிகப் பழைய முறையாகும். எழுத்துகளைப் கற்பித்துப் பின்னா் எழுத்துக்கூட்டி சொற்களையும், அதன் பின்னா் சொற்றொடா்களையும் படிக்கப் பயிற்சி அளித்தல் எழுத்துமுறைப் படிப்பாகும்.

இந்த முறையில் முதலில் ஓரெழுத்துச் ஈரெழுத்துச் சொற்களையும் பின்னா் மூன்று, நான்கு எழுத்துச் சொற்களையும் அதன் பின்னா் வாக்கியங்களையும் கற்பிக்க வேண்டும்.

தமிழ் எழுத்துக்களில் உள்ள உயிரெழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும், உயிா்மெய்யெழுத்துக்களையும், ஆய்த எழுத்தையும் வரிவடிவத்தில் உள்ளவாறு கற்பிக்க வேண்டும். பின்னா் சொற்களையும், வாக்கியங்களையும் கற்பிப்பதே எழுத்துமுறைப் படிப்பாகும்.

எழுத்துமுறைப் படிப்பில் நிறைகளும், குறைகளும் உண்டு.

**நிறைகள்**

1. எழுத்துக்களை முறைப்படி படிப்பதால் வரிசை முறையை நன்கு அறிவா்
2. எழுத்துக்களைப் பாா்த்த பின்னா் சொற்களைப் படிப்பதால் ஐயமின்றி எழுத்தறிவு பெற முடியும்.
3. ஒவ்வோா் எழுத்துக்குரிய ஒலியினை நன்கு அறிவதால் எழுத்துப்பிழையின்றி எழுத முடிகிறது.

4. படித்தல் திறன் பிழையின்றி அமையும்.
5. உயிர் மெய்யெழுத்துக்களில் குறில் வரிவடிங்கள் தொண்ணூறும், நெடில் வரிவடிவங்கள் நூற்று இருபத்தாறும் உண்டு. இவற்றை நினைவில் வைத்துக்கொள்வதால் படிப்புப் பயிற்சி எளிதாகிறது.

**குறைகள்**

1. எழுத்துமுறைப் படிப்புக் காரண காரியப்படி பொருத்தமாகத் தோன்றினாலும் உளவியல் முறைப்படி ஏற்றதன்று.
2. இந்தமுறை கல்வி உளவியல் உண்மைகளுக்கு மாறான முறையாக குழந்தைகளுக்குப் படிப்பில் கவர்ச்சி ஏற்படுத்துவதில்லை; மாறாக களைப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தும்.
3. எழுத்துக்களை முதலில் கற்பித்து அதன்பின் எழுத்துகளின் தொகுதியாக உள்ள சொற்களைக் கற்பிப்பது உளவியல் முறைக்கு மாறுபட்டது.
4. 'தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல்' என்னும் கற்பித்தல் முறைக்கு இந்த முறை முற்றிலும் மாறுபட்டது.
5. எழுத்துக்களைக் கற்பிக்கும்போது ஒவ்வோர் எழுத்தின் வரி வடிவையும், ஒலி வடிவையும் கற்பிப்பது மிகுந்த காலதாமதத்தை ஏற்படுத்தும். எழுத்துக்கூட்டிப் படிப்பதிலேயே கவனம் முழுவதும் செல்வதால் பொருளுணர்ந்து படிக்கும் நிலையால் காலம் நீட்டித்துப் படிப்பின் நோக்கம் நிறைவேறாமல் போக வாய்ப்பு உள்ளது.
6. ஙகர வரிசையில் (ங – ஙெ வரை) உள்ள பதிமூன்று எழுத்துக்களில் 'ங,ஙு' என்ற இரண்டு எழுத்துக்கள் தவிர ஏனைய பதினோரு எழுத்துகளும் பயன்பாட்டில் இல்லை.

   **எடுத்துக்காட்டு:** 'ண'வரிசையிலும், 'ட'வரிசையிலும் 'ங'போல் வளை எழுத்துக்கள் கையாளப்படுவதில்லை.

மொழியில் பயன்படாத இத்தகைய எழுத்துக்களைக் கற்பிப்பது தேவையற்றது என உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

**சொல்முறைப் படிப்பு**

எழுத்துமுறைப் படிப்புக்கு மாறுபட்டது சொல்முறைப் படிப்பு

தொடக்க நிலையில் மின்னட்டைகளைக் கொண்டு உருவப் பொருள்களையும் அவற்றிற்குரிய சொற்களையும் முழுமையாகக் கற்பிக்கின்றனர்.

இவ்வாறு மாணவர்கள் முதலில் சொற்களையும், பின்னர் ஒவ்வொரு சொல்லையும் பகுத்து அதிலுள்ள எழுத்துகளையும் கற்பிக்கின்றனர்.

பின்னர் அவ்வெழுத்துக்களால் ஆன புதுச்சொற்களை எளிதில் படிக்கக் கற்பிக்கின்றனர்.

இவ்வாறு ஒவ்வொரு சொல்லாகக் கற்பிப்பதுதான் சொல்முறைப் படிப்பு.

இம்முறையில் உள்ள நிறைகுறைகளைக் காணலாம்.

**நிறைகள்**

1. இயல்பாகக் கற்பதற்குச் சொல்முறைப்படிப்பு பொருத்தமாக உள்ளது. குழந்தைகளின் பேச்சு வடிவம் சொல்லே அன்றி எழுத்து அன்று. குழந்தைகள் எழுத்தெழுத்தாகப் பேசுவதில்லை; சொற்களாகப் பேசுகின்றனர்; இச்சொல்முறை மனித இயல்புக்கு ஏற்றதாக உள்ளது.
2. ஓவ்வொரு சொல்லுக்கும் தனித்தனிப் பொருள் உண்டு; ஆனால் பல எழுத்துகளுக்குத் தனித்தனிப் பொருள் இல்லை. எனவே பொருளற்ற எழுத்துகளைக் கற்பிப்பதைவிட பொருளுடைய சொற்களைக் கற்பிப்பது பொருத்தமுடையது.
3. முழுமையினின்று பகுதிக்குச் செல்லுதல், தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் என்பது உளவியல் முறை. எனவே சொல்லிலிருந்து எழுத்துக்குச் செல்வது இயல்பானது.

4. மாணவர்கள் முழுச்சொல்லின் வடிவையும், ஒலிப்பையும் அறிவதோடு பொருளையும் தெரிந்துகொள்கின்றனர். இம்முறையில் பொருளுணர்ந்து படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகிறது.

**குறைகள்**

1. எழுத்து கூட்டிப் படிக்க வாய்ப்பில்லாத காரணத்தால் கற்ற எழுத்துக்களைக் கொண்ட புதுச் சொற்களைப் படிப்பதும், பார்க்காமல் எழுதுவதும் பிழை நிறைந்ததாக மாறிவிடும்.
2. நேர் ஒலிப்பு முறையுள்ள தமிழை விடத் தனி ஒலிப்பு முறை கொண்ட ஆங்கிலம் போன்ற வேறு மொழிகட்கே சொல்முறைப் படிப்புச் சாலச்சிறந்தது. ஆனால் தமிழுக்கு ஏற்றதன்று.
3. பாடங்களின் துணைக் கொண்டு கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் சொற்களைப் பார்க்காமலே படத்தைப் பாாத்து, பொருள் உணராது மனப்பாடமாக விரைவாகச் சொல்லிச் செல்லலாம். படத்தை மூடிவைத்துக்கொண்டு எழுத்துக்களை மட்டும் படத்தின் உதவியின்றிப் படிக்கச் சொன்னால், படிக்க முடியாமல் தடுமாற வாய்ப்பு உண்டு.
4. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு அறிவு மாணவர்களுக்கு இல்லாமல் போகும்.

**சொற்றொடர் முறைப்படிப்பு**

எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்பித்து, அதன் பின்னர் அவற்றில் உள்ள சொற்களையும், எழுத்துக்களையும் கற்பிப்பதே சொற்றொடர் முறைப் படிப்பாகும். வாழ்வில் நாம் சொற்றொடராகவே பேசுகிறோம். எனவே மாணவர்க்கும் சொற்றொடராகப் படிக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒரு குழந்தை 'அம்மா' என்று அழுகிறது என்றால், அதோடு அது விடுவதில்லை. தனது தேவையைக் கேட்கும் வாக்கியத்தை மனதில் நிறுத்தி வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**"அம்மா பொம்மை வேண்டும்**

**அம்மா கதை சொல்"**

என்பன போன்ற வாக்கியங்களையே வெளிப்படுத்தும். இதன் மூலம் சொற்றொடர் முறைப்படிப்பு எளிதாகிவிடும்.

இம்முறையில் உள்ள சிக்கல் என்னவென்றால் சொல்முறைப் படிப்புக்குப் பல் மின்னட்டைகளைத் தயாரிப்பதுபோல் சொற்றொடர்முறைப் படிப்புக்கும் பல மின்னட்டைகள் தேவை.

சொல்முறைப் படிப்பை ஆர்வமாகக் கற்பதுபோல் சொற்றொடர் முறைப் படிப்பையும் மாணவர்கள் தற்போது ஆர்வமாகக் கற்கின்றனர்.

இம்முறைப் படிப்பிலும் நிறைகளும் உண்டு; குறைகளும் உண்டு.

**நிறைகள்**

1. வெறும் சொல்லைவிடச் சொற்றொடர் மிகவும் பொருளுடையதாகும். எனவே இதைக் கற்பதில் மாணவர்க்கு ஆர்வம் அதிகம். எடுத்துக்காட்டாக 'குயில்' என்பதை விட 'குயில் கூவும்' என்று கற்பதில் மாணவர்க்கு ஆர்வம் அதிகம்.
2. இம்முறைப்படிப்பில் மாணவர்க்கு ஆர்வம் அதிகம்; கற்பதில் ஈடுபாடும் அதிகம்.
3. இது உளவியல் அடிப்படையில் அமைந்தது; சொற்றொடரிலிருந்து அதன் பகுதியான சொற்களுக்கும், எழுத்துக்களுக்கும் போதல் எளிய முறையாம்.
4. விளையாட்டு முறைக் கற்பித்தலால் மாணவர்களிடம் ஆர்வம் அதிகம்; களைப்பும் சோர்வும் இல்லை.

**குறைகள்**

1. தொடக்கத்திலேயே சொற்றொடராகப் படிப்பது மாணவர்க்கு இடர்ப்பாடாகவும், சிக்கல் மிகுந்ததாகவும் தோன்றும்.
2. சொற்றொடர்களைப் பார்க்காமலேயே மனப்பாடம் செய்வர்; ஆனால் அவ்வாறு படித்த சொல்லையோ, சொற்றொடரையோ கரும்பலகையில் எழுதினால் பொருள் தெரியாமல் விழிப்பர்.
3. சொற்றொடர் முறைப்படிப்பு எளிமையிலிருந்து அருமை என்ற முறைக்கு மாறாக உள்ளது.
4. இந்த முறை மூலம் தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்களை வரிசைப்படித் தெரிந்துகொள்ள இயலாது.

### 6.6 சொற்களஞ்சியப் பெருக்கம்

மாணவர்கள் தொய்வில்லாமல் பேசவும், பேச்சாற்றலை வளர்க்கவும், பங்கேற்கவும் சில வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

மாணவர் படிப்புப் பயிற்சியில் சொற்களை நாளும் தெரிந்து சொற்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும். அதுதான் அவர்களின் அன்றாடப் பேச்சிலும், எழுத்திலும் பயன்படுத்தத் துணையாக இருக்கும்.

மிகுதியான சொல்வளம் இருந்தால்தான் கருத்துக்கள் தொடர்ந்து வரும்; தடுமாற்றமின்றிக் கருத்துகளைச் சொல்லலாம்.

ஆசிரியர் சொல்லும் கருத்துக்களைக் கேட்கும்போதும், மாணவர்கள் தாங்களாகவே நூல்களைப் படிக்கும்போதும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கலாம்.

அவ்வாறு அறிந்த சொற்களைப் பேச்சில் பயன்படுத்துவதால் சொற்களஞ்சியம் பெருகும்.

வாய்மொழிப் பயிற்சியின் நோக்கம் சொற்களஞ்சியப் பெருக்கமாகும்.

#### 6.6.1 வாய்க்குள் படித்தல்

ஒரு கருத்தைப் படிக்கும்போது வாய் திறவாமல், மனதிற்குள்ளேயே, பொருளுணர்ந்து, கருத்தை உள் வாங்கிப் படிக்கும் முறையே வாய்க்குட் படித்தலாம்.

வாய்க்குட் படித்தல் என்பது படித்தலில் ஒரு வளர்ச்சி நிலையாகும்.

தொடக்கநிலையில் வாய்விட்டுப் படித்தே பயிற்சி பெற்றிருப்பர்; காலப்போக்கில் வாய்க்குட் படித்தலில் பயிற்சி பெறுவர்.

தொடக்க வகுப்பில் மூன்றாம் வகுப்பிலிருந்து வாய்க்குட் படித்தலைத் தொடங்க வேண்டும். இவ்வகுப்பில் வாய்க்குட் படித்தல் 40 விழுக்காடாகும், வாய்விட்டுப் படித்தல் 60 விழுக்காடும் இருக்கும். பாடத்திட்டம் 2:3 என்ற விகிதத்தில் அமைவது நன்று.

உயர் வகுப்புக்குச் செல்லச் செல்ல வாய்க்குட் படித்தலின் விகிதமும் உயர்ந்துகொண்டே செல்லும்.

**நன்மைகள்**

1. வாய்க்குட் படிக்கும்போது ஒலி உறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கிறது. எனவே சோர்வில்லாமல் படிக்க முடியும்.
2. மிகுதியான பாடப்பகுதியை விரைவாகப் படிக்க முடியும்; குறைந்த காலத்தில் மிகுதியாகவும், விரைவாகவும் படிக்க முடியும்.
3. நூலகத்திலும், பொது இடங்களிலும் மற்றவர்களுக்கு இடையூறின்றிப் படிக்க உதவும்.
4. அவரவர் திறமைக்கேற்ப விரைவாகவோ, மெதுவாகவோ படிக்க முடியும்.
5. படிக்கும்போது இடையில் நிறுத்திச் சிந்திப்பதற்கும் வாய்க்குட் படித்தல் துணையாக இருக்கும்.
6. கண்ணும் மனமும் ஒருங்கே செயல்படுவதால் படித்தலில் கவனமும், விரைவும் ஏற்படும்.
7. அகன்ற படிப்பிற்கு அடிப்படையாக அமைகிறது.

**தீமைகள்**

1. வாய்விட்டுப் படித்தலின்போது ஏற்படும் தவறுகளைத் திருத்த வாய்ப்புக் கிடைக்கும்; ஆனால் வாய்க்குட் படித்தலின்போது திருத்த வாய்ப்பில்லை.
2. வாய்மொழிப்பயிற்சி இல்லாததால் உரையாடவும், சொற்பொழிவாற்றவும் பயிற்சி தரத் துணையாக அமையாது.
3. பாடல்களைப் படிக்கும்போது அவற்றில் அமைந்துள்ள சந்த நயங்களையும், தொடர்களின் ஒலி நயங்களைக் கேட்டு இன்புற வாய்ப்பில்லாமல் போகும்.

**6.6.2 வாய்விட்டுப் படித்தல்**

புத்தகத்தில் உள்ள எழுத்துகளைக் கண்களால் பார்த்து ஒலி வெளிப்படுமாறு வாயால் ஒலித்துப் பொருள் உணர்ந்து படிப்பதே வாய்விட்டுப் படித்தலாகும்.

தொடக்க நிலையில் வாய்விட்டுப் படித்தலே சிறப்பானதாகும்.

இம்முறைதான் ஒலிப்பைக் குறைபாடில்லாமல் செம்மைப்படுத்த உதவும்.

வாய்விட்டுப் படிக்கும்போது பொருளுணர் ஆற்றல் மிகுதியாகிறது.

**பயிற்சி அளிக்கும் முறைகள்**

வாய்விட்டுப் படிக்கக் கற்பிக்கும்போது பல துணைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை வருமாறு:

**மின் அட்டைகள் (Flash Cards)**

முதல் வகுப்பு மாணவர்கள் கற்றலுக்கு மின் அட்டைகளைப் பயன்படுத்துவதால் அவை கவர்ச்சி மிகுந்ததாகவும் பயனுடையதாகவும் அமையும்.

குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டிய சொற்களையோ, வாக்கியங்களையோ உறுதியான வண்ண அட்டைகளில் தனித்தனியே எழுதி, மாணவர்களிடம் எழுதிக் காண்பித்து மனதிற்குள் படிக்கப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**கட்டளை அட்டைகள்**

**உட்கார்** | **எழுந்திரு**

**காலையில் எழுந்திரு** | **கடவுளைக்**

**குறள் படி** | **குறள் வழி நட**

**குறள்வழி நம்வழி**

இவைபோன்ற கட்டளை அட்டைகளைப் பயன்படுத்தி மாணவர்களைப் படிக்கச் செய்து படிப்புப் பயிற்சி அளிக்கலாம்.

**வாக்கிய அட்டைகள்**

கட்டளை அட்டைகள், முகவரி அட்டைகள் ஆகியவற்றை விரைவாகப் படித்து முடித்தவுடன் வாக்கிய அட்டைகளைப் படிக்கச் செய்யலாம்.

**படிக்கப் பயன்படும் தாள்கள் (வாசிப்புத் தாள்கள்) (Reading Sheets)**

மாணவர்கள் படிக்கும் செய்திகள் சிறுசிறு வாக்கியங்களாக அமைய வேண்டும்.

தோட்டப்பணி, சமுதாயப்பணி, கலைநிகழ்ச்சிகள், இலக்கியமன்ற நிகழ்ச்சிகள் போன்ற பள்ளிச் செயல்பாட்டோடு தொடர்புடைய செயல்களைச் சிறுசிறு வாக்கியங்களாக எழுதி வண்ண அட்டைகளில்

ஒட்டி வகுப்பில் தொங்கவிடலாம். மாணவர்களை ஒவ்வொருவராகப் படிக்கச் செய்யலாம். இவையே வாசிப்புத் தாள்களாகும்.

இவை மிகவும் எளிமையாகவும், கவர்ச்சியாகவும் அமைய வேண்டும்.

**அறிக்கைகள் (Reports)**

பள்ளியில் இலக்கியமன்ற நிகழ்வுகள், மாணவர் பேரவை நிகழ்வுகள், விளையாட்டுத்துறை நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகள் வாசிப்புப் பயிற்சிபெற உதவுவனவாம்.

**நாளிதழ்கள், வார மாத ஏடுகள்**

செய்தித்தாள்களும், வார ஏடுகளும், மாத இதழ்களும் சிறந்த படிப்புப் பயிற்சி தரக்கூடியவை. இச்செய்திகளை நாள்தோறும் இறை வணக்கத்துக்குப் பின் காலைக் கூட்டத்தில் மாணவர் படிப்பர்; செய்தி படித்தல் பள்ளிகளில் நடைபெறும் வகையாகும். இவை படிப்புப் பயிற்சி பெறத் துணையாக அமையும்.

**கடிதங்கள்**

கடிதங்களை எழுதவும், மற்றவர்களுக்குப் படித்துக் காட்டவும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

விடுமுறைக் கடிதங்கள், நூல் விற்பனை நிலையத்திற்கு எழுதும் கடிதங்கள், நன்றி கூறும் கடிதங்கள், வாழ்த்துக் கடிதங்கள் போன்ற பலவற்றை எழுதும் வாயப்பு உள்ளது. அவற்றைத் தவறின்றிப் படிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்; கடிதங்கள் படிப்பதும் ஒருவகைக் கலையே!

**6.7 கட்டுரைகள்**

கட்டுரைகள், வாய்மொழியாகவும் இடம்பெறும்; மாணவர்கள் கட்டுரைகளை வாய்மொழியாகச் சொல்லிய பின் எழுத்து வடிவம் பெறும். இவ்வாறு எழுதிய கட்டுரைகளை மாணவர்களின் முன் படித்துக்காட்டுவது உண்டு. இதுவும் படிப்புப்பயிற்சியைச் செம்மைப்படுத்தும்.

இவ்வாறு வாய்விட்டுப் படிக்கப் பயிற்சி அளித்தால் பிழைகளும், கருத்துத் தடுமாற்றமும் ஏற்படா.

**நிறைகள்**

1. வாய்விட்டுப் படித்தல் ஒலிப்பு முறையைக் கற்க உதவுகிறது.
2. ஒலிப்பில் ஏற்படும் குறைகளைத் திருத்த உதவும்.
3. மனப்பாடம் செய்வதற்கு வாய்விட்டுப் படித்தலே ஏற்றது.
4. நிறுத்தற்குறிகளின் பயனை வாய்விட்டுப் படித்தல் மூலமே நன்கு அறியலாம்.
5. வாய்விட்டுப் படிப்பதால் செய்யுளின் உரைநயம், சொற்சுவை, பொருட்சுவை போன்றவற்றை அறியவும்.
6. பேச்சு, உரையாடல், நடித்தல், சொற்போர் ஆகியவற்றில் பயிற்சி ஏற்பட வாய்ப்புண்டு.

**குறைகள்**

1. வாய்விட்டுப் படிக்கும்போது படித்தல் வேகம் குறைகிறது; எனவே காலம் வீணாகிறது.
2. மிகுதியான பகுதிகளை வாய்விட்டுப் படிக்கும்போது, ஒலி உறுப்புக்கள் சோர்வடைகின்றன.
3. சொற்களையும், தொடர்களையும் ஏற்ற முறையில் படிக்க வேண்டும் என்பதிலேயே மனம் செல்வதால் பொருள் உணர்வதில் காலதாமதம் ஏற்படும். எனவே மீண்டும் வாய்க்குட் படித்து உணரவேண்டிய நிலை ஏற்படும்.
4. பொது நூலகங்களிலும், வகுப்பிலும் வாய்விட்டுப் படித்தால் மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படும்.

நூலகத்தில் எல்லோரும் வாய்விட்டுப் படித்தால் கவனச் சிதறல் ஏற்படும்.

**அகன்ற படிப்பு**

செய்திகளைத் தொகுப்பதற்கு ஒரு நூலையோ, கட்டுரையையோ மேலோட்டமாகப் படிப்பதே அகன்ற படிப்பாகும்.

துணைப்பாட நூல்கள், பயண நூல்கள், சிறுகதை ஆகியவை அகன்ற படிப்புக்குத் துணையாக அமையும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக- 18**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

5. உள்ளதை உள்ளவாறு படித்தல் என்றால் என்ன?

..............................................................................................................................................

..............................................................................................................................

6. சொற்றொடர்முறைப் படிப்பு என்றால் என்ன?

..............................................................................................................................................

..............................................................................................................................................

7. வாய்விட்டுப் படித்தல் என்றால் என்ன?

..............................................................................................................................................

........................................................................................................................................

8. அகன்ற படிப்பு என்றால் என்ன?

..............................................................................................................................................

........................................................................................................................................

**அகன்ற படிப்பின் நோக்கங்கள்**

1. வாய்க்குட் படித்தல் திறனை வளர்க்கலாம்.
2. படித்ததைச் சுருக்கி எழுதும் திறனை வளர்த்தல்.
3. அறிந்து கொண்ட சொற்களஞ்சியத்தை மிகுதிப்படுத்துதல்.
4. பிறர் துணையின்றித் தானே படித்துக் கருத்துக்களை அறிந்துகொள்ளுதல்.
5. விரைவாகப் படிக்கும் திறன் பெறுதல்.
6. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் செலவழித்தல்.
7. கற்பனையால், படைப்பாற்றலை வளர்த்தல்.
8. அதிகமான செய்திகளை அறியச் செய்து தன்னம்பிக்கையை ஏற்படுத்துதல்.

**நிறைகள்**

1. விரைவாகப் படித்தல், பொருளுணர்தல் முதலிய படிப்புத் திறன்களை வளர்க்க உதவுகிறது.
2. முறையான பொழுதுபோக்கிற்கு வழிகாட்டுகிறது.
3. ஆழ்ந்த படிப்பில் பெற்ற மொழியறிவை உறுதி செய்ய உதவுகிறது.

**குறைகள்**

1. எந்த நூலையும் மேலோட்டமாகப் படிக்கும் நிலை ஏற்படலாம்.
2. திருத்தமான மொழியறிவு பெற உதவுவதில்லை.
3. கண்களை மட்டுமே ஈடுபடுத்திப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டால், அறிவுவளர்ச்சிக்கு இடமில்லாமல் போய்விடும்.

**ஆழ்ந்த படிப்பு**

ஒரு நூலில் இடம்பெற்ற கருத்துக்கள், சொற்றொடர் அமைப்புக்கள், சொல்லாட்சிச் சிறப்புக்கள் முதலிய அனைத்தையும் அறிதலே ஆழ்ந்த படிப்பாகும்.

பள்ளிகளுக்கு ஆழ்ந்த படிப்புக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட உரைநடைப் பகுதிகளும், செய்யுட் பகுதிகளும் அடங்கிய நூல் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்திருக்கின்றனர்.

ஒவ்வொரு பாடத்திலும் உள்ள கருத்துக்களையும், சொற்களஞ்சியம், சொல்லாட்சித்திறன், மொழியமைப்பு, மொழிமரபு, நடைச்சிறப்பு ஆகியவற்றை நுணுக்கமாகவும் ஆழ்ந்தும் கற்பதால் இதனை ஆழ்ந்த படிப்பு என்கிறோம்.

**6.8 உரைநடைப் பாடத்தை ஆழ்ந்து படிப்பதன் நோக்கங்கள்**

1. வாய்விட்டுப் படித்தல் திறன் வளர்ச்சி அடையும்.
2. படிப்பதைக் கேட்டுப் பொருள் உணரும் திறன் வளரும்.
3. சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படும்.
4. பாட அமைப்பின் ஒழுங்குமுறையை அறியமுடியும்.
   (ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் முறை, ஓர் இடத்தை வருணிக்கும் முறை போன்றவற்றை அறிதல்)
5. புதிய சொற்களையும், தொடர்களையும் வாக்கியத்தில் அமைத்து எழுதுவதால் சொல்லாட்சித் திறன் வளரும்.
6. ஒரு பகுதியைப் படித்து வினாவிற்கு விடைகாணும் திறன் வளரும்.
7. உரைநடைச் சிறப்பு, பத்தி அமைப்பு, மொழித்திறன்களின் சிறப்பை அறியலாம்.

**செய்யுள் பாடத்தை ஆழ்ந்து படிப்பதன் நோக்கம்**

1. சொல் நயம், பொருள் நயத்தை உணரவைத்தல்.
2. எதுகை, மோனை இயைபுத் தொடைகளை உணரச் செய்தல்.
3. கற்பனைத்திறன், உவமை உருவக நயம் இவற்றை அறியும் திறன் பெறுதல்.
4. செய்யுளைச் சந்த நயத்துடன் படிக்கப் பயிற்சி பெறுதல்.
5. செய்யுளைப் பொருள் உணரும் வகையில் பிரித்தறியச் செய்தல்.

**நிறைகள்**

1. மாணவர்களின் அடிப்படை மொழித்திறன் வளர்கிறது.
   (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் திறன்களில் பயிற்சிபெறுதல்)
2. நயமுணர் திறன் வளர்கிறது.
3. சொற்களஞ்சியம் பெருகுகிறது.
4. ஒரு பகுதியைப் படித்துப்பொருள் உணர்தலில் நல்ல பயிற்சி கிடைக்கிறது.
5. படைப்பாற்றல் திறன் வளர்கிறது.

**குறைகள்**

1. ஒரே பகுதியை ஆழ்ந்து படிப்பதால் சலிப்பு ஏற்படும்.
2. அகராதி, கலைக்களஞ்சியம் பார்த்துப் பொருள் உணர முடியாத நிலை திறன் குறைந்தோர்க்கு ஏற்படும்.
3. மொழிமரபு, மொழிநடை, மொழித்திறன் ஆகியவற்றை உணர்த்துவதற்குத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் தேவை.
4. குறிப்பிட்ட பகுதியைப் படித்துச் செய்தியை மட்டும் அறிந்து வினாக்களுக்கு விடைகூறும் நிலைமட்டும் ஏற்படலாம்.

**4. எழுதுதல் திறன்**

மக்கள் தங்களிடம் இயல்பாக இருந்த ஒலி எழுப்பும் திறனைப் பொருள் உணரும் ஒன்றாக மாற்றிப் பேச்சு மொழியை உருவாக்கினர். அக்கருத்தைத் தன் எதிரிலோ, அருகிலோ இல்லாத ஒருவருக்குத் தனது கருத்தைத் தெரிவிக்க எழுத்துமொழி உருவாக்கப்பட்டது.

மரப்பொந்துகளிலும், குகைகளிலும் வாழ்ந்தோர் ஓவியங்கள் வரைந்தனர்; அவையே சித்திர எழுத்துக்களாக மாறின.

மொழி பேச்சாகத் தோன்றி வளர்ந்து பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே, எழுத்தின் வாயிலாகக் கருத்தினை உணர்த்த முடியும்.

பேச்சு மொழியை, ஒலிவடிவத்தை வரிவடிவமாக்குவதே எழுத்து மொழியாகும்.

மொழியைக் கற்கும்போது, அதிலுள்ள எழுத்துக்களையும், சொற்களையும், வாக்கியங்களையும் முறையாக எழுதும் திறன் பெறுதலே 'எழுதுதல் திறன்' எனப்படுகிறது.

**6.9 எழுதுவதன் நோக்கம்**

1. எழுதுதல் என்பது கருத்தையும், பேச்சையும் நிலையாகப் பதிவு செய்தல்.
2. தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளப் பயன்படுதல். இத்தகைய நோக்கங்களைக் கொண்டது எழுதுதல் திறன்.

**எழுதுதலின் இருநிலைகள்**

எழுதக் கற்பித்தலில் இருநிலைகள் உள்ளன.

முதல்நிலையில் ஒலிவடிவங்களை வரிவடிவங்களாக எழுதக் கற்றலை அறிமுகப் படுத்துவதுடன் அழகாகவும், விரைவாகவும் எழுதப் பயிற்சி அளித்தல். வரியொற்றி எழுதுதல், பார்த்து எழுதுதல், கேட்டு எழுதுதல் போன்றவை இங்குக் கற்பிக்கப்படும்.

இரண்டாம் நிலையில் சொந்தமாகக் கடிதம், கட்டுரை, அறிக்கை எழுதக் கற்பித்தலாகும்.

இரண்டு நிலைகளுக்கும் தனித்தனி வழிமுறைகள் உள்ளன. முதல்நிலை முதல் வகுப்புத் தொடங்கி மூன்றாம் வகுப்புவரை பின்பற்றப்படுவதாகும். இரண்டாம்நிலை படிப்படியாக மேல்வகுப்பில் பின்பற்றப்படுவதாகும்.

**எழுதக் கற்பித்தல்**

நல்ல கையெழுத்து பன்முறைப் பயிற்சியாலும், முயற்சி செய்வதால் மட்டுமே அமையம், நல்ல கையெழுத்து அமைந்தால் மட்டும் போதாது; பிழையின்றியும் அமையவேண்டும். மேலும் குறில், நெடில் வேறுபாடு, மயங்கொலிப் பிழை தவிர்த்தல், சந்திப் பிழை தவிர்த்தல் இந்த மூன்று பிழைகளும் தவிர்க்கப்படுமானால் எழுத்துப் பிழைகள் தவிர்க்கப்படும். எழுத்துப் பிழையால், சொற்பிழையும், சொற்பிழையால், கருத்துப்பிழையும் அமையும் என்பதை நினைவில் கொண்டு எழுத வேண்டும். மேலும் வாக்கியப் பிழையின்றி அமைய வாக்கிய வகைகளை அறிந்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு பிழையின்றியும், நல்ல கையெழுத்து அமையும்படியும் எழுத வேண்டும்.

**பிழையின்றி எழுதக் கற்பித்தல்**

தொடக்கநிலை முதலே மாணவர்கள் பிழையின்றி எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும். சரியான உச்சரிப்பு இருந்தால் பிழைகள் ஏற்படாது. மேலும் ஒற்றுமையுடைய ஒலிப்புச் சொற்கள், அவற்றின் வடிவங்களில் மணாவர்கள் பயிற்சி பெற்றால் பிழைகள் ஏற்படாது. எனவே வாய்க்குட் படித்தலும், வாய்விட்டுப் படித்தலும் எழுத்துக்களையும், வேறுபாட்டுச் சொற்களையும் அறிய உதவுகின்றன.

பிழையின்றி எழுதப் பயிற்சி அளித்தலில் எழுத்துக்கூட்டல் விளையாட்டு முக்கிய இடம் பெறுகிறது.

**எழுத்துக்கூட்டல் விளையாட்டு**

எழுத்துகளைக் கூட்டிப் புதிய சொற்களைக் கண்டறிய மாணவர்கள் விளையாடும் விளையாட்டே எழுத்துக் கூட்டல் விளையாட்டாகும். இதனால் மாணவர்கள் சொற்களஞ்சியப் பெருக்கம் அடைகின்றனர். இதில் உள்ள விளையாட்டுகள் சிலவற்றைக் காணலாம்.

1. முதல் எழுத்தைக் கோடிட்டு இணை

| | | |
|---|---|---|
| | ப | பம்பரம் |

2. கட்டங்களை நிறப்பிப் படி.

| | | |
|---|---|---|
| | | கு |
| | | யி |
| | ப | ல் |
| | ழ | |

| | | | |
|---|---|---|---|
| சா | ம் | ப | ல் |

3. படம் பார்த்துப் பெயர் எழுதுக.
4. பெயர்ப் பட்டியலில் இருந்து படத்திற்குரிய சொல்லை எழுதுக.
5. வேறுபட்ட ஒலியுடைய சொல்லை வட்டமிடு.
6. புதிய சொற்களை உருவாக்கி எழுது.
7. பொருத்தமான சொற்களைக் கூட்டி எழுது.
8. ஒரே ஒலியுடைய எழுத்துகளைக் கொண்டு சொற்களை எழுது.
9. முதல் எழுத்தை எழுதிச் சொல்லை உருவாக்கு.
10. சொல்லேணி அமைத்தல்.

இவ்வாறு பிழையின்றியும், எழுத்துக்கூட்டியும், நல்ல கையெழுத்துடனும் எழுதிக் கற்பிக்க வேண்டும்.

**கையெழுத்தின் நன்மைகள்**

1. எண்ணியதை எழுதுபவர், படிப்பவரும் எண்ணும் விதத்தில் எழுத்தானது எழுதப் பெறுதல் வேண்டும்.
2. எழுத்துப் பிழை ஏற்படாமல், செய்தியில் இடம்பெறும் கருத்தும் திரியாமல் இருக்க வேண்டும்.
3. கையெழுத்தில் பிழையின்றி எழுதுதல் ஒரு கலை.
4. கையெழுத்துத் தெளிவாகப் புரியும்படி அமைய வேண்டும்.
5. ஓர் எழுத்திற்கும் மற்றோர் எழுத்திற்கும் இடைவெளிவிட்டு எழுத வேண்டும்.
6. சாய்வாக எழுதாமல் நேராக எழுத வேண்டும்.

**எழுதும் திறனில் பயிற்சி**

குழந்தைகள் நினைத்தவுடன் எழுதிவிட முடியாது; ஆதலால் பயிற்சிகள் தர வேண்டும். குழந்தைகளின் கையெழுத்தில் அளவும் தெளிவும் ஏற்பட முறையான எழுத்துப் பயிற்சிகள் தரவேண்டும். எழுத்துப் பயிற்சிகளாக விளங்குபவை வருமாறு.

1. வரியொற்றி எழுதுதல்
2. பார்த்து எழுதுதல்
3. சொல்வதை எழுதுதல் - என்பனவாம்.

**1.வரியொற்றி எழுதுதல்**

வரியொற்றி எழுதத் தனிப்பயிற்சி ஏடுகள் உள்ளன. நான்கு வரிகள், மூன்று வரிகள், இரண்டு வரிகள் என்ற நிலையில் கையெழுத்துக் குறிப்பேடுகள் கிடைக்கும்.

அவற்றில் முதல் வரியில் அச்சிட்ட சொற்றொடர் அமைந்திருக்கும். இதனை மாதிரியாகக் கொண்டு எழுதும் பயிற்சியானது தரப்படவேண்டும், இது வரியொற்றி எழுதுவதாகும். இப்பயிற்சியின்போது ஒவ்வொரு வரியிலும் எழுதும்போது அச்சிட்ட எழுத்துகளை மாதிரியாகக் கொண்டு கீழிருந்து மேல்நோக்கி ஒவ்வொரு வரியாக எழுதுவது பயன்தரும். இப்பயிற்சியால் எழுத்தில் தெளிவும், எழுத்து அளவுபற்றிய அறிவும் ஏற்படும்.

**2. பார்த்து எழுதுதல்**

இந்த எழுத்துப் பயிற்சியைப் பாடநூல் அடிப்படையில் தரலாம்.

குறிப்பிட்ட பாடப் பகுதியைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு நாளும் பார்த்து எழுதும் பயிற்சிக்கு, குறிப்பேட்டில் நான்கு அல்லது ஐந்து வரிகள் எழுதிவரச் செய்தல் நடைமுறையில் உள்ளது. இப்பயிற்சியால் உற்றுநோக்கல், கவனம், தெளிவு ஆகிய பண்புகள் வளர வாய்ப்புண்டு. மொழியாசிரியர்கள் இப்பயிற்சியை மேற்கொள்ளும்போது வேண்டிய கருத்துகளைக் கூற வேண்டும். இப்பயிற்சி சிந்தனையை வளர்க்கும் விதத்தில் அமையும்.

**3. சொல்வதை எழுதுதல்**

விரைவாக எழுத இப்பயிற்சி பயன்படும். சொல்லுவதைச் சரியாகக் கேட்டு விரைவாக எழுதும் நிலை தோன்றும்; கேட்கும் திறனும், நிறுத்தற் குறிகளை இடும் திறனும் வளரும்; பொருள் உணரும் ஆற்றலை வளர்க்கும்; இப்பயிற்சிக்குச் சிறந்த பகுதிகளை எடுத்துக் கொடுப்பது மாணவரிடம் கருத்து வளத்தை ஏற்படுத்தி எழுதுவதில் ஆர்வத்தையும் உண்டாக்கும்.

கையெழுத்துப் பயிற்சியால் எழுத்தின் அளவு, தெளிவு, வேகம் சிறப்பாக அமைய வேண்டும்.

**எழுது கருவிகளைப் பிடிக்கும் முறை**

1. பெருவிரல் மற்றும் ஆள்காட்டி விரலால் எழுதுகோலைப் பிடிக்க வேண்டும்.
2. நடுவிரலில் நுனியில் எழுதுகோல் படிந்திருத்தல் வேண்டும்
3. தாளின் மீது எழுதுகோல் சரியான கோணத்தில் அமையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**நல்ல கையெழுத்தின் நல்லியல்புகள்**

கையெழுத்தானது செய்தித் தொடர்பானதாக அமைவதால் எழுதியதைப் படித்துப் பொருளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

நல்ல கையெழுத்தின் இயல்புகளாகச் சுட்டப்படுபவை தெளிவு, அளவு, விரைவு என்பனவாம்.

**தெளிவு**

படிப்பவர் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதுவதில் தெளிவு இருக்க வேண்டும். எழுத்துகளைத் தனித் தனியாக எழுதுவதன் மூலம் தெளிவை ஏற்படுத்தலாம். எழுத்துகளுக்கு உரிய வடிவங்களைச் சிதைக்காமல், குறைக்காமல் சரியான இடைவெளிவிட்டு எழுத வேண்டும்.

**அளவு**

எழுத்துகளின் மேல்விலங்கு, கீழ்விலங்கு வளைவுகள் போன்றவை ஒரே சீராக அமையப் பெறுவது 'அளவு' என்னும் இயல்பாகும். அச்சு எழுத்துகளில் எழுத்துகளைப் புள்ளி அளவில் குறிப்பிடுவர். 6 புள்ளி எழுத்துக்கள், 8 புள்ளி எழுத்துகள் என்று இனம் பிரித்துள்ளனர். 8 புள்ளி எழுத்துகளாலான பகுதியில் 12 புள்ளி அமையுமாயின் அளவு என்னும் பண்பு இல்லாமல் போகும். இதைப் போலவே எழுத்துகள் எல்லாவற்றிலும் இருக்க வேண்டும். இப்பண்பு எழுத்தின் அழகை அதிகமாக்கும்.

**விரைவு**

தெளிவான எழுத்து அமைந்து அது மெதுவாக எழுதப்பட்டதாயின் சிறப்பு இல்லை. எழுத்தில் போதுமான விரைவும், அழகும் இருத்தல் வேண்டும்.

மூன்றாம் வகுப்பில் ஒரு மணித்துளிக்கு 35-40 வரையுள்ள எழுத்து வேகமும், நான்காம் வகுப்பில் 50-60 வரையிலான எழுத்து வேகமும், ஐந்தாம் வகுப்பில் 60 எழுத்து வேகமும், பெரியோர்களுக்கு 100 எழுத்து வேகமும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு எழுத்துப்பயிற்சி தரப்படின் பிழையின்றி, அழகாக, தெளிவாக அமையும்.

**6.10 வாய்மொழிப் பயிற்சி**

மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் பேச்சே பயன்படுகிறது. மொழித்திறன்களில் ஒன்றான பேசுதலில் பயிற்சி அளிப்பது மொழிப்பாடத்தின் நோக்கமாகும். அதன் அடிப்படையில் மாணவர்களுக்கு உச்சரிப்பில் பயிற்சி கொடுப்பதற்காக அவர்களுக்குச் செய்யுள், உரைநடை போன்றவற்றைப் படிக்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதில் சொல், வன்மை, சோர்வு இன்மை, அஞ்சாமை, அறிவு, தெளிவு போன்றவற்றை வாய்மொழிப் பயிற்சி மூலம் வளர்க்கலாம்.

**"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்."**

எனும் குறள் பேச்சில் கவர்ச்சி இருந்தால்தான் கேட்போரை ஈர்க்க முடியும் எனக் கூறுகிறது. அதற்காகப் பள்ளி மாணவர்களுக்குத் தொடர்களைச் சரியாக உச்சரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சந்தம் அறியும் பயிற்சியை நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிப் பழகுவதால் அறியலாம். சிலம்பில் இடம்பெறும் பாடல் வரிகளை நாடகமாக நடித்தும், இசையுடன் பாடியும் சுவையுணர்த்துவதன் மூலம் மாணவர்களின் வாய்மொழிப் பயிற்சித் திறனை வளர்க்கலாம்.

**வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள்**

மாணவர்களிடம் பேசும் பழக்கத்தை வளர்க்கும் வகையில் வாய்மொழியப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு மனிதனுக்குள்ள திறன்களில் பேசும் பண்பே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்து. இதனை, நாநலம் என்னும் 'நலனுடைமை' எனக் குறிப்பிடுகிறார்.

மாணவர்கள் சிறுவயது முதல் நன்கு பேசவும், கலந்துரையாடவும், உறவினை மேம்படுத்தவும், குழுவாகச் செயல்படவும், ஆளுமைப் பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் வாய்மொழிப் பயிற்சி பயன்படுகிறது.

**1. சரியான ஒலிப்புடன் பேசுதல்**

தமிழ் எழுத்துகள் மாத்திரை அளவினை அடிப்படையாகக் கொண்டு உச்சரிக்கப்படுகின்றன. குறிலைக் குறுகி ஒலித்தும், நெடிலை நீட்டி ஒலித்தும் ஒலிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 'ல,ள,ழ' எழுத்துகளைச் சரியாக ஒலிக்கவில்லை என்றால் மயங்கொலிப் பிழை ஏற்பட்டுப் பொருள் மாறிவிடும். மாணவர்களுக்குத் தொடக்கநிலை வகுப்பு முதல் மேனிலை வகுப்பு வரை சரியான ஒலிப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மேனிலை இரண்டாமாண்டு மாணவர்களுக்கு 'லகர ளகர ழகர வேறுபாடுகள்' னகர, ணகர வேறுபாடுகள்' வெளிப்படுமாறு மொழித்திறன் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களில் இடம்பெற்ற ஒலிப்புப் பயிற்சியைப் பின்பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தால் வாய்மொழிப் பயிற்சி சிறப்பாக அமையும்.

**2. திருத்தமாகப் பேசுதல்**

பேசுவோர் சொல்வதைக் கேட்பவர் சரியாக உணரும்படிப் பேசுவதே திருத்தமாகப் பேசுவதாகும். எழுத்துகளை அவற்றிற்குரிய சரியான உச்சரிப்புடன் ஒலித்துப் பேசினால்தான் சொற்களின் பொருள் சிதையாது; முழுமையான பொருள் வெளிப்படும்.

சொற்களை அவை வெளிப்படுத்தும் பொருளுக்கேற்பப் பிரித்தும் சேர்த்தும் பேச வேண்டும்; பிழையில்லாது பேச வேண்டும். கட்டபொம்மன் வசனத்தைப் பேசிப் பழகினால் தெளிவான பேச்சுப் பயிற்சி ஏற்படும்.

வகுப்பில் சிறுசிறு தலைப்பைக் கொடுத்து மாணவர்களைப் பேசச் செய்ய வேண்டும். பேச்சில் 'ள,ழ' ஒலிகள் ஒரே மாதிரியாக அமைவதால் அவற்றைப் பொருள் அறிந்து சரியாக ஒலிக்கப் பயிற்சி அளிக்க வேண்டும்.

**ஒலிப்புப் பயிற்சி**

1. வேண்டாத செடிகளைக் களை
2. மூங்கில் என்பது கழை
3. கொடுத்தால் வாழ்வு சிறக்கும்
4. கெடுத்தால் வாழ்வு அழியும்

**3. அழுத்தமாகப் பேசுதல்**

ஒருவர் கூறும் கருத்துகளை வலியுறுத்திப் பேசுவதே அழுத்தமாகப் பேசுதல் ஆகும்.

எச்செயலுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என நினைக்கிறோமோ அதை அழுத்தமாகப் பேச வேண்டும். இரணியனை நோக்கிப் பிரகலாதன் கூறுவது போன்ற பாடல் வரிகளை அழுத்தமாகப் பேச வேண்டும்.

**"கேளிது நீயுங் காணக் கிளர்ந்தகோ ளரியின் கேழில்**

**தோளொடு தாளும் நீக்கி நின்னையும் துணித்துப் பின்னென்**

**வாளினைத் தொழுவ தல்லால் வணங்குதல் மகரிர் ஊடல்**

**நாளினும் உளதோ என்னா அண்டங்கள் நடுங்க நக்கான்''**

இப்பாடலைப் பொருளுணர்ந்து படித்து அதன் கருத்தை அழுத்தமாகப் பேசிப் பழகலாம்.

**4. உணர்ச்சியுடனும் ஏற்ற இறக்கத்துடனும் பேசுதல்**

உணர்ச்சியை வெளிப்படுத்தும் பேச்சையே மக்கள் விரும்புவர். எனவே பயிற்சியின் மூலம் பேச்சில் குரல் இனிமையும், வீரம், சோகம், அச்சம், அவலம், இரக்கம் போன்ற உணர்வுகள் வெளிப்படுவதாக அமைய வேண்டும். தான் பேசும் பேச்சில் ஒன்றிவிட வேண்டும். கேட்பவர்களைத் தன் பேச்சால் ஈர்க்கும் தன்மை பேசுவபவருக்கு இருக்க வேண்டும்.

கலிங்கத்துப் பரணிப் பாடலைப் பாடும்போது ஏற்ற இறக்கத்துடன் பாட வேண்டும். ஆசிரியர் மாணவர்களிடம் பேசும்பொழுது நயத்துடனும், உணர்ச்சியுடனும் பேசுவதற்கு இந்தப் பயிற்சி தூண்டலாய் அமையும்.

**''எடுமெடு மெடுமென எழுந்ததோர்**

**இகலொலி கடலொலி மிகக்கவே**

**விடுவிடு விடுபரி கரிக்குழாம்**

**விடும்விடு மெனுமொலி மிகைக்கவே''**

**5. பிழையின்றிப் பேசுதல்**

பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் வெவ்வேறானவை. பேச்சு மொழியில் இலக்கண மரபு பின்பற்றப் படுவதில்லை. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள் மொழியைப் பிழை இல்லாமல் பேசுவதற்குரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பள்ளி மாணவர்களுக்கு அளிக்கப்படும் பிழைகளையும் பயிற்சிகள்.

1. மயங்கொலிப் பிழையினைத் தவிர்த்தல்

   அறம் அரம்

2. வாக்கியங்களில் உள்ள பிழைகளை நீக்குதல்.

   அவன் வந்தாள் - அவன் வந்தான்

   காகம் கத்தியது – காகம் கரைந்தது

3. ஒருமை, பன்மை, பிழை நீக்குதல்

   அவர்கள் வந்தது - அவர்கள் வந்தனர்

   நான் வந்தார்கள் - நான் வந்தேன்

4. சந்திப் பிழை நீக்குதல்

   பத்துபாட்டும் எட்டுதொகையும் சங்க இலக்கியங்கள்.

   பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள்.

5. பிறமொழிச் சொற்களை நீக்குதல்

   நான் காலேஜிக்குப் பஸ் ஏறிச் சென்றேன் - நான் கல்லூரிக்குப் பேருந்தில் ஏறிச் சென்றேன்.

**சரளமாகப் பேசுதல்**

மாணவர்களின் பேச்சுத் தங்கு தடை இல்லாமல் தமது கருத்துகளைப் பிறர் புரிந்துகொள்ளும் வகையில் சரளமாகப் பேச வேண்டும். பேசுவதற்கு முன்பு, எதைப் பற்றிப் பேசப் போகிறோம் என்பதைப் பற்றிய தெளிவு இருந்தால்தான் பேச்சில் சரளம் இருக்கும். பேசும்போது தயக்கமோ, தடுமாற்றமோ, அச்சமோ, பிழைகளோ இருக்கக் கூடாது. பேச்சில் சரளம் ஏற்பட வகுப்பில் மாணவர்களுக்குச் சிறு தலைப்பு அளித்துப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

பேசுவதற்கு முன் பயிற்சியாக ஓா் உரைநடைப் பகுதியைப் பொருளுணா்ச்சிக்கேற்ப குரல் ஏற்றத்தாழ்வு, விரைவு, அழுத்தம், நிறுத்தம் போன்றவற்றைக் கையாண்டு படிக்குமாறு மாணவா்களை வலியுறுத்த வேண்டும்.

**பாடல்கள்**

சிறுவா் பாடல்கள் குழந்தைகளுக்கு அறிவையும், நீதியையும் புகட்டுகின்றன.

குழந்தைகளுக்கு எண்களைக் கற்றுக்கொடுக்கும் எண்ணுப் பயிற்சிப்பாடல்கள், அறிவு வளாச்சிப் பாடல்கள், பக்திப்பாடல்கள், கற்பனைப் பாடல்கள், வினா விடைப் பாடல்கள் ஆகியன சிறுவா்களின் பேச்சு திருத்தமாக அமைய உதவுகின்றன.

**தொடக்கநிலை வகுப்புகளுக்குப் பேச்சுப் பயிற்சிகள்**

1. தனியாகவும், குழுவாகவும் செய்யுட்களையும் பாடல்களையும் ஒலிக்கும் திறன்.
2. செய்யுட் பகுதியை ஆசிரியா் படித்துக்காட்டி மாணவா்களைக் குரல் ஏற்றத் தாழ்வுடனும், ஒலி அழுத்தத்துடனும் படிக்கச் செய்து பொருள் கூறச் செய்தல்.
3. மொழியின் அனைத்து உறுப்புக்களையும் தவறின்றி ஒலிக்கும் திறன்.

**1. சிட்டு (எளிய பாடல்)**

சிட்டே, சிட்டே பறந்து வா!
சிறகைச் சிறகை அடித்துவா!
கொட்டிக் கிடக்கும் மணிகளை
கொத்திக் கொத்தித் தின்னவா!
ஆற்று நீரில் குளிக்கிறாய்!
அழகாய்த் தூளி ஆடுகிறாய்!
சேற்று வயலில் அமா்கிறாய்!
திறந்த வெளியில் திரிகிறாய்!
உன்னைப் போலப் பறக்கணும்
உயர உயரச் செல்லணும்!
என்னை அழைத்துச் சென்றிடு!
ஏற்ற இடத்தைக் காட்டிடு

**2. ஓடி விளையாடு பாப்பா (சந்தப்பாடல்)**

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!
காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

**3. குழுப்பாடல்**

துண்டுத் தாள்கள் கிடந்தன
தூக்கி வீசி எறிந்தனா்!
கப்பல் செய்து மகிழ்ந்தனன்
துண்டுத் துணிகள் கிடந்தன
தூக்கி வீசி எறிந்தனா்!
கண்டு சிறுமி எடுத்தாள்

களைக்காயப் பொம்மை செய்தனள்!

**4. ஆட்டப் பாடல்கள்**

சிறுவர்கள் விளையாடும்போது பாடும் பாடல்கள் ஆட்டப் பாடல்கள். இப்பாடல்களால் குழந்தைகளின் உச்சரிப்பு, பேச்சுப் பயிற்சி வளர்கிறது.

குலை குலையா முந்திரிக்கா

நரி நரி ஓடவா

சங்கிலி பொங்கி கதவத்திற

நான் மாட்டேன் வேங்கைப் புலி

**கதை சொல்லுதல்**

சிறு சிறு கதைகளை ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிக் கூறலாம்.

தொடக்க நிலை வகுப்புகளில் படக்கதைகள் இருக்கும்; அவற்றைப் பயன்படுத்திக் கதைகளைக் கூறச் செய்யலாம்.

ஒருவர் ஒரு சொற்றொடரைச் சொல்லி ஒரு கதையைத் தொடங்குமாறு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு தொடரைச் சொல்லிக் கதையைத் தொடர்ந்து முடிக்க வேண்டும்.

கதையைச் சொல்வதிலும், கேட்பதிலும் ஆர்வமுள்ள குழந்தைகள் சொல்வதால் நினைவாற்றலும், மொழியாற்றலும் பெறுகின்றனர்.

தொடக்கப் பள்ளிகளில் காக்கை நரி கதை, இடம்பெற்றிருக்கும். இக்கதையை ஆசிரியர் முழுவதையும் சொல்லலாம். பின்னர் மாணவர்களிடம் ஒவ்வொரு பகுதியாகச் சொல்லச் செய்யலாம். மாணவர்களையும் சொல்லச் செய்யலாம். மாணவர்கள் தடுமாறும் இடங்களில் ஆசிரியரே கதையைச் சொல்லலாம்.

கதையில் முடிவில் கதையால் பெறும் நீதியைச் சொல்லலாம். மாணவர்களையும் சொல்லச் செய்யலாம். இதனால் மாணவர்களின் வாய்மொழிப் பயிற்சித் திறன் வளரும்.

**கதை நீதி**

காகம்போல் கிடைத்த பொருளைத் தவறவிட்டு விட்டு ஏமாறக் கூடாது. நரிபோல் தந்திரமாக இருந்து வாழ்வில் சாதனைகள் செய்ய வேண்டும் என்பதாம்.

இளம் வயதில் முயற்சிக்கு முயல், ஆமை கதையைச் சொல்வார்கள்.

ஒரு பந்தயம் நடந்தது. இதில் முயலும், ஆமையும் கலந்து கொண்டன, முயல் வேகமாக ஓடியது; ஆமை மெல்ல மெல்ல நகர்ந்தது.

ஆமையின் வேகத்தைப் பார்த்த முயல் பாதி வழியில் அயர்ந்து தூங்கியது; ஆமையோ குறிப்பிட்ட தூரத்தை மெல்ல சென்று சேர்ந்தது.

தூக்கம் கலைந்து விழித்தெழுந்த முயல் ஆமையைப் பார்த்தது; மிக வேகமாக ஓடியும் இலக்கை அடைய முடியவில்லை; தன்நிலையை உணர்ந்த முயல் வெட்கித் தலை குனிந்தது.

எனவே எந்தச் செயலிலும் அலட்சியம் கூடாது, எந்தப் பொருளையும் இழிவாக நினைக்கக்கூடாது என்ற நீதியை மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும்; மாணவர்களை மீண்டும் சொல்லச் செய்ய வேண்டும்.

கதையை ஆளுக்கொரு வரியாக மாணவர்களைச் சொல்லச் செய்யலாம்; தடைப்படும் இடத்தில் ஆசிரியரே சொல்லலாம்; ஒலிப்புத்திறன் குறைவாக உள்ள இடத்தில் சரி செய்யலாம்.

இவ்வாறு மாணவர்களின் வாய்மொழிப் பயிற்சியை வளர்க்கக் கதையைக் கருவியாகப் பயன்படுத்தலாம்.

**படங்கள் மூலம் கற்பித்தல்**

தொடக்கநிலை வகுப்புகளில் படங்களைக் கொண்டு பாடம் கற்பிக்கப்படும்.

படிப்புப் பயிற்சியில் எழுத்து முறைப் படிப்பு, சொல்முறைப் படிப்பு என இரண்டு உண்டு. இதில் சொல்முறைப் படிப்பின் தொடக்கமே படங்கள் மூலம் கற்பித்தலாகும்.

முதல் வகுப்பில் அணில், ஆடு, இலை, ஈ, உரல், ஊதல், எலி, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓடம், ஔவை எனத் தமிழின் உயிரெழுத்துக்களைக் கொண்ட சொற்களின் படம் மட்டும் இருக்கும். அவற்றைப் பார்த்து ஒவ்வொன்றாக ஆசிரியர் மாணவர்க்குக் கற்பிப்பார்.

அதன்பின்னர் படத்துடன் சொற்களும் இடம் பெறும்; இப்போது மாணவர்க்குச் சொற்களைக் கற்பிப்பது எளிது. பின்னர் சொற்கள் மட்டும் இடம் பெற்றிருக்கும்; படமிருக்காது. இப்போது மாணவர்கள் எழுத்துக் கூட்டிச் சொற்பயிற்சி பெறுவர்.

இப்பயிற்சி எளிமையிலிருந்து அருமை என்ற உளவியல் முறைப்படியான கற்பித்தலுக்கு எடுத்துக்காட்டாகவும் அமையும்.

இதேபோல் உயிர்மெய்யெழுத்துகளாகிய 'க' வரி எழுத்துக்களைக் கொண்ட படங்கள் இருக்கும். அப்படங்களைக் கொண்டு சொற்களைக் கற்பிப்பார் ஆசிரியர்; பின்னர் படங்களுடன் சொற்களும் இருக்கும். முதலில் சொற்களைக் கற்பித்துப் பின்னர் எழுத்துக்கூட்டிச் சொற்களைக் கற்பிப்பர்.

இதுவும் எளிமையிலிருந்து அருமை, தெரிந்ததிலிருந்து தெரியாதது என்ற உளவியல் முறைப்படி அமைந்த கற்பித்தல் உத்திக்கு ஏற்ற கற்பித்தல் முறையாகும்.

பின்னர் படங்களுடன் சிறு சிறு வாக்கியங்களும் இடம் பெற்றிருக்கும் தொடர்களை ஆசிரியர் கற்பிக்கலாம். முன்னரே எழுத்துப் பயிற்சியும், சொற்பயிற்சியும் பெற்றிருப்பதால் மாணவர்க்கு இவற்றைக் கற்பிப்பது எளிது.

'அதோ பார் கப்பல்', இங்கே இருப்பது சக்கரம், குடிக்கப் பயன்படுவது தண்ணீர்' என்பன போன்ற சிறு வாக்கியங்களைக் கற்பித்துப் பின்னர் அவற்றையே எழுத்துக் கூட்டியும் கற்பிக்கலாம்.

படம் பாத்துச் சொற்கள், படம் பார்த்து வாக்கியங்கள் இவற்றைக் கற்பிப்பதுபோல் படத்தின் மூலம் ஒன்றிரண்டு கதையைக் கற்பித்துச் சிறு தலைப்புக்களின் கீழ் உள்ள கருத்துக்களைக் கற்பிக்கலாம்.

காகம் ஒன்று நீருக்கு அலைந்தது; பின்னர் குடத்தில் இருந்த கலங்கலான நீரைப் பார்த்தது; என்ன செய்யலாம் என்று சிந்தித்தது; சிறு சிறு கற்களைக் கொண்டு வந்து குடத்தில் போட்டது; இவ்வாறு நீண்ட நேரம் செய்தது; தண்ணீர் மேலே வந்தது; காகம் தன் நீர் வேட்கையைத் தணித்தது.

இக்கதையை மாணவர்களைக் கொண்டு சொல்லச் செய்யலாம். அதையே 'தண்ணீரும் காகமும்' எனத் தலைப்பிட்டு மாணவர்க்கு ஒரு பக்க அளவில் எழுதிப்போடலாம்.

மாணவர் பயிற்சிபெற்ற பின்னர் அவர்களை எழுதச் செய்யலாம்.

இவ்வாறு சொற்களையும், வாக்கியங்களையும், கருத்தமைந்த பகுதியையும் கற்பிப்பதால் கற்பித்தல் எளிதாகும்.

இப்பகுதியைக் கற்பிப்பதிலிருந்து மாணவர்க்கு வாழ்வுக்குத் தேவையான நீதியும் கிடைக்கிறது.

முயற்சியும், சமயோசித அறிவும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற கருத்து இலக்கணம் மூலம் மாணவர்க்குக் கற்பிக்கப்படுகிறது.

இதுபோலவே சமயோசித புத்தியால் இழந்த பொருளை மீட்ட குல்லாய் வியாபாரி கதையையும் மாணவர்க்குச் சொல்லலாம். இக்கதை தமிழ் அறிவையும், படிப்புப் பயிற்சியையும், வாய்மொழிப் பயிற்சியையும் வளர்க்கும் ஒன்றாகும்.

இவ்வாறு படங்கள் மூலம் பாடங்களைக் கற்பிப்பது எளிது.

**6.11 கற்றல் கற்பித்தலுக்கான உபகரணங்களைத் தயாரித்தல்**

கற்பித்தலில் கருத்துக்கள் மட்டும் இடம்ற்றொல் கற்றல் வலுப்பெறாது. காலத்திற்கேற்ற துணைக் கருவிகளைப் பயன்படுத்தினால் கற்பித்தல் எளிதாகும்; கற்றலும் வடிவூட்டம் பெறும்.

துணைக் கருவிகளை பிம்பம் வீழ்த்தாத் துணைக் கருவிகள், பிம்பம் வீழ்த்தும் துணைக்கருவிகள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**கற்பித்தல் துணைக் கருவிகளின் வகைப்பாடு**

**பிம்பம் வீழ்த்தும் துணைக் கருவிகள்**

1. ஒளிபுகும், புகாப் படங்கள் காட்டி
2. நழுவம் காட்டும் கருவி
3. துண்டுப் படம் காட்டும் கருவி
4. தலைமேல் படம் வீழ்த்தும் கருவி
5. நுண்படக் காட்டி
6. ஒளிப்படக் கருவி

**பிம்பம் வீழ்த்தாத் துணைக் கருவிகள்**

1. வரைபடங்கள்
2. விளக்கப்படங்கள்
3. தேசப்படங்கள்
4. கருத்துப் படங்கள்
5. சுவரொட்டிகள்
6. கேலிப் படங்கள்
7. துணைப்படங்கள்
8. காட்சிப் பலகைகள்
9. மாதிரி உருவங்கள்
10. மாதிரி உருவப் பொருட்கள்
11. கல்விப் பயணங்கள்
12. கள ஆய்வு
13. கண் காட்சி
14. அருங்காட்சியகம்

**காட்சிப் பலகைகள்**

1. கரும்பலகை
2. துளைப்பலகை
3. பிளானல் பலகை
4. காந்தப் பலகை
5. செய்திப் பலகை

**மாதிரி உருவங்கள் - முப்பரிமாணப் பொருட்கள்**

1. உருவங்கள்
2. மாதிரிப் பொருட்கள்
3. பொம்மைகள்
4. காட்சி மேடைகள்

இவைபோல் மாதிரி உருவப் பொருட்களும், செயல் அனுபங்களும் கற்பித்தலையும், கற்றலையும் எளிதாக்கி மாணவரின் நடத்தை மாற்றத்திற்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

இவற்றுள் ஒரு சில துணைக் கருவிகளைத் தயாரித்தலை இங்குக் காண்போம்.

கற்பித்தல் துணைக் கருவிகளில் முதன்மை வகிப்பது கரும்பலகை. இந்தக் கரும்பலகையில் தேவைக்கேற்ப வெள்ளைச் சுண்ணக் கட்டியையும், வண்ணச் சுண்ணக் கட்டியையும் பயன்படுத்தலாம். கரும்பலகை இல்லாமல் பாடம் கற்பித்தல் இல்லை.

**வரைபடம்**

கற்பித்தலுக்குப் பாடப் பொருள் மையம் என்றாலும் அப்பாடப்பொருள் மாணவர் மனதில் நிலைத்த நீடித்த பயனை ஏற்படுத்துபவை துணைக் கருவிகள்.

இத்தகைய துணைக்கருவிகளில் கரும்பலகைக்கு அடுத்த நிலையில் பயன்படுவது வரைபடம்.

வரைபடத்தாளில் வெவ்வேறு வண்ண வரைகோல்களைப் பயன்படுத்த வேண்டும்.

முதலில் பாடத்தலைப்பும், வகுப்பும் தெளிவாக இருக்க வேண்டும்.

பின்னர் பாடப்பொருளுக்குரிய செய்திகளைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக்காட்டாக பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை எடுத்துக்கொள்வோம்.

எடுப்பான வண்ணத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனக் குறிப்பிட வேண்டும்.

பின்னர் அதில் மூன்று கிளைகளை ஏற்படுத்தி முதல் கிளையில் பதினோரு நீதி நூல்கள், அவற்றின் ஆசிரியர் பெயரோடு இடம்பெறச் செய்ய வேண்டும். இரண்டாவது கிளையில் ‘ஆறு’ அகநூல்கள் பட்டியலை நூலாசிரியர் பெயரோடு இடம்பெறச் செய்ய வேண்டும்.

மூன்றாவது கிளை சிறியதாக இடம் பெறவேண்டும். அதில் புற நூலின் பெயரும் ஆசிரியர் பெயரும் இடம்பெற வேண்டும்.

குறளையோ, நாலடியார் பாடலையோ கற்பிக்கும்போது இந்த வரைதாளை அறிமுகம் செய்யலாம். மாணவர்கள் பாடநூல் அறிவோடு, நூல்பட்டியல், ஆசிரியர் பெயர் ஆகியவற்றையும் அறிந்து பயனடைவர். மொழிப் பாடத்தைப் பொருத்தவரை ஒருசில துணைக் கருவிகளே முக்கிய இடம்பெறுகின்றன.


துணைக்கருவிகளில் வீழ்த்து நிலைத் துணைக் கருவிகள், வீழ்த்தா நிலைத் துணைக்கருவிகள், முப்பரிமாணப் படங்கள் ஆகியவை பாடம் கற்பித்தலில் இடம்பெறுகின்றன.

**வீழ்த்தா நிலைத் துணைக் கருவிகள்**


வீழ்த்தா நிலைத் துணைக் கருவிகள் வரைபடங்கள், மரு உரு விளக்கப்படம் ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன.

**1. வரைபடங்கள்**

எண் வடிவ விவரங்கள் படங்களாகக் குறிக்கப்படுவதே வரைபடங்கள் எனப்படும். எண்கள் அடங்கிய அட்டவணை சுருக்கமாகவும், தெளிவாகவும் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவுகின்றன. இதில் பலவிதங்கள் உள்ளன. கோட்டு வரைபடங்கள், கட்டை உருவப்படம், வட்டவடிவ வரைபடங்கள், பட வரைவுகள் ஆகியன அவற்றுள் அடங்கும்.




**கோட்டு வரைபடம்**





**கட்டை உருவப்படம்**

**2. மர உருவ விளக்கப்படம் அல்லது உருவப்படம் (Tree Diagram)**

பாடப்பொருள், உட்கூறுகள், சுருக்கக் குறியீடுகள், கோடுகள் ஆகியவற்றைக் கொண்டு கருத்தை விளக்கும் படங்கள் விளக்கப் படங்கள் ஆகும்.

ஒரு மரம் பல கிளைகளைத் தாங்கிக் கொண்டிருப்பது போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும் படங்களே மர உருவ விளக்கப்படம்.




**முப்பரிமாணப் படங்கள்**

**1. மின்னட்டைகள்**

நூல்கள், ஆசிரியர்கள், நிகழ்வுகள், விளக்கங்கள், உருவங்கள் ஆகியவற்றை மாணவர்கள் ஈடுபாட்டுடன் மனதில் பதியவைத்துக் கொள்ள மின்னட்டைகள் பயன்படுகின்றன.

அட்டையின் பின்புறம் மின் இணைப்புக் கலங்களிலிருந்து மின் இணைப்புக் கொடுக்கப்படும். அட்டையின் முன்புறம், பொத்தான்களும், விளக்குகளும் இருக்கும். சரியான விடைக்கு நேராக விளக்கு எரியும்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-19**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

9. எழுதுதலின் நோக்கங்களை எழுதுக.

.......................................................................................................................................................

10. ஆட்டப் பாடல்களின் பயன்களை எழுதுக.

.......................................................................................................................................................

11. மின்னட்டை என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?

.......................................................................................................................................................

**2. சுழலட்டைகள்**

சுழல் அட்டையைச் சுழலும் அட்டையாகக் கோள வடிவில் செய்யலாம். முதலில் கோள வடிவில் உருண்டையை மெல்லிய அட்டையைக் கொண்டு தயார் செய்யவும் அதன்மீது வெள்ளைத் தாளை ஒட்டவும். பின்னர் எந்தப் பாடப்பகுதியைத் தேர்ந்தெடுக்கிறோமோ அந்தப் பாடப்பகுதிக்குரிய செய்தியைச் சேகரிக்கவும்.

**ஐவகை நிலம்**

முதலில் ஐவகை நிலத்திற்குரிய முதற்பொருள்களைத் திணை வாரியாக வெவ்வேறு வண்ணத்தாளில் எழுதவும். கோள வடிவத்தில் முதல் சுற்றில் குறிஞ்சி நிலத்திற்குரிய முதற்பொருள் அடுத்து முல்லைத் திணைக்குரியவை என ஐவகை நிலங்களுக்குரிய முதற்பொருளை மட்டும் எழுதவும்.

இங்கு நிலங்களுக்குரிய செயல்கள் இடம்பெறக் கூடாது. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள் மட்டும் இடம்பெற வேண்டும்.

வெளிச்சத்தில் பெரிய வரைபடத் தாளை எடுத்துக்கொண்டு ஐவகை நிலங்களின் பெயர்களை மட்டும் இடைவெளிவிட்டு எழுத வேண்டும். பின்னர் ஒவ்வொரு நிலப் பெயர்களுக்கும் கீழ் உள்ள வரைபடத் தாள் பகுதியை நீள் சதுர வடிவில் வெட்டி எடுக்கவும். இப்போது வெளிச்சுற்று வரைபடத் தாளைச் சுழலும் வகையில் அமைக்க வேண்டும்.

வேளிப்புற வரைபடத்தாளைச் சுழற்றும்போது குறிஞ்சிக்குரிய முதற்பொருள் வரும்போது, முல்லைத் திணையை நிறுத்திச் செய்திகளை மாணவர் அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். இவ்வாறே ஐவகை நிலங்களுக்கும் உரிய கருப்பொருள்கள், உரிப்பொருள்களைக் கற்பிக்கலாம்.

**மாதிரிகள்**

மாதிரி உருவங்கள் எனப்படுபவை, உண்மைப் பொருளைப் போன்றே தோற்றமளிக்கும் வகையில் செய்யப்படும் உருவங்களாகும்.

ஐவகை நிலங்களைக் கற்பிக்கும்போது முப்பரிமாண உருவங்களாகச் செய்யலாம். இதில் உருவங்கள், மாதிரிப் பொருள்கள், பொம்மைகள், காட்சி மேடைகள் ஆகியன அடங்கும்.

உருவங்களில் வள்ளுவர், பாரதி, பாரதிதாசன் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களும் அடங்குவர்.

**மாதிரி உருவங்கள் - முப்பரிமாணப் பொருட்கள்**

உருவங்கள், மாதிரிப் பொருட்கள், பொம்மைகள், காட்சி மேடைகள் ஆகியன அடங்கும்.

**மாதிரி உருவப் பொருட்கள்**

1. கண்ணாடிக் காட்சிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் பறவைகள் (Stuffed Buds)
2. கனிமப் பொருட்கள் (Neinevals)
3. இறகுகள், கிளிஞ்சல்கள், கூழாங்கற்கள்.
4. பூச்சிக் கூடுகள், விதைகள், மூலிகைச் செடிகள்
5. பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள், ஏட்டுச் சுவடிகள்
6. நினைவுச் சின்னங்களின் சிதைவுகள்
7. எடைக்கற்கள், நாள்காட்டிகள், முக்கோணம், சதுரம் உருவங்கள்

**பொம்மைகள் (Puppies)**

வரலாறு, நாடகம், இலக்கியத் தலைப்புக்கள் ஆகியவற்றைக் கற்பிக்கப் பல்வேறு பொம்மைகளைக் கொண்டு விளக்கலாம். இவை அட்டைகள், தர்மாக்கோல், பஞ்சு, மரக்கட்டைகள், களிமண் ஆகியவற்றால் செய்யப்படும்.

**காட்சிமேடை (Diorama)**

முப்பரிமாணப் பின்புலத்தில் உள்ள படங்கள், உருவங்கள் இணைந்து உண்மையான காட்சியைக் கண்முன் நிறுத்தும் மேடை அமைப்பே காட்சிமேடை. இக்காட்சி மேடைகள் இயற்கைச் சூழ்நிலை போன்ற எண்ணத்தைக் காண்போருக்கு உண்டாக்குகின்றன. சாலை விதிகளைச் சுட்டிக்காட்ட காட்சிமேடை பயன்படும்.

**6.12 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- இன்றைய காலகட்டத்தில் காட்சி – கேள்விக் கருவிகளின் விரைவான வளர்ச்சியால் பார்த்தலும், கேட்டலும் முக்கியத்துவம் பெறுகின்றன.
- கற்பனை, அழகுணர்ச்சி, சொல்நயம், பொருள்நயம், தொடை நயம், அணி நயம், சந்தம், சுவை போன்றவற்றைப் பாடலில் இருந்து வெளிப்படுத்துவதே நயம் பாராட்டல்.
- ஆசிரியர் இனிமையாகப் படிக்கும்போதோ, பாடும்போதோ அப்பாடலைக் கேட்கும் மாணவர் நயம் உணர்ந்து நவில்தொறும் பாநயச் சிறப்பைத் துய்ப்பர்.
- மாணவர்களுக்குப் பேச்சுத் திறனில் உள்ள குறைபாடுகளை ஆசிரியர்கள் கண்டறிந்து அவற்றை நீக்கிடத் தரமான பேச்சுப் பயிற்சிக்கு வழிகாண வேண்டும்.
- தமிழில் ஒலிப்பிழையின்றிப் பேச மயங்கொலிப்பிழையைத் தவிர்த்தல் வேண்டும்.
- மாணவர்களிடையே பேசுதல் திறனை வளர்ப்பதற்கான செயல்கள் பாடவழிச் செயல்களாக அமைகின்றன.
- விரைவாக நிறைவாக விடையளிக்கும் பயிற்சியின் மூலம் மாணவர்களின் பேசுதல் திறனுக்கும், நினைவாற்றல் வளர்தல் திறனுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- செய்திகளைத் தொகுப்பதற்கு ஒரு நூலையோ, கட்டுரையையோ மேலோட்டமாகப் படிப்பதே அகன்ற படிப்பாகும்.

- ஒரு நூலில் இடம்பெற்ற கருத்துக்கள், சொற்றொடர் அமைப்புக்கள், சொல்லாட்சிச் சிறப்புக்கள் முதலிய அனைத்தையும் அறிதலே ஆழ்ந்த படிப்பாகும்.
- பேச்சு மொழியை, ஒலிவடிவத்தை வரிவடிவமாக்குவதே எழுத்து மொழியாகும்.
- ஒற்றுமையுடைய ஒலிப்புச் சொற்கள், அவற்றின் வடிவங்களில் மணாவர்கள் பயிற்சி பெற்றால் பிழைகள் ஏற்படாது.
- குழந்தைகளின் கையெழுத்தில் அளவும் தெளிவும் ஏற்பட முறையான எழுத்துப் பயிற்சிகள் தரவேண்டும்.
- எளிமையிலிருந்து அருமை, தெரிந்ததிலிருந்து தெரியாதது என்ற உளவியல் முறைப்படி அமைந்த கற்பித்தல் உத்திக்கு ஏற்ற கற்பித்தல் முறையாகும்.
- கற்பித்தலுக்குப் பாடப் பொருள் மையம் என்றாலும் அப்பாடப்பொருள் மாணவர் மனதில் நிலைத்த நீடித்த பயனை ஏற்படுத்துபவை துணைக் கருவிகள்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1. கேட்டலின் மூன்று வகைகள் யாவை?**

கேட்டலை மொழித்திறன் அறிந்தோர் மூவகையாகப் பகுத்துள்ளனர். அவையாவன 1.இயல்பாகக் கேட்டல், 2.ஆழ்ந்து அகன்று கேட்டல், 3.நுட்பமான கருத்தைக் கேட்டல் ஆகியவையாம்.

**2. நயம் பாராட்டல் என்றால் என்ன?**

பாடலில் இடம்பெறும் கற்பனை, அழகுணர்ச்சி, சொல்நயம், பொருள்நயம், தொடைநயம், அணிநயம், சந்தம், சுவை போன்றவற்றைப் பாடலில் இருந்து வெளிப்படுத்துவதே நயம் பாராட்டல் எனப்படும்.

**3. கருத்துகளுக்கு வலிமை சேர்ப்பது எது?**

நாம் பேசும் கருத்துகளுக்கு வலிமை சேர்ப்பது; அழுத்தம் திருத்தமாகப் பேசுவதே ஆகும்.

**4. கலந்துரையாடல் எதற்கு வாய்ப்பளிக்கிறது?**

கலந்துரையாடல் தன்னிச்சையாகச் செயல்படவும், ஆதாரத்துடன் கருத்துக்களை வெளியிடவும் வாய்ப்பளிக்கிறது.

**5. உள்ளதை உள்ளவாறு படித்தல் என்றால் என்ன?**

உள்ளதை உள்ளவாறு படித்தல் என்பது ஓரெழுத்தினை விடாமல் ஒலிப்பது; அவ்வாறு விட்டால் பொருள் மாறும்; தமிழ் தலைகீழாக மாறிவிடும்.

**6. சொற்றொடர் முறைப்படிப்பு என்றால் என்ன?**

எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்பித்து, அதன் பின்னர் அவற்றில் உள்ள சொற்களையும் எழுத்துக்களையும் கற்பிப்பது சொற்றொடர் முறைப் படிப்பாகும்.

**7. வாய்விட்டுப் படித்தல் என்றால் என்ன?**

புத்தகத்தில் எழுத்துக்களைக் கண்களால் பார்த்து ஒலி வெளிப்படுமாறு வாயால் ஒலித்துப் பொருள் உணர்ந்து படிப்பதே வாய்விட்டுப் படித்தலாகும்.

**8. அகன்ற படிப்பு என்றால் என்ன?**

செய்திகளைத் தொகுப்பதற்கு ஒரு நூலையோ கட்டுரையையோ மேலோட்டமாகப் படிப்பதே அகன்ற படித்தலாகும்.

**9. எத்தகைய நோக்கங்களைக் கொண்டது எழுதுதல் திறன்?**

எழுதுதல் திறன் நிலைத்த நீடித்த பயனைத் தரக் கூடியது. எழுதுதல் திறனின் நோக்கங்களாவன:

1. எழுதுதல் என்பது கருத்தையும், பேச்சையும் நிலையாகப் பதிவு செய்தல்.
2. தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளப் பயனப்படுதல். இத்தகைய நோக்கங்களைக் கொண்டது எழுதுதல் திறன்.

**10. ஆட்டப் பாடல்களின் பயன் யாது?**

சிறுவர்கள் விளையாடும்போது பாடும் பாடல்கள் ஆட்டப் பாடல்கள் எனப்படும்.

**11. மின்னட்டை என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?**

நூல்கள், நூலாசிரியர்கள், நிகழ்வுகள், விளக்கங்கள், உருவங்கள் ஆகியவற்றை மாணவர்கள் ஈடுபாட்டுடன் மனதில் பதிய வைத்துக்கொள்ள மின்னட்டைகள் பயன்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. கேட்டல் திறன் என்றால் என்ன?
2. தெளிவான பேச்சின் இயல்புகள் யாவை?
3. தொடக்கநிலை வகுப்பிற்குரிய பேச்சுப் பயிற்சிகள் யாவை?
4. மின்னட்டை, சுழலட்டை இவை கற்பித்தலுக்கு எவ்வாறு பயன்படுகிறது?

## 7. மொழியாசிரியர்

**பாட அமைப்பு**

7.1 முன்னுரை
7.2 பயிற்சி
7.3 மொழியாசிரியரின் சிறப்புக்கள்
7.4 மொழிப்பற்று
7.5 இலக்கிய இலக்கணப் புலமை
7.6 படைப்பாற்றல்
7.7 நகைச்சுவை உணர்வு
7.8 உளநூல் அறிவு
7.9 முன்னிலைப்படுதல்
7.10 கலையார்வம்

7.11 வழிகாட்டுதல்

7.12 தவறுகளைத் திருத்தும் பண்பு

7.13 சிறந்த குடிமகனை உருவாக்குதல்

7.14 மனித நேயம்

7.15 தூய்மை

7.16 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை

**7.1 முன்னுரை**

ஆசிரியர் பணி ஓர் உயர்பணி; அ·்து அறப்பணியுமாம். அப்பணியைத் தொண்டு மனப்பான்மையுடன் செய்ய வேண்டும்.

அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கையில் 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'. எனக் குறிப்பிட்டதிலிருந்து பண்டைக் காலம் முதல் இன்றைய காலம் வரை ஆசிரியர்களுக்கு உயர்வும் மதிப்பும் இருப்பதை அறியலாம்.

ஆசு + இரியர் ஆசிரியர் ஆவார். அதாவது மாணவரிடம் இருக்கும் குறைபாடுகளை நீக்கக் கூடியவர் என்பது இதன்பொருள். எனவே ஆசிரியர் பாடப் பொருளிலும், பண்பாட்டுச் சிறப்பிலும் குறைவுபடாது நிறைவுடையவர்களாகக் காட்சி தரவேண்டும்.

ஆசிரியர் பணி தொழிலாக மாறிவிட்ட நிலையில் அப்பணிக்கெனத் தகுதிகளும், பண்புகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றை இப்பகுதியில் காணலாம்.

**கல்வித்தகுதி**

மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் உயர்ந்த கல்வித்தகுதியும், சிறந்த புலமையும் பெற்றிருக்க வேண்டும். தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பெறவேண்டிய கல்வித்தகுதிகளைக் கல்வித்துறையினர் வரையறை செய்துள்ளனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் கற்பிக்கும் ஆசிரியர் அக்கல்வித்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆசிரியர் பணியில் ஈடுபடுவோர் வகுப்பிற்கேற்றவாறு இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பட்டப்படிப்புடன் ஆசிரியர் பயிற்சி, முதுகலைப் பட்டப்படிப்புடன் ஆசிரியர் பயிற்சி முடித்தவராக இருக்க வேண்டும். மொழியாசிரியர்கள் மொழிப்பாடத்தில் சிறப்புக் கல்வித்தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

**7.2 பயிற்சி**

தமிழாசிரியர்க்கெனத் தனிப்பயிற்சிச் சான்றிதழ்ப் படிப்பு 1949 முதல் தற்போது வரை தமிழகத்தில் அரசு கல்வியியல் கல்லூரி புதுக்கோட்டை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு ஆறுமாதப் பயிற்சி அளித்துச் சான்றிதழ் வழங்கியது.

மேலும் தமிழகத்தில் கடலூர், வடலூர், அரியூர் போன்ற பல இடங்களில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன; மேலும் பல தனியார் கல்வி நிறுவனங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவை இரண்டாண்டு பயிற்சி வழங்கி 'ஆசிரியர் பட்டயச் சான்று' வழங்கி வருகின்றன.

தற்போது தமிழ் பி.ஏ; எம்.ஏ படித்தவர்கள், தமிழ்க் கல்வியை விருப்பப்பாடமாக எடுத்து பி.எட்; படிப்பில் பட்டம் பெறுகின்றனர்; பி.லிட் முடித்தவர்களும் இப்பட்டம் பெறத் தகுதி படைத்தவராவர். அவர்கள் தமிழாசிரியராகப் பணியில் ஈடுபடலாம் என அரசினர் விதிமுறை வகுத்துள்ளனர்.

தற்போது பி.எட்; பயிற்சி இரண்டாண்டுகளாக மாறியுள்ளது. இது தவிர கற்பித்தலில் புதிய முன்னேற்றங்களைக் கண்டறியவும், அவ்வப்போது உருவாகும் கல்விப் பிரச்சினைகள் பற்றி அறியவும் பணியிடைபயிற்சி அரசின் கல்வித்துறையால் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது. அவற்றிலும் ஆசிரியர் சேர்ந்து பயிற்சி பெற்றுக் கற்பித்தலில் வல்லவராக வேண்டும்.

### 7.3 மொழியாசிரியரின் சிறப்புக்கள்

மொழி ஆசிரியர்கள் கல்வித்தகுதி, மொழிப் புலமை, கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆற்றல், வகுப்பறை மேலாண்மை ஆகிய அனைத்துத் திறன்களும் பெற்றிருக்க வேண்டும்.

நல்லாசிரியரின் இலக்கணத்தை நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு உயர்ந்த சிறப்புள்ளவராக நன்னூலாசிரியர் பவணந்தியார் கூறுகிறார். இதனைப் பின்வரும் நன்னூல் நூற்பா விளக்குகிறது.

**குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூல்உரை ஆசிரியன்னே!**

கற்பிக்கும் முறைகளைக் கூறும் மேனாட்டு நூல்களும் நல்லாசிரியர் பண்பு, நலன்களை விரித்துரைக்கின்றன. இக்கருத்துக்களை மொழியாசிரியர்கள் சிந்தித்து உணர வேண்டும்.

மொழி ஆசிரியர் சிறந்த மொழி அறிவை மேன்மேலும் பெறப் பல நூல்களைத் தொடர்ந்து கற்க வேண்டும். எனவே ஒருவன் "சாந்துணையும் கல்லாதவாறு" என்ற வள்ளுவர் பெருமான் குறிப்பை மனத்தில் கொள்ள வேண்டும்.

"கற்றனைத் தூறும் அறிவு" என்ற வள்ளுவரின் கருத்திற்கிணங்க தமிழ் இலக்கியப் பரப்பை அறிந்திருத்தல் வேண்டும்.

மாணவர்களின் மனநிலையை அறிந்து ஆசிரியர்கள் கற்பித்தல் வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு மொழிகற்கும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன் கருத்துக்களைச் சிந்தனையில் கொண்டு செயல்பட்டால் ஆசிரியர்கள் திறம்பட மொழிப்பாடத்தைக் கற்பிப்பதோடு மாணவர்களிடம் மொழி கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்துவர். அவர் எழுதிய பாடல் வரிகள் வருமாறு:

**தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்**
**அறிவுயரும் அறமும் ஓங்கும்**
**இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்**
**தம்மொழியில் தாழ்ந்தால் வீழும்.**

ஆசிரியர் மொழிப்புலமையும், பட்டறிவும் பெற்று மாணவர்தம் புரிந்துணர்வையும் அறிந்து பயிற்றுவிக்க வேண்டும் என்பதை,

**"கொள்வோன் கொள்வகை**
**அறிந்து அவன் உளம்கொளக்**
**கோட்டமில் மனத்தின்**
**நூல்கொடுத்தல் என்ப"**

என்னும் பவணந்தியாரின் நன்மொழிகளை ஏற்று நடத்தல் வேண்டும்.

மாணவர்தம் பருவமறிந்தும், உருவமறிந்தும் ஆசிரியர் கற்பித்தலை நிகழ்த்த வேண்டும்.

எச்செய்தி பற்றி மாணவர் வினவினாலும் உடனடியாக ஆசிரியர்கள் அவ்வினாவிற்குரிய விடைகளை அளிக்க முன்வந்தால் ஆசிரியரின் மதிப்புச் சமுதாயத்தில் உயரும்.

எங்கெங்குக் கருத்துக்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் சென்று புதிய அறிவினைப் பெற்றுக் கற்பித்தலுக்குத் தகுந்தவராக இருப்பது மொழி ஆசிரியர் கடமை. மொழி ஆசிரியர் பல்துறை அறிவுபெற்றுக் கலைக்களஞ்சியமாகத் திகழ்தல் வேண்டும்.

பன்னூல் புலமையும், நன்னூல் புலமையும் பெற்ற ஆசிரியர் மாணவர்தம் மனப்பாங்கு அறிந்து நடத்தினால் 'நல்லாசான்' என்ற சிறப்பைப் பெறுவார்.

**7.4 மொழிப்பற்று**

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறிய

**"செந்தமிழே உயிரே நறுந்தேனே**

**செயலினை மூச்சினை உனக்களித்தேனே"**

என்ற செந்தமிழ் வரிகளை மனதில் கொண்டால் மொழிப்பற்று தானே வரும்.

மொழிப்பற்று இருந்தால்தான் மொழியின் சிறப்பை அறிந்து கற்பிக்க முடியும்; மொழி வளர்ச்சிக்கான செயலில் ஈடுபட முடியும்.

மொழிப்பற்று மிக்கிருந்தால்தான் இலக்கிய, இலக்கணப் புலமைபெற்றுக் கருத்துக்களைச் சுவைபட அணிநயத்தோடு எடுத்துச் சொல்ல முடியும்.

எனவே மொழியாசிரியருக்கு மொழிப்பற்று இன்றியமையாதது.

**சமூகப் பொறுப்பு**

எவ்வளவு படித்திருந்தாலும் உலகில் உள்ள பெரியோரோடும், மக்களோடும் ஒத்துப்போக வேண்டும் அவர் சமுதாயத்தோடு தொடர்பு கொண்டு சமுதாயத்தோடு தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை அறியாதவர் படியாதவரே' என வள்ளுவர் கூறுகிறார்.

மொழி ஆசிரியர்கள் தனக்கென்று ஒரு வழி அமைத்துக் கொண்டு செயல்படுவாராயின், பிறஆசிரியர் அவரோடு நெருங்கிப் பழகமாட்டார்; சமுதாயமும் அவரை வெறுத்து ஒதுக்கி விடும்.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர், ஆசிரியருக்குரிய பொதுப் பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். மொழியாசிரியருக்குரிய சிறப்புப் பண்புகளையும் பெற்று மக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வர்.

மொழியாசிரியரிடம் கற்கும் மாணவர்களும் தன் ஆசிரியரைப் பின்பற்றி, மொழித் திறத்திலும் வாழ்வுத் திறத்திலும் உயர்ந்து விளங்குவர்.

**7.5 இலக்கிய இலக்கணப் புலமை**

மொழிக்கு வரையறை இலக்கணம். மொழி அழியாமல் பாதுகாப்பது இலக்கணம்; மொழிநடை திசைமாறிச் செல்லும் போது கருத்துக்கள் நல்ல நடையில் அமைய வழிகாட்டும் கலங்கரை விளக்கம் மொழி. மொழி நிலைத்து நிற்பதற்கு இலக்கணமே காரணம்.

மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் துணை நிற்பது இலக்கணமே. எனவே மொழியின் கூறுகளான எழுத்து, சொல், சொற்றொடர், புணர்ச்சி, பொருள், யாப்பு, அணி ஆகியவற்றைத் தெளிவாக மாணவர் மனதில் நிலைக்கும்படி எடுத்துச் சொல்ல வேண்டும். இத்தகைய திறன் இருந்தால் மொழி ஆசிரியர் தமிழாம் விழியைக் காக்கும் ஆசிரியராகக் கருதப்படுவார்.

எனவே மொழி ஆசிரியர் தமிழ் இலக்கண நூல்களான நன்னூல், தொல்காப்பியம், அகப்பொருள், புறப்பொருள், தண்டியலங்காரம், காரிகை போன்றவற்றை ஆழ்ந்து கற்று அதில் பயிற்சி பெற்றவராக இருப்பது இன்றியமையாதது.

இலக்கணக் கூறுகளை விதிவருமுறை, விதிவிளக்கமுறை ஆகிய இரண்டு முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.

புலமையில் தெளிவும், கற்பித்தலில் வளமையும் உடையவரே சிறந்த மொழியாசிரியர்.

தமிழியலின் பரிமாணங்களான சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நீதி இலக்கியம், புதினம், சிறுகதை, புதுக்கவிதை, திறனாய்வு, மொழியாக்கம், அறிவியல் தமிழ், கணினித் தமிழ் ஆகியவற்றில் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாண்புடையவராக மொழியாசிரியர் திகழவேண்டும்.

தமிழ்ச் செய்யுளை நடத்தும்போது சுவையுடன், ஆழ்ந்து, செம்மையாகப் பிழையின்றி அதனோடு தொடர்புடைய கருத்துகள், சொற்கள், பாநலம் ஆகியவற்றைக் கவினுற எடுத்துரைக்கவேண்டும்.

எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள், அணிநலங்கள் கருத்துக்கு அழகு சேர்க்கும் வகையில் அமையவேண்டும். தமிழ் இலக்கிய வரலாற்றைச் சங்ககாலம் முதல் தற்காலம் வரை அறிந்திருக்க வேண்டும். செய்யுள் அல்லது பாடல் நடத்தும்போது மூலநூலைப் படித்து அகராதியின் துணை கொண்டு கருத்தாய்வு நடத்த வேண்டும். அப்போதுதான் மூலநூலாசிரியன் உள்ளக் கருத்தறிந்து உரைக்க முடியும். மொழி ஆசிரியர் கவிஞன் கண்ட கற்பனையைக் காட்சி அனுபவத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்.

**7.6 படைப்பாற்றல்**

ஆசிரியர் மாணவர்களுக்கு முன்மாதிரியாகும்; அவர் படைப்பாற்றல் மிக்கவராக இருந்தால்தான் மாணவர்களையும் படைப்பாற்றல் மிக்கவராக உருவாக்க முடியும்.

தரமான சிறுகதை, எளியஇனிய கவிதை, சிறுசிறு நாடகங்கள், பயன்படக்கூடிய கட்டுரைகள் ஆகியவற்றைப் படைக்கும் திறன் உடையவராக மொழி ஆசிரியர் விளங்கவேண்டும். அப்போதுதான் மாணவர்களும் ஆசிரியரைப் பின்பற்றி புதியன படைக்கும் திறன்பெற முயலுவர்.

கருத்துக்களை வெளியிடும் கருவியான மொழியைத் திறமையாக மொழியாசிரியர் பயன்படுத்த வேண்டும். தன்னுடைய கருத்துகளைக் கோத்து முறைமாறாமல் தொகுத்து எழுதும்திறன் உடையவராக இருக்க வேண்டும்.

பொருத்தமான இடத்தில், பொருத்தமான சொற்களைப் படைத்து, படிப்போரின் கவனத்தை ஈர்க்கும் படைப்புத்திறன் அவருக்குக் கைவந்த கலையாக இருக்க வேண்டும்.

கவிதைக்கலையை மாணவரிடம் வளர்ப்பது எளிது.முதலில் சிறுசிறு சொற்களைக் கையாண்டு கவிதையாக உருவாக்கப் பயிற்சி தர வேண்டும்.இதற்கு எடுத்துக்காட்டாக ஔவையின் ஆத்திசூடியை வாய்மொழியாகச் சொல்லலாம். பாரதியின் புதிய ஆத்திசூடியையும் சொல்லலாம்.

இன்றைய உலகம் புதுக்கவிதை உலகம். ஒருவரி இரண்டுவரியில் உருவாகும் ஹைக்கூ கவிதைக்கு சப்பானியர் முன்னோடி எனக் கூறுகின்றனர். ஆனால் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவையும், நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பாரதியும் புதுக்கவிதைக்கும் ஹைக்கூ எனப்படும் புதுக்கவிதை வகைக்கும் முன்னோடி எனலாம். இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லிக் கவிதைக் கலையை வளர்க்கலாம்.

மாணவர்கள் சிறுவயதிலிருந்தே இதைக் கேட்கும் இயல்பினர்; அவர்கள் தங்கள் பெற்றோர்களிடமும்; அவர்தம் முன்னோரிடமிருந்தும் கதைகேட்டிருப்பர். ஆகவே சிறுசிறு சொற்களால் நிகழ்ச்சிகளை அமைத்து எழுதப் பழக்க வேண்டும். பின்னர். தலைப்புக் கொடுத்தும் கதை எழுதப் பயிற்சிதரலாம்.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-20**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

1. நல்லாசிரியரின் நல்லியல்புகளை எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................

2. மொழிப்பற்றின் தேவையை விவரி.

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. நகைச்சுவை பற்றிய பழமொழி யாது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

கட்டுரைப் பயிற்சி பதினைந்து நாளுக்கு ஒருமுறை தரப்படும்; கட்டுரை முதலில் வாய்மொழியாக இடம்பெறும்; பின்னர் எழுத்து வடிவம் பெறும்.

தொடக்கப்பள்ளியில் கட்டுரை எழுத 'எனது பள்ளி, வீட்டு விலங்கு' போன்ற எளிமையான தலைப்புக்கள் தரப்படும். மாணவர்களும் தட்டுத்தருமாறி எழுதிப் பின்னர் நல்லமுறையில் எழுதப் பயிற்சி பெறுவர்.

நாடகம் எழுத அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த வரலாற்றையும், மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன் வரலாற்றையும் கூறி இரண்டு காட்சிகளில் எளிய சொற்களால் உரையாடல் அமைக்கப் பழக்கினால் அது நாடகமாக மாறிவிடும்.

இவ்வாறு மாணவர்களிடம் படைப்பாற்றலைத் தமிழ் ஆசிரியர்கள் வளர்க்கலாம்.

**7.7 நகைச்சுவை உணர்வு**

மாந்த இனத்திற்குரியது நகைச்சுவை உணர்வு. 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பது பழமொழி.

பாரதி 'கூடி விளையாடு பாப்பா' என்றான்; அடுத்து ஒரு குழந்தையை வையாதே' பாப்பா என்றும் கூறியதன் நோக்கம் என்ன? அந்த இளைய உள்ளங்கள், மலரும் மொட்டுக்கள், வளரும் சிட்டுக்கள் சிரித்துப்பேசி தங்கள் கல்விப் பயணத்தை இனிமையாக நடத்த வேண்டும் என்பதே ஆகும்.

மொழி ஆசிரியர்கள் பாடக் கருத்துகளைச் சுவைபடச் சொல்வதற்குக் கையாளும் உத்திகளில் ஒன்று நகைச்சுவை.

உணவில் இனிப்பைச் சேர்ப்பதுபோல் மாணவர்தம் உணர்வில் நகைச்சுவையைச் சேர்த்தால் கற்பித்தல் சுவைபட இனிமையாக அமையும்.

மக்களில் இருவகை உண்டு. சிலர் எப்போதும் தீயதையே எதிர்நோக்குவர். வேறு சிலர் நன்மையையே எதிர்நோக்குவர். ஆசிரியர் பணியில் ஈடுபடுவோர் அனைவரும் நன்மையை நாடி எதையும் குறைவின்றிச் செய்து நிறைவேற்ற முடியும் என்ற ஆசிரியரது நம்பிக்கை மாணவர்களைச் செயல்படத் துண்டுவதாக அமையும். அவ்வாறு மாணவர் நலனில் நன்மையையே எதிர்நோக்கும் ஆசிரியர் எச்செயலையும் வெற்றியுடன் செய்து முடிப்பதோடு மாணவர் அனைவருக்கும் மகிழ்வையும், பாடவேளையின்போது நகைச்சுவை உணர்வை ஏற்படுத்துபவராகவும் இருப்பர்.

ஆசிரியர் நகைச்சுவையின் நயம் அறிந்து பாடக் கருத்துகளின் இடையே நகைச்சுவை உணர்வை மாணவர்க்கு நல்க வேண்டும். தேவையானபோது வாய்விட்டுச் சிரித்துப் பாராட்டும் ஆசிரியரை மாணவர் மிகவும் விரும்புவர். நகைச்சுவை என்பது அனைவரும் சேர்ந்து மகிழும் வகையில் அமையவேண்டிடுமேயன்றி மற்றவரைப் புண்படுத்தி நகைப்பை ஏற்படுத்துவதாக அமையக் கூடாது. வகுப்பில் ஏற்படும் சலிப்பும், களைப்பும் சிறந்த ஆசிரியரின் பொருத்தமான நகைச்சுவையால் நீங்கும். பாடச்சுமையும் நகைச்சுவையால் மறையும்; மாணவர்கள் ஆசிரியரது பேச்சை நன்கு கவனிப்பர்.

"நகைச்சுவையைக் கேட்டுக் குலுங்கிச் சிரிக்காத நாளெல்லாம் வீண்நாளே" எனக் கல்வி வல்லார் கருதுகின்றனர்.

ஆகவே நன்மையை நோக்கும் நகைச்சுவை உணர்வு நிறைந்த பண்பு மொழியாசிரியருக்கு இன்றியமையாத பண்பாகும்.

மாணவர்கள் 'காலை வணக்கம்' என்றதும் ஆசிரியர் இது 'காலை வணக்கமா? காலை வாருகின்ற வணக்கமா? எனச் சொன்னால் மாணவர்கள் இயல்பாகவே தமது நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவர்.

இன்றைய மக்கள் சமுதாயத்தில் சிலர் "கவரிமான்களாக வாழாமல் கவரி வீசுகின்ற மான்களாக வாழ்கின்றனர்" என ஆசிரியர் பாடக் கருத்தின்போது கூறும்போது நகைச்சுவை ததும்பப் பாடம் நடக்கும் என்பது தெளிவு.

**7.8 உளநூல் அறிவு**

இன்றைய கல்விமுறை மாணவர் நலன்நாடும் "குழந்தைமையக் கல்வியாக" உள்ளது. எனவே பள்ளிக்கு வரும் மாணவர்களின் தனித்திறனை அறிந்து அதற்கு ஏற்றபடி செயல்பட மொழி ஆசிரியர்களுக்குக் குழந்தைகளின் பண்பு பற்றிய அறிவு இன்றியமையாததாகும்.

இக்காரணம் பற்றியே கல்விஉளவியல் பயிற்சிப் பள்ளிகளிலும், பயிற்சிக் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படுகிறது. கல்விஉளவியல் மூலம் குழந்தைகளின் இயல்பு, ஆர்வம், நாட்டம் ஆகியவற்றை ஆசிரியர் அறியலாம்; மன எழுச்சிகளையும், மனப்பான்மைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு பருவத்திலும் நடத்தையில் ஏற்படும் மாறுபாடுகளைத் தெரிந்து கொள்ளலாம். அவற்றிற்கேற்ப ஆசிரியர் கற்பித்தல் முறைகளை அமைத்துச் செயல்படலாம்.

ஒரு சிறந்த ஆசிரியர் "குழந்தையின் மன இயல்பை அறிவது அவசியமானது" எனப் பிளேட்டோ கூறியுள்ளார். "குழந்தை ஒரு புத்தகம்; அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஆசிரியர் நன்றாகக் கற்க வேண்டும்" என ரூசோவும் கூறியுள்ளார்.

எனவே உளவியல் அறிவு பெற்ற ஆசிரியர் வகுப்பில் மாணவர்களை ஆளுமை செய்வதிலும் அவர்களுடன் நல்லுறவு கொண்டு வகுப்பை நடத்திச் செல்வதிலும் வல்லவராய் இருப்பர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

உளவியல் அறிவே மாணவர்தம் அறிவுத் திறமையையும், உளப்பாங்கையும் அறியும் கருவியாகும். அக்கருவி சிறப்பாக இருந்தால்தான் கற்பித்தலும், கற்றலும் சிறப்பாக இருக்கும்; இல்லையேல் கற்பித்தல் சிறப்பாக அமையாது.

**7.9 முன்னிலைப்படுதல்**

மாணவர்கள் நல்லொழுக்கமும், உயர்ந்த ஆளுமைப் பண்பும் கொண்டு மாணவப் பருவத்தில் மட்டுமல்லாமல், எதிர்காலத்திலும் வாழ்வில் சிறந்து விளங்க, அவர்கள் பின்பற்றி நடக்க ஆசிரியர் நல்லறிவுடன், நற்பண்புகளும் பெற்று வழிகாட்டுதலுக்கேற்ற முன்மாதிரியாக விளங்க வேண்டும். நல்ல பழக்கங்களை எடுத்துக் கூறுவதைவிட நற்பழக்கங்களுக்கு எடுத்துக்காட்டாய் விளக்குதல் நன்று.

ஆசிரியர் என்ன சொல்கிறார், எப்படிக் கற்பிக்கிறார் என்பதை மாணவர் நன்கு கவனிப்பர்; அதைவிட ஆசிரியர் எப்படி இருக்கிறார்? செயல்படுகிறார்? என்பதனையே மாணவர் மிகுதியாகக் கவனித்துப் பின்பற்றி நடப்பர்.பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியரே மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றனர். 'ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி' என்னும் வழக்கால் இது உறுதிப்படுகிறது.

கல்லூரிகளில் சேரும்போது நீ எந்தப் பள்ளியில் எந்த ஆசிரியரிடம் படித்தாய்? என்று கேட்டுதான் அவர்கள் ஒழுக்கத்தை முடிவு செய்கின்றனர்.

மாணவர்களில் பெரும்பான்மையோர் தாம் படித்த பள்ளியில் கற்பித்த ஆசிரியரின் நடை உடை பாவனைகளை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படத் தொடங்குகின்றனர். எனவே ஆசிரியர் சிறந்த நற்பழக்கம் உடையராய் இருத்தல் வேண்டும்.

'ஆசு + இரியர்' ஆசிரியர் ஆவார். அவர் மாணவரிடம் இருக்கும் குறைபாடுகளை நீக்குபவர். அவரே குறைபாட்டின் இருப்பிடமாக இருக்கக்கூடாது. அவரிடம் ஒன்றிரண்டு குறைபாடு இருப்பின் அவற்றை விட்டுவிட வேண்டும். அல்லது மாணவர் அறியா வண்ணம் செய்தல் வேண்டும்.

சமுதாயத்தின் முக்கிய அங்கம் ஆசிரியர். அத்தகைய நம்பிக்கை நட்சத்திரமாகிய ஆசிரியர் பண்பாட்டின் இருப்பிடமாகவம், சிறப்பிடமாகவும் இருக்க வேண்டும். இல்லையேல் 'வேலியே பயிரை மேய்வதுபோல்', ஆசிரியரே இப்படிச் செய்யலாமா? என வினா எழுப்பத் தொடங்குவர்.

சமுதாயம் ஆசிரியர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறதோ, அந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மாணவர்க்கு 'நன்னடை நல்கும் நல்லோராய்த் திகழவேண்டும்' என்பதை உணர்ந்து "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனப் பணியாற்ற வேண்டும்.

**7.10 கலையார்வம்**

மாணவர்களிடம் விரவிக்கிடக்கும் கலை ஆர்வமே படைப்பாற்றலாக மாறுகிறது.

மொழியாசிரியர் கவின்மிகு கற்பனை கலந்து நயம் அமைந்த கவிதைகளையும், எளிய இனிய தமிழில் அமைந்த உரைநடை நூல்களையும் படித்துப் போற்றும் கலையார்வம் உடையவராக விளங்க வேண்டும்.

செய்யுளின் எதுகை நயம், மோனை நயம் அறிந்து ஒலி நயத்தினை உணர்பவராய் இருந்தால்தான் மாணவர்களுக்கு அதனை உணர்த்த முடியும். செய்யுளில் அமைந்த சொல்நயம், பொருள் நயம், உவமைச் சிறப்பு, அணிநயம் ஆகியவற்றை நன்குணரும் ஆற்றல் மிக்கவராக இருக்க வேண்டும்.

கவிஞரின் உணர்ச்சிப் படைப்பில் தாமும் ஒன்றிவிட வேண்டும். அப்போதுதான் செய்யுள் சுவையை மாணவரும் உணரும்படிச் செய்யலாம். சிறந்த உரையாசிரியர்கள் கையாளும் சொற்றொடர் அமைப்பு, வருணனைகள், உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், இணைச் சொற்கள் ஆகிய மொழித்திறன்களை ஆசிரியர் உணர்வதோடு அவற்றைப் பயன்படுத்தும் திறன்படைத்தவராக இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு மொழித் திறன்களைக் கையாளும் பயிற்சியைத் தர முடியும்.

கவிதையின் முருகுணர்ச்சியையும், உரைடையின் அழகுணர்ச்சியையும் அறிவுத் திறனால் அறிவதை விட உள்ளத்து உணர்வால் உணர்ந்தால்தான், உணர்ந்ததை மாணவர்களுக்கு உணர்த்த முடியும் என்பதே நடைமுறை உண்மை. ஆகையால் மொழியாசிரியர் கவிதைச் சுவை உணர்திறனையும், உரைநடை அழகில் காணப்படும் மொழித்திறன்களையும் உணர்ந்து போற்றினால்தான் அவற்றை மாணவர்க்கு உணர்த்த முடியும்.

மாணவர்கள் தாம் உணர்ந்து அறிந்த கலையை, அதில் உள்ள ஆர்வத்தால் புதியன படைக்கும் திறனைப் பெறமுடியும். புதியன படைத்தலுக்கு மாணவரிடம் கலையார்வம் மிக்குத் திகழ வேண்டும்.

**7.11 வழிகாட்டுதல்**

ஒருவரிடம் காணப்பெறும் தனித்திறனே ஆளுமை, அதில் அறிவுத்திறமையும் பண்பும் மிளிர வேண்டும். அப்போதுதான் மாணவர்க்கு அறிவையும், பண்பையும் போதிக்கும் வழிகாட்டியாக விளங்க முடியும். கல்வியின் குறிக்கோள்களில் முதன்மையானது ஆளுமைத்திறனை வளர்த்தல். அத்தகைய ஆளுமைத் திறனை ஆசிரியரும் பெற்றிருந்தால்தான் மாணவரிடம் அவற்றை வளர்க்க முடியும்.

இலக்கியங்களைக் கற்பிக்கும்போது அவற்றில் பொதிந்துள்ள ஆளுமைகளைக் கண்டறிந்து அவை மாணவர்களிடம் நிலைத்து நிற்குமாறு கற்றலையும், கற்றல் தொடர்பான பணிகளையும் வடிவமைத்துத் தர வேண்டும்.

**நேரந்தவறாமை**

பள்ளியில் ஒழுங்குமுறைகளில் முதன்மையானது நேரந் தவறாமை. நேரந் தவறாமை ஒருவனது வாழ்வில் இன்றியமையாதது. எதையும் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி குறிப்பிட்ட

நேரத்தில் முடிக்க வேண்டும். காலத்தைத் தவற விடுவதால் பணிகள் பாதிக்கப்படும்; மாணவனின் வளர்ச்சி பாதிக்கப்படும்; இதையே வாழ்விலும் பின்பற்றினால் வாழ்வு பாழாகும்.

எனவே ஆசிரியர் வகுப்பிற்கும், பள்ளிக்கும் காலம் தவறாமல் வந்து, குறிப்பிட்ட காலத்தில் பணியைச் செய்து நன்முறையில் முடிக்க வேண்டும் என அறிவுறுத்த வேண்டும்.

'காலம் பொன் போன்றது' என்பது பழமொழி. இப்பழமொழியைப் பின்பற்றினால் 'கடமை கண் போன்றது' என்ற பழமொழியையும், மாணவர் பின்பற்றுவர். 'கடமையே வெற்றியின் வாயில்' என்பதை மாணவர்க்கு ஆசிரியர்கள் எடுத்துக் கூற வேண்டும்.

**7.12 தவறுகளைத் திருத்தும் பண்பு**

மொழி ஆசிரியர் தாம் மட்டும் தரமான பேச்சும் திறமையான எழுத்தாற்றலும் பெற்றிருந்தால் போதாது. மாணவர்கள் தவறாகப் பேசும்போதும், பிழையுடன் எழுதும்போதும் அவர்களின் ஒலிப்புப் பிழைகளையும், எழுத்துப் பிழைகளையும் சுட்டிக்காட்டித் திருத்துவதற்குரிய வழிகாட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.

பிழைகளைத் திருத்தும்போது மாணவர்கள் நெருங்கி வந்து, பேசக்கூடிய அளவுக்கு எளிமை உடையவராகவும், இனிய சொற்களைப் பேசக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

மாணவர்களின் எழுத்திலும், பேச்சிலும் ஏற்படுகின்ற பிழைகளின் காரணங்களை அறிந்து அவற்றை நீக்குவதற்குரிய முறையை அறிந்திருக்க வேண்டும்.

புதியன படைக்கும்போது சரியான வழிகாட்டுதலுடன், ஆர்வத்தை ஏற்படுத்தினால்தான் அவர்கள் தங்கள் படைப்பாற்றலை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள் தங்கள் மொழித்திறனை வளர்க்கவும், பிழைகளைக் களையவும் மொழியாசிரியர் சிறந்த வழிகாட்டியாய் இருக்க வேண்டும்.

**7.13 சிறந்த குடிமகனை உருவாக்குதல்**

ஒரு நாட்டின் எதிர்காலம் மாணவர்கள் கையில் உள்ளது. அது வகுப்பறையில் உறுதி செய்யப்படுகிறது. இதை அறிந்த அழவள்ளியப்பா அவர்கள்,

**"ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் சிறுவரே**
**நாடு காக்கும் தலைவராய்**
**நாளை விளங்கப் போகிறார்"**

எனக் கூறினார்.

சங்கப்புலவர் பொன்முடியார் புறப்பாடலில் 'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என்றார். அதாவது நல்ல குடிமகனை உருவாக்குவது அரசனின் கடமை என்றார். அந்த நல்ல குடிமகனை உருவாக்கும் பொறுப்பு இன்று ஆசிரியர் கையில் என்ற நிலை வந்துள்ளது.

ஆகவே மாணவரை நல்லவராக வல்லவராக ஆளுமைப் பண்பு உடையவராக உருவாக்குவது ஆசிரியரின் கடமையாகும். ஒரு மாணவன் நல்லவனாகவும், தீயவனாகவும் உருவாவதில் ஆசிரியர்க்கும் பொறுப்புண்டு. எனவே மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒழுக்கம், அன்பு, பொய் பேசாமை, களவாடாமை, புறங்கூறாமை, இறை உணர்வு, அழகியல் உணர்வு, கற்பனையாற்றல் ஆகிய பண்பு நலன்களை அவனையறியாமலே பாடம் வாயிலாக மேற்கொள்ளத் தூண்டுகிறார். எனவே சமூக மாற்றங்களை ஏற்படுத்த ஆசிரியரால் மட்டுமே முடியும் என்பது தெளிவு.

**முன்னேற்றத்தை சோதித்தறிக-21**

**குறிப்பு:** (1) உமது பதிலைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
(2) உமது பதில்கள் பாடப்புத்தகத்திலுள்ள கருத்துக்களோடு ஒப்பிட்டு அறிக.

4. இன்றைய கல்விமுறை எவ்வாறு உள்ளது?
..........................................................................................................................................
..........................................................................................................................

5. ஆளுமை என்றால் என்ன?
..........................................................................................................................................
..........................................................................................................................................

6. மனிதநேயத்தால் விளையும் பயன்கள் யாவை?
..........................................................................................................................................
..........................................................................................................................................

7. அறமென்று எதனை வள்ளுவர் குறிக்கிறார்?
..........................................................................................................................................

**7.14 மனித நேயம்**

மனித நேயம் வளர்ந்தால் மதமாச்சரியங்களும், சாதிப் பூசல்களும், தீவிரவாதம் எனும் தீராப் பகையும் நாட்டில் நிலவா.

மாணவர்களிடம் வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை வளர்க்கும் மனிதநேயப் பண்புகள் வளர வேண்டும். மனிதநேயப் பண்புகளாகத் தன்னலமின்மை, மற்றவர் துயர்கண்டு துன்புறல், முடிந்தவரையில் மற்றவர்க்கு உதவுதல் போன்றவை கூறப்படுகின்றன. இப்பண்புகளை இளம் மனதில் வளரவிட வேண்டும்.

வள்ளுவன் வகுத்த

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு"**

என்னும் குறள் மனித நேயத்தை வளர்ப்பதாகும். இதன்மூலம் மனிதநேயம் மட்டுமல்லாமல் தியாக உணர்வும் மேலோங்கும். அத்தகைய தியாகத்தால்தான் நல்ல குடிமகன் உருவாவான்.

**7.15 தூய்மை**

மனத்தூய்மையே எல்லாப் பண்புகளுக்கும் அடிப்படை எனவேதான், வள்ளுவர் "மனத்துக்கண் மாசிலனாதல் அறம்" என்றார். மனத்தூய்மை இருந்தால் வாய்மை பிறக்கும். வாய்மையால் வாழைபோல் பயன்தரும் இளைஞர் உருவாவர். அகந்தூய்மை இருந்தால் மட்டும் போதாது; புறத்தூய்மையும் வேண்டும்.

நாம் வாழும் சுற்றுப்புறங்களும் தூய்மையாக இருக்கவேண்டும். அப்போதுதான் சமுதாயம் நலமுடன் வாழும், நலமுடன் வாழ்ந்தால்தான் நல்ல குடிமகனால் எதையும் சாதிக்க முடியும்.

தூய்மையைச் சொல்லாலும் செயலாலும் நிறைவேற்றியவர் திருநாவுக்கரசர். இதற்காகவே 'உழவாரப் படையைக் கையில் ஏந்தியவர்' முன்னோர் நெறி பொன்னே போல் போற்றப்படுமானால் வாய்மையும், தூய்மையும் என்றும் வாழும்.

எனவே சமுதாயம் சிறக்க ஒற்றுமை, அன்பு, மனித நேயம், வாய்மை, பணிவு, உதவும் மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகள் வளர வேண்டும். இத்தகைய பண்புகளால்தான் நல்ல குடிமகன் உருவாவான். நல்ல குடிமகனே நாட்டின் தேவை என்பதை மாணவர்க்கு ஆசிரியர் நயமாக எடுத்துரைக்க வேண்டும்.

**7.16 பாடத்தொகுப்பு மற்றும் முடிவுரை**

- கற்பித்தலில் புதிய முன்னேற்றங்களைக் கண்டறியவும், அவ்வப்போது உருவாகும் கல்விப் பிரச்சினைகள் பற்றி அறியவும் பணியிடைபயிற்சி அரசின் கல்வித்துறையால் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது.
- நல்லாசிரியரின் இலக்கணத்தை நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு உயர்ந்த சிறப்புள்ளவராக நன்னூலாசிரியர் பவணந்தியார் கூறுகிறார்.
- மொழி ஆசிரியர் சிறந்த மொழி அறிவை மேன்மேலும் பெறப் பல நூல்களைத் தொடர்ந்து கற்க வேண்டும்.
- எச்செய்தி பற்றி மாணவர் வினவினாலும் உடனடியாக ஆசிரியர்கள் அவ்வினாவிற்குரிய விடைகளை அளிக்க முன்வந்தால் ஆசிரியரின் மதிப்புச் சமுதாயத்தில் உயரும்.
- மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் துணை நிற்பது இலக்கணமே.
- இலக்கணக் கூறுகளை விதிவருமுறை, விதிவிளக்கமுறை ஆகிய இரண்டு முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.
- மொழியாசிரியர் தன்னுடைய கருத்துகளைக் கோத்து முறைமாறாமல் தொகுத்து எழுதும்திறன் உடையவராக இருக்க வேண்டும்.

- மொழியாசிரியர் கவிதைச் சுவை உணர்திறனையும், உரைநடை அழகில் காணப்படும் மொழித்திறன்களையும் உணர்ந்து போற்றினால்தான் அவற்றை மாணவர்க்கு உணர்த்த முடியும்.
- நேரந் தவறாமை ஒருவனது வாழ்வில் இன்றியமையாதது. எதையும் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும்.

**சோதித்தறிதல் வினாக்களுக்கான விடைகள்**

**1. நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் நல்லாசிரியரின் இலக்கணத்தை எவற்றோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்?**

நல்லாசிரியரின் இலக்கணத்தை நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு உயர்ந்த சிறப்புள்ளவராகப் பவணந்தியார் படைத்துள்ளார்.

**2. எதற்கு மொழிப்பற்றுத் தேவை?**

மொழிப்பற்று இருந்தால்தான் மொழியின் சிறப்பை அறிந்து கற்பிக்க முடியும். மொழி வளர்ச்சிக்கான செயலில் ஈடுபட முடியும்.

**3. நகைச்சுவை பற்றிய பழமொழி யாது?**

'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பது நகைச்சுவைப் பற்றிய பழமொழி.

**4. இன்றைய கல்விமுறை எவ்வாறு உள்ளது?**

இன்றைய கல்விமுறை மாணவர் நலன்நாடும் குழந்தைக் கல்வியாக உள்ளது.

**5. ஆளுமை என்றால் என்ன?**

ஒருவரிடம் காணப்படும் தனித்திறனே ஆளுமை எனப்படும்.

**6. மனித நேயத்தில் விளையும் பயன்கள் யாவை?**

மனித நேயங்கள் வளர்ந்தால் மத மாச்சரியங்களும், சாதிப் பூசல்களும், தீவிரவாதம் எனும் தீராப்பகையும் நாட்டில் நிலவாது.

**7. வள்ளுவர் எதனை அறம் என்றார்?**

வள்ளுவர் "மனத்துக் கண் மாசிலனாதல் அறம்" என்றார்.

**பயிற்சி வினாக்கள்**

1. மொழியாசிரியர் பெறவேண்டிய கல்வித் தகுதிகள் யாவை?
2. மொழியாசிரியருக்கு இலக்கியஇ இலக்கணப் புலமை தேவை என்பதை விவரி.
3. மொழியாசிரியர் ஒரு முன் மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் எவ்வாறு இருக்க வேண்டும்?
4. மொழியாசிரியின் பண்பு நலன்களை விவரி.

**தொடர்ந்து கற்பதற்கான பரிந்துரை நூல்கள்**


1. அருந்தமிழ் கற்பிக்கும் முறைகள் - முனைவர் வஜ்ரவேலு, மேனாள் பேராசிரியர், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை, சென்னை-15. அம்சா பதிப்பகம், நங்கைநல்லூர், சென்னை-61, முதற்பதிப்பு-2009.
2. அறவாணன்,க.பா.(1998).கவிதையின் உயிர், உள்ளம், உடல். சென்னை: பாரிநிலையம்.
3. இளங்கலை கல்வியியல் கல்வி, தமிழ் கற்பித்தல் முறைகள், தொலைநிலைக் கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு-2008.
4. இரத்தின சபாபதி,பி. (2008), கல்வியியல் தேர்வு, சென்னை: சாந்தா பதிப்பகம்.
5. கணபதி,வி.&இரத்தினசபாபதி,பி.(2008). நுண்ணிலைக் கற்பித்தல், சென்னை: சாந்தா பதிப்பகம்.
6. கோவிந்தராசன்,மு.(1990).நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும். சென்னை: சரஸ்வதி பதிப்பகம்.
7. சக்திவேல்,சு.(1964). தமிழ்மொழி வரலாறு. சென்னை: மீனாட்சி புத்தகாலயம்.
8. செந்தூர்பாண்டியன்,செ.(1983).திட்டமிட்டதைக் கற்றல் - ஓர்அறிமுகம். புதுக்கோட்டை: மீனாட்சி பதிப்பகம்.
9. சுப்புரெட்டியார், ந.(1964). தமிழ் பயிற்றுமுறை. திருநெல்வேலி: கழகவெளியீடு.
10. தமிழ் பயிற்றல் நுட்பங்கள் - முனைவர் வெ.கலைச்செல்வி, மேனாள் பேராசிரியர், அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்- 638183. சஞ்சீவ் வெளியீடு 269பி–சேலம் மெயின்ரோடு – குமாரபாளையம் - நாமக்கல் மாவட்டம், முதற்பதிப்பு-2009.
11. தமிழ் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் - ஆசிரியர் குழு– வனிதா பதிப்பகம், 11, நானா தெரு, சென்னை-17. முதற்பதிப்பு-2015.
12. தில்லைநாயகம்,வெ.(1978). இந்திய நூலக இயக்கம். திருநெல்வேலி: கழகவெளியீடு.
13. பரமசிவானந்தம்,அ.மு.(1959). தமிழ் உரைநடை. சென்னை: தமிழ்க்கலைப் பதிப்பகம்
14. பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல், பேராசிரியர் வி.கணபதி, முனைவர் பி.இரத்தின சபாபதி, பூ.ஜெயராமன், சந்திரிக்கா இராஜகோபாலன், சாந்தா பப்ளிஷர்ஸ், இராயப் பேட்டை, சென்னை-14. முதற்பதிப்பு-2013.
15. பாஸ்கரன்,ப.,& பத்மபிரியா.(2007).கலைத்திட்ட வளர்ச்சி, சென்னை: சாந்தா பதிப்பகம்.
16. பொன்னப்பன்,பா.(1992).தமிழ்ப் பாடம் சொல்லும்முறை. சென்னை: தமிழ்நாட்டு பாடநூல் கழகம்.
17. வேணுகோபால்,,.பா.(1991).பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள். வேலூர்: சகுந்தலா வெளியீட்டகம்.
18. விஜயலட்சுமி,(2008).கற்பித்தலில் சிக்கல்கள் - தீர்வுகள், சென்னை: சாந்தா பதிப்பகம்.
19. வீரப்பன், முனைவர்.(2002), உயர்நிலைப் பள்ளியில் தமிழ் கற்பித்தல், மண்டல கல்வியியல் நிறுவனம், மைசூரு.
20. Billows. (1976). The Techniques of Language Teaching. London: Longman.
21. Curriculum Bulletin, NCERT, March-1983.
22. Kuppusamy.B., Curriculum and New Delhi, Social Development of India.
23. Ryburn, W.N. (1966). The Teaching of English. Bombay: McMillan Publications.